0,3:.21.

# SIVAGNANAM

**A TAMIL NOVEL**

BY

**Rai Sahib T. M. Ponnoosawmy Pillay,**

*Retired Treasurer, Paper Currency Office, Rangoon,*

*(Author of Kamalatchi, Vijayasundaram, Gnanasambandam, Gnanambikai, Gnanaprakasam, and Harischandra.)*

MADRAS:

PRINTED AT THE JUSTICE PRINTING WORKS,

16-A, MOUNT ROAD.

1920

*All Rights Reserved*

*Wrapper: Re. 1-4*] [*Postage Extra.*

உ

கடவுள் துணை

# சிவஞானம்

(கமலாக்ஷி, விஜயசுந்தரம், ஞானசம்பந்தம்.
ஞானாம்பிகை, ஞானப்பிரகாசம், அரிச்சந்திரன்)
இயற்றியவர்

[illegible]ன் பேபர் கரென்ஸி ஆபீஸ் பொக்கிஷதாரராக இருந்த
ராய் சாயிப்

திரிசிரபுரம் ம. பொன்னுசாமி பிள்ளை

இயற்றியது.

சென்னை:

"ஜஸ்டிஸ்" அச்சுக்கூடம்

1920

*All Rights Reserved.*

பர் ரூ. 1 4 0] [தபால் வர்த்தனை வேறு

கடவுள் துணை.

# முகவுரை

இதற்குமுன் நான் கமலாக்ஷி, விஜயசுந்தரம், ஞானசம்பந்தம், ஞானாம்பிகை என்னும் நான்கு கற்பனை கதைகளை எழுதி வெளியிட்டிருந்தேன். இக்கதைகளைப் படிப்போர் ஒருபக்கம் நன் ஞானமும் பெறவேண்டுமென்பது என்னுடைய விருப்பம். அதன் பொருட்டாக ஞானாம்பிகையின் முகவுரையில் சொல்லிய வண்ணம், சிவஞான சித்தியாரில் கண்ட பன்னிரண்டு சூத்திரங்களில், முதல் சூத்திரம் பதியிலக்கணத்தை ஞானசம்பந்தத்திலும், இரண்டாம் சூத்திரம் அத்வைத விலக்கணத்தை ஞானாம்பிகையிலும் விளக்கினேன்.

இப்பொழுது வெளியிடுகின்ற இந்தச் சிவஞானத்தில், மூன்றாவது சூத்திரம் பசுவிலக்கணம், நான்காவது சூத்திரம் அவத்தையிலக்கணம், ஐந்தாவது சூத்திரம் பாசமோசன விலக்கணம், ஆறாவது சூத்திரம் பதி பாச தரிசன விலக்கணம், ஏழாவது சூத்திரம் ஆன்ம தரிசன விலக்கணம் ஆகிய இவைகளை என் சிற்றறிவிற் கெட்டியவளவாக விளக்கி - யிருக்கிறேன்.

இரண்டு மூன்று வாரத்தில் வெளியாகப்போகிற ஞானப்பிரகாசத்தில் மற்றச் சூத்திரங்களும் விளக்கியிருக்கும். சகோதர சகோதரிகளுக்கு என் கதைகள் அங்கீகாரம் ஆகக்கூடும் என்ற நம்பிக்கையால் இப்பொழுது சிவஞானத்தோடு வெளிப்போந்தேன்.

தி. ம. பொ.

# முதல் பாகம்



Rai Sahib T. M. Ponnuswamy Pillay

உ

கடவுள் துணை

# சிவஞானம்

## 1—ம் அத்தியாயம்

திருவருளை முன்னிட்டு நாம் எழுதும் இக்கதை மேல்நாட்டைப பற்றியது. நீர்வளம் நிலவளம் நிறைந்து தலமகிமைகொண்ட திரிச்சிராப்பள்ளிக்கு மேற்கில் இருபத்தாறு மைல் தூரத்திலுள்ள லாலாபேட்டை யென்ற கிராமத்தில், நீண்ட கூந்தலும், குறுக்கமில்லாத நெற்றியும், கறுத்தடர்ந்த புருவமும், பெருத்த கண்களும், எடுபபாயுள்ள நாசியும், சிவந்து சிறுத்த இதழ்களும், முத்துகள் போன்ற சரியொத்த பல்வரிசைகளும், பரந்த முகமும், பொன் நிறம்போன்று அதிகம் பருத்திராத தேகமும், ஐந்தேகாலடி உயரமும், இருபத்துமூன்று அல்லது ஒன்றிரண்டு அதிகமென மதிக்கத்தகுந்த வயதும் உள்ள ஒரு சுந்தரமான பெண்பிள்ளை காவேரி யாற்றில் காலை நிதானம் ஏழு மணிக்கு நீராடிக்கொண்டிருந்தாள். அள்ளிச்செருகிய கூந்தலும், குறுகிய நெற்றியும், கறுத்த புருவமும், சிறுத்த கண்களும், சிறுத்த இதழ்களும், வெண்மையான பல்வரிசையும், கறுத்தும் பருத்திராத தேகமும், ஐந்தே காலடி உயரமும் முப்பது அல்லது ஒன்றிரண்டு அதிகமென மதிக்கத் தகுந்த வயதும் உள்ள ஒரு பெண்பிள்ளை அவ்விடம் வந்து "சிவஞானம்! வரவில்லையா" என்றாள்.

**சிவஞானம்.**—அம்மா! அபூர்வம்! இதோ வந்தேன். காவேரி யாற்றுத் தெளிந்த நீரைப் பார்த்தால் விட்டுவரப் பிரிய மில்லை (என்று சொல்லிக்கொண்டே கரையேறினாள்).

**அபூர்வம்.**—அம்மா! சிவஞானம்! நீ அரசு சுற்றவில்லையா? நீ விடாமல் அரசு சுற்றிக்கொண்டிருந்தால் உனக்குக் குழந்தை உண்டாகுமே!

**சிவஞானம்.**—அரசு சுற்றிக்கொண் டிருக்கிறவர்களுக்கெல்லாம் குழந்தை பிறக்கிறதா, இல்லை. ஆயினும் நாம் அரசு சுற்றி விநாயகரை வணங்கிப போகலாம் (என்று இருவரும் அரசு சுற்றி வீட்டுக்குப போகப் புறபபட்டார்கள்).

**அபூர்வம்.**—அம்மா! சிவஞானம்! இன்றேது நீ காவேரி யாற்றுக்கு வந்தது. காவேரியாற்று ஜலத்தைப பார்த்தாயா, இள நீர்போலிருககிறது.

**சிவஞானம்.**—அம்மா! தாஙகள் காவேரியாற்றுக்கு வருகிறது அபூாவம் ஆதலால் என்னைத் தாங்கள் அவ்விதம் கேட்டீர் கள். நான் எபபொழுதும் காவேரியாற்றுககு வருகிறவளே!

**அபூர்வம்.**—நகைத்து! எனககும் காவேரியாற்றுக்கு வரப் பிரியமே! துணையகபபடாததால் வருகிறதில்லை.

**சிவஞானம்.**—உமககு அவ்வித எண்ணமிருந்தால் நான் போகும் பொழுதெல்லாம் தங்களைக் கூபபிட்டுககொண்டு போவேன்.

**அபூர்வம்.**—அவ்விதம் நீ செய்தால் அது பெரிய உபகாரமென்று எண்ணுவேன். நான் இவ்வூரிலிருக்கும் பரியந்தம் உன் னோடு வாத் தடையில்லை.

**சிவஞானம்.**—தாங்கள் எபபொழுது கோயம்புத்தூருக்குப் போவீர் கள்?

**அபூர்வம்.**—என் தாயார் நலியாக இருக்கிறார்களென்று கேள்விப் பட்டு என் நாயகன் என்னை அழைத்து வந்து விட்டுப் போனார். அவர் வந்து அழைத்துப் போகுந்தனையும் இங் கிருக்கவேண்டும். அல்லது சரியான துணை யகப்பட்டால் நான் போகக்கூடும்.

**சிவஞானம்.**—தங்களுடைய தாயாருக்கு இப்பொழுது தேகம் சௌக்கியந்தானே ?

**அபூர்வம்.**—முற்றிலும் சௌக்கியமே. ஆயினும் சாப்பாடு சரியாய் ஏற்றுக்கொள்ளுகிற தில்லை.

**சிவஞானம்.**—என்னிடத்தில் லேகிய மிருக்கிறது : அதைத் தங்கள் தாயார் சாப்பிட்டால் பசி உண்டாகும்.

**அபூர்வம்.**—உனக்கு வைத்தியம் தெரியுமோ ?

**சிவஞானம்.**—என் தந்தை சிறந்த வைத்தியரென்று நீங்கள் கேள்விப்பட்ட தில்லையா ?

**அபூர்வம்.**—என் கேள்விபபடவில்லை. உங்கள் வீட்டுக்கு வைத்தியர்வீ டென்றல்லவோ பேர். உன்னுடைய தந்தை காலம் சென்ற பின் அவரோடு வைத்தியமும் போய்விட்டதென் றல்லவா நினைத்திருந்தேன். நீ எபபடி வைத்தியம் கற்றுக் கொண்டாய்.

**சிவஞானம்.**—என் தந்தை உயிரோ டிருக்கும்பொழுது அவர் ஔடதம் செய்யும்பொழு தெல்லாம் நான் அவருக்கு உதவி யாக நிற்கிற வழக்கம் உண்டு. அவர் வீட்டில் செய்து வைத்திருக்கும் ஔட தஙகளின் பேரைச் சொல்லி, கொண்டு வரச்சொன்னால், நான் கொண்டுவந்து கொடுத்துக் கொண் டிருந்தேன். பின் அவர் எழுதிவைத்திருக்கும் முறையைக் கொடுத்தால் அவருடைய உதவியில்லாமல் ஔடதம் செய்யும் சக்தி எனக்கு உண்டாயிற்று. வைத்தியம் கற்றுக்கொள்ளும் சக்தி எனக்கிருக்கிறதென்று அறிந்த என் தந்தை கைநாடி பார்க்கவும் கற்றுக்கொடுத்தார். இன்ன நோய்க்கு இன்ன மருந்து கொடுக்கவேண்டு மென்று அறிந்திருந்தாலும், என் தந்தை இறந்த பின் நான் ஒருவருக்கும் ஒன்றும் செய்கிற தில்லை. ஆனால் என் தந்தை காலத்தில் செய்து வைத்துப் போன சிறந்த ஔடதங்கள் அனேகம் இருக்கின்றன.

**அபூர்வம்.**—வெளியாருக்கு ஔடதங் கொடுக்காமற் போனாலும்

நம் வீட்டு வரைக்கும் நாம் வைத்தியம் செய்துகொள்ளலாம். நீ எப்பொழுது லேகியம் கொடுக்கிறாய் ?

சிவஞானம்.—தாங்கள் எப்பொழுது வேண்டுமென்றாலும் கொடுக்கிறேன்.

அபூர்வம்.—நான் உங்களுடைய வீட்டுக்கு வந்து வாங்கிப் போகிறேன். அம்மா ! உன்னை ஒன்று கேட்கவேண்டுமென்றிருந்தேன் : அது இப்பொழுது ஞாபகத்துக்கு வந்தது. உன் சிறிய மாமனார் இரத்தினசபாபதி பிள்ளை தன் ஆஸ்தியை எல்லாம் உன் புருடன் பேருக்கு எழுதி வைத்திருந்தாரென்றும், இப்பொழுது தான் விவாகம் செய்துகொள்ளப்போகிறாரென்றும் கேள்விப்பட்டேன். அது உண்மையா ?

சிவஞானம்.—ஆம் ! என் மாமனார் விவாகம் செய்துகொள்ளப் போகிறது உண்மையே (என்று நகைத்தாள்).

அபூர்வம்.—உன் சிறிய மாமனாருக்கு வயதென்ன ?

சிவஞானம்.—அவருக்கு அறுபதுக்குமேல் நடக்கிறது.

அபூர்வம்.—அவர் இவ்வளவு இளமையிலா விவாகம் செய்துகொள்ளத் துணிந்தார் ! இக்காலத்தில் அவருக்கு இந்த எண்ணம் உதித்ததின் காரணமென்ன ?

சிவஞானம்.—காரணமென்ன ! பணம் அதிகம் இருப்பதால் பலர் அவரை விவாகம் செய்துகொள்ளத் தூண்டுகிறார்கள். அவரும் ஒப்புக்கொண்டு பெண் பார்க்க ஆள் அனுப்பியிருக்கிறார்.

அபூர்வம்.—அறுபது வயது கிழவனுக்கு யார் பெண் கொடுப்பார்கள் ?

சிவஞானம்.—கிழவனுக்கா பெண் கொடுக்கப்போகிறார்கள் ? பணத்துக்கல்லவோ பெண் கொடுக்கிறார்கள். இக்காலத்தில் வயதையும், சுந்தரத்தையும், நன்னடக்கையையும் கவனிக்கிறதில்லை. பண மிருந்தால் போதும் ; அறுபது வயதானாலும் எழுபது வயதானாலும் தோஷமில்லை : சுந்தரமான பெண்

கிடைக்கும். சென்னையில் ஒருவனுக்கு இலக்ஷ ரூபா சொத்திருந்தது அவன் நோயால் பீடிக்கப்பட்டு அவன் சில நாளில் இவ்வுலகத்தை விட்டு நீங்குவான் என்று வைத்தியர்களால் அறிந்தும் அவனுக்குப் பெண்ணைக் கொடுத்தார்கள். விவாக மான மூன்றும் நாள் அவன் இறந்தான். சொத்துப் பெண்ணைச் சேர்ந்தது. இதை யோசித்துப் பார்த்தால் பணத்துக்கு மனைவியாளு ளென்று காண்கிற தல்லவா ?

அபூர்வம்.—உன் சிறிய மாமனுர் மனைவி இறந்து நெடுநாளாயிற்ருே ?

சிவஞானம்.—பத்து வருடத்துக் கதிகமிருக்கும். என் சிறிய மாமனுருக்கு ஒரு குமாரன் இருந்தார். அவர் பதினெட்டு வயதில் காலம் சென்ருர். அது முதல் என் சிறிய மாமி பிள்ளையேக்கத்தால் நெடுநாள் நோயாயிருந்து காலஞ் சென்ருர்கள். என் சிறிய மாமனுரும், தன் மகனும் மனைவியும் இறந்தபின் கவலையோடு காலங்கழித்துவந்தார்.

அபூர்வம்.—என் தாயாரும் நானும் உங்கள் குடும்பத்தைக் குறித்துப் பேசிக்கொண் டிருக்கும்பொழுது, என் தாயார் இவ்வூரில் நெடுங்காலம் இருந்தவர்க ளாதலால், உன் புருடனுக்குப் பெரும்பொருள் வாவிருந்தது தவறிப்போய்விட்டதென்று சொல்லித் துக்கப்பட்டார்கள்.

சிவஞானம்.—ஐயோ ! அம்மா ! அவருடைய பணங்காசை நாங்கள் எதிர்பார்க்க வில்லை. அவர் விவாகம் செய்துகொண்டு பிள்ளை குட்டிகளைப் பெற்றுக்கொண்டு சுகமாயிருந்தால் நாங்கள் சந்தோஷமடைவோம்.

அபூர்வம்.—ஆம் ! பிள்ளைகள் பதினுறும் பெற்றுக்கொள்வார்கள் ! அவருக்கு எந்த ஊரிலிருந்து பெண் கொடுக்கப் போகிருர்கள்.

சிவஞானம்.—கோயம்புத்தூரிலிருந்தே பெண் வரப்போகிற தென்று கேள்வி.

அபூர்வம்.—எங்க ளூரிலிருந்தா வரப்போகிறது. அப்பெண்ணுக்குத் தாய்தந்தை யுண்டா ?

சிவஞானம்.—தாய்தந்தை யிருக்கிறுர்கள். அபபெண்ணும் நானும் ஒன்றுய்ப் பள்ளிக்கூடத்தில் வாசித்தோம்.

அபூர்வம்.—நீ திரிச்சிராபபள்ளியில் பிறந்து வளர்ந்து இவ்வூரில் வாழ்க்கைப்பட்டாய். நீயும் அந்தப் பெண்ணும் எவ்விதம் ஒன்றுய் வாசித்தீர்கள் ?

சிவஞானம்.—அபபெண் தாய்தந்தை எங்களைப்போல், திரிச்சிராபபள்ளியி லிருந்தவர்களே ! அவர்கள் செல்வாக்கா யிருந்து பின் வறுமையடைந்து திரிச்சிராப்பள்ளியிலிருக்க வெட்கப்பட்டுக் கோயம்புத்தூருக்குப் போய்விட்டார்கள்.

அபூர்வம்.—அவர்கள் கோயம்புத்தூரை விரும்பிய காரணம் என்ன ?

சிவஞானம்.—அப்பெண்ணின் தந்தையோடு பிறந்தவளைக் கோயம்புத்தூரில் கொடுத்திருந்ததால் அவ்வூருக்குப் போனுர்கள்.

அபூர்வம்.—அபபெண் உன்னேடு வாசித்தவள் என்றதால் அப்பெண்ணுக்கு வயது அதிகம் இருக்கவேண்டும். அப்பெண்ணைக் கொள்வா ரில்லாததால் கிழவனுக்குக் கொடுக்கச் சம்மதித்தார்போல் காண்கிறது.

சிவஞானம்.—இல்லை. அப்பெண் வயதடையுமுன் விவாகம் செய்துகொடுக்க அவள் தாய்தந்தை மனங்கொள்ளாமல் காலத்தைக் கழித்துவிட்டார்கள். அப்பெண் என்னைவிட ஐந்தாறு வருடம் சிறியவள். அவள் ஒருவருடத்துக்கு முன் தன்னையறிந்தாள். அவள் தன் அத்தை மகனை விவாகம் செய்துகொள்ளுவாளென்றே யாவரும் எண்ணியிருந்தோம். ஆனுல் மகனுக்கு மனைவியாகாமல், மகனுக்குத் தாயாகப் போகிறுள்.

அபூர்வம்.—அப்பெண்ணுக்கும் இரத்தினசபாபதி பிள்ளை மாமனுராக வேண்டுமோ ?

**சிவஞானம்.**—ஆம்! அப்பெண்ணின் மற்ருேர் அத்தையை என் பெரிய மாமஞருக்குக் கொடுத்திருந்தது.

**அபூர்வம்.**—அப்பெண்ணுக்கு அத்தை மகனிருக்க அவனுக்குக் கொடுக்காமல் இக்கிழவனுக்குக் கொடுக்க எண்ணங்கொண்டது யாது காரணம்?

**சிவஞானம்.**—அபபெண்ணின் தந்தைக்குச் சொத்து அதிகம் இருந்தது. அவர் கூத்தி விஷயத்தில் தொலேத்து விட்டது போக, மீதியாக இருந்த நிலத்தை என் சிறிய மாமஞரிடத்தில் பெருங்கடன் வாங்கி ஈடுவைத்துவிட்டார். இப்பொழுது தன் குமாரத்தியைக் கடன் கொடுத்திருப்பவருக்கே கொடுத்துவிட்டால், கொடுத்த கடனேக் கேட்காமல் விட்டுவிடுவா ரென்ற எண்ணமே.

**அபூர்வம்.**—அப்பெண்ணின் தாய்தந்தை ஏழையாய்ப் போனதால் அப்பெண்ணின் அத்தை மகனும் அப்பெண்ணே விவாகம் செய்துகொள்ள இஷ்டபபடவில்லேயோ?

**சிவஞானம்.**—ஞானவடிவு தனக்குக் கிடைக்கமாட்டாளா என்ற எண்ணத்தோடு நீலமேகம் இருக்கிருன்.

**அபூர்வம்.**—என்ன சொன்ஞய்? ஞானவடிவா? எந்த ஞான வடிவு?

**சிவஞானம்.**—மணிவாசகம் பிள்ளே குமாரத்தி ஞானவடிவைக் குறித்தே சொல்லுகிறேன். தங்களுக்கு ஞானவடிவு தெரியுமா?

**அபூர்வம்.**—பாக்கியத்தம்மாளின் மகளேக் குறித்தா சொல்லிக் கொண்டு வந்தாய். நான் யாரோவென்று நினேத்திருந்தேன். பாக்கியத்தம்மாளின் குமாரத்தியையா இக்கிழவனுக்குக் கொடுக்கப் போகிருர்கள். ஐயோ! பாவம்! கிளியை வளர்த்துப் பூனேக்குக் கொடுபபதுபோ லல்லவோ இருக்கிறது. கற்பகவல்லியம்மாளின் குமாரன் ஞானவடிவை விவாகம் செய்துக்கொள்ளபபோகிருன் என்று என் நாயகர் சொல்லிக்கொண்டிருந்தது என் காதில் விழுந்திருக்கிறதே!

ஞானவடிவை உன் மாமனுருக்குக் கொடுப்பார்களென்று நான் நினைக்கவில்லை.

சிவஞானம்.—எனக்கும் உண்மை தெரியாது. பெண் கேட்கக் கோயம்புத்தூருக்குப் போயிருபபவர் வந்தால் உண்மை விளங்கும். ஆயினும் ஒரு விஷயத்தில் என் சிறிய மாமனுருக்குப பெண் கொடுககச் சம்மதபபடுவார்களென்று நான் நினைக்கிறேன். மணிவாசகம் பிள்ளை என் மாமனுருக்கு அதிகம் பயந்திருக்கிறுரா.

அபூர்வம்.—அவரேன் பயபபடவேண்டும் ?

சிவஞானம்.—இராமாயணம் முதலிலிருந்து முடிவு பரியந்தங் கேட்டுப் பின் இராமனுக்கும் சீதைக்கும் என்ன முறை யென்று கேட்பதுபோ லிருக்கிறது. மணிவாசகம்பிள்ளை தன் நிலத்தை யெல்லாம் என் மாமனுரிடம் ஈடுவைத்திருப்ப தால், நாளை என் பணத்தைக் கொடு என்ருல் மணிவாசகம் பிள்ளை நிலத்தை இழக்கவேண்டிவரும். நிலம் போனுல் அவர் சாப்பாட்டுக்கு என்ன செய்வார் ?

அபூர்வம்.—மணிவாசகம் பிள்ளை பெண் கொடுக்கிறேன் என்று சொன்னுலும், ஞானவடிவு கிழவனை விவாகம் செய்து கொள்ளச் சம்மதபபடுவாளா ?

சிவஞானம்.—ஞானவடிவின் கருத்தை அறியவில்லை. ஆயினும் அவள் தாய்தந்தை சொல்லைத் தடுத்துப் பேசமாட்டாள்.

அபூர்வம்.—ஐயோ ! பாவம் ! அவள் தலையில் பிரமன் எவ்விதம் எழுதியிருக்கிருனே. நான் கோயம்புத்தூருக்குப போன வுடன் ஞானவடிவைப பார்க்கிறேன்.

சிவஞானம்.—அம்மா ! இதுபரியந்தம் தாங்கள் எங்கள் சமா சாரத்தைக் கேட்டுக்கொண்டிருந்தீர்கள். தாங்களும் தங்கள் சக்களத்தியும் ஒப்பியிருக்கிறீர்களா ?

அபூர்வம்.—அக்காளும், தங்கையும் ஒருவனுக்கு வாழ்க்கைப் பட்டாலும் அவர்கள் ஒத்து வாழ்கிறதில்லை யென்ருல்,

அன்னியமான இருவர் ஒருவருக்கு மனைவியானால் எவ்வித மிருப்பார்களென்று நீயே யறிந்துகொள்ளவேண்டும்.

சிவஞானம்.—தங்களுடைய நாயகன் தங்களை எவ்விதம் நடத்துகிறார்.

அபூர்வம்.—அந்த வயிற்றெரிச்சலை என் கேட்கிறாய்? எனக்குப் பிள்ளைகள் பிறந்து பிறந்து இறந்து போகிறதென்று என்னைக் கெஞ்சியும், என்னைத் தன் குலதெய்வம்போல் பார்ப்பேன் என்று என்னைப் பசப்பியும், வேறு விவாகம் செய்துகொண்டார். அவள் வீட்டுக்கு வந்தது முதல், அவளையே தன் குலதெய்வமாக நினைத்துத் தொழுது கொண்டிருக்கிறார். நான் வினையை நொந்து காலங்கழித்து வருகிறேன்.

சிவஞானம்.—உங்கள் சக்களத்திக்குப் பிள்ளைக ளுண்டா?

அபூர்வம்.—என் சக்களத்தி இராஜம்பாளுக்கு விவாகமாகிச் சரியாக நாலு வருஷம் முடியவில்லை. ஆயினும் மூன்று வருடத்துப் பெண்ணொன்றும், ஒன்றரை வருடத்து ஆண்பிள்ளை யொன்றும், மூன்று மாதத்துப பெண்குழந்தை யொன்றும் உண்டு.

சிவஞானம்.—தங்கள் சக்களத்திக்கு மூன்று மாதத்துக் குழந்தையையும், சிறுவர்களையும் வைத்துக்கொண்டு வீட்டு வேலைகளைச் செய்வது கஷ்டமாக இருக்குமே! தாங்கள் வந்து தாயார்வீட்டில் ஏறிக்கொண்டீர்களே (என்று நகைத்தாள்)!

அபூர்வம்.—அவள் கஷ்டப்படுகிறாள் என்று என் நாயகர் என்னை அழைக்க வருவாரென்று நினைக்கிறேன்.

சிவஞானம்.—தாங்கள் கோயம்புத்தூருக்குப் போய்விட்டால் தங்களுடைய தாயாருக்கு உதவியாக யார் இருக்கிறார்கள்.

அபூர்வம்.—என் தமையன் மாரியபபபிள்ளை யிருக்கிறார்.

சிவஞானம்.—அவருக்கு மனைவி உண்டல்லவா?

அபூர்வம்.—அவருடைய மனைவி காலம் சென்றாள். அவரை மறு விவாகம் செய்துகொள்ளத் தூண்டினும் கையில் மடி

யில் பணமில்லாமல் என்ன செய்கிறதென்று கூறுகிறார். (என்று ஒரு சிறிய வீட்டுக் கருகில் நின்று) இதுதான் எங்கள் வீடு. நான் லேகியம் வாங்கிப்போகப் பின் வருகிறேன் (என்று சிவஞானத்திடம் விடைபெற்று வீட்டுக்குள் நுழைந்தாள்).

சிவஞானம் கடைத்தெருவில் ஒரு பெரியவீட்டுக்குள் சென்றாள்.

---

## 2—ம் அத்தியாயம்

லாலாபேட்டைக் கடைத்தெருவில் மிகு அலங்காரமாகக் கட்டிய ஓர் மசசு வீட்டு வெளித் திண்ணையில் காலை எட்டு மணிக்கு முடித்துத் தொஙகவிட்ட கேசமும், பெருத்த நேத்திரங்களும், வெண்மையான பல்வரிசையும், முறுக்கிவிட்ட மீசையும், பெருத்த உதடும், பரந்த முகமும், பருத்த தேகமும், ஐந்தரையடி உயரமும், முப்பத்தெட்டு அல்லது நாற்பது என்று நிதானிக்கத் தகுந்த வயதும் உள்ள ஒருவர் உட்கார்ந்து மீசையை முறுக்கிக் கொண்டு பெருத்த யோசனையி லிருந்தார். அபபொழுது சொக்காய் தலைகுட்டை போட்டுக்கொண்டு நாற்பது வயதென்று மதிக்கத் தகுந்த ஓர் சுந்தர புருஷன் திண்ணையில் உட்கார்ந்திருப்பவரைப் பார்த்து "பச்சையபப பிள்ளையா உட்கார்ந்திருப்பது?" என்று கேட்டு நகைத்தார்.

**பச்சையப்ப பிள்ளை.**—ஆம்! வருக மெய்யறியாரே! எப்பொழுது வந்தீர்.

**மெய்யறியார்.**—நேற்று மாலை வந்து என் நண்பர் வீட்டில் தங்கியிருந்து, காலை காவேரி ஸ்நானத்துக்குப் போய் வருகிறேன். உமது சிறிய தந்தை இரத்தினசபாபதி பிள்ளை வீட்டிலிருக்கிறாரா? (என்று கேட்டுக்கொண்டே உட்கார்ந்தார்).

**பச்சையப்ப பிள்ளை.**—அவர் இரத்தினகிரியார் மலைக்குப் போயிருக்கிறார். அவர் வரும் வேளை யாயிற்று.

**மெய்யறியார்.**—அவர் இரத்தினகிரியார் மலைக்கு எப்பொழுது போனார்?

**பச்சையப்ப பிள்ளை.**—அவர் மூன்று நாள்களுக்கு முன் சென்றவர் இன்று காலையில் வருவதாகச் சமையற்காரனுக்குச் சொல்லியனுப்பியிருக்கிறார். நீர் கோயம்புத்தூருக்குப் போனதாகக் கேள்விபபட்டேன். நீர் போன காரியம் எவ்விதம் முடிந்தது? பெண்வீட்டார் என்ன சொல்லுகிறார்கள்?

**மெய்யறியார்.**—அவர்கள் சொல்லுகிறதென்ன? நம்முடைய இஷ்டம்போல் செய்ய உடன்பட்டிருககிறார்கள்.

**பச்சையப்ப பிள்ளை.**—என் சிறிய தந்தைக்குப பெண் கொடுக்கச் சம்மதித்துக்கொண்டார்க ளல்லவா?

**மெய்யறியார்.**—அவர்கள் சம்மதிததுக் கொண்டபின் அவர்களைக் கொண்டே நிச்சய தாம்பூலத்துக்கு நாள் வைததுக் கொடுக்கச்சொல்லி நாள் குறித்து வாங்கிவந்திருக்கிறேன்.

**பச்சையப்ப பிள்ளை.**—விவாகம் செய்துகொள்ளப போகும் பெண்ணுக்குச் சம்மதந்தானே.

**மெய்யறியார்.**—ஐயா! நீர் கேட்பது வேடிக்கையாக இருக்கிறது. ஓர் இலக்ஷாதிபதிக்கு மனைவியாவது எளிதா? பணம் என்றால் பிணமும் வாயைத் திறக்கும் என்றதைக் கேட்டதில்லையா? அபபெண் நன்றாய் வர்சித்தவளாதலால் தன் நன்மையைக் கருதித் தன் தாய்தந்தை ஒன்றைச் செய்வார்களாயின் அவள் அதற்கு விரோதம் சொல்வாளா? தாய் தந்தையும் தங்களுடைய பெண் போகுமிடத்தில் சௌகரியமாக இருக்கவேண்டுமென்ற எண்ணத்தோடு செய்வதால், தங்களுடைய பெண்ணின் சம்மதத்தைக் கேட்கவேண்டியது அவசியமில்லை யாயினும், பெண்ணின் சம்மதத்தைக் கொண்டே வாக்குக் கொடுத்ததாகக் காணப்படுகிறது.

**பச்சையப்ப பிள்ளை.**—என் தாய் மாமன் சம்மதித்துக்கொண்டது எனக்கும் சந்தோஷமே! ஆயினும் உம்முடைய வல்லமையைக் குறித்து உம்மைப் புகழவேண்டியதே! என் சிறிய தந்தைக்குச் சமீபத்தில் கண்ட மிருக்கிறதென்று சோதிடர்களா லறிந்து, தனக்குப் பின் தன்னுடைய சொத்து யாரைச் சேர்வதென்று ஏற்பாடு செய்து வைக்க வேண்டுமென்று சென்னைக்குப் போய், வக்கீலைக்கொண்டு வில்சாஸனம் எழுதி முடித்த பின், உம்மை முதல் முதல் வரதாமுத்தியப்பன் தெருவில் கந்தசாமி முதலியார் வீட்டில் பார்த்தோம். உமக்கு நீர் கண்ணபிரான் பேரைக்கொண்டிருப்பது பொருத்தமல்ல வென்றும், 'மெய்யறியார்' என்றதே உமக்குப் பொருத்த மென்றும் இரங்கூனார் உமக்கு நாமம் சூட்டினாரென்று கேள்விப்பட்டு, பின் உம்மோடு சீட்டாடிய பொழுது இரங்கூனா கொடுத்த நாமம் முற்றிலும் பொருத்த மென்று என் சிறிய தந்தையே ஒப்புகொண்டார். அது போதாதென்று சோதிடர்களை யழைத்து வந்து என் சிறிய தந்தைக்கு வரும் கண்டம் ஒன்றும் கெடுதல் செய்யாது, அவருக்கு வயது தொண்ணூற்றைந்து என்று சொல்லி, அவருக்கு நெருங்கிய சிநேகராகி இவ்விடம் வந்து அவருக்கு இந்த முதிர்ந்த வயதில் விவாகமும் முடித்து வைக்கத் துணிந்தீர். உம்மைப்போல் அவருக்கு உபகாரம் செய்தார் ஒருவருமில்லை. நீர் செய்வதும் பிரயோசனப்பட்டு உம்முடைய சோதிடர்கள் சொன்ன விதம் தொண்ணூற்றைந்து வயதுட னிருக்கவேண்டு மென்பதே என்னுடைய வேண்டுகோள். சிலவேளை இவ்வூர் சோதிடர் சொல்லியதுபோல் முடிந்தால், என் மாமன் மகளின் கதி என்னவாகு மென்றே பயப்படுகிறேன்.

**மெய்யறியார்.**—ஐயா! பச்சையப்ப பிள்ளை! எனக்கு இரங்கூனார் கொடுத்த பெயரைக்கொண்டே யாவரும் என்னைக் கொண்டாடிக் கூப்பிடுகிறார்கள். நீர் உமது சிறிய தந்தை ஆயுளைக்

குறித்துச் சந்தேகப்படவேண்டாம். நீரும் உம்முடைய சிறிய தந்தையும் சென்னையைவிட்டு நீங்கிய பின், நான் சும்மாயிராமல் இரத்தினசபாபதி பிள்ளை ஜாதகத்தை நாலைந்து சமர்த்தரான சோதிடர்களிடத்தில் காட்டினேன். அவர்களெல்லாம் ஜாதகம் அதிர்ஷ்டமுள்ள தென்றும் ஜாதகனுக்கு வயது தொண்ணூற்றைந்தென்றுமே சாதித்தார்கள். உன் சிறிய தந்தை மூன்று ஆண் பிள்ளைகளையும் மூன்று பெண் பிள்ளைகளையும் பெற்றுக்கொண்டு பெரிய குடும்பமாக இருப்பாரென்றும் சொன்னதை நம்பி நான் இவ் விஷயத்தில் பிரவேசித்தேன். நீர் உன் மாமன் மகளைக் குறித்துக் கவலை கொள்ளவேண்டாம். அவள் மிக்க அதிர்ஷ்டமுள்ளவ ளானதால் பெருந்தனவந்தன் அவளுக்கு நாயகனாக ஏற்பட்டான். நான் இதில் பிரவேசிக்காமற் போனாலும் முப்பது நாளைக்குள் விவாக மாகும். இதில் சந்தேகமில்லை (என்று நகைத்தார்).

**பச்சையப்ப பிள்ளை.**—நீர கைக்கொண்ட விஷயத்தை முடித்துவிட்டே நீர் சென்னைக்குப் போகவேண்டும். உம்மைக் கண்டதும் கேட்கவேண்டியதைக் கேட்காமல் வேறு பேச்சால் காலத்தைப் போக்கினேன். நீர் காலைப் பசியை ஆற்றிக்கொண்டீரா ? இல்லையா ?

**மெய்யறியார்.**—நான் காலைப் பசியை ஆற்றிக்கொண்டேன் [என்று சொல்லும்பொழுது வழுக்கல் தலையும் பரந்த நெற்றியும் சிறுத்த கண்களும் நீண்ட நாசியும் பொன் கம்பியால் கட்டிய பல் வரிசையும் நரைத்த மீசையும் சுருக்கம் விழுந்த தேகமும் சந்தன நிறமும் ஐந்தேமுக்காலடி உயரமும் அறுபது அல்லது ஒன்றிரண்டு அதிகமென மதிக்கத் தகுந்த வயதும் மெலிந்த தேகமும் உடையவரான இரத்தினசபாபதி பிள்ளை வீட்டுகுள் வருவதைக் கண்டு இருவரும் எழுந்து நின்றார்கள்].

**இரத்தினசபாபதி பிள்ளை.**—ஆ ! ஆ ! மெய்யறியாரா ! எப்

பொழுது வந்தீர்? வீட்டுக்குள் போகலாம் வருக (என்று மெய்யறியாரை அழைத்துச் சென்று உட்காரவைத்து), கோயம்புத்தூர் செய்தி என்ன?

**மெய்யறியார்.**—நானிவ்விடம் வந்து நெடுநேரமாக வில்லை. நான் ஒரு காரியத்தை ஒருவருக்குச் செய்துகொடுப்பதாக ஒபபுக்கொண்டால், அதை முடிக்காமல் விடுகிற வழக்கம் என்னிடத்திலில்லை யென்று தாங்கள் அறிந்திருந்தும், சந் தேகப்படுவதாகக் கேள்விபபட்டேன். இனி தாங்கள் சந் தேகபபடவேண்டிய காரண மில்லை. கோயம்புத்தூர் விஷ யம் மங்களகரமாய் முடிந்தது (என்று நகைத்தார்).

**இரத்தினசபாபதி பிள்ளை.**—என் மைத்துனர் மணிவாசகப் பிள்ளை பெண்கொடுக்கச் சம்மதித்துக்கொண்டாரா?

**மெய்யறியார்.**—பெண் கொடுக்கச் சம்மதப்பட்டு நிச்சய தாம் பூலத்துக்கு நாள் வைத்து வாங்கிக்கொண்டு வந்தேன் (என்று மஞ்சள் தடவிய காகித மொன்றை ஒரு தாம் பாளத்தில் வெற்றிலைப்பாக்குப புஷ்பத்தோடு வைத்துக் கொடுத்தார்).

**இரத்தினசபாபதி பிள்ளை.**—(தட்டை இரு கையாலும் வாங்கிக் கடிதத்தை வாசித்துப பாரத்து) இன்று திங்கட்கிழமை இன்றெட்டாம். நாள் அதாவது சித்திரைமீ 12உ மாலை ஐந்தரை மணிக்குமேல் ஏழரை மணிக்குள் துலா லக்கினத் தில் நிச்சயதாம்பூலம் நடத்துவது உத்தமம் என்றிருக்கிறது. அடுத்த பக்கத்தில் சித்திரைமீ 20உ திங்கட்கிழமை காலை நாலரை மணிக்குமேல் 6-மணிக்குள் மாங்கல்யதாரணம் நடத்துவது உத்தமம் என்றிருக்கிறது.

**மெய்யறியார்.**—பெண் வீட்டாரால் நியமிக்கப்பட்ட நாள் உங்களுக்குத் திருப்தியில்லாவிட்டால் தாங்கள் இவ்விடத்தி லுள்ள சோதிடர்களைக் கொண்டு சௌகரியப்படி நாள் ஏற்படுத்திக்கொள்ளச் சொன்னார்கள். வேறு நாள் வைத்

துக்கொள்கிறதா யிருந்தால் தெரிவிக்கும்படி கேட்டுக் கொண்டார்கள்.

**இரத்தினசபாபதி பிள்ளை.**—கோயம்புத்தூரில் நடந்தது யாவும் நீர் எனக்குச் சொல்லவேண்டும்.

**மெய்யறியார்.**—அங்கு நடந்ததை ஏன் கேட்கிறீர்கள்? காரியம் முடிந்தது தங்களுக்குப் போதாதோ?

**இரத்தினசபாபதி பிள்ளை.**—காரியம் முடிந்தது விசேஷமே. ஆயினும் அங்கு நடந்தவைகளை யறிய எனக்கு ஆசை தூண்டுகிறது.

**மெய்யறியார்.**—தங்களுடைய ஆசையைப் பூர்த்தி செய்யப் பிணைப்பட்டிருக்கிறேன். நான் தங்களுடைய கடிதத்தோடு ரங்கைய கௌண்டன் தெருவில் மணிவாசகம் பிள்ளையைக் கண்டேன். அவர் கடிதத்தை வாசித்துப் பார்த்துச் சந்தோஷத்துடன் வரவேற்று, வேண்டிய உபசாரணை செய்து, கோயம்புத்தூருக்கு வந்த காரியம் ஏதென்று கேட்டார். நான் மேலைச்சிதம்பரம் என்று பேர் வழங்கும் பேரூர் சுவாமி தெரிசனைக்கு வந்தேன் என்று சொல்லியதைக் கேட்டு, பேரூருக்கழைத்துப் போய் நொய்யலாற்றில் நீராடச்செய்து சுவாமி தெரிசனமும் செய்வித்து வீட்டுக் கழைத்துவந்தார். அன்று போக மறுநாள் சவுடம்மன் கோவில் கோனியம்மன் கோவில் முதலிய விடங்களைப் பார்த்துவந்தேன். நான் அவ்வூரில் பார்க்கவேண்டியதெல்லாம் பார்த்துவிட்டதால் எனக்குப் போக விடை கொடுக்கவேண்டியதில் மணிவாசகம் பிள்ளையும் அவர் மனைவியும் சில நாளிருந்தே போகவேண்டுமென்று கட்டாயப்படுத்தினார்கள். நான் அவர்களுடைய இஷ்டத்துக் கிணங்கியிருந்து அவர்கள் வீட்டில் நடமாடும் பெண்ணைப் பார்த்து "பெண்ணுக்கு விவாகம் எப்பொழுது? பெண்ணை யாருக்குக் கொடுக்கப் போகிறீர்கள்?" என்று பல கேள்விகளைக் கேட்டுப் பின் "பெருந் தனவந்தராகிய என் நண்ப

ரொருவருக்குப் பெண் வேண்டுமென்று தங்களுடைய நாமத்தைச் சொல்லாமல் தங்களுடைய நிலைமையைச் சொல்லிப பெண் அவருக்கு வாழ்க்கை படுவாளாஞல் பெண் அதிர்ஷ்ட முள்ளவளென்றே சொல்லவேண்டும்'' என்ற பின், அவர் யாரென்றும் எக்குல மென்றும் வயதென்ன விருக்குமென்றும் விசாரித்தார்கள். நான் தங்களுடைய பெயரைச் சொன்ன வுடன் மணிவாசகம்பிள்ளை "என் மைத்துனர் இந்த வயதில் விவாகம் செய்துகொள்ள மனங்கொண்டாரா'' என்று நகைத்தார். "இரும்பு பழுக்கக் காய்ச்சிய பொழுதே சம்மட்டியடி கொடுத்தாலன்றி நம்மிஷ்டத்துக் குடன்படாதென்று, தாங்கள் சென்னைக்குப் போனதும் அங்கு சோதிடர்கள் தங்களுக்கு வயது தொண்ணூற்றைந் தென்றும் இன்னும் ஆறுபிள்ளைகள் பிறக்கப்போகிறதென் றும் சொல்லியதைச் சொல்லி, அவருக்கிருக்கும் கடனை இனுமாக விட்டுவிடச் செய்கிறேன்'' என்றதோடு இன்னும் பலவற்றைச் சொன்னபின், மணிவாசகம் பிள்ளை ஒருவாறு சம்மதப்பட்டார். அவர் மனைவியைச் சம்மதிக்கச் செய்வது கொஞ்சம் கஷ்டமாக இருந்தது. பின் அந்த அம்மாளையும் வழிக்குக் கொண்டுவந்தேன். இருவரும் சம்மதமானவுடன் அவர்களைக்கொண்டே சோதிடரை வரவழைத்து நிச்சய தாம்பூலததுக்கும் விவாகத்துக்கும் நாள் வைத்துக் கொடுக்கும்படி செய்தேன்.

**இரத்தினசபாபதி பிள்ளை**.—இவ்விவாகத்தில் பெண்ணினுடைய கருத்து என்னவென் றறிந்தீரா?

**மெய்யறியார்**.—ஐயாவே! தாங்கள் என்னைக் கோபித்துக்கொள்ளக் கூடாது. தங்களுக்கு வயது அதிகமாயினும் தங்களுக்கு உலக அனுபவம் போதாதென்று சொல்ல என்மனம் கூசுகிறது. விலையுயர்ந்த நகைகளையும் விலையுயர்ந்த சேலைகளையும் கட்டிக்கொண்டு பெருத்த தனவந்தன் மனைவியென்று பலர் சொல்வதைக் கேட்டுச் சந்தோஷப்படுவதை எந்த

மூடப் பெண் நிராகரிப்பாள் ? ஆயினும் நான் அவ்வீட்டை விட்டுப் பிரயாணப்படுமுன் "என் மகள், ஞானவடிவு சந்தோஷமாக விருக்கிறாள். குறித்துக்கொடுத்த தினத்தில் நிச்சயதாம்பூலத்தை முடித்துவிடச் சொல்லுங்கள்" என்று மணிவாசகம் பிள்ளை மனைவி பாக்கியத்தம்மாள் என்னிடத்தில் இரகசியமாகச் சொன்னார்கள்.

**இரத்தினசபாபதி பிள்ளை.**—நான் ஞானவடிவைப பார்த்து நெடுநாளாயிற்று. அவள் வயதடைந்தபின் பார்க்கவில்லை. அவள் இப்பொழுது எப்படியிருக்கிறாள் ?

**மெய்யறியார்.**—ஐயா ! நான் அனேக தனவந்தர் பெண்களைப் பார்த்திருக்கிறேன். ஆயினும், ஞானவடிவைப்போல் சுந்தரமான பெண்ணை நான் கண்டதில்லை. ஐயா ! அவள் கூந்தலுக்கு நிகராக மேகத்தையும் கருமணலையும், நெற்றிக்கு மூன்றாம் பிறைச் சந்திரனையும், புருவத்துக்கு வில்லையும், கண்ணிற்குச் சேற்கெண்டையையும் வாளையையும் வேலையும், மூக்குக்குச் சண்பகத்தையும், பற்களுக்கு முத்துக்களையும், இதழுக்குப் பவழத்துண்டையும், தோளுக்கு மூங்கிற் குருத்தையும், கைகால்களுககுத் தாமரையையும் சமானமாகச் சொல்லலாமேயன்றி இணையாகச் சொல்ல ஒருபமானமும் காண்கிலேன். அவளைப் பாாத்தால் கலாபமயில்போலிருக்கிறாள். அவளைத் தாங்கள் மனைவியாகக் கொள்ளபபோகிற தால் தாங்கள் மிக்க அதிரஷ்ட முள்ளவரென்றே சொல்ல வேண்டும் (என்று நகைத்தார்).

இரத்தின சபாபதி பிள்ளை மெய்யறியார் சொல்லியதைக் கேட்டு உடல் பூரித்து எழுந்துபோய்க் கருணாநிதியையும் பச்சையப்ப பிள்ளையையும் அழைத்துவரும்படி ஆக்கியாபித்து வந்து உட்கார்ந்தார்.

**மெய்யறியார்.**—பச்சையப்ப பிள்ளையும் கருணாநிதியும் தங்களோடில்லையோ ?

**இரத்தினசபாபதி பிள்ளை.**—அவர்கள் தனித்தனி அவர்கள்

சொந்த வீட்டி லிருக்கிறார்கள். நான் தனித்துச் சமையல் செய்ய ஓர் வேலைக்காரனை வைத்துக்கொண்டிருக்கிறேன்.

**மெய்யறியார்.**—இன்னும் முப்பது நாளைக்குள் இந்த வீடு பெரிய ஆடம்பரத்தோடிருக்கும். நான் மற்றொரு முறை தங்களை வந்து பார்க்கும்பொழுது குழந்தை அழுகிறதைக் கேட்பேன் (என்று நகைத்தார்).

அத்தருணத்தில் பச்சையப்ப பிள்ளையும், முடித்துத் தொங்கவிட்ட குடுமியும், அகலமான நெற்றியும், கறுத்தடர்ந்த புருவமும், பெருத்த நேத்திரங்களும், நீண்ட நாசியும், வெண்மையான சரியொத்த பல்வரிசையும், அழகான மீசையும், பருத்த தோளும், அகன்ற மார்பும், நீண்ட கரங்களும், எலுமிச்சம்பழ நிறமும், ஐந்தரை அடி உயரமும், மிகவும் பருத்திராத தேகமும் உடையவனும் இருபத்தைந்து வயதென்று மதிக்கத் தகுந்த ஓர் சுந்தரமான புருடனும் வந்து நின்றார்கள்.

**இரத்தினசபாபதி பிள்ளை.**—(பச்சையப்ப பிள்ளையோடு நின்றிருப்பவனைப் பார்த்து) அப்பா ! கருணாநிதி! (மெய்யறியாரைக் காட்டி) இப்புண்ணியவான் கோயம்புத்தூருக்குச் சென்று யாவும் முடித்துவந்திருக்கிறார். ஆயினும் நீங்கள் இருவரும் இவரோடு கோயம்புத்தூருக்குச் சென்று தக்க சோதிடரைக் கொண்டு பெண்வீட்டார் பார்த்திருக்கும் நாள் ஜாதகத்துக்குப் பொருத்தமோ என்று பார்த்துவரவேண்டும். (என்று மெய்யறியார் கொண்டுவந்த கடிதத்தைக் கொடுத்தார்).

**மெய்யறியார்.**—நான் தங்கள் ஜாதகத்தைக் கவனிக்காது பேர் இராசியைக் கவனித்தே நாள் வைக்கும்படி செய்தேன். தாங்கள் விரும்பிய வண்ணம் நான் மீண்டும் கோயம்புத்தூருக்குப் போவது முடியாது. நான் இன்னம் மூன்று நாளைக்குள் சென்னை போய்ச் சேரவேண்டும். எனக்குக் கிடைத்த நாள் முடிவாய்விட்டது.

**இரத்தினசபாபதி பிள்ளை.**—ஆம். நீங்கள் மட்டும் சென்று நான் சொல்லியதைச் செய்யவேண்டும்.

கருணாநிதி.—(கடிதத்தைப் படித்துப் பார்த்து) அப்பா! விவாகம் நெருக்கத்திலிருப்பதால் பச்சையப்ப அண்ணன் இவ்விடத்தி லிருந்து விவாகத்துக்கு வேண்டியவைகளைச் சித்தப்படுத்த விட்டு, நான் தனித்துக் கோயம்புத்தூருக்குப் போய்வரு கிறேன்.

இரத்தினசபாபதி பிள்ளை.—அதுவும் நல்லயோசனையே (என்று கருணாநிதியை அருகிலழைத்து) மெய்யறியாருக்கு மரி யாதை செய்தனுப்பவேண்டும். விரைவில் சவளிக் கடைக் குப் போய்வா.

---

## 3—ம் அத்தியாயம்

கோயம்புத்தூரில் பேரூருக்குப் போகும் மார்க்கத்தில், தெலுங்கு பிராமணர்கள் வீதிக்கடுத்த ஒரு வீட்டின் வெளித் திண்ணையில், காலை எட்டுமணிக்கு, முடித்துத் தொங்கவிட்ட கேச மும், அகலமான நெற்றியும், பெருத்த நேத்திரங்களும், நீண்ட நாசியும், வெண்மையான பல்வரிசையும், நீண்ட கரங்களும், அகன்ற மார்பும், அதிகம் பருத்திராத தங்கநிறம்போன்ற தேக மும், ஐந்தரையடி உயரமும் உள்ள இருபத்திரண்டு வயதுடைய ஒரு சுந்தரமான வாலிபன் உட்கார்ந்து தன்னிரு கைகளையும் தன் தாடையில் வைத்துக்கொண்டு ஏதோ யோசனையிலிருக்கும் பொழுது, ஒரு சுந்தரமான புருடன் வருவதைக் கண்டு எழுந்தோ டிப்போய் வந்தவனைக் கட்டிப் பிடித்துக்கொண்டு, “கருணாநிதி! இது என்ன அதிசயம்! நீ லாலாபேட்டையி லிருக்கின்றவன். நான் கோயம்புத்தூரி லிருக்கின்றவன். அப்படிக்கிருந்தும் நான் உன்னை நினைத்தவுடன் நீ எதிரில் வந்து நின்றாய். இது ஆச்சரிய மல்லவா!” என்றான்.

கருணாநிதி.—இராமகிருஷ்ணா! நீ என்னை நினைத்ததை யறிந்தே வந்தேன் (என்று நகைத்து) எது காரணமாக என்னை

நினைத்தாய்? நான் வரும்பொழுது முகவாட்டத்தோடு இருந்ததைக் கண்டேன். எதாகிலும் மனவருத்தம் உண்டா?

**இராமகிருஷ்ணன்.**—நான் நினைத்த காரணத்தைப் பின் சொல்லுகிறேன். நீ எப்பொழுது இவ்வூருக்கு வந்தாய்?

**கருணாநிதி.**—நான் நேற்று வந்தவன் உன்னை உடனே வந்து காண முடியாமற் போயிற்று. இன்று உன்னைப பார்த்துவிட்டு உன் தந்தையை அழைத்துப்போக வந்தேன். நீ கவலையோடிருந்ததின் காரணத்தைச் சொல்லவேண்டும்.

**இராமகிருஷ்ணன்.**—கருணாநிதி! நாம் இருவரும் திருச்சிராப் பள்ளியில் வாசித்திருந்த காலத்தில் என்னை உன் சொந்த சகோதரனைப்போல் பாவித்து அன்பு பாராட்டி வந்தாய். நாம் பள்ளியை விட்டபின் லாலாபேட்டையிலிருந்து அடிக்கடி என்னை வந்து கண்டுபோவாய். எனக்குப் பொருள் வேண்டிய காலத்தும் உதவி செய்துகொண்டிருந்தாய்.

**கருணாநிதி.**—இராமகிருஷ்ண! இதையெல்லாம் என் சொல்லிக் கொண்டிருக்கிறாய். உனக்கு நிஷேத முகூர்த்தம் என்று கேள்விப்பட்டேனே, அது உண்மையா?

**இராமகிருஷ்ணன்.**—எனக்கு நிஷேத முகூர்த்தம் நடக்கப் போகிறதே பெருங் கவலையாய் முடிநதது. அககவலை எவ்விதம் நீங்கப போகிறது. நீயும் சமீபத்தில் இல்லையே என்று உன்னை நினைத்தபொழுது, நான் வழிபடுந் தெய்வம் போல் வந்து தோன்றினாய். அக்கவலையைத் தீர்ப்பது உன் கடமை என்று கண்களில் நீர்தளும்பக் கருணாநிதியைப பிடிதது உட்காரவைத்துத் தானும் அருகில் உட்கார்ந்தான்.

**கருணாநிதி.**—உன் தந்தை வீட்டிலிருக்கிறாரா?

**இராமகிருஷ்ணன்.**—அவரை யாரோ வந்து அழைத்துப்போயிருக்கிறார்கள்.

**கருணாநிதி.**—உன் தாயார்?

**இராமகிருஷ்ணன்.**—பின்கட்டி லிருக்கிறார்கள்.

கருணாநிதி.—உன் தாய் தந்தை சமீபத்தி லில்லாததால் உன் மனதி லுள்ளதைச் சொல்லலாம். உனக்கு நிஷேத முகூர்த்தம் சமீபத்தி லிருப்பதால் நீ சந்தோஷமாக இருப்பதைவிட்டுக் கவலையோ டிருக்கவேண்டிய காரண மென்ன?

இராமகிருஷ்ணன்.—நான் நடந்ததை முற்றிலும் உனக்குச் சொல்லவேண்டும். சூரிய நாராயண ஐயர் தம்முடைய குமாரத்திக்கு விவாகம் செய்யவேண்டியதற்குத் தம்மிடத்தில் பணமில்லாததால் தம்முடைய குடும்பத்தின் சம்ரக்ஷணைக்கு ஆதாரமாயிருந்த நிலத்தில் பாதியை விற்று எனக்கு அவர் மகளைக்கொடுத்து விவாகத்தை மிகு சிறப்பாகச்செய்து, வரதக்ஷிணையாக ரூபா இரண்டாயிரம் கொடுத்து ஸ்ரீதனமுங் கொடுத்தார். அவருடைய நிலைமைக்கு அவர் செய்தது அதிகமென்று யாவரும் சொல்லிக்கொண்டார்கள். ஆயினும் என் தாய்தந்தைமட்டும் திருப்தியடையவில்லை. இப்பொழுது பெண் வயதடைந்தபின் நிஷேத முகூர்த்தம் வைத்துக்கொள்ளவேண்டு மென்று என் மாமனார் சொல்லியதை என் தாய்தந்தை கேட்டு விவாகத்தில் வரிசை யொன்றும் சரியாய் நடத்தவில்லை. ஆனதால் இப்பொழுது வரிசைக்காக ரூபா இரண்டாயிரம் கொடுக்காமற் போனால் யாதொரு காரியமும் முடிவுபெறாது என்று சொல்லி யனுப்பியதோடு என் மாமனார் பக்ஷமாகப் பேசுகிறவர்களிட மெல்லாம் பிடிவாதமாகப் பேசுகிறார். ஐயோ! பாவம்! என் மாமனாருக்கு மீதியாயுள்ள நிலத்தையும் விற்று என் தந்தை கேட்கும் இரண்டாயிரத்தைக் கொடுத்துவிட்டால் என் மாமனார் கதியென்ன? அவர் தம் குடும்ப சம்ரக்ஷணைக்கு என்ன செய்வார். ஏழ்மை நிலையிலிருக்கும் என் மாமனாரைக் கஷ்டப்படுத்த வேண்டா மென்று நான் பலரைக்கொண்டு என் தந்தைக்குச் சொல்லும்படி செய்தேன். அவர் தன்னிடம் பேசவருகிறவர்களிடத்திலெல்லாம் கடுங்கோபமாகப் பேசியனுப்பிவிடுகிறார்.

என் மாமனூர் கையிலுள்ளதையெல்லாம் பிடுங்கிக்கொண்டு நான் சுகத்தோடிருப்பதும், கையிலுள்ளதை யெல்லாம் கொடுத்துவிட்டு என் மாமனூர் சாப்பாட்டுக்குச் சங்கடப்படுவதும் நியாயமா? இச்செய்கை தெய்வத்துக்கேற்குமா? என் தாய்தந்தையின் கொடூரமான குணத்தை மாற்ற முடியாமலிருப்பது எனக்குப் பெருந்துக்கமாயிருக்கிறது (என்று கண் கலங்கினுன்).

**கருணாநிதி.**—இது விஷயத்தைக் குறித்து உன் தந்தையிடம் ஒன்றும் சொல்லவில்லையா?

**இராமகிருஷ்ணன்.**—நான் என் தந்தை சொல்வதைத் தடுத்து வார்த்தையாடுவதில்லை யென்பது நீ அறிந்ததே!

**கருணாநிதி.**—உன் தாயிடத்திலாவது சொல்லிப் பார்க்கலாமே!

**இராமகிருஷ்ணன்.**—ஒருநாள் என் தாய் என்னிடம் சந்தோஷமாக வார்த்தையாடிக்கொண்டிருந்தார்கள். இது நல்ல சமயமென்று என் மாமனூர் நிலையைச் சொன்னவுடன் அவர்களுடைய சந்தோஷம் இறந்து துக்கம் பிறந்து கோபத்தோடு, "நான் தெரியாமல் பாழுஞ் சகதியில் காலை வைத்துவிட்டேன். இராஜாத்தெரு சுப்புராமையர் தன் மகளைக் கொடுக்கிறேமென்றார். நான் பாவி சம்மதிக்காமற் போனேனே. அவர் வரதக்ஷிணை இரண்டாயிரமும் கொள்ளை நகைகளையும் போட்டாரே. அவர் செய்ததைப் பார்த்து வயிறு எரிகிறதே. அவ்விடம் நமக்குக் கொடுத்து வைக்காமற் போனது அதிர்ஷ்ட ஈனமே! உன் மாமனூர் தனக்கிருக்கும் நிலத்தை விற்பாரோ அல்லது எங்கேனும் போய்த் திருடுவாரோ அதைக் குறித்து நமக்கென்ன? வரிசைக்காக உன் தந்தை கேட்பதைக் கொடுத்தாலன்றி, அவர் மகள் அன்னபூரணி இந்த வீட்டில் வந்து வாழமாட்டாள். ஒருவருடைய நன்மையைக் கருதித் தமக்கு நியாயமாக வரவேண்டியதை விட்டுவிட யாரும் சம்மதப்படமாட்டார்கள்" என்று கடுகடுத்துச் சொன்னூர்கள்.

கருணாநிதி.—உன் மாமனுருக்கு வேறு பிள்ளைகளிருக்கிறார்களா?

இராமகிருஷ்ணன்.—என் மனைவிக்கு மூத்தவனொருவன், சென்னையில் வாசித்துக்கொண்டிருக்கிறான். அவனுடைய செலவுக்கு மாதந்தோறும் ஏதோ அனுப்பிக்கொண் டிருக்கிறதாகக் கேள்வி.

கருணாநிதி.—முன் இல்லாத வழக்கம், முதலில் பிராமண குலத்தாரைப்பற்றி நிலைகொண்டு, பின் எல்லாக் குலத்துக்குள்ளும் நுழைந்துவிட்டது. தென்னாட்டில் வேளாளர் குலத்தில் பிள்ளைக்குப் பெண் வேண்டியிருந்தால் என்ன நகைகள் போடுவீர் என்று பெண் வீட்டார் கேட்பதும், பிள்ளை வீட்டார் தங்கள் சக்திக்கேற்க இன்னின்ன நகைகள் போடுகிறோம் என்பதும், பின் பெண்ணுக்குப் பரிசம் போடுவதும், கூறைச்சேலையில் முலைப்பால் பணம் முப்பதென்று முடி போடுவதுமாக இருந்தது. பரிசம் போடுவதையும் முலைப்பால் பணங் கொடுபபதையும் யோசித்தால் பெண்ணை விலைக்கு வாஙகுவதாகவே முடிந்தது. இவ்விதம் இருந்த வழககம் தட்டுக் கெட்டுத் தடுமாறிய பெண் வீட்டாரைப் பிள்ளை வீட்டார் என்னென்ன நகைகள் போடுவீர்கள். எத்தனை ரூபாவில் வீடுவாங்கி வைப்பீர்கள். ரொக்கமாக என்ன கொடுப்பீர்கள் என்று பிராமண குலத்தாரைபபோல் கேட்கும் வழக்கம் உள்நுழைந்துவிட்டது. முன் பிள்ளை வீட்டார் பெண்ணை விலைக்குவாங்கினார்கள். இபபொழுது பெண் வீட்டார் பிள்ளையை விலைககு வாங்குகிறார்கள். மாப்பிள்ளையின் விலையை அவன் கற்றிருக்கும் கல்வியை அனுசரித்துக் கூறுகிறாகள். முசிறியிலொருவன் தான் மெட்ரிகியுலேஷன் பரீக்ஷையில் தேறியதால், எண்ணூறு ரூபாவும் எல்லா நகைகளும் பெண்ணுக்குப போடவேண்டுமென்றானும். தஞ்சையிலொருவன் தான் எம். எ. பரிக்ஷையில் தேறியிருப்பதால் தனக்குப பதினுயிரம் ரூபா கொடுத்துப பெண்ணுக்கு எல்லா நகைகளையும் போட்டு விவாகம் செய்துவைக்க

வேண்டு மென்றானும். இவர்களுக்குக் கல்வியினால் வந்த பிரயோசனத்தைப் பார்த்தாயா? பெண் கொள்ளவேண்டிய வர்கள் பெண் வாசித்துக்கொண்டவளா, நற்குணமும் நன் னடக்கையும் உள்ளவளா, இல்லற தருமத்தைக் கிரமமாக நடத்தத் தகுந்தவளா என்று பார்க்கவேண்டியதாயிருக்க, அதைக் கவனிக்காமல் டணம் பணம் என்று பணத்தின் மேல் நோக்கமா யிருக்கிறார்கள். "ஏழைகளிடத்தில் பெண் ணைக் கொள்ளவேண்டும். தனவந்தரிடத்தில் பெண் ணைக் கொடுக்கவேண்டு" மென்ற முதியோர்சொல் கல்வி யறிந்தோர் முன் நிற்காமல் ஓடிவிட்டது. பார்த்துக்கொண் டாயா! உங்கள் பிராமணகுலப் புதியவழக்கம் எங்கள் குலத்தையும் கெடுத்துவிட்டது. தனவந்தனுக்குப் பெண் பிறந்தால் அவன் பெரிய ஸ்ரீதனம் கொடுக்கவேண்டியதே முறைமை. ஏனெனில் ஒரு தனவந்தனுக்கு இரண்டு ஆண் பிள்ளைகளும் ஒரு பெண்ணும் பிறந்தால் தகப்பன் சொத் தை நம்முடைய இந்து சட்டப் (இந்து லா) பிரகாரம் ஆண் பிள்ளைகளைச் சேருகிறதேயன்றிப் பெண்பிள்ளைகளைச் சேருகிறதில்லையாயினும், அப்பெண் செல்வத்தில் பிறந்து செல்வத்தில் வளர்ந்து வந்தமையால் அப்பெண் வாழ்க் கைபபடும் இடத்திலும் சௌகரியத்தோடு இருக்கவேண்டு மென்று அப்பெண்ணுக்குப் பெரும் ஸ்ரீதனம் கொடுக்க வேண்டியது அவசியமல்லவா? பிராமணர்களுள்ளும் தனவந்தர் தங்கள் பெண்கள் மகிழக் கொடுக்கவேண்டியதே. இல்லாதவர்கள் தனவந்தரைப்போல் கொடுக்க முடியாத தால் அவர்களைக் கஷ்டப்படுத்துவது அடாத காரியமே! பெரிய ஸ்ரீதனம் கொடுபபவர்கள் தக்க ஏற்பாடு செய்யாமல் மருமகனை நம்பிக் கொடுத்துவிடுகிறதால் உயர்தரப் பரீக்ஷை யில் தேறியவர்கள் உயர்தர நாகரீகத்தைக் கைக்கொண்டு தாங்கள் தேடாத பொன்னுக்கு மாற்றுமில்லை உரையு மில்லை என்றவிதம் தன் மனைவி கொண்டுவந்ததைச் சில

நாளில் தொலைத்துவிட்டுக் கீழ்த்தர நாகரீகத்தில் நுழைகிறார்கள். இவ்விதம் நடப்பவர்கள் அனேகரைப் பார்த்திருக்கிறோமல்லவா ? தங்கள் மகளுக்குக் கொடுக்கும் ஸ்ரீதனம் போகுங் கதியை அறிந்தபின்னாவது பொருள் அழியாவிதம் ஏற்பாடு செய்து கொடுப்பது உத்தமம். நீயும் உனக்குக் கிடைத்திருக்கும் இரண்டாயிரம் ரூபாவை வீண் செலவு செய்யாமல் நிலம் வாங்கிக்கொள்வது உத்தமம். உன் தந்தை கேட்பதைக் குறித்து உன் மாமனார் என்ன சொல்லுகிறார்.

**இராமகிருஷ்ணன்.**—என் மாமனாருடைய கருத்தை அறியவில்லை ஆயினும், அவர் பெருங்கவலையோ டிருப்பாரென்றே நினைக்கிறேன்.

**கருணாநிதி.**—நான் இது விஷயத்தில் என்ன செய்யவேண்டும் ?

**இராமகிருஷ்ணன்.**—நீ என் மாமனாரின் நிர்ப்பாக்கிய ஸ்திதியை என் தந்தைக்குச் சொல்லி அவர் எண்ணத்தை மாற்ற வேண்டும்.

**கருணாநிதி.**—ஒருவன் பண விஷயத்திலாவது ஸ்திரீ விஷயத்திலாவது மனதைச் செலுத்திவிட்டால் அதை எளிதில் மாற்ற முடியாது. ஆயினும் இதை மாற்ற ஒருபாய மிருக்கிறது.

**இராமகிருஷ்ணன்.**—என்ன உபாயம்.

**கருணாநிதி.**—நீ அதற்குடன்படுவதா யிருந்தால் நான் அந்த உபாயத்தைச் சொல்லுகிறேன் (என்று நகைத்தான்.)

**இராமகிருஷ்ணன்.**—நீ எதைச் சொல்லி உன் வார்த்தையைத் தட்டி நடந்தேன்.

**கருணாநிதி.**—என் வார்த்தையைத் தட்டி நடக்கமாட்டேன் என்று சொல்லுவதால் அந்த உபாயத்தைச் சொல்லுகிறேன். உன் தந்தை இரண்டாயிரம் வாங்காமல் நிஷேத முகூர்த்தம் வைக்க உடன்படார். உன் மாமனாருக்குத் தொகை கொடுக்கச் சக்தியில்லை. ஆனதால் நான் என்னுடைய நிலத்தில் இரண்டு மூன்று காணியை விற்று இரண்டாயிரம் ரூபாவை

உன் மாமனாரிடத்தில் கொடுத்து உன் தங்கைக்குக் கொடுத்து விடச் சொன்னால் எல்லாம் சந்தோஷமாக முடியுமல்லவா (என்று நகைத்தான்).

**இராமகிருஷ்ணன்.**—நீ எப்பொழுது நிலத்தை விற்று எப்பொழுது பணமனுப்புவாய் ?

**கருணாநிதி.**—எட்டு நாளைக்குள் அனுப்புகிறேன்.

**இராமகிருஷ்ணன்.**—நான் உயிரோடிருக்கும்பொழுதோ அல்லது இறந்தபின்னோ ?

**கருணாநிதி.**—நீ சொல்வதின் கருத்து விளங்கவில்லை.

**இராமகிருஷ்ணன்.**—கருணாநிதி ! எனக்கு விவாக மானபின் சூரியநாராயண ஐயரை நான் அறிவேன். உன்னை என் சிறு வயதுமுதல் அறிவேன். சிலநாளாக அறிந்திருக்கும் சூரிய நாராயண ஐயரை நிர்ப்பாக்கிய ஸ்திதியில் விடக்கூடா தென்று நினைக்கிற நான், உன்னை ஈனஸ்திதியில் விட மனங் கொள்ளுவேனா ? உன்னுடைய நிலத்தைவிற்று நான் சௌகரியமாக இருப்பதைவிட நான் இறப்பது மேலல்லவா ?

**கருணாநிதி.**—இராமகிருஷ்ணா ! எனக்கிருக்கும் நிலத்தில் இரண்டு மூன்று காணியை விற்றுவிட்டாலும் எனக்கிருப்பது என் சம்ரக்ஷணைக்குப போதும். அது விஷயத்தில் நீ கவலை கொள்ளவேண்டாம்.

**இராமகிருஷ்ணன்.**—நீ என்ன சொன்னபோதிலும் நான் ஒப்புக் கொள்ளமாட்டேன். அந்த எண்ணத்தை ஒழித்துவிடு.

**கருணாநிதி.**—என் வார்த்தையைத தட்டமாட்டேன் என்று சொன்னதை மறந்துவிட்டாயே.

**இராமகிருஷ்ணன்.**—நான் மறக்கவில்லை ஒரு நாயகி, நாயகன் சொல்வதுபோல் நடக்கவேண்டுமென்ற விதியிருநதாலும், அவள் செய்யத்தகாத தொன்றைச் செய்யச்சொன்னால் அவள் தடுக்கவேண்டியதே ! அதுபோல ஒப்பக்கூடாத தொன்றைச் சொன்னால் அதைத் தட்டி நடக்கவேண்டியதே!

அத்தருணத்தில் இருவர் பேசிக்கொண்டுவந்தனர். "நான் போய் வருகிறேன் கோபால ஐயரே" என்று ஒருவர் நீங்கினார். கோபால ஐயர் வீட்டுக்குள் வந்து "ஆ! கருணாநிதி! எப்பொழுது வந்தாய்" என்று கேட்டார்.

**கருணாநிதி.**—நான் நேற்று வந்தேன். இன்று தங்களை மணிவாசகம் பிள்ளை வீட்டுக்கு அழைத்துப்போக வந்தேன்.

**கோபால ஐயர்.**—என்ன விசேடம்?

**கருணாநிதி.**—நிச்சயதாம்பூலத்துக்கும் விவாகத்துக்கும் நாள் பார்க்க வேண்டும்.

**கோபால ஐயர்.**—மாப்பிள்ளை எந்த ஊர்?

**கருணாநிதி.**—லாலாபேட்டையே!

**கோபால ஐயர்.**—லாலாபேட்டையா! மணிவாசகம் பிள்ளை தன் மகளைத் தன் தங்கை மகன் நீலமேகத்துக்குக் கொடுப்பதாக என்னிடம் சொல்லிப பொருத்தம் முதலியதைப பார்க்கச் சொன்னார். நான் எல்லாப் பொருத்தமும் இருக்கிறதென்று சொல்லியிருந்தேனே! லாலாபேட்டையில் மாப்பிள்ளை யார்?

**கருணாநிதி.**—என் சிறிய தந்தை இரத்தினசபாபதி பிள்ளைக்கே பெண் கொடுப்பதாகச் சம்மதித்திருக்கிறார்.

**கோபால ஐயர்.**—சபாஷ்! சபாஷ்! அந்தக் கிழவனா விவாகம் செய்துகொள்ளப போகிறார். பணம்! பணம்! பணம், பெண்ணையா கொண்டுவரும், எல்லாவற்றையுங் கொண்டுவரும். பின் போகலாம் வாவென்று யாவரும் வீட்டுக்குள் சென்றார்கள்.

## 4—ம் அத்தியாயம்

கோயம்புத்தூரில் இரங்கைய கௌண்டன் தெருவில் மணிவாசகம் பிள்ளை வீட்டில் சமையலறையில் ஒரு சுந்தரமான பெண், நீண்ட கூந்தலும், குறுக்கமில்லாத நெற்றியும், வளைந்து கறுத்த புருவமும், பெருத்த கண்களும், எடுப்பாயுள்ள நாசியும், வெண்மையான அழகிய பல்வரிசையும், சிவந்த இதழும், சந்தன நிறமும், அதிகம் பருத்திராத தேகமும், பதினெட்டு அல்லது இருபது என்று மதிக்கத்தகுந்த வயதும், ஐந்தடி உயரமும் உள்ள பெண்ணைப் பார்த்து, “அம்மா! ஞானவடிவு! நான் கேட்டதற்குப் பதில் சொல்லாமல் மௌனமாய் இருக்கிறாயே! நான் உன் கருத்தை எவ்விதம் அறிந்துகொள்கிறது. நீ என்னிடத்தில் உன் கருத்தைச் சொல்ல ஏன் கூச்சப்படுகிறாய்! நாமிருவரும் பள்ளியில் ஒன்றாய் வாசித்தவர்களல்லவா? நான் உனக்கு அக்காளல்லவா? சிவஞானம் வந்தால் ஞானவடிவு கூச்சமின்றித் தன் கருத்தைச் சொல்லுவாளென்று உன் அத்தான் நீலமேகம் பிள்ளையும் உன் அத்தை கற்பகவல்லியம்மாளும் சொன்னார்களே! நீ அச்சமின்றி உன் கருத்தைச் சொல்லுவாய் என் கண்மணி!” என்று கன்னத்தில் முத்தமிட்டாள்.

**ஞானவடிவு.**—அக்காள்! என்னை என்ன சொல்லச் சொல்லுகிறீர்கள்?

**சிவஞானம்.**—உன்னை லாலாபேட்டை மாமாவுக்குக் கொடுக்க உன் தாய்தந்தை யோசிக்கிறார்களே! அவர்களிஷ்டம்போல் மாமாவை விவாகம் செய்துகொள்ளப் பிரியந்தானே!

**ஞானவடிவு.**—என்னைப் பெற்று வளர்த்து என் மனம் மகிழ நான் விரும்பியவைகளை மனங்கோணமல் வாங்கிக்கொடுக்கிறவர்கள் மனம் சந்தோஷமடைய நடக்கவேண்டியது என் கடமையல்லவா (என்று கண்கலங்கினாள்).

**சிவஞானம்.**—நீ கண்கலங்க வேண்டாம்! உன்னை அன்போடு வளர்த்தவர்கள் நீ உன் ஆயுள் காலமெல்லாம் துக்கத்தோடிருக்கச் செய்யக்கூடாதல்லவா?

ஞானவடிவு.—நான் என் ஆயுள் காலமெல்லாம் துக்கத்தோடிருக்க வேண்டுமென்று என் தாய் தந்தை செய்வார்களாயின் நான் என்ன செய்யக்கூடும். அவர்களால் வந்த இத்தேகத்தை அவர்கள் என்ன செய்தாலும் செய்துகொள்ளட்டு மென்றிருப்பதே உத்தம மென்றிருக்கிறேன்.

சிவஞானம்.—அவ்வித எண்ணங் கொண்டிருப்பது உசிதமே யாயினும் இக்காலத்தில் அது பிரயோசனப்படாது. நாம் செய்ய வேண்டிய முயற்சியைக் குறைவற நாம் செய்யவேண்டியதே!

செய்தக்கவல்ல செயக்கெடும் செய்தக்க
செய்யாமை யானுங் கெடும்.

செய்யத்தகாதவற்றைச் செய்தல் கெடுதியைத் தரும். செய்யத்தக்கதைச் செய்யாமையாலுங் கெடுதியே உண்டாகும் என்றிருப்பதால், நாம் செய்யத்தக்கதைச் செய்யவேண்டியதே முறைமை. ஆனதால் நமக்கு வேண்டியதை நம்மாலியன்ற பரியந்தம் செய்யாமல், நம்முடைய தாய் தந்தை வசம் முற்றிலும் நம்மை ஒபபடைத்தால், சிலவேளை அது நம்முடைய கருத்துக்கு விரோதமாக முடிந்தாலும் முடியும். நம்முடைய கருத்தைச் சொல்லியிருந்தால் வேறு விதம் முடிந்திருக்கும். நாம் சொல்லாமற் போனேம் என்று நம்மையே நாம் நிந்தித்துக்கொள்ள இடந்தரும். நம்முடைய கருத்தைச் சொல்லிவிட்டால் நம்மை நாம் நிந்தித்துக் கொள்ள இடந்தராது. தாய் தந்தைக் கடங்கிய பெண் தாய் தந்தையே தனக்கு வேண்டியதைச் செய்யட்டுமென்று விட்டுவிட்டால், தாய்தந்தை என்ன செய்யவேண்டும்? தங்களுடைய நன்மையைக் கருதுகிறதா அல்லது தாங்கள் பெற்ற பெண்ணின் நன்மையைக் கருதுகிறதா? [தங்களுடைய நன்மையைக் கருதித் தங்கள் பெண் தன் ஆயுள் காலம் துக்கத்தோடிருக்கத் தாங்கள் உலகத்திலிருக்கவேண்

டிய கொஞ்சநாளையும் சௌகரியத்தோ டிருந்துபோக எண்ணங்கொள்ளும் கொடிய தாய்தந்தைமார்களே! நீங்கள் பெற்ற பெண்ணைக் கொண்டுபோய்க் கிணற்றில் தள்ளுவது போல் பதினைந்து பதினெட்டு வயதுடைய பெண்ணைப் பாட்டனைப்போ லிருக்கும் ஐம்பது அறுபது வயதுடைய விருத்தருக்குப் பணவாசையால் கொடுக்கிறீர்கள். பெண்ணின் வாலிபதிசையில் அவள் நாயகனுக்கு வயதென்ன வாகுமென்று கவனித்தீர்களா? கணவன் விருத்தனுயிருந்தாலும் அவனிடத்திலிருக்கும பணம் கிழத்தன்மை யடையவில்லை என்ற கருத்தா? பெண் விரைவில் விதவையாவாள் அவள் கொண்டுவரும் பணத்தோடு சௌகரியமாக விருக்கலாம் என்ற எண்ணத்தோடா ஒரு பெண்ணைக் கொண்டு போய்ப் பலிகொடுக்கிறீர்கள். நம்முடைய குலத்தில் புனர் விவாகமில்லை யென்றதை முற்றிலும் மறந்தீர்கள். பெண்ணுக்குப பணமிருந்தாலும் அவள் தன் காலமெல்லாம் தன் தாய்தந்தையை நிந்திபபதோடு துக்கத்தோடிருக்கவேண்டியதுதானே! இளம்பிராயமுள்ள மாப்பிள்ளையைத் தேடிக் கொடுக்குமிடத்தில் பெண் விரைவில் விதவையாகிறதில்லையோ எனின், ஆம்! உண்டு! கணவன் அற்ப ஆயுளில் காலன் பதியடைந்தால் உலகம் கைம்பெண்ணைக் கண்டு பரிதாபப்படும். விருத்தக் கணவன் இறந்தால் உலகம் விருத்தனுடைய மனைவியின் தாய்தந்தையை நிந்திக்காமல் விடுமா? நீங்கள் உலக நிந்தனைக்குப் பயந்து பணத்தைக் கவனிக்காமல் நீங்கள் பெற்ற பெண்ணின் நன்மையைக் கருதுங்கள்]. அம்மா! ஞானவடிவு! தற்காலம் உலகம் செய்வதுபோல் உன் தாய்தந்தையும் மாமா விடத்தில் பெருந்தன மிருக்கிறதென்று உன்னைக் கொடுக்கத் துணிந்தார்கள். நீ மௌனமா யிருந்தால் அவர்கள் கருத்தை முடித்துவிடுவார்கள்.

ஞானவடிவு.—அக்காள்! நான் என்ன செய்கிறது? நாம் சிறு

பொழுது நீலமேகத் தத்தாேைடு பள்ளியில் வாசித்தோம். அது முதல் அத்தான் என்னையே விவாகம் செய்துகொள்ள வேண்டுமென்று சொல்வது என் தாய் தந்தை அறிந்ததே! சில நாட்களுக்கு முன் லாலாபேட்டை மாமாவால் அனுப்பப்பட்ட மெய்யறியார் என்ற ஒருவர் வந்து என் தந்தைக்குள்ள கடனைத் தீர்த்து அவர நிலத்தை மீட்டுக் கொடுபபதாகவும் பெருந்தொகை பெறுமதியுள்ள நகைகளைப் போடுவதோடு மாமா சொததையெல்லாம் என் பேருக்கு எழுதி வைபபதாகவும் நிச்சயதாம்பூலத்துக்கே நகைகளோடு என் தந்தை எழுதிக் கொடுத்திருக்கும் சீட்டை அனுபபி விடுவதாகவும் ஆசைவார்த்தை கூறிப் போயிருக்கிறார். அவர் சொல்லிப் போனது முதல் என்னிடத்தில் ஒன்றும் சொல்லாமலிருக்கிறார்கள். நான் என்ன செய்ய முடியு மென்று கண்ணிறைய நீர் கொண்டாள்.

சிவஞானம்.—நீலமேகத் தத்தானும் அத்தையும் உன் தாய்தநதையிடத்தில் பேசவில்லையா?

ஞானவடிவு.—மெய்யறியார் இவ்விடம் வருகிறதற்குமுன் அதனைதன் மகனோடுவந்து என் தாயாரிடம் பன்முறை பேசியிருக்கிறார்கள். மெய்யறியார் வந்தபின் நடந்ததெல்லாம் இரகசியத்தி லிருந்ததால் அவர்களுக்கு ஒன்றும் தெரியாமலிருக்குமென்று நினைக்கிறேன்.

சிவஞானம்.—நானும் உன் பெரிய அத்தானும் நேற்று அவர்கள் வீட்டில் வந்திறங்கியபின் நாங்கள் நிச்சய தாம்பூலத்துக்கு நாள் வைத்துக்கொண்டுபோக வந்திருக்கிறோமென்று உன் பெரிய அத்தான் சொன்னதைக் கேட்டு அவர்கள் ஆச்சரியப்பட்டார்கள். சில வேளை அவர்கள் வந்து உன் தாய்தந்தையோடு பேசுவார்களென்று நினைக்கிறேன். நான் ஏதாகிலும் உன் தாயாரிடத்தில் சொல்லலாமென்றால் பயமாக விருக்கிறது. நான் சொல்வதை என் மாமனுருக்குத் தெரிவித்து விடுவார்களாயின் அவர் எங்களைக் கோபிக்காமல் விடார். அவர்

கோபத்திற்கு நாங்கள் பயப்படவேண்டிய அவசியமில்லை. ஆயினும் பெண் வீட்டார் பெண் கொடுக்கச் சம்மதித்து விட்டார்கள். நீங்கள் போய் ஜாதகங்களைச் சோதிடர்களிடம் காட்டி அவர்கள் நிச்சய தாம்பூலத்துக்கும் விவாகத்துக்கும் வைத்த நாள் பொருத்தமாவென்று பார்த்துவரும்படி எங்களை அனுப்பியிருக்க, நாங்கள் அவர் சொல்லி யனுப்பியதற்கு விரோதம் செய்வது நன்றல்லவென்று மௌனமாயிருக்கவேண்டியதா யிருக்கிறது. அங்கு கூடத்தில் உன் அத்தை தன் தமயனோடு பேசுகிற குரல் கேட்கிறது. நான் பார்த்து வருகிறேன் (என்று எழுந்து போனாள்).

உட்கூடத்தில் நரைத்த குடுமியும், விசாலமான நெற்றியும், பெருத்த கண்களும், அடர்த்தியான மீசையும், வெற்றிலைப் பாக்குக் காவி ஏறிய பல்வரிசையும், நீண்ட நாசியும், பருத்த தோளும், அகன்ற மார்பும், பருத்த தேகமும், ஐந்தரையடி உயரமும், மாநிறமும் உடையவராய், நாற்பது அல்லது நாற்பத்தைந்து வயதென்று நிதானிக்கத்தகுந்த ஒருவர் உட்கார்ந்திருக்கவும், வாலிபத்தில் அதிக சுந்தரமாக இருந்திருப்பாளென்று நிதானிக்கத் தகுந்த நாற்பது வயதுள்ள ஓர் பெண்பிள்ளை நின்று "அண்ணா! ஞானவடிவை லாலாபேட்டை அத்தானுக்குக் கொடுக்கப் போகிறதாகக் கருணாநிதியாலும் சிவஞானத்தாலும் கேள்விப்பட்டேன். அது உண்மையா?"

அண்ணன்.—எப்பொழுது கேள்விப்பட்டாய் கற்பகவல்லி (என்று நகைத்தார்).

கற்பகவல்லி.—இராத்திரி கேள்விப்பட்டேன். காலையில் கருணாநிதி சோதிடரை அழைத்துவரப் போயிருக்கிறான். இவ்வூர் முற்றிலும் மணிவாசகம் பிள்ளை குமாரத்தியைத் தன் தங்கை குமாரனுக்குக் கொடுக்கப்போகிறாரென்று சொல்லிக் கொண்டிருக்கத் தாங்கள் ஒருவருக்குந் தெரியாமல் நிச்சய தாம்பூலத்துக்கு நாள்வைத்து அனுப்பினீராமே! இது

என்ன அநியாயம் ! நானும் என் மகனும் தங்கள் விஷயத்தில் என்ன குற்றம் செய்தோம்? என்ன காரணத்தால் தங்களுடைய எண்ணத்தை மாற்றினீர்கள் ?

**மணிவாசகம் பிள்ளை.**—அம்மா ! கற்பகவல்லி ! யார யாருக்கு எவ்விடத்தில் புசிபபிருக்கிறதோ அவ்விடத்திலேயே அவர்களைச் சேர்க்கும். நம்முடைய பிரயத்தனத்தில் ஒன்றுமில்லை (என்று சொல்லும்பொழுது, ஞானவடிவின் முகச் சாயலைக்கொண்டு முபபத்தைந்து அல்லது ஒன்றிரண்டு அதிகமென மதிக்கத்தகுந்த ஓர் பெண் பிள்ளை வெளியிலிருந்து வருவதைக்கண்டு) பாக்கியம் ! உன் அத்தாச்சி சொல்வதைக் கேள் (என்றார்).

**பாக்கியம்.**—அத்தாச்சி என்ன சொல்லுகிறார்கள் ? அதோ சிவஞானமும் வருகிறாள். வருக சிவஞானம். நீயும் உன் புருஷனும் நேற்று வந்ததாகக் கேள்விபபட்டேன்.

**சிவஞானம்.**—ஆம் (என்று நகைத்துக்கொண்டே அவாகளருகில் வந்து நின்றாள்).

**கற்பகவல்லி.**—நான் என்ன சொல்ல இருக்கிறது. நீங்கள் எங்களுக்கு ஆசை காட்டி மோசம் செய்வீர்கள் என்று நாங்கள் நினைக்கவில்லை.

**பாக்கியம்.**—அத்தாச்சி ! நீங்கள் கோபித்துக் கொள்ளவேண்டாம் ! மலைநாரத்தைக்கும் கடலுப்புக்கும் தொந்தமாகிறதை நாம் பார்க்கிறோமல்லவா ? அதுபோல அது அதுக்கு எங்கு புசிப்பு உண்டோ அங்குதானே அது அது போய்ச் சேரும்.

**கற்பகவல்லி.**—அண்ணனும் தாங்களும் இவ்விதம் பேச எப்பொழுது கற்றுக்கொண்டீர்களோ தெரியவில்லை. என் நாயகன் காலம் சென்ற பின், என் மகன் விவாகத்தைக் குறித்து நான் கவலைகொள்ள வேண்டியதில்லை ; எல்லா விஷயத்துக்கும் அண்ணனும் அண்ணியு மிருக்கிறார்கள் ; அவர்கள் யாவையும் செய்து கண்குளிரப பார்பபார்களென்று

உங்களை நம்பியிருந்தேன். என்னை மோசம் செய்வீர்க ளென்று கனவிலும் நினைக்கவில்லையே (என்று அழுதாள்).

**மணிவாசகம் பிள்ளை.**—அம்மா! கற்பகவல்லி! நீ அழவேண் டாம்! உன் மகனுக்குத் தக்க இடத்தில் பெண்ணெடுத்து உன் மனம் சந்தோஷமடைய நானே முன்னின்று விவா கத்தை முடித்துவைக்கிறேன். நீ பயப்படவேண்டாம்.

**பாக்கியம்.**—ஆம்! அத்தாச்சி! உங்கள் அண்ணன் சொல்வது போல் செய்துமுடிப்பார்.

**சிவஞானம்.**—அத்தை! தாங்கள் கண் கலங்குவது நன்றல்ல! சிற்றப்பாவும் சின்னாச்சியும் ஞானவடிவை அத்தானுக்குக் கொடுக்காமற் போனால் போகட்டுமே! தங்களுடைய குமார னுககு வேறு பெண் கிடைக்காமலா போய்விடும்? அவருக் கும் ஒருத்தி பிறந்திருப்பாளென்றே நினையுங்கள்.

**மணிவாசகம் பிள்ளை.**—அம்மா! சிவஞானம்! நாங்கள் அத்தா னுக்குப பெண் கொடுபபதாக ஒபபுகொண்ட காரணம் உங களுக்குத் தெரியுமா? தெரியாதா?

**சிவஞானம்.**—எங்களுக்கு எபபடித் தெரியும்?

**பாக்கியம்.**—உங்களுக்குத் தெரியாமற் போனால் நான் சொல்லு கிறேன். திருச்சிராபபள்ளி யருகில் மஞ்சத்திடலில் எஙக ளுக்குப் புராதனமாக இருந்த நிலத்தில் விற்றதுபோக மீதி யாக இருந்த ஐந்துகாணி நிலத்தை அண்ணன் இரத்தின சபாபதி பிள்ளையிடம் ஈடுவைத்து அந்த ஊரிலிருக்க வெட் கப்பட்டுக் கண்மறைய அண்ணன் சதாசிவம்பிள்ளை இருந்த இந்த ஊரில் அவர் துணைபற்றி வந்து குடியேறினோம். நாங் கள் லாலாபேட்டை அண்ணனிடத்தில் வாங்கிய கடனுக்கு நெடுநாளாக வட்டிக்காகிலும் முதலுக்காகிலும் ஒன்றுங்கொடு க்காமல் நிலவாரத்தை நாங்களே வாங்கிவருகிறோம். அவர் நெடுநாள் கடனைக் கேட்காமலிருந்தவர் பணம் வேண்டு மென்றும் பணங் கொடுக்க முடியாமற்போனால் விக்கிரய

பத்திரம் எழுதிக் கொடுக்க வேண்டுமென்றும் சமீபத்தில் கேட்டனுப்பினர். எங்களுக்குச் சாப்பாட்டுக் காதாரமா யிருக்கிற நிலத்தைக் கொடுத்துவிட்டு என்ன செய்கிறது. நிலத்தை வேறு யாருக்காகிலும் விற்ருல் இரண்டொரு காணி நிலம் மீராதாவென்று உன் சிறிய தந்தை அனேக தடவை திருச்சிராப்பள்ளிச்குச் சென்று விலே கூறியும் நிலம் வாங்குவோர் அகப்படவில்லே. இப்படி யிருக்கிற நிலேமையில் லாலா பேட்டை அண்ணனே அறிந்த ஒருவர் சென்னேயிலிருந்து வந்து லாலாபேட்டைஅண்ணனுக்குப பெண் வேண்டுமென்றும் பெண் கொடுத்தால் மஞ்சத்திடல் நிலச்சீட்டை அவர் இனமாகக் கொடுத்துவிடுவாரென்றும் சொன்னர். நாங்கள் இருக்கும் நிலேயைக் கவனித்து அவருக்குப பெண் கொடுப்பதாக ஒப்புக்கொண்டோம். ஞானவடிவுக்கு விவாகமான பின் நீலமேகத்துக்குப பெண் பார்த்து விவாகம் செய்துவிடலாம். நாங்கள் செய்யப்போகிறது நியாயமென்று இப்பொழுது உங்களுக்குத் தெரிகிறதல்லவா ? எங்கள் தற்கால நிலேமைய நீலமேகத்தால் மாற்ற முடியுமானல் ஞானவடிவை நீலமேகத்துககே கொடுக்கிருேம் (என்று நகைத்தாள்).

அத்தருணத்தில் முடித்துத் தொங்கவிட்ட குடுமியும், அகலமான நெற்றியும், கறுத்தடர்ந்த புருவமும், பெருத்த நேத்திரங்களும், நீண்ட நாசியும், வெண்மையான சரியொத்த பல்வரிசையும், சிறுத்த உதடும், அரும்புகட்டிவரும் மீசையும், பரந்த முகமும், பருத்த தோளும், நீண்ட கரங்களும், அகலமுள்ள மார்பும், அதிகம் பருத்திராத தேகமும், பொன் நிறமும், ஐந்தரையடி உயரமும், இருபத்திரண்டு அல்லது ஒன்றிரண்டு அதிகமென மதிக்கத் தகுந்த வயதும் உள்ள ஒரு சுந்தர புருடன் வெளியிலிருந்து வீட்டுக்குள் வந்து " மாமி ! தாங்கள் சொல்வதை மறைவிலிருந்து கேட்டுக்கொண்டிருந்தேன். தாங்கள் சொல்லிய விதம் உங்களுக்குள்ள கடனேத் தீர்த்து நிலத்தை மீட்டுக்கொடுக்க முடியாமற் போனலும், உங்களே வறுமையில் விடாமல் நான்

கூலிவேலை செய்தாவது உங்களைக் காப்பாற்றுகிறேன். இது சத்தியம்" என்முன்.

**மணிவாசகம் பிள்ளை.**—அப்பா! நீலமேகம்! நீ மறைவாயிருந்து எங்கள் நிலைமையை அறிந்துகொண்டதைக் குறித்துச் சந்தோஷப்படுகிறேன். எங்களுக்குள்ள நிலத்தை இழந்து உனக்கு அதிக கஷ்டத்தைக் கொடுத்து நாமெல்லோரும் துக்கத்தை யனுபவிபபதைவிட நாங்கள் யோசித்திருப்பதுபோல் செய்தால் யாவரும் சுகமாயிருக்கலாம் அல்லவா?

**நீலமேகம்.**—மாமா! தாங்கள் சொல்வது வேடிக்கையாக இருக்கிறது. நம்முடைய சௌகரியத்தின் நிமித்தம் ஒரு பெண்ணைக் கொண்டுபோய் பலி இடுகிறதா? நான் சிறு வயது முதல் ஞானவடிவை நேசித்து அவளையே விவாகம் செய்து கொள்ளுவேன் என்று எண்ணியிருந்த எண்ணத்தைக் கெடுக்கவேண்டாம். எனகருத் தாங்கள் ஞானவடிவைக் கொடுக்காமற்போனால் என் உயிர் நில்லாது. வீணில் என்னுயிரைப் போக்கவேண்டாம் (என்று நெடுஞ்சாண்கிடையாக விழுந்து நமஸ்காரம் செய்தான்).

**மணிவாசகம் பிள்ளை.**—அபபா! நீலமேகம்! எழுந்திரு! நீ சிறியன் ஆதலால் உனக்கு ஒன்றும் தெரியவில்லை. நான் உனக்கிஷ்டமான பெண்ணைத்தேடி விவாகம் செய்துவைக்கிறேன். நீ கவலை கொள்ளவேண்டாம்.

**நீலமேகம்.**—மாமா! தாங்கள் தெய்வலோகத்துக்குச் சென்று அங்கிருந்து ஒரு பெண்ணைக் கொண்டுவந்தாலும் நான் அப்பெண்ணை விரும்பேன். என் உயிருக்கு உயிரான என் ஞானவடிவே வேண்டும்.

**மணிவாசகம் பிள்ளை.**—நான் சொல்வதைக் கவனிக்கிருயில்லை. நாங்கள் லாலாபேட்டையாருக்கு ஞானவடிவைக கொடுக்கிறோம் என்று சொல்லியனுப்பிய பின், நீ ஞானவடிவைக் குறித்துப் பேசுவது நியாயமல்ல. உன் மனம் சந்தோஷ

மடையச் சுந்தரமான பெண்ணைத் தேடி விவாகம் செய்து வைப்பேன் என்று நான் சொல்வதை நம்பு.

**நீலமேகம்.**—என் பிரிய மாமா ! என் மனம் சந்தோஷமடையச் சுந்தரமான பெண்ணைத் தேடி விவாகம் செய்து வைக்கிறேன் என்கிற தாங்கள் தங்களுடைய மகள் சந்தோஷமடையவா லாலாபேட்டைக் கிழவனுக்குக் கொடுக்கப் போகிறீர்கள். ஐயோ ! மாமா ! தங்களுக்கு வயது இருபது இருபத்தைந்தாக விருக்கத் தங்களை அறுபது வயதுள்ள ஓர் கிழவியை விவாகம் செய்துகொள்ளும் என்றால் அக்கிழவியைத் தாஙகள் விவாகம் செய்து கொள்ளப் பிரியப்படுவீர்களா வென்று சத்தியமாகச் சொல்ல வேண்டும். ஆண்பிள்ளைகளுக்கு எல்லாச் சுதந்தரமும் உண்டு ; பெண்பிள்ளைகளுக்குச் சுதந்தரம் ஒன்று மில்லை. ஆனதால் பெண்களைப பெற்றோர் தங்கள் பெண்ணைத் தங்களுடைய நன்மையைக் கருதி எந்தப் படுகுழியில் தள்ளினும் தள்ளலாம்போ லிருக்கிறது. மாமா ! நான் சொல்வதை நன்றாய்க் கவனியுங்கள். ஞானவடிவின் மனம் நோக ஒன்றைச் செய்யவேண்டாம். அவள் கிழவனை விவாகம் செய்து கொள்ளச் சம்மதப்படாமற் போனாலும் உங்களுடைய கருத்துக்கு விரோதமாக நடக்கமாட்டாள். அவள் தன் ஆயுள் காலமெல்லாம் துன்பப்படும்படி செய்ய வேண்டாம்.

**மணிவாசகம் பிள்ளை.**—எங்கள் பெண்ணுக்கு நாங்கள் செய்ய வேண்டிய கடமை எங்களுக்குத் தெரியும். நீ எங்களுக்குப் புத்தி கற்பிக்கவேண்டாம்.

**நீலமேகம்.**—நான் உஙகளுக்குப புத்தி கற்பிக்க வரவில்லை. உங்கள் முடிவான கருத்தென்ன ? ஞானவடிவை எனக்குக் கொடுக்கமாட்டீர்களா ?

**பாக்கியம்.**—உன் மாமா கொடுக்க முடியாதென்று சொல்லி விட்டாரே, மீண்டும் என் கேட்கிறாய் ?

நீல்மேகம்.—மாமாவே நன்கு யோசித்துச் சொல்லட்டும்.

மணிவாசகம் பிள்ளை.—கொடுக்க முடியாது. நான் வேறு பெண் பார்த்து உனக்கு விவாகம் செய்துவைக்கிறேன்.

நீல்மேகம்.—எனக்கு வேறுபெண் பார்த்து விவாகம் செய்வதைப் பின் பார்க்கலாம். ஞானவடிவை எனக்குக் கொடுக்க முடியாதல்லவா?

மணிவாசகம் பிள்ளை.—கொடுக்க முடியாது.

நீலமேகம்.—இது உண்மைதானே!

மணிவாசகம் பிள்ளை.—உண்மைதான்.

நீலமேகம்.—நான் கெஞ்சவேண்டிய அளவு கெஞ்சிப் பார்த்தேன். தங்களுடைய மனம் இரங்கவில்லை. மாமா! தங்களிஷ்டப்பிரகாரம் செய்யலாம். ஆனால் தங்களிஷ்டப்பிரகாரம் முடியுமென்று நம்பவேண்டாம். அம்மா! இனிமேல் நமக்கிங்கு வேலையில்லை. இத்துஷ்டர்கள் தங்களுக்கு வறுமை வந்த காலத்தில் ஒரு இழிகுலத்தானிடம் பணம் அதிகமிருப்பதைக் கண்டால் அவனுக் கிவர்கள் பெண்ணைக கொடுக்கப் பின்வாங்கமாட்டார்கள். அல்லது தங்களுக்குப் புதையலகபபடும் என்றறிந்தால் தங்கள் பெண்ணைப் பலி கொடுத்துப புதையலைக கைக்கொள்வார்கள். இவர்கள் முகத்தைப் பார்ப்பதே பெரும்பாவம். வருக போகலாம் (என்று தன் தாயை அழைத்துச் சென்றான்).

---

## 5—ம் அத்தியாயம்

முன் அத்தியாயத்தில் குறிபபிட்ட இரண்டாம் நாள், அதாவது வெள்ளிக்கிழமை மாலை லாலாபேட்டையில் இரத்தின சபாபதிபிள்ளை, இருப்புபபெட்டியைத் திறந்து, அதிலிருநத சிறிய இருப்புக் கைபெட்டியை எடுத்துக் கீழேவைத்துத் திறந்து, நாம் சில நகைகளை அனுப்பினாற் போதுமென்று, மோராமாலை ஒன்றும், பொன் கெட்டிக்காப்பு ஜதையொன்றும், பொன்கொலுஸு

ஜதையொன் றும், வயிரக் கம்மல் ஒருஜதையும், வயிரமோதிரம் ஒன் றும் எடுத்து நகைகள் ஐந்தாக அனுப்பினால் நல்லதென் று நினைத்து, பத்திரமொன்றையும் நகைகளையும் பெரிய இருப்புப்பெட்டியில் ஒரு பக்கம் வைத்துக் கைபெட்டியைப் பூட்டிப பெரிய இருப்புப் பெட்டியில் வைத்துப பெரிய இருப்புபபெட்டியையும் பூட்டி உட்கார்ந்து, இன்னும் ரெயில் வரவில்லையே என்று தனக்குள் சொல்லும்பொழுது, இன்ஜின் சத்தங்கேட்டு எழுந்து சாளரத்துக்கருகில் நின்று பார்த்துககொண்டிருந்தார். சில நேரத்திற்குப் பின் ஒரு சுந்தரபுருடன் வீட்டுக்கு வருவதைக் கண்டு "வருக கருணாநிதி! போன காரியம் எவ்விதம் முடிந்தது?" என்று கேட்டார்.

**கருணாநிதி.**—போனகாரியததை முடித்துக்கொண்டு வந்தேன். நிச்சயதாம்பூலம் அடுத்த திங்கட்கிழமை மாலை ஐந்தரை மணிக்குமேல் ஏழரைமணிக்குள் நடத்தவேண்டும். அல்லது அடுத்த வெள்ளிக்கிழமையிலும் நடத்தலாம்.

**இரத்தினசபாபதி பிள்ளை.**—நாளை மாலை பயாணப்பட்டுப போனாலும் ஞாயிற்றுக்கிழமை காலை கோயம்புத்தூர் போய்ச் சேரலா மல்லவா?

**கருணாநிதி.**—ஆ! ஆ! போய்ச் சேரலாம்.

**இரத்தினசபாபதி பிள்ளை.**—ஆனதால் திங்கட்கிழமையே நிச்சய தாம்பூலம் வைததுக்கொள்ளலாம். நான் கொடுக்கும் நகைகளை இபபொழுதே தட்டானிடததில் கொடுததுப பழுக்கச் சுட்டு மெருகுபோட்டுக் கொடுக்கச்சொல்லி வாங்கிவா. நாம் நல்ல சேலையொன்று வாங்கவேண்டும். நான் இவ்வூரிலுள்ள ஜவளிக் கடைகளிலெல்லாம் தேடிபபார்த்தும் விலையுயர்ந்த சேலை அகப்படவில்லை. நீ என் மைத்துனர் மணிவாசகம் பிள்ளையை அழைத்துக் கொண்டுபோய் அவரிஷ்டப படும் சேலையும் இரவிக்கையும் கோயம்புத்தூரிலேயே வாங்கிவிடு.

இங்ஙனம் சொல்லி இருப்புப்பெட்டியைத் திறந்து தான் வேறாகவைத்திருந்த நகைகளை எடுத்துக் கொடுத்தார். கருணாநிதி அவைகளை வாங்கிக்கொண்டு நீங்கியபின் நகைகளோடிருந்த பத்திரத்தை எடுத்து இன்னமும் இதை இவ்விதம் வைத்திருப்பது அழகல்லவென்று பத்திரத்திற் கண்ட தொகையை அதில் வரவு வைத்துக் காதுகிள்ளிப பெட்டியில் வைத்து உட்கார்ந்தார். "மற்றொரு சுந்தர புருடன் வருவதைக் கண்டு வருக நீலமேகம்! நீ எப்பொழுது கோயம்புத்தூரி லிருந்து வந்தாய"? (என்று கேட்டார்).

**நீலமேகம்.**—நான் கருணாநிதி யண்ணனோடு வந்தேன்.

**இரத்தினசபாபதி பிள்ளை.**—உன் தாயார் க்ஷேமமாக இருக்கிறார்களா ?

**நீலமேகம்.**—க்ஷேமமாக இருக்கிறார்கள்.

**இரத்தினசபாபதி பிள்ளை.**—நீ எது திடீரென்று வந்தது : ஏதாகிலும் காரியம் உண்டோ ?

**நீலமேகம்.**—முக்கியமான காரியமாக வந்தேன். அது தங்களால் முடியவேண்டும்.

**இரத்தினசபாபதி பிள்ளை.**—என்னால் முடியவேண்டியதா ? நான் என்ன செய்யவேண்டும் ?

**நீலமேகம்.**—என் தந்தை காலம்சென்றபின் தங்களையே என் தந்தையாக நினைத்திருக்கிறேன். எனக்கு விவாகம் செய்து வைக்கத் தங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

**இரத்தினசபாபதி பிள்ளை.**—உனக்கு விவாகமா செய்துவைக்க வேண்டும், தடைசொல்லாமல் செய்துவைக்கிறேன். உன்னுடைய விவாகத்துக்கும் பணம் வேண்டுமென்று கேட்கவந்திருக்கிறாய்போலும். விவாகத்துக்கு வேண்டிய தொகையைக் கொடுக்கிறேன். நீ பணத்துக்காகக் கவலைகொள்ளவேண்டாம். இங்கு சமீபத்தில் ஒரு விவாகம் நடக்கபபோகிறது. அவ்விவாகத்தோடு உன் விவாகத்தையும் சேர்த்து நடத்திவிடலாம் ; அல்லது தனியே செய்கிறதா யிருந்தாலும்

செய்துவிடலாம். உன் தாயார் பெண் பாரத்திருக்கிறார் களா ?

நீலமேகம்.—பார்த்திருக்கிறார்கள்.

இரத்தினசபாபதி பிள்ளை.—பெண் வீட்டார் பெண் கொடுக்கச் சம்மதபபட்டால், நீ விவாகத்துக்குநாள் வைத்துக்கொண்டு என்னிடம் வந்து உனக்கு வேண்டிய தொகையை வாங்கிக் கொண்டு போய்ச் சந்தோஷமாக விவாகத்தை முடித்துக் கொள்.

நீலமேகம்.—என் விவாகத்துக்கென்று ஐந்நூறு ரூபா என் தந்தை எடுத்து வைத்திருக்கிறார். ஆனதால் எனக்குப் பணம் வேண்டுவதில்லை. பெண்ணே வேண்டும்.

இரத்தினசபாபதி பிள்ளை.—உன் தாயார் பார்த்திருக்கும் பெண் மேல் உனக்கு விருப்பமில்லையா ? வேறு பெண்ணையா பார்க்கவேண்டு மென்கிறாய் ?

நீலமேகம்.—என் தாயார் பார்த்திருக்கும் பெண்ணையே விவாகம் செய்துகொள்ளப் பிரியபபடுகிறேன்.

இரத்தினசபாபதி பிள்ளை.—அப்பா ! நீலமேகம் ! நீ சொல்வது ஒன்றும் விளங்கவில்லை. உன் தாயார் பெண் பார்த்திருக்கிறார் கள் என்கிறாய் ! உன் தாயார் பார்த்திருக்கும் பெண்ணை விவா கம் செய்துகொள்ள உனக்குப் பிரியமென்கிறாய் ! விவாகச் செலவுக்குப் பணம் இருக்கிறதென்கிறாய் ! பின் உன் விவா கத்துக்குத் தடையா யிருபபதென்ன ?

நீலமேகம்.—பெண்வீட்டார் அப்பெண்ணை எனக்கே கொடுப்ப தாகச் சொல்லிக்கொண்டிருந்தவர்கள், இப்பொழுது தங்கள் எண்ணத்தை மாற்றி, அப்பெண்ணை வேறொருவருக்குக் கொடுக்கபபோகிறதாகச் சொல்லுகிறார்கள்.

இரதினசபாபதி பிள்ளை.—உங்களுக்கும் அவர்களுக்கும் ஏதாகி லும் மனத்தாங்கல் உண்டோ ?

நீலமேகம்.—எந்த விஷயத்திலும் இல்லை.

**இரத்தினசபாபதி பிள்ளை.**—சிலவேளை அப்பெண் உன்னை விவாகம் செய்துகொள்ள இஷ்டப்பட வில்லையோ ?

**நீலமேகம்.**—அப்பெண் என்னையே விவாகம் செய்துகொள்ளுவதாக அனேகமுறை சொல்லியிருக்கிறாள்.

**இரத்தினசபாபதி பிள்ளை.**—அவ்விதமாயின் அவர்கள் வேறொருவருக்கு அப்பெண்ணைக் கொடுக்க யோசிப்பதின் காரணமென்ன ?

**நீலமேகம்.**—பெண்வீட்டார் தங்களுக்குள்ள வறுமையால் ஓர் தனவந்தனுக்குக் கொடுக்க யோசித்திருக்கிறார்கள்.

**இரத்தினசபாபதி பிள்ளை.**—தனவந்தன் மகனுக்குத் தம் பெண்ணைக் கொடுத்துவிட்டால் அவள் சுகமாய்ப் போய் வாழலாமேயன்றிப் பெண்ணைப் பெற்றவர்களுடைய வறுமை எவ்விதம் நீங்கும் ?

**நீலமேகம்.**—தனவந்தருடைய மகனுக்கல்ல தனவந்தருக்கே கொடுக்க யோசித்திருக்கிறார்கள்.

**இரத்தினசபாபதி பிள்ளை.**—நீ எந்தப் பெண்ணைக் குறித்துப் பேசுகிறாய் ?

**நீலமேகம்.**—சிறியதந்தையே ! நான் தங்கள் மைத்துனர் மணிவாசகம் பிள்ளை குமாரத்தி ஞானவடிவைக்குறித்தே பேசுகிறேன். நான் சிறுவயது முதல் ஞானவடிவை இச்சித்திருந்தேன். ஞானவடிவும் என்னை இச்சித்திருந்தாள். எனக்கு ஞானவடிவு கிடைக்காளாயின் நான் உயிரோடிருக்கேன். என் வாழ்நாளைக் கெடுக்காமல் ஞானவடிவை எனக்குக் கொடுக்கும்படி சொல்லவேண்டும். தாங்களோ பெருந் தனவந்தர். தங்களுக்கு எத்தனை பெண் வேண்டுமென்றாலும் கிடைக்கும். இந்த உபகாரம் தாங்கள் எனக்குச் செய்ய வேண்டும் (என்று நெடுஞ்சாண்கிடையாக விழுந்து நமஸ்காரம் செய்தான்).

**இரத்தினசபாபதி பிள்ளை.**—அப்பா ! நீலமேகம் ! எழுந்திரு ! நீ அப்பெண்ணை விவாகம் செய்துகொள்ள எண்ணங்

கொண்டிருப்பதை எனக் கொருவரும் தெரிவிக்கவில்லை. மணிவாசகம் பிள்ளை எனக்குத் தன் மகளைக் கொடுக்கிறேன் என்று நிச்சயதாம்பூலத்துக்கு நாள் வைத்துக்கொடுத்ததால் அவர் வார்த்தையை நம்பி நிச்சயதாம்பூலத்துக்கு வேண்டிய யாவும் சேகரிப்பதோடு, அவர் எனக்கு மஞ்சத்திடல் நிலத்தின்மேல் கொடுக்கவேண்டிய தொகைக்காக எழுதிக்கொடுத்திருக்கும் பத்திரத்திலும் கொடுக்கவேண்டிய தொகையைப் பெற்றுக்கொண்டதாகப் பத்திரத்தில் வரவுவைத்துப பத்திரத்தின் காதைக் கிள்ளி வைத்திருக்கிறேன் பார் என்று எடுத்துக்காட்டி இனி என்ன செய்கிறது (என்று சொல்லும் பொழுது ஒருவர் வருகிறதைக் கண்டு), பச்சையப்பா! நான் மணிவாசகம் பிள்ளை மகளை விவாகம் செய்துகொள்ளப போகிறதால் உன் தம்பி நீலமேகனும் அதிக கவலைகொண்டிருக்கிறதாகக் காண்கிறது. நான் இதற்கு என்ன செய்கிறதென்று எனக்கு விளங்கவில்லை.

**பச்சையப்ப பிள்ளை.**—மாமன் குமாரத்தி விஷயத்தில் யாவும் முடிவுபெற்றிருப்பதால் நாம் வேறு பெண் பார்த்துத் தம்பி நீலமேகத்துக்கு விவாகம் செய்துவிடலாம்.

**நீலமேகம்.**—அண்ணா! வேறோர் பெண்ணை விவாகம்செய்து கொள்ளப பிரியமில்லையென்று சிறிய தந்தையிடம் சொல்லிவிட்டேன்.

**இரத்தினசபாபதி பிள்ளை.**—காரியம் மிஞ்சிபபோய்விட்டதை நீ கவனிக்காமலிருக்கிறாய். என்னை இபபொழுது என்ன செய்யச் சொல்லுகிறாய்?

**நீலமேகம்.**—நான் சொல்வதைக்கேட்டு என்னைக் கோபிக்க வேண்டாம். தாங்கள் நிச்சயதாம்பூலத்துக்கு நாள் பார்த்திருக்கிறீர்களன்றி இன்னும் நிச்சயதாம்பூல மாகவில்லை. ஆனதால் தாங்கள் வேறு பெண்ணைப் பார்த்து விவாகம் செய்து கொண்டு என் ஞானவடிவை எனக்குக் கொடுத்துவிட வேண்டுகிறேன். எனக்கு ஞானவடிவு கிடைக்காளாயின்

நான் இறப்பது நிச்சயம். வீணாக என்வாழ்நாளைக் கெடுக்க வேண்டாம்.

**இரத்தினசபாபதி பிள்ளை.**—அடே! நீலமேகம்! நீ அறியாத் தன்மையால் சொல்வதையெல்லாம் கேட்டு உனக்குச் சமாதானம் சொல்லிக்கொண்டு வந்தது பெருந்தப்பித மாய் முடிந்தது. ஞானவடிவு உனக்குக் கிடைக்கமாட்டாள். நீ பெண்ணைப் பெற்றவர்களிடம் போய்ப பேசிக்கொள்வது உத்தமம். நீ என்னிடத்தில வாதாடிக்கொண் டிருப்பதில் பிரயோசனமில்லை, போய்விடு.

**நீலமேகம்.**—நான் எவ்வளவு கெஞ்சிக் கேட்டும் தங்களுடைய மனம் இரங்கவில்லை. இனி என்னுலானதை நான் பார்த்துக் கொள்ளுகிறேன். எனக்கு ஞானவடிவு கிடைக்கமாட்டா ளாயினும் தாங்களும் அவளை விவாகம் செய்து சுகத்தோ டிருப்பீரென்று நினைக்கவேண்டாம் (என்று அவ்விடத்தை விட்டு நீங்கினுன்).

**இரத்தினசபாபதி பிள்ளை.**—பச்சையப்பா! நீலமேகம் சொல் லிக்கொண்டு போகிறதைக் கேட்டாயா?

**பச்சையப்ப பிள்ளை.**—அவன் சொல்லியதைக் கவனிக்கவேண் டாம். தான் ஞானவடிவை விவாகம் செய்துகொள்ள வேண்டுமென்ற எண்ணம் நெடுநாள் அவனிடத்தில் நிலை கொண்டிருந்ததாலும் இப்பொழுது தன் எண்ணம் முடிவு பெருமற் போனதாலும் எதோ உளறிக்கொண்டு போகி ருன். தாங்கள் முடிக்கவேண்டிய காரியத்தைக் குறித்து யோசியுங்கள். நீலமேகம் என்ன செய்யப்போகிருன் என்று நான் அறிந்து வருகிறேன் (என்று நீங்கினுன்).

நீலமேகமும் பச்சையப்ப பிள்ளையும் நீங்கியபின், இரத்தின சபாபதி பிள்ளை நீலமேகம் சொல்லிப்போனதை நினைத்து நினைத்து, "அவன் என்ன செய்வான். அவனுல் என்ன செய்ய முடியும். பின் நேரிடப போகிறதைக் கவனியாமல் திருட்டுத் தாலி கட்டிவிட்டால் என்ன செய்கிறது. அல்லது ஞானவடிவை

அழைத்துக்கொண்டு ஓடிப்போய்விட்டால் என்ன செய்கிறது" என்று நெடுநேரம் யோசித்திருந்து, பின் தனக்குள் தைரியப் படுத்திக்கொண்டு, மணிவாசகம் பிள்ளையும் அவர் மனைவியும் அவனுடைய எண்ணத்துக்கு இடங்கொடுக்கமாட்டார்கள் என்று மனந்தேறி, நிச்சயதாம்பூலத்தைத் திங்கட்கிழமை முடித்துவிடுவ தவசியம் என்ற தீர்மானத்தோடிருந்தார். கருணாநிதி கொண்டு போன நகைகளை அன்றிரவு கொண்டுவந்து காட்டினான். அவை களைப பார்த்து நகைகளெல்லாம் புதிய நகைகள்போ லிருக்கின் றன என்று சந்தோஷபபட்டார்.

**கருணாநிதி.**—பழைய நகைகளைப் பழுக்கச் சுட்டதென்று ஒருவ ரும் சொல்லாமல் புதிய நகைகளென்றே நினைப்பார்கள்.

**இரத்தினசபாபதி பிள்ளை.**—நாளை நீயும் உன் மனைவியும் கோயம்புத்தூருக்குச் சென்று நிச்சயதாம்பூலத்தை முடித்துக் கொண்டு விரைவில் வந்துவிட வேண்டும். நீ வந்தபின் கொட்டகைப் பந்தல் போட ஆள்களைத் தேடவேண்டும்: சாமான்கள் சேகரிககவேண்டும்.

**கருணாநிதி.**—நிச்சயதாம்பூலம் ஆனபின் எங்களுக் கவ்விடத்தில் வேலை யென்ன? செவ்வாய்க்கிழமையே பிரயாணபபட்டு வருகிறோம்.

**இரத்தினசபாபதி பிள்ளை.**—நீலமேகம் என்னிடம் வந்துபோன சமாசாரம் தெரியுமா?

**கருணாநிதி.**—ஆம்! அவன் வார்த்தையைத் தாங்கள் ஏன் கவனிக்க வேண்டும்? அவனுக்குச் சொல்லவேண்டியதை நான் சொன்னபின் அவன் தங்களிடத்தில், புத்தியீனமாகப பேசிய தைக்குறித்துத் துக்கபபட்டான்.

**இரத்தினசபாபதி பிள்ளை.**—நாம் எதற்கும் முன்ஜாக்கிரதை யாக இருக்கவேண்டுமென்று மணிவாசகம்பிள்ளையிடத்தும் அவர் மனைவியிடத்தும் சொல்லவேண்டும்.

**கருணாநிதி.**—தாங்கள் நீலமேகத்தைக குறித்துக் கவலைகொள்ள வேண்டாம். தாங்கள் சொல்லியவிதம் கோயம்புத்தூரில்

முடித்துவந்து இவ்விடத்தில் வேண்டியவைகளைச் சேகரிப்பேன். கொட்டகைப்பந்தல் போட ஆள் சேகரிக்கப் பச்சையப்ப அண்ணனிடத்தில் சொன்னால், அவர் வேண்டியதைச் செய்வார்.

**இரத்தினசபாபதி பிள்ளை.**—ஆம்! ஆம்! பச்சையப்பன் இவ்விதமான வேலையில் வல்லவனே.

அதன்மேல் அவர் நிச்சயதாம்பூலத்துக்கு வேண்டியவைகளைக் கொடுத்ததோடு அப்பா! கருணாநிதி! இதை இரகசியமாக என் மைத்துனரிடங் கொடுத்துவிடு என்று மணிவாசகம் பிள்ளை எழுதிக்கொடுத்த கடன்பத்திரத்தையுங் கொடுத்தார். அடுத்தநாள் கருணாநிதியும் சிவஞானமும் கோயம்புத்தூருக்குப் போனபின் இரத்தினசபாபதி பிள்ளை பச்சையப்ப பிள்ளையை அழைத்து, கொட்டகைப்பந்தல் போட ஆள் சேகரிக்க உத்தரவு கொடுத்தார். புதன்கிழமை காலை கருணாநிதி வருவதை இரத்தினசபாபதி பிள்ளை கண்டு என்ன சமாசாரம் என்று கேட்டார்.

**கருணாநிதி.**—யாவும் சந்தோஷமாக முடிந்தது. யாவரும் நிச்சய தாம்பூலத்துக்கு வந்திருந்தார்கள். ஆனால் கற்பகவல்லியம்மாள் மட்டும் வரவில்லை.

**இரத்தினசபாபதி பிள்ளை.**—கற்பகவல்லியம்மாள் வராமற்போனால் தோஷமில்லை. விலையுயர்ந்த சேலை அகப்பட்டதா?

**கருணாநிதி.**—தாங்கள் சொன்னதுபோல் மணிவாசகம் பிள்ளையை அழைத்துப்போய் நூற்றைம்பது ரூபாவுக்குப் பச்சைக் காசிச் சேலை வாங்கியதோடு இருபது ரூபாவில் மத்தாப்பு ரவிக்கையும் வாங்கினேன். பெண்ணுக்கு நாம் கொடுத்த நகைகளைப் போட்டுச் சேலையையும் கட்டி ரவிக்கையையும் போட்டு உட்காரவைத்தார்கள்.

**இரத்தினசபாபதி பிள்ளை.**—பத்திரத்தைக் கொடுத்தபோது என்ன சொன்னார்!

**கருணாநிதி.**—பத்திரத்தைப் பார்த்து மிக்க மகிழ்வுடைந்தார்.

இரத்தினசபாபதி பிள்ளை.—விவாகம் நெருக்கத்திலிருப்பதால் நாம் சாமான்களைச் சேகரிக்கவேண்டும்.

கருணாநிதி.—நான் யாவற்றையும் விரைவில் சேகரிக்கிறேன் (என்று விடைபெற்று நீங்கினான்).

## 6—ம் அத்தியாயம்

கோயம்புத்தூர கடைத்தெருவில் தபாற்கார னொருவன் அம்மார்க்கம் போகிற ஒருவரைக் கூவி "ஐயா! மணிவாசகம் பிள்ளை! தங்களுக்கோர் கடிதம் இருக்கிறது" என்று ஓர் கடிதத்தைக் கொடுத்துப்போனான். மணிவாசகம் பிள்ளை கடிதத்தைப் பிரித்து நாலைந்துவரி வாசித்ததற்கு முன் கைகள் நடுங்க வீட்டுக்கு வந்து பாக்கியம்! பாக்கியம்! என்று அவ்சரமாகக் கூப்பிட்டார். கூடத்தில் நின்றிருந்த ஞானவடிவும் பின்கட்டிலிருந்த தன் தாயை அம்மா! அம்மா! என்றழைத்தாள். ஏன் அம்மா கூப்பிடுகிறாய் என்று பாக்கியம் தன் மகளை வந்துகேட்டாள்.

ஞானவடிவு.—அப்பா தங்களை அழைக்கிறார்கள்.

பாக்கியம்.—(தன் நாயகனிடம் வந்து) ஏன் அழைத்தீர்கள்? இதென்ன கையில் கடிதம். கண்களில் நீர்வடிகிறது. என்ன என்ன சொல்லுங்கள்.

மணிவாசகம் பிள்ளை.—ஐயோ! நான் என்னவென்று சொல்லுவேன். இதென்ன அநியாயம்! (என்று மீண்டும் கண்களில் தாரைதாரையாக நீரை வடியவிட்டார். பாக்கியமும் ஞானவடிவும் அவர் அருகில் போய் நின்று) ஒன்றும் சொல்லாமல் அழுகிறீர்களே! கடிதம் எங்கிருந்து வந்தது என்ன சமாசாரம்?

மணிவாசகம் பிள்ளை.—இவ்விதம் முடியுமென்று நான் கனவிலும் நினைக்கவில்லையே! நம்முடைய குமாரத்தியால் நாம் மேன்மை யடையலாம் என்றிருந்தேனே! வெண்ணெய் திரளும்பொழுது தாழியுடைந்ததுபோ லானதே! ஐயோ!

லாலாபேட்டை அத்தானைக் கொன்றுவிட்டார்களாமே! நாம் என்ன செய்யப்போகிறோம் (என்று மாலை மாலையாகக் கண்ணீரோடே அழுதார்).

அவ்விதம் சொன்னதைக் கேட்ட பாக்கியம் மாரபில் அடித்துக்கொண்டு ஓவென்றலறிக் கீழ்விழுந்து கடகடவென்று புரண்டு அழுதாள். ஞானவடிவு மரம்போல் அசைவற்று நின்றாள். பாக்கியத்தின் அழுகுரலைக் கேட்டு அண்டை அயலார் ஓடிவந்து என்ன என்ன என்று கேட்டார்கள்.

**மணிவாசகம் பிள்ளை.**—ஐயோ! என் மைத்துனரைக் கொலை செய்து விட்டார்கள். ஐயோ! கொட்டகைபபந்தல் போட்டுக்கொண்டிருப்பதோடு எல்லாச் சாமான்களும் சேகரித்து விட்டாராமே! ஐயோ! அநியாயமே! ஆ! படுபாவிகளா! நீங்களா கொன்றீர்கள்! நீங்கள் அவர் கழுத்தை அறுக்க எவ்விதம் துணிந்தீர்கள்.

**வெளியார்.**—ஆர் கொன்றது?

**மணிவாசகம் பிள்ளை.**—இந்த படுபாவியும் அந்த படுபாவியுமே கொன்றார்கள். ஆ! படுபாவி! நீ இக்கொடிய எண்ணத்தை மனதில் வைத்துக்கொண்டோ இவ்விவாகம் எப்படி முடியபபோகிறது பாரக்கிறேன் என்றாய்!

**பாக்கியம்.**—எழுந்து தன் நாயகனைப்பார்த்து நீலமேகமா லாலா பேட்டையாரைக் கொன்றான்.

**மணிவாசகம் பிள்ளை.**—ஆம்! இந்த துன்மார்க்கனும் அந்தத் துன்மார்க்கன் கருணாநிதியுமே கொன்றார்கள்.

**பாக்கியம்.**—கருணாநிதியா! தங்கள் கடிதத்தை நன்றாய் வாசித்துபபாருங்கள்.

**மணிவாசகம் பிள்ளை.**—நான் பல தடவை வாசித்துப பார்த்தேன். கருணாநிதியும் நீலமேகமுமே கொன்றார்களாம்.

**பாக்கியம்.**—இவ்வித எண்ணங்கொண்டிருந்தவன் நிச்சயதாம் பூலத்துககு வநதிருந்தபொழுது புன்சிரிப்போடு எல்லா விஷயங்களுக்கும் முன்நின்று செய்து அவனும் அவன் மனை

வியும் ஞானவடிவுக்கு நற்புத்தி போதித்துப் போனார்கள். கருணாநிதி இத்தீத்தொழிலைச் செய்ய ஏன் துணிந்தான் ?

**மணிவாசகம் பிள்ளை.**—சில மாதங்களுக்கு முன் லாலாபேட்டையார் எழுதிவைத்திருந்த வில்பத்திரமே அதற்குக் காரணமாய் முடிந்தது.

**பாக்கியம்.**—வில்பத்திரமென்பது எனக்கு விளங்கவில்லை.

**மணிவாசகம் பிள்ளை.**—மூன்று மாதங்களுக்கு முன் லாலாபேட்டையார் தன் ஜாதகத்தை ஒரு சோதிடனிடத்தில் காட்டியபொழுது அவன் அவருக்குச் சமீபத்தில் பெருங்கண்டம் இருக்கிறதென்றும், அக்கண்டம் தப்பினால் வயது தொண்ணூற்றைந்தென்றும் இக்கண்டத்தில் தப்புவது கடினமென்றும் சொல்லிப் போனானும். லாலாபேட்டையார் சோதிடன் வார்த்தையை நம்பித் தனக்குப்பின் தன்னுடைய சொத்து முற்றிலும் கருணாநிதியைச் சேரவேண்டுமென்றும் பச்சையப்பனுடைய குடும்பச் செலவுக்கு மாதம் பதினைந்து ரூபா கொடுக்கிறதென்றும் சென்னை வக்கீல்களைக் கொண்டு எழுதிவைத்திருந்தார். ஆனால் இவ்விடம் வந்துபோன மெய்யறியார் லாலாபேட்டையாருடைய ஜாதகத்தைச் சென்னையிலிருக்கும் சோதிடர்களிடத்தில் காட்டியதில் அவர்கள் "சமீபத்தில் வருங் கண்டம் அவரை ஒன்றும் செய்யாது ; அவருக்கு வயது தொண்ணூற்றைந்தே ! சமீபத்தில் அவருக்கு விவாகமும்நடக்கும்" என்று சொன்னதால் லாலாபேட்டையார் ஊருக்கு வந்தபின் மெய்யறியாரை வரவழைத்து விவாகத்துக்கு வேண்டியதைச் செய்யத் தூண்டினார். லாலாபேட்டையாருக்குக் குறித்த விவாகம் முடிந்தால் அவர் எழுதிவைத்திருக்கும் பத்திரத்தைக் கிழித்துவிட்டு அவருக்குப்பின் அவருடைய சொத்தெல்லாம் நம்முடைய பெண்ணுக்குச் சேரும்படி எழுதிவைத்துவிடுவார். அதன்பின் தனக்கு ஒன்றும் கிடைக்க நியாயமில்லை என்று இக்கொடுந்தொழிலைச் செய்யத் துணிந்தான். நீலமேகம் தனக்குப்

பெண் கொடுக்கமாட்டோம் என்று சொல்லிவிட்டபின் லாலாபேட்டையாரைக் கண்டு கெஞ்சிப் பார்த்தும் அவர் இடங்கொடுக்காமல் துரத்தி விட்டதால், தான் குடிக்காத பாலை எடுத்துக் கவிழ்த்துவிட வேண்டுமென்று அவனும் உடந்தையாய் நின்றதுபோல் காணப்படுகிறது.

**வந்தவர்களில் ஒரு பெரியவர்.**—அப்பா! மணிவாசகம்! லாலா பேட்டை இரத்தினசபாபதி பிள்ளைக்குத் தமையன்மார்கள் இருவர் இருந்தாரல்லவா?

**மணிவாசகம் பிள்ளை.**—ஆம், தாதா, வேதாசலம் பிள்ளை தணிகாசலம் பிள்ளை எனப பேர்கொண்ட இருவர் இருந் தார்கள்.

**பெரியவர்.**—ஆம்! ஆம்! அவர்கள் எனக்குப் பங்காளி அண்ணன் மார்களே அன்றி வேறல்ல. நான் சிறுவனாக இருந்த பொழுது சிலகாலம் திருச்சிராபபள்ளியில் அவர்களோடு வாசித்திருந்தேன். அவர்கள் வீட்டுக்குப போகும்போது என்னை அழைத்து வந்து வீட்டில் விட்டுப் போகும்படி என் தாயார் கேட்டுக்கொண்டதால், என்னைக் கொண்டுவந்து விடும்பொழுது என் தாயார் வீட்டுக்குள்ளிருந்தால் என் தாயார் காதில் விழும்படி, "அம்மா! குஞ்சிதபாதத்தைக் கொண்டுவந்து விட்டோம்" என்று சொல்லிப் போவார்கள். அவர்களிருவரில் உன் தமக்கையை வேதாசலம் பிள்ளைக் கல்லவா கொடுத்திருந்தது?

**மணிவாசகம் பிள்ளை.**—ஆம்! வேதாசலம் பிள்ளைக்கே என் தமக்கையைக் கொடுத்தது. அவருடைய குமாரனே பச்சை யப்பன். தணிகாசலம் பிள்ளை குமாரனே கருணாநிதி.

**குஞ்சிதபாதம் பிள்ளை.**—அம்மூவருக்கும் பங்குபாகம் பிரிந்து விட்டதல்லவா?

**மணிவாசகம் பிள்ளை.**—அம்மூவருடைய தந்தை உயிரோடிருக் கும்பொழுதே பங்குபாகம் பிரித்துவைத்துக் காலம் சென் றார். மூத்தவர் தன் சொத்தை விருத்தியாக்கிவைத்துக்

காலம் சென்றார். அவருடைய குமாரன் பச்சையப்பன் தன் மனம்போன போக்காக எல்லா விஷயத்திலும் செலவு செய்துவிட்டு லாலாபேட்டையார் கையை எதிர்பார்த்திருந்தான். தணிகாசலம் பிள்ளை தன் பொருளை வீணில் செலவழித்துவருங் காலத்தில் மரணமடைந்தார். அவர் செலவழித்ததுபோக மீதியாய் வைத்துப்போன நிலத்தை வைத்துக்கொண்டு காலங்கழித்துவந்த கருணாநிதி இக்கொடுந் தொழிலுக்குக் காரணனானான்.

துஞ்சிதபாதம் பிள்ளை.—நீலமேகத்தையும் கருணாநிதியையும் மிக்க யோக்கியரென்றும் நன்னடக்கையைக் கைபபற்றியவர்களென்றும் நினைத்திருந்தேன். இக்கொடிய செய்கையைச் செய்தது ஆச்சரியமாக இருக்கிறது.

மணிவாசகம் பிள்ளை.—கருணாநிதி இவ்விடம் வந்திருந்தபொழுது அவனுடைய குணநிசயங்களைக் கண்டு ஆனந்தங்கொண்டிருந்தேன். நீலமேகம் அவனுடைய குணத்தைக் கெடுத்துத் தன்வச மாக்கிக்கொண்டான்.

துஞ்சிதபாதம் பிள்ளை.—(அண்டை அயலாரை அனுப்பிவிட்டு) அம்மா! பாக்கியம்! உன் மகள் அழுதுகொண்டு நின்றிருப்பதைப் பார். என்ன செய்யலாம்! காரியம் மிஞ்சிப்போய் விட்டது! அபபா! மணிவாசகம்! நீ கையில் வைத்திருக்கும் கடிதத்தில் என்ன எழுதியிருக்கிறது? யார் அந்தக் கடிதத்தை எழுதியது? நீலமேகத்தையும் கருணாநிதியையும் என்ன செய்திருக்கிறார்கள்?

மணிவாசகம் பிள்ளை.—பச்சையப்பனே எழுதியிருக்கிறான். நீலமேகத்தையும் கருணாநிதியையும் என்ன செய்திருக்கிறார்களென்று தெரிவிக்கவில்லை. தான் விரைவில் வந்து மற்றச் சமாசாரங்களைத் தெரிவிப்பதாக எழுதியிருக்கிறான்.

துஞ்சிதபாதம் பிள்ளை.—உன் தங்கை கற்பகவல்லியம்மாளுக்கு இச்சமாசாரத்தைத் தெரிவிக்கவேண்டாமா?

**மணிவாசகம் பிள்ளை.**—அந்தம்மாளுக்கு நாமேன் தெரிவிக்க வேண்டும்? இரண்டொருநாளில்தெரிந்துகொள்ளுகிறார்கள்.

**குஞ்சிதபாதம் பிள்ளை.**—அப்பா ! மணிவாசகம் ! நான் சொல்வதைக் கவனித்துக்கேள். நீ உன் மகளை நீலமேகத்துக்குக் கொடுக்கிறேன் என்று நெடுநாளாகச் சொல்லிக்கொண்டிருந்து சமீபத்தில் உன் எண்ணத்தை மாற்றி வேறொருவருக்குக் கொடுக்கத்துணிந்ததால் இக்காரியத்தைச் செய்தானே அல்லது அவன் செய்யவில்லையோ, அவன் வாய்ப்பிறப்பை அறிந்தாலன்றி நமக்கு உண்மை விளங்காது. நீ எதற்கும் கற்பகவல்லியம்மாளை அழைத்துக் கடிதத்திலுள்ளதைச் சொல்லவேண்டியதே.

**பாக்கியம்.**—ஆம் ; தாதா சொல்வது நியாயமே. அந்த அத்தாச்சியை வரவழைத்துச் சொல்லிவிடுங்கள். தாதா, தாங்களே ஒருவரையனுப்பி அங்கு ஒன்றும் சொல்லாமல் அழைத்து வரும்படி செய்யுங்கள்.

**மணிவாசகம் பிள்ளை.**—கற்பகவல்லியம்மாளை இங்கு அழைத்து வரவேண்டாம். அவர்கள் வீட்டிலேயே சொல்லும்படி செய்யுங்கள். இங்கு வந்தபின் அந்தம்மாள் ஏதாகிலும் சொன்னால் வீண் மனஸ்தாபம் உண்டாகும்.

**குஞ்சிதபாதம் பிள்ளை.**—நானும் அங்கே போகாமல் சமாசாரத்தை எட்டவிடுகிறேன் (என்று நீங்கினார்).

பாக்கியம் எழுந்துபோய்த் தன்மகள் அழுதுகொண்டிருப்பதைக் கண்டு "அம்மா ! என்ன செய்யலாம். உனக்கு அதிர்ஷ்டமில்லாமற்போனது. நீ தனவந்தன் மனைவியாய் வாழ்வாயென்று சந்தோஷமாக விருந்தோம். அந்த எண்ணம் பாழாய்ப்போனது. நிச்சயதாம்பூலத்துக்கே விலையுயர்ந்த நகைகளை அனுப்பியதோடு இவ்வூரில் ஒருவரும் கட்டியறியாத சேலையையும் வாங்கிக்கொடுத்தார். விவாகமானால் உன்னை இராஜாத்தியைப்போல் வைத்திருப்பார். நாம் என்ன செய்யலாம் ? நாம் கொடுத்துவைக்கவில்லை. உன் அதிர்ஷ்டம் பஞ்சையாய்ப்போனதென்று அழவேண்டாம்,

என் கண்மணி" என்று ஞானவடிவின் கண்களைத் துடைத்துப் பின்கட்டுக்கு அழைத்துச் சென்றாள்.

**ம**ணிவாசகம் பிள்ளை அன்றெல்லாம் அதிக கவலையோடிருந்தார். மறுநாள் காலை ஒன்பது மணிக்கு மணிவாசகம் பிள்ளை உட்கார்ந்திருக்கும் பொழுது கற்பகவல்லியம்மாள் வீட்டுக்குள் வந்து அடித்து மோதிவிழுந்து, "அண்ணு! இனி நான் என்ன செய்யபபோகிறேன்" என்றழுதாள். அத்தருணத்தில் வேறொருவன் வீட்டுக்குள் ஓடிவந்து திடீரென்று விழுந்து, "மாமா! என்னை அநாதியாக விட்டுப போய்விட்டார்" என்று கதறினன்.

**மணிவாசகம் பிள்ளை.**—பச்சையப்பா. நீ அழவேண்டாம். நீ எழுதிய கடிதத்தால் ஒன்றும் விளங்கவில்லை. நடந்ததை விளங்கச் சொல்லவேண்டும்.

**பச்சையப்ப பிள்ளை.**—இந்த அநியாயத்தை எவ்விதம் சொல்லுவேன். கருணாநிதி நிச்சயதாம்பூலத்துக்கு இவ்விடம் வந்தபின், சிற்றபபா என்னை யழைத்துக் கொட்டகைப் பந்தல் போட வேலைக்காரர்கள் வேண்டுமென்றார். நான் அவருடைய இஷ்டபபிரகாரம் ஆட்களைச் சேகரித்து வைத்திருந்தேன். கருணாநிதி நிச்சயதாம்பூலத்தை முடித்துக்கொண்டு வந்தபின் நான் பந்தல் வேலையைச் செய்துகொண்டிருந்தேன். கருணாநிதி விவாகத்துக்கு வேண்டிய சாமான்களைச் சேகரித்துக் கொண்டிருந்தான். விவாகநாள் நெருங்கினதால் இரவும் பகலுமாகப் பந்தல் வேலை செய்துகொண்டிருந்தார்கள். வியாழக்கிழமை அதாவது சித்திரைமாதம் இருபத்திரண்டாந்திகதி இரவு பன்னிரண்டு மணி பரியந்தம் பந்தலில் வேலைசெய்து யாவரும் படுத்து நித்திரை போனோம். நிதானம் காலை இரண்டுமணிக்கு என் சிறிய தந்தை படுத்திருந்த அறையில் ஏதோ சத்தங்கேட்ட போது நானும் என்னோடு சிலரும் அவ்விடத்திற்கோடிப் பார்த்தோம். மாமா! நான் என்ன சொல்லுவேன்!

கருணாநிதி சிற்றப்பா கைகளைப் பிடித்துக்கொண்டிருந்ததை யும், நீலமேகம் அம்பட்டன் கத்தியால் கழுத்தை யறுத்து விட்டதையும் பார்த்து, "பாவிகளா! என்னவேலை செய்து விட்டீர்கள்" என்று கேட்டதற்கு, அவர்கள் பதில் சொல்ல வகையற்று மௌனமாய் நின்றார்கள். நான் வேலைக்காரர் களை வரவழைத்து அவ்விருவரையும் பார்த்துக்கொள்ளச் செய்து, அன்று மாலை ஒருபோலீஸ் எட்கான்ஸ்டேபிலோடு இரண்டு கான்ஸ்டேபில்கள் வேறொரு விஷயமாக அவ் வூருக்கு வந்திருந்ததைக் கண்டதால், அவர்களை வரவழைத் தேன். போலீஸார் கருணாநிதியையும் நீலமேகத்தையும் ஒருபோலீஸ் சேவகனோடு அனுப்பிவிட்டு, அத்தெருவிலுள்ள பெரியமனிதரை வைத்துக்கொண்டு மேல்வீட்டிலுள்ள சாமா ன்களைக் குறித்துக்கொண்டு ஓரறையில்போட்டுப் பூட்டி இரு ப்புப்பெட்டி முதலிய எல்லாப பூட்டுகளுக்கும் முத்திரை வைத்துவிட்டு மற்ற கான்ஸ்டேபிலைக் காவலாக வைத்து எட் கான்ஸ்டேபில் நீங்கினார். போலீஸ் சேவகனோடு போன நீலமேகமும் கருணாநிதியும் எவ்விதமாகவோ ஓடிப் போய்விட்டார்கள்.

**மணிவாசகம் பிள்ளை.**—அதிசயமான சமாசாரத்தைச் சொல்லு கிறாய். போலீஸார் அவ்விருவரையும் எவ்விதம் விட்டுவிட் டார்கள்.

**பச்சையப்ப பிள்ளை.**—ஒரே போலீஸ் சேவகனோடு இருவரை யனுப்பியதால் அவர்கள் அவனை ஏமாற்றிப் போய்விட்டார் கள். ஆனால் மறுநாள் குளித்தலையிலிருந்து போலீஸ் இன்ஸ் பெக்டர் வந்து குற்றவாளிகளை எவ்விதமுங் கண்டுபிடித்துக் கொண்டுவருகிறேன் என்றிருக்கிறார்.

**மணிவாசகம் பிள்ளை.**—அம்மா! கற்பகவல்லி! பச்சையப்பன் சொல்லியதைக் கேட்டுக்கொண்டாயல்லவா? நாம் என் செய்யலாம்! அவரவர்கள் வினையின் பிரகாரமே யாவும் முடியும்.

பச்சையப்ப பிள்ளை சொல்லியதைக் கேட்டிருந்த கற்பக வல்லி பெருமூச்செறிந்து அவ்விடத்தை விட்டு நீங்கினாள்.

**பச்சையப்ப பிள்ளை.**—மாமா! தாங்கள் என்னோடு லாலா பேட்டைக்கு வரவேண்டும். நாம் போலீஸ் இன்ஸ்பெக்டருக்குத் துணையாக ஆட்கள்வைத்துத் தேடப் பொருளுதவி செய்யவேண்டும். சிற்றப்பாவுடைய இருப்புப் பெட்டியை முத்திரைவைத்துப் போகாமலிருந்தால் அவருடைய பணத்தை எடுத்து அவருக்கே செலவு செய்யலாம். என்னிடம் பந்தல் செலவுக்காகக் கொடுத்து வைத்திருந்ததை அவருடைய சாவுக்கும் பாலுக்கும் செலவுசெய்தேன். என்னிடத்தில் பணமில்லாதிருப்பது தங்களுக்குத் தெரிந்ததே! இச்சமயத்தில் தாங்களே பொருளுதவி செய்யவேண்டும்.

**மணிவாசகம் பிள்ளை.**—பச்சையப்பா! நானும் உன்னைப் போல் பொருளற்றவனே! நிச்சயதாம்பூலத்துக்காக அங்கும் இங்கும் கடன்வாங்கிச் செலவழித்திருக்கிறேன்.

**பச்சையப்ப பிள்ளை.**—தங்களிடத்திலும் பொருள் இல்லை என்பது எனக்குத் தெரியும். சிற்றப்பா நிச்சயதாம்பூலத்துக்கு அனுப்பிய நகைகளில் ஒன்றிரண்டைக் கொடுத்தால் அதை ஈடுவைத்தாவது விற்றாவது செலவு செய்யலாமே.

**மணிவாசகம் பிள்ளை.**—மெய்தான், நாளைக்குத் துரைத்தனத்தார் நகைகளைக் கேட்டால் என்ன சொல்லுகிறது. நான் அந் நகைகளை ஒன்றும் செய்யமுடியாது. நான் நாளை உன்னோடு பிரயாணப்பட்டு வருகிறேன் வருக (என்று வீட்டுக்குள் அழைத்துப்போனார்).

# 7—ம் அத்தியாயம்

கோயம்புத்தூரில் இரங்கைய கவுண்டன் தெருவிலிருக்கும் மணிவாசகம் பிள்ளை மனைவி பாக்கியம் ஓர் நாள் இரவு கவலையோடு உட்கார்ந்திருக்கும்பொழுது, வண்டி யொன்று வீட்டுக் கெதிரில் நின்றது ; அவள் எழுந்துபோய், தன் நாயகன் வண்டியிலிருந் திறங்குகிறதைக் கண்டு "ஒரு கடிதமாகிலும் எழுதாமல் நெடுநாள் லாலாபேட்டையி லிருந்து விட்டீர்களே" என்றாள்.

**மணிவாசகம் பிள்ளை.**—ஆம், நான் வைகாசி மாதம் எட்டாந் திகதி புறப்படலாமென்றிருந்தேன். வரமுடியாமற் போய் இன்று பதினைந்தாந்திகதி புறப்பட நேரிட்டது (என்று வீட்டுக்குள் வந்து நாற்காலியி லுட்கார்ந்தார்).

**பாக்கியம்.**—தாங்கள் ரெயிலில் அவஸ்தைபபட்டு வந்திருப்பீர்கள் ; சாப்பிட்டுவிட்டுப் படுத்துக்கொள்ளுங்கள். நாளை யாவும் பேசிக்கொள்ளலாம், (என்று சமையலறைக்குள் அழைத்துச் சென்றாள்).

மறுநாள் காலையில் மணிவாசகம் பிள்ளை எழுந்து உட்கார்ந்திருக்கும்பொழுது பாக்கியம் வந்து, "இவ்வளவு நாள் லாலாபேட்டையில் என் தஙகினீர்கள்? லாலாபேட்டை அண்ணன் பெரும் பொருளையும் ஏராளமான நிலத்தையும் வைத்துப்போனாரே, அந்தச் சொத்தெல்லாம் இப்பொழுது யாரைச் சேரும்?"

**மணிவாசகம் பிள்ளை.**—தன் சிற்றப்பன் சொத்து தன்னைச் சேரவேண்டுமென்று பச்சையபபன் துரைத்தனத்தாருக்கு எழுதிக்கொடுத்தான். லாலாபேட்டையார் சொத்தெல்லாம் அவருக்குப் பின் யாரைச் சேரவேண்டுமென்று கேள்விப்பட்டு, துரைத்தனத்தார் அவர் பெட்டியையெல்லாம் பார்த்து நாம் முன் கேள்விப்பட்டதுபோல், கருணாநிதி பேருக்கு எழுதிவைத்திருப்பதால், கருணாநிதி பேரில் ஏற்பட்ட குற்றம் தீருமுன் ஒன்றும் செய்ய முடியாதென்று சொல்லிவிட்டார்

கள். இவ்விஷயமாகக் குளித்தலைக்கும் திருச்சிராப்பள்ளிக்கும் பச்சையப்பனோடு திரிந்ததால் நான் விரைவில் வர முடியாமல் போயிற்று.

**பாக்கியம்.**—கருணாநிதி தண்டனை யடைந்தபின் பச்சையப்ப பிள்ளையைச் சேருமல்லவா ?

**மணிவாசகம் பிள்ளை.**—பச்சையப்பனும் அண்ணன் மகனானதால் அவனைத்தான் சேரும்.

**பாக்கியம்.**—அவ்வளவு சொத்தும் நம்முடைய ஞானவடிவைச் சேர விருந்ததை அந்தப படுபாவிகள் கெடுத்தார்கள். இப்பொழுது பச்சையப்ப பிள்ளை செலவுக்கு என்ன செய்கிறார் ?

**மணிவாசகம் பிள்ளை.**—பச்சையபபன் செலவுக்கு என்ன குறைவு ? அவனுடைய சிற்றப்பன் சொத்து முற்றிலும் அவனையே சேரப்போகிறதென்று அறிந்தவர்களெல்லாம் அவனுக்குப பெருங் கடன் கொடுக்கத் துணிந்துவிட்டார்கள். அவன் கையில் பணமேறியபின் அவனை அனேகர் தொடருகிறார்கள். எபபொழுதும் நாலைந்துபேருக்குக் குறையாமல் அவனோடிருக்கிறார்கள்.

**பாக்கியம்.**—இந்த வியாச்சியம் தீருமளவும் நில வரும்படியை வசூல் செய்யாமலா இருப்பார்கள் ?

**மணிவாசகம் பிள்ளை.**—நில வரும்படியை வசூல் செய்யத் துரைத்தனத்தார் ஒரு மனுஷனை நியமித்திருக்கிறார்களாயினும், பச்சையப்பனையும் அவனுக்கு உதவியாக இருக்கும்படி கேட்டுக்கொண்டார்கள். ஆனால் அதில் பச்சையப்பன் சாப்பாட்டுக்கு வேண்டியதை மட்டும் எடுத்துக்கொள்ளலாமென்று சொல்லிக்கொண்டார்கள்.

**பாக்கியம்.**—மணி எட்டாகிறது. எபபொழுதும் ஆறு மணிக்கெல்லாம் ஞானவடிவு படுக்கையிலிருந்து எழுந்துவிடுகிறவள் இன்று இன்னம் படுக்கையிலிருந்து எழுந்துவரவில்லை.

**மணிவாசகம் பிள்ளை.**—ஞானவடிவின் மனம் அதிகம் கவலை

யடைந்திருக்கிறது. நீ எழுப்பவேண்டாம். ஞானவடிவு எழுந்து வரும்பொழுது வரட்டும்.

இருவரும் காலைக்கடனை முடித்துக்கொண்ட பின் பாக்கியம் தன் மகள் படுக்கும் அறையை எட்டிப் பார்த்து அவளில்லாமையைக் கண்டு ஞானவடிவு எழுந்து பின்கட்டுக்குப் போயிருப்பாளென்று அங்கேபோய்ப் பார்த்து அங்கும் இல்லாமையைக் கண்டு, கூப்பிட்டுப்பார்த்தும் பதில் கிடைக்காமற் போனதால், "ஐயோ ஞானவடிவைக் காணோம் என்று கதறினாள்."

**மணிவாசகம் பிள்ளை.**—என்ன சொன்னாய்? ஞானவடிவைக் காணோமா? ஐயோ! மகளே! நான் இனி என்ன செய்வேன்! உன்னை விவாகம் செய்துகொள்ள இருந்தவரைக் கொன்றுவிட்டதால் நீ உயிரோடிருக்க மனங்கொள்ளாமல் கிணற்றில் விழுந்திறந்தாயோ?

இங்ஙனம் புலம்பிக்கொண்டு, இருவரும் ஓடிப்போய் கிணற்றை எட்டிப் பார்த்து "ஐயோ! குமிழிகள் வருகிறதே! மகள் உயிரை விடுகிறாள் போலிருக்கிறதே!" என்று பாக்கியம் சொன்னதைக் கேட்டு, மணிவாசகம் பிள்ளை தெருவிற்கோடிச் சிலரை அழைத்துவந்து கிணற்றிலிறங்கிப் பார்க்கும்படி செய்தார். கிணற்றி லொன்றுமில்லை யென்று அவர்களால் அறிந்து மீண்டும் படுக்கை அறையை மணிவாசகம் பிள்ளை பார்த்தார். அங்கு தலையணைமேல் ஒரு கடிதமிருக்க, அதை எடுத்து, அது தன்பேருக்கு மேல்விலாஸம் இட்டிருப்பதைக் கண்டு, அதைப் பிரித்து வாசித்தார். அதில் அடியிற் கண்டவித மிருந்தது.

பிரியமான தந்தையே! தாயே!

நீங்கள் என்னைப் பெற்று, நான் மனமகிழ என் விருப்பத்திற்கிணங்கி எனக்கு வேண்டியவைகளை மனங்கோணாமல் கொடுத்து வளர்த்தீர்கள். நீங்கள் என்பால் காட்டிய அன்பை நினைத்து நானும் உங்கள் மனங்கோணாமல் நடந்துவந்தேன். நீங்கள் உங்கள் சுய நன்மையைக் கருதி, நான் சிறுவயது முதல் நேசித்திருந்தவருக்கு என்னைக் கொடுக்காமல் பாழுங் கிணற்றில்

கொண்டுபோய் என்னைத் தள்ளுவதுபோல் பாட்டனுக்கு அப்பனைப்போ லிருக்கும் லாலாபேட்டைக் கிழமாப்பிள்ளைக்குக் கொடுக்கத் துணிந்தீர்கள். என் தேகம் உங்களுடையதாகையால் அதை உங்களுடைய சௌகரியத்தைக் கருதி நல்ல விலைக்கு யாருக்காகிலும் விற்றுக்கொள்ளட்டு மென்றிருந்தேன். நான் தாய்தந்தை வார்த்தைக்கு அடங்கியவளென்றிருந்ததால், நீங்கள் சொல்லும் விதம் நடப்பேன் என்றெண்ணி என் தந்தை தம்முடைய இளமையில் தாசிகளுக்குத் தோற்ற பொருளை, என்னை அக்கிழவனுக்கு விற்று மீட்டுக் கொள்ளத் துணிநதார். நான் தாய்தந்தை வார்த்தைக்கு அடங்காதவளாயிருந்து, அக்கிழவனைக் கட்டிக்கொள்ளமாட்டேனென்று சொல்லி யிருப்பேனேயாகில், என் மனதைக கொள்ளைகொண்டிருக்கும் என் அத்தான் இக்கொடுந் தொழிலைச் செய்திரார். அவருக் கென்னைக் கொடுபபதில்லை என்று நீங்கள் சொன்னதால் என்னையன்றி வேறொரு பெண்ணை அவர் மணம் முடித்திருக்கலாம். என்னையின்றி தன்னுயிரைத் திரணமாக மதித்துக் கொடுத்துவிட்டார். தன்னுயிரைவிட மேலாக என்னை மதித்திருந்தவருக்கு என்னைககொடுக்க மனந்துணியாமல் என்னை விடப பொருளையே மேலாக மதித்திருநதீர்கள். பிரிய தந்தை தாய்மார்களே! அங்கிலேயரைபபோல் பெண்ணும் பிள்ளையும் ஒருவரையொருவர் இச்சித்தபின் விவாகம் செய்துகொள்கிற வழககத்தில் கெடுதலாகச் சிலது முடிகிறதென்றும், ஆனதால் அவ்வழககம் உயாவல்லவென்றும், தாய்தந்தையே தங்களுடைய பிள்ளைகளின் நன்மையைக் கருதிப பெண்ணையோ பிள்ளையையோ தேடவேண்டும் என்று சொல்வதால், நீங்கள் என் விஷயத்தில் என்ன செய்யத் துணிந்தீர்கள்? உங்களுக்குப பணம் அகப்பட்டால் போதும்! உங்களுடைய பெண்ணாகிய நான் எக்கதியானாலும் உங்களுக்கவசியமில்லை யென்று நினைத்துச் செய்தீர்கள். நீங்கள் செய்தது உங்களுக்கு நியாயமாகக் காணப்படுகிறதா? லாலாபேட்டைக் கிழவனார் சில நிமிஷம் வாதைபட்டு இறக்

கும்படி என் அத்தான் செய்தார். என் ஆயுள் காலமெல்லாம் நான் துன்பப்படும்படி நீங்கள் செய்தீர்கள். உங்களிருவரில் யார் செய்தது பெருங் குற்றம். யோசித்துப் பார்த்தால் நீங்கள் செய்ததே பெருங் குற்றமென்று எனக்குக் காணப்படுகிறது. நீங்கள் செய்த குற்றம் போதாதென்று லாலாபேட்டைக் கிழவனுரைக் கொல்லத் தூண்டியவர்கள் நீங்களே என்று சொல்லவேண்டும். நீங்கள் செய்த தீச்செய்கையை நினைத்தால் என் மனம் பதறுகிறது. உங்களைபபோல் வேறொரு தாய்தந்தை செய்வார்களாயின் என்னைப்போல் பெண்கள் மௌனமா யிராமல் தங்கள் கருத்தைத் தாய்தந்தைக்குச் சொல்லிவிடுதல் உத்தமமென்று பறைசாற்றுவேன். இன்னம் இதைக்குறித்துச் சொன்னால் உங்களுக்குக் கோபம் அதிகம் வருமென்று இவ்வளவோடு நிறுத்தினேன். நான் முக்கியமாகச் சொல்லவேண்டிய தொன்றுண்டு. அது யாதெனில், நான் என் அறியாப் பிராயத்திலிருந்து இச்சித்திருந்த என் அத்தான் இறக்கபபோகிறதால் நானும் அவரோடு இறப்பேன். என் அத்தான் இறந்தபின் நான் வேறொருவரை விவாகம் செய்துகொள்வேன் என்று நீங்கள் நினைத்து என்னைத் தேடவேண்டாம். நான் உங்கள் கண்ணெதிரில் அகப்படமாட்டேன். சில வேளை என்னைக் கண்டுபிடித்துக் கொண்டுபோவீர்களானால் என் உயிரை விட்டுவிடுவேன். என்னைப் பெற்று வளர்த்தவராதலால் உங்களிருவருக்கும் நமஸ்காரம் செய்கிறேன்.

வைகாசிமீ 5உ இப்படிக்கு,

ஞானவடிவு.

இதை வாசிக்கும்பொழுது, மணிவாசகம் பிள்ளை கண்களில் நீரை வடியவிட்டுத் தன் மனைவிக்கும் வாசித்துக் காண்பித்து, "நாம் என்ன செய்கிறதென்பது விளங்கவில்லை" என்றார்.

**பாக்கியம்.**—ஞானவடிவு எழுதியிருப்பது முற்றிலும் நியாயமே! அந்தச் சண்டாளன் மெய்யறியான் ஞானவடிவைக் குறித்துப் பேசியபொழுது முதலில் நான் லாலாபேட்டையாருக்குக்

கொடுக்கச் சம்மதமில்லை என்றேன். பின் உங்கள் வார்த்தை யைக் கேட்டு மோசம் போனேன்.

**மணிவாசகம் பிள்ளை.**—பாக்கியம்! நீ எல்லாப் பழிபாவத்தை யும் என்மேல் ஏற்றுகிறாய். நம்முடைய கால நிலைமையைக் கவனித்து லாலாபேட்டையாருக்குக் கொடுத்தால் உத்தம மென்றேன். நீயும் சம்மதித்து அவ்விதமே செய்யவேண்டு மென்றாய். ஞானவடிவுக்குச் சம்மதமிருக்குமோ என்று உன்னைக் கேட்டதற்கு அவள் சம்மதப்படும்படி செய்ய உன்னால் முடியுமென்றாய்.

**பாக்கியம்.**—ஆம், நான் ஞானவடிவிடத்தில் நம்முடைய கருத் தைச் சொன்னபொழுது அவள் அருவருப்பைக் காட்டாம லிருந்ததால், அவள் சம்மதப்பட்டிருக்கிறா ளென்றே நினைத் தேன். ஐயோ! அவளுடைய எண்ணம் வேறு விதமாக இருந்ததை நான் பாவி அறியாமற் போனேனே! மகள் தனித்து எங்கு போனாளோ! எங்கு போய்க் கவலையோடு நிற்கிறாளோ! சாபபாட்டுக்கு என்ன செய்வாளோ!

**மணிவாசகம் பிள்ளை.**—பாக்கியம்! நீ கவலைப்படவேண்டாம்! அவள் போட்டிருந்த நகைகளோடு போயிருபபதால் ஒன் றிரண்டை விற்றுத் தனக்கு வேண்டியதைச் செலவு செய்து கொள்ளுவாள்.

**பாக்கியம்.**—நேற்று நகைப்பெட்டியின் சாவியைக் கேட்டாள். என்னென்ன நகையை எடுத்துக்கொண்டு போயிருக்கிறாள் பாரக்கலாம் (என்று நீங்கினாள்).

மணிவாசகம் பிள்ளையும் பாக்கியத்தோடு சென்றார். பாக்கி யம் ஞானவடிவின் படுக்கை யறைக்குள் சென்று தலையணையின் கீழிருந்த சாவியைக்கொண்டு நகைப்பெட்டியைத் திறந்துபார்த்து, "ஐயோ! அவள் மூக்குத்திருகாணி முதற்கொண்டு எல்லா நகைகளையும் கழற்றிவைத்துப போயிருககிறாள்" என்று சொல்லி, சேலைகளைப் போய்ப பார்த்து, "அவள் நேற்றுக் கட்டியிருந்த சேலையுமிருக்கிறது. பழைய வெள்ளைப புடவையையே கட்டிக்-

கொண்டு போயிருக்கிறாள். இந்தக் கொடுமைக்கு என்ன செய்கிறது" என்று அழுதாள்.

**மணிவாசகம் பிள்ளை.**—பாக்கியம்! நீ அழவேண்டாம்! நான் போய் ஞானவடிவுக்குச் சமாதானம் சொல்லி அழைத்து வருகிறேன் (என்று சொல்லும்பொழுது ஒரு பெண் பிள்ளை வீட்டுக்குள் வருவதைக் கண்டு) ஆ! சிவஞானம்! நீயா?

**பாக்கியம்.**—சிவஞானம்! ஞானவடிவு என்னை மோசம் செய்து போய்விட்டாள் (என்றழுதாள்).

**சிவஞானம்.**—என்ன சொன்னீர்கள்? ஞானவடிவு இறந்து விட்டாளா?

**மணிவாசகம் பிள்ளை.**—அவள் இறக்கவில்லை. இந்தக் கடிதத்தை எழுதி, தான் போட்டிருந்த நகைகளையுங் கழற்றி வைத்துவிட்டு, எங்கேயோ போய்விட்டாள். இதை வாசித்துப் பார்.

சிவஞானம் கடிதத்தை வாசித்துப் பார்த்துப பெருமூச் செறிந்து எபபொழுது ஞானவடிவு போனளென்று கேட்டாள்.

**பாக்கியம்.**—அதைச் சொல்ல முடியாது. அவள் காலை ஆறு மணிக்கெல்லாம் எழுந்திருக்கும் வழக்கமுடையவள். இன்று அவள் வழக்கம்போல் எழுந்து வரவில்லை. சிலவேளை விசனத்தோடு படுத்திருக்கிறாளென்று அவள் படுக்கை யறையைப்போய்ப பார்க்காமலிருந்தேன்.

**சிவஞானம்.**—சிற்றபபா! தாங்களும் அம்மாளும் என்னைக் கோபித்தாலும் தோஷமில்லை. தாங்கள் லாலாபேட்டை மாமாவுக்கு ஞானவடிவைக் கொடுக்கிறோமென்றிருந்தது கொடுமையினுங் கொடுமை.

**மணிவாசகம் பிள்ளை.**—நாங்கள் தவறுதலாகச் செய்கிறோம் என்பதை நீ அறிந்தும், ஞானவடிவோடு வார்த்தையாடி அவள் கருத்தை அறிந்திருந்தும் எங்களிடத்தில் ஒன்றும்

சொல்லாம. விருந்தைக் குறித்து நாங்கள் உன்னைக் கோபித்துக் கொள்ளவேண்டும்.

**சிவஞானம்.**—நான் ஞானவடிவைக் கண்டு வார்த்தையாடிய பொழுது, தன் உட்கருத்தைச் சொல்லாமல், தான் தாய் தந்தை சொல்லுக்கு அடங்கியவளென்றும் தன் வினைப் பிரகாரம் நடக்குமென்றும் சொல்லிவிட்டாள். என்னையும் என் நாயகனையும் லாலாபேட்டையார், "பெண் வீட்டார் பெண் கொடுக்கச் சம்மதித்திருக்கிறார்கள். நீங்கள் சென்று நிச்சயதாம்பூலத்துக்கு நாள் பார்த்தும் நிச்சயதாம்பூலத்தை முடித்துக்கொண்டும் வரவேண்டும்" என்று எங்களை அனுப்பி யிருக்க, நாங்கள் இங்கு வந்தபின் என்ன செய்யவேண்டும்? லாலாபேட்டையாருக்கு பெண் கொடுக்கிறேன் என்று. நீங்கள் வாக்களித்தபின் அவருக்கு நீங்கள் பெண் கொடுக்க வேண்டாமென்று சொல்வதோ நியாயம்? பெண்ணின் மனதை யறிந்து செய்யவேண்டியது பெண்ணை பெற்றவர்கள் கடமையா யிருக்க, அதைவிட்டு வேறொருவர் மேல் குற்ற மேற்றுவது நியாயமல்ல.

**பாக்கியம்.**—நாம் ஞானவடிவு விஷயத்தில் என்ன செய்கிறதென்று தெரியவில்லையே (என்றழுதாள்).

**சிவஞானம்.**—ஞானவடிவைக் கண்டுபிடித்துக் கொண்டுவர வேண்டியதே!

**பாக்கியம்.**—ஞானவடிவு எழுதிவைத்திருக்கும் கடிதத்தைப் பார்த்தாயே! அவளைக் கண்டுபிடித்துக் கட்டாயப்படுத்தி அழைத்துவந்தால், அவள் ஏதாகிலும் செய்துகொண்டால் என்ன செய்கிறது?

**மணிவாசகம் பிள்ளை.**—ஞானவடிவுக்குத் தைரியம் சொல்லி அவளுடைய எண்ணத்தை மாற்றி நல்ல மாப்பிள்ளையைத் தேடி மணமுடித்து வைக்கவேண்டியதே!

**சிவஞானம்.**—ஆம்! ஆம்! அதுதான் நல்ல யோசனை.

**மணிவாசகம் பிள்ளை.**—அம்மா! சிவஞானம்! உன்னைக் கண்ட

வுடன் உன் சமாசாரத்தை விசாரிக்காமல் எங்கள் வயிற்றெரிச்சலைச் சொல்லிக்கொண்டோம். நீ எப்பொழுது வந்தாய்? கருணாநிதி, நீலமேகம் இவர்களுடைய சாமாசாரமென்ன?

**சிவஞானம்.**—அவர்களுடைய சமாசாரம் ஒன்றுந்தெரியவில்லை. சிலவேளை அத்தான் நீலமேகம் பிள்ளை அத்தைக்கு ஏதாகிலும் எழுதியிருக்கக்கூடுமென்று நேரில் கேட்டுப் போகலாமென்று இன்றே வந்தேன்.

**பாக்கியம்.**—உன் அத்தையைக் கண்டு பேசினாயா?

**சிவஞானம்.**—இன்னும் அங்கே போகவில்லை. என் தங்கை ஞானவடிவைப் பார்த்துப் போகலாமென்று இங்கு வந்தேன். வந்த இடத்திலும் வயிற்றில் நெருப்பு விழுந்தது (என்றழுதாள்).

**மணிவாசகம் பிள்ளை.**—வருகிற துன்பமெல்லாம் வரவேண்டியதே! நாம் அவைகளை அனுபவிக்கவேண்டியதே!

**பாக்கியம்.**—அம்மா! சிவஞானம்! எழுந்திரு! நீ காலையிலிருந்து ஒன்றும் சாப்பிடவில்லைபோல் காண்கிறது (என்று தன் நாயகனையும் சிவஞானத்தையும் பின்கட்டுக்கு அழைத்துச் சென்றாள்).

---

## 8—ம் அத்தியாயம்

கோயம்புத்தூரில் சுவுடம்மன் கோவிலுக் கருகிலுள்ள ஒப்பணைக்காரத் தெருவில் ஓர் மச்சுவீட்டில் இருபத்தைந்து வயதென மதிக்கத்தகுந்த ஓர் பெண்பிள்ளை நான்கு மாதம் வயதுள்ளவோர் பெண் குழந்தையை ஏணையிற் றூங்கவைத்து, மூன்று வயதுள்ள ஓர் பெண் குழந்தையையும், ஒன்றரை வருடத்து ஆண் குழந்தையையும் அருகில் வைத்துக்கொண்டு உட்கார்ந்திருப்பதை அவ்வீட்டிலிருக்கும் மற்றோர் பெண்பிள்ளை பார்த்து, "அம்மா! ராஜாம்பா! நீ எந்நேரமும் குழந்தைகளை வைத்துக்கொண்டு

உட்கார்ந்திருந்தால் வீட்டுவேலை எவ்விதம் முடியும்?" என்று கேட்டாள்.

**ராஜாம்பாள்.**—அபூர்வம் அக்காள்! பவழக்கொடியைப் பையனோடு விட்டுப்போகப் பயமாக இருக்கிறது. நேற்று நான் கொஞ்சநேரம் விட்டுப்போன தோஷம் பவழக்கொடி சுண்ணாம்பைத் தின்றுவிட்டாள். பையன் பாக்கு வெட்டியால் கையைக் காயப்படுத்திக்கொண்டான். அவர் குழந்தைகளைக் கவனிக்காமல் விட்டுவிட்டீர்களென்று கோபித்துக்கொள்கிறார்.

**அபூர்வம்.**—ஆனதால் நீ குழந்தைகளோடு உட்கார்ந்திருக்க வேண்டும்! நான் வீட்டு வேலைகளையெல்லாம் செய்ய வேண்டும் அல்லவா? நான் லாலாபேட்டைக்குப் போயிருந்தபொழுது குழந்தைகளை வைத்துக்கொண்டு வீட்டுவேலைகளை எவ்விதம் செய்தாய்? நான் வந்தபின் அங்கிருக்கும் துரும்பை இங்கெடுத்துப் போடமாட்டேன் என்கிறாயே!

**ராஜாம்பாள்.**—நான் ஒன்றும் செய்யாமல் எல்லாம் நீயா செய்துவிடுகிறாய்?

**அபூர்வம்.**—இன்று நான் காலையிலெழுந்து, தெருவில் சாணம் தெளித்துக்கோலமிட்டு, வீடெல்லாம்பெருக்கி, கிணற்றில் தண்ணீர் இறைத்து அண்டாக்களில் நிறைத்து, பாத்திரங்களைத் துலக்கிச் சட்டிப்பானைகளைக் கழுவி, அவருக்குப் பழையது போட்டு, அடுப்புப் பற்ற வைத்து, உலைவார்த்து வைத்து, மிளகாயறைத்து, அரிசி அரித்துப்போட்டு வந்தேன். நீ காலையிலிருந்து என்ன வேலை செய்தாய்? காலையிலெழுந்து உன்னுடைய புருஷனோடு கொஞ்சிக் குலாவிக்கொண்டிருந்தாய். அவர் போனபின் பிள்ளைக்கு விளையாட்டுக் காட்டிக்கொண் டிருக்கிறாய். நான் உங்கள் வீட்டுப் புழுக்கை ஆனதால் வீட்டு வேலைகளையெல்லாம் செய்து சமையலும் செய்துவைத்தால், நீயும் உன் புருஷனும் நோகாமல் வந்து உட்கார்ந்து சாப்பிடுவீர்கள்.

ராஜாம்பாள்.—என்னடியம்மா! நீ கவலைப்படுகிறாய். நான் பிள்ளைகளைப்பெற்றுக் கிழவியாய்ப் போனேன். நீ மணலில் பிடுங்கிய வள்ளிக்கிழங்குபோ லிருக்கிறாய். நீயே அவரோடு கொஞ்சிக் குலாவிக் கொண்டிரு. நான் புழுக்கைபோல் வீட்டுவேலை செய்கிறேன்.

அபூர்வம்.—அடி! நானா வள்ளிக்கிழங்குபோ லிருக்கிறேன். நீ மூன்று பிள்ளைகளைப் பெற்றும் உன் தேகம் வணங்கிற்று வாடிற்று! நீ இன்னம் எத்தனைக் குட்டிகளைப் போட்டாலும் உன் தேகம் வாடாமல் சிதம்பரத்தில் முக்குருணிப் பிள்ளையாருக்குச் சுடும் கொழுக்கட்டைபோலிருப்பாய். அல்லாமலும் உன் புருஷன் உன்னோடு கொஞ்சிக்குலாவுவதால் நீ சந்தோஷத்தில் பூரித்து மூன்று வேளையும் மூக்குப்பிடிக்கத் தின்று பொம்மென்று கொழுத்திருக்கிறாய்.

ராஜாம்பாள்.—அடி! உன் கண்ணில் மண்ணைப் போட! நீ உன் தாய்வீட்டிலிருந்து கொண்டுவந்து குவித்துவைத்திருப்பதைத் தின்றோ கொழுத்துப்போனேன். அடி! பாவி! நீ மலட்டுச்சைத் போட்டுக் கொழுத்திருக்கிறாய்! உன் மாப்பிள்ளை வரட்டும், உன் கர்வத்தை அடக்கச சொல்லுகிறேன்.

அபூர்வம்.—ஆமடி! எனக்கு மலட்டுசசதையே விழுந்திருக்கிறது. உன்னுடைய மாப்பிள்ளையைக் கொண்டா என்னுடைய கர்வத்தை அடக்கப் போகிறாய்! நல்லது பார்க்கலாம்! உன் மாப்பிள்ளை வந்தால் இந்தத்துடைப்பத்தைக் கொண்டு அடிக்கச் செய்கிறேன் (என்று துடைப்பத்தை எடுத்துக் காட்டினாள்).

ராஜாம்பாள்.—என்னையா துடைப்பத்தால் அடிக்கச் சொல்லப்போகிறாய்? உன் மாப்பிள்ளை வந்து என்னை அடிக்குமுன் நானே உன்னை அந்தத் துடைப்பத்தால் அடிக்கிறேன் பார் (என்று எழுந்துபோய் அபூர்வத்தின் கையிலிருந்த துடைப்பத்தைப் பிடுங்கிக்கொண்டு நாலைந்தடி தலையி லடித்தாள்).

அபூர்வம்.—அடி! நீ கழிச்சலில்போக! என்னையாடி நீ

துடைப்பத்தா லடித்தாய் என்றேடி, தெருக்கூட்டும் தென்னல் விளக்குமாறை எடுத்துவந்து ராஜாம்பாள் தலை மயிரைப்பிடித் திழுத்துப்போட்டு கைசலிக்க அடித்தாள்.

ராஜாம்பாள்.—குடிசட்டு! உன்னைக் காளியாயி வாரிக் கொண்டு போகாளா! உன்னைத் துள்ளத்துள்ளத் தூக் கிக்கொண்டு போகார்களா! உன் வயிற்றில் மண் வெட்டிவைத்துக் கட்டார்களா! உன் பாடை முறிந்து பறையன் தூக்கிக்கொண்டு போகானே!

அபூர்வம்.—உனக்கே வாந்திபேதி வந்து உன்னை வாரிக் கொண்டு போகப்போகிறது: உன் குட்டிகள் மூன்றும் கோவென்றலற உன்னைக் கொண்டுபோகப் போகிறார் கள்.

இவ்விதம் சொல்லிக்கொண்டு ராஜாம்பாளுடைய தலை மயிரைப் பிடித்துக்கொண்டாள்: ராஜாம்பாள் அபூர்வத்தின் தலைமயிரைப் பிடித்துக்கொண்டாள். அப்புறம் ஒருவரை ஒருவர் உதைத்தும் அடித்தும் வசைச் சொல்லால் திட்டிக் கொண்டிருக்கும்பொழுது, நாற்பது அல்லது நாலைந்து அதிகமென்று மதிக்கத்தகுந்த ஒருவன் வீட்டுக்குள் வந்து, "இதென்ன வேடிக்கை" என்று இருவரையும் அடித்து விலக்கிவிட்டு, "இரண்டு பெண்டாட்டியைக் கொண்ட தின் பெருமை இவ்வளவுதானே? இன்னும் அதிகம் இருக் கிறதோ?" என்று, அழுகிற குழந்தைகளைச் சமாதானப் படுத்தி, "உங்களுக்குள் சண்டை வந்ததின் காரணம் என்ன?" என்று கேட்டான்.

ராஜாம்பாள்.—உன் ஆசைநாயகியைக் கேள். அந்த மூதேவி சொல்லட்டும்.

அபூர்வம்.—ஆமடி! நான் மூத்தவளாதலால் மூதேவி தாண்டி! நீ இளையவளாதலால் நீ லக்ஷ்மியோ! லக்ஷ்மியைப் போலிருக்கும் முகத்தைப் பாருங்கள்! நாயே! உன் னைக்கொடுப்பேனே!

ராஜாம்பாள்.—ஏ! மலட்டுக் கழுதை! நான் லக்ஷ்மி தாண்டி! உன் ஆசை மாப்பிள்ளை மெச்சிக்கொள்ளவா

தாண்டவம் போடுகிறாய்? முன் உதைத்தஉதை கொஞ்சம். இனிமேல் உதைக்கிற உதை அதிகமென்று நினைத்துக்கொள்.

**அபூர்வம்.**—தென்னல் விளக்குமாறு முன் ஓடியாமற்போனாலும் இந்தத்தடவை உன் தலையில் ஒடியப்போகிறது பார்.

**நாயகன்.**—அடி! கழுதைகளே! என்முன் இவ்விதம் பேசிக்கொள்ளுகிறவர்கள் நானில்லாத காலத்தில் என்னென்ன பேசிக்கொண்டிருப்பீர்கள். இரண்டு பெண்டாட்டியைக் கொண்ட தண்டபாணிபிள்ளையின் திண்டாட்டம் யாவரும் அறியவா நீங்கள் சண்டைபோட்டுக் கொள்ளுகிறீர்கள். அடி! அபூர்வம்! நான் காலையில் வெளியில் போகும்பொழுது ஒன்றுமில்லையே! நான் போனபின் வந்த கேடென்ன?

**அபூர்வம்.**—நீ கொஞ்சிக்குலாவும் கோவேறு கழுதையையே போய்க் கேள். சோறாக்கினாலென்ன! ஆக்காமற் போனாலென்ன! எனக்கேன் இந்த வில்லங்கம்! என்று சொல்லிக்கொண்டே போய் ஓரறையில் பாயைப் போட்டுப் படுத்துக்கொண்டாள்.

**ராஜாம்பாள்.**—இந்தக் கழுதைகளுக்கு ஆக்கிப்போட்டுக் கொண்டிருக்கவா போகிறேன். பார்க்கலாம் (என்று தன் பிள்ளைகளை இழுத்துக்கொண்டுபோய் மற்றோர் அறையில் படுத்துக்கொண்டாள்).

தண்டபாணிபிள்ளை சமையலறையில் சாதம் வெந்து அவிந்து போகிறதைக் கண்டு, "அடி! கழுதைகளே! அடுப்பைப் போய்ப் பாருங்கடி! சாதம் வெந்து கூழாப்போகிறது" என்று கதறினான். இருவரில் ஒருத்தியும் எழுந்து வாராமையைக் கண்டு மூத்தவள் படுத்திருக்கும் அறைக்குள் போய், "அபூர்வம்! எழுந்துபோய்ச் சாதத்தைப் பார்" என்றான்.

**அபூர்வம்.**—அவள் என்னை அடித்த அடியால் என் தேகமெல்லாம் நோகிறது, என்னைத் தொந்தரை செய்ய வேண்டாம். என்னால் எழுந்திருக்க முடியாது.

தண்டபாணி பிள்ளை தன் இளையமனைவி அருகிற் சென்று "ராஜம் ! எழுந்து அடுப்பைப் போய்ப் பார். எனக்குப் பசி அதிகமாக விருக்கிறது" என்றான்.

ராஜாம்பாள்.—அப்பட்டபாவி என்னைத் தென்னல் விளக்கு மாற்றால் அடித்ததோடு என் தலைமயிரைப் பற்றி இழுத்துப்போட்டு அடிவயிற்றிலும் உதைத்துவிட்டாள். என் அடிவயிறு அதிகம் நோகிறது, என்னால் எழுந்திருக்க முடியாது.

தண்டபாணி பிள்ளை மீண்டும் தன் மூத்த மனைவியிடம் சென்று "அபூர்வம்! உன்னை எழுந்து அடுப்பு வேலையைப்பார் என்றால் நீ எழுந்திருக்காம லிருக்கிறாய்! நல்ல உடம்பை வீணாகக் கெடுத்துக்கொள்ளவேண்டாம். பேசாம லெழுந்து சமையல் வேலையைப் பார். நீ உன் வல்லமையை எல்லாங்காட்டி ராஜத்தை அடித்ததோடு அவள் அடிவயிற்றிலும் உதைத்துவிட்டதால் அவள் எழுந்திருக்க முடியாம லிருக்கிறாள். எனக்குக் கோபம் வரும்படி செய்யவேண்டாம்."

அபூர்வம்.—அடா ! படுபாவி ! அவள் என்னை அடிக்கும் பொழுது பார்த்துகொண்டு வந்தாயே ! உன் கண் அவிந்தாபோயிற்று. அவள் காலில் எப்பொழுதும் நீ விழுந்து கிடக்கிறவனாதலால் அவளுக்காகப் பரிந்து பேசவந்தாய். உன் கோபத்தை உன் ஆசை மனைவியிடத்தில் கொண்டுபோய்க் காட்டு; என்னிடத்தில் காட்டினால் வீணாக அவமானப்பட்டு போவாய்; போ ! போ !

தண்டபாணி பிள்ளைக்குக் கோபம் அதிகரித்து, "அடி! கழுதை ! என்ன சொன்னாய் ? நானா அவமானப்பட்டுப் போகப்போகிறேன்" என்று தன் கைப்பிரம்பை எடுத்து வந்து இரண்டடி அடித்தான்.

அபூர்வம்.—ஐயோ ! பாவி ! என்னைக் கொன்றாயா! உன்னை வாரிக்கொண்டு போகமாட்டார்களா ! என்னை யடித்த கையை ஒடித்து நெருப்பில் வைக்கமாட்டார்களா! இன்னும் அடியடா ! பழிபோட்டு விடுகிறேன். ஐயோ! என்

னைக் கொல்லுகிறான்! கொல்லுகிறான்! (என்று பெருஞ் சத்தம் போட்டாள்).

அவள் போடுகிற சத்தத்தோடு அவளைவிட்டு இளையவளிடம் சென்று, "அடி! ராஜம்! நீ எழுந்திருக்கிறாயா இல்லையா? அவளுக்குக் கொடுத்தது உனக்கும் வேண்டுமா" என்றான்.

ராஜாம்பாள்.—அவள் அடித்தது போதாதென்று நீயுமா அடிக்கவந்தாய்? நீ மானம் ஈனம் கெட்டுப்போக வேண்டுமானால் என்னை அடியடா.

தண்டபாணி பிள்ளை.—அடி! நானு மானம் ஈனம் கெட்டுப் போகிறவன் (என்று அவளையும் அடித்தான்).

ராஜாம்பாள்.—அடே! நீ நாசமாய்ப்போக! உன்னைக் கழிச்சலில் வாரிக்கொண்டுபோக! உன் கையைக் கட்டையில் வைக்க! சண்டாளன் என்னைக் கொல்லுகிறான்! கொல்லுகிறான்! (என்று கத்தினாள்).

அபூர்வமும் ராஜாம்பாளும் குழந்தைகளும் போடும் சத்தத்தையும் அழுகுரலையும் கேட்டுத் தெருவில் போகும் ஜனங்களோடு அண்டை அயலார் வீட்டுக்குள் வருவதைக் கண்டு தெருவாயிற்கதவை மூடவந்தவன், குஞ்சிதபாதம் பிள்ளை வீட்டுக்குள் வருவதைக்கண்டு, அவரை மட்டும் வீட்டுக்குள் விட்டு, மற்றவர்களுக்குச் சமாதானம் சொல்லியனுப்பிவிட்டு வீட்டுக்குள் வந்தான்.

குஞ்சிதபாதம் பிள்ளை.—தம்பி! தண்டபாணி! என்ன கூக்குரல்?

தண்டபாணி பிள்ளை.—ஐயாவே! நான் என்ன சொல்வேன்! நான் இரண்டு பெண்டாட்டியைக் கொண்ட வைபவம் ஊரார் அறியவேண்டுமே! அதுதான் இது.

குஞ்சிதபாதம் பிள்ளை.—அப்பா! தண்டபாணி! இரண்டு பெண்டாட்டியை எளிதிற் கொள்ளலாம்! அவர்களை வைத்து நிர்வாகம் பண்ணுவது எளிதல்ல! நெருப்பு எங்கிருக்குமென்றால் இரண்டு பெண்டாட்டிக்காரன் வீட்டில் என்று சொல்வதைக் கேட்டதில்லையா? அடே! ஒரு பெண்டாட்டியை வைத்தாள்வது கடினமாயிருக்க

உன்னை இரண்டு பெண்டாட்டியைக் கட்டிக்கொள்ளக் கட்டாயப்படுத்தினவ ரார்? நீதானே தேடிக்கொண்டாய்! கழுதையைப் பெண்டாட்டியாகக் கொண்டு உதைக்குப் பயப்பட்டால் முடியாது. உதைப்பட்டே தீரவேண்டும். இரண்டு பெண்டாட்டி கொண்டவர்களில், சக்களத்தியும் சக்களத்தியும் ஒற்றுமையாய் இருப்பது நூற்றிலொன்று அல்லது ஆயிரத்திலொன்று என்று சொல்ல என் மனந்துணியவில்லை சிலர் மூத்தாளுக்குப் பிள்ளை இல்லையென்றும், சிலர் மூத்தாளுக்குப் பிள்ளை பிறந்து பிறந்து இறந்துபோகிறதென்றும், சிலர் மூத்தாள் எப்பொழுதும் நோயாக இருக்கிறாளென்றும் போக்குக்காட்டி, ஒருபெண்டாட்டி இருக்கும்பொழுது மற்றொருத்தியை விவாகம் செய்து கொள்ளுகிறார்கள். இரண்டு பெண்டாட்டியைக்கொண்ட சுகத்தைப்பின்னாலறிந்து உன்னைப்போல் துக்கமடைகிறார்கள். இத்துன்பத்தை அனுபவிக்கிறதைவிடப் புத்திரபாக்கியம் இல்லாமற்போனாலும் தோஷமில்லையே.

**தண்டபாணி பிள்ளை.**—தாங்கள் சொல்லியது முற்றிலும் உண்மையென்று அனுபவத்தி லறிந்திருக்கிறேன். ஐயாவே! நான் என்ன சொல்லுவேன்! நான் மூத்தவளிடத்தில் ஏதாகிலும் ஒன்றை ரகசியமாகச சொல்லும் பொழுது இளையவள் கண்டால் "சீ! நாயே! உனக்கு வெட்கமில்லையா" என்று வீட்டிலிருக்கும் நாயைக் குறிப்பிட்டுபேசுவாள். நான் இளையவளோடு பேசுவதை மூத்தாள் கண்டால் அவளும் காறி உமிழ்ந்து பூனையையாவது நாயையாவது துரத்துவாள். என்ன செய்கிறது? என் மனைவிகள் இருவரும் சண்டைபோட்டுக் கொண்டு அடுப்பிலிருக்கும் சாதத்தை முதலாய்க் கவனிக்காமல் படுத்துக்கொண்டிருப்பதால் நான் இன்று உபவாஸமாய் இருக்கவேண்டியதாயிற்று (என்று சொல்லிக்கொண்டிருக்கும்பொழுது, கதவு தட்டுகிற சத்தங் கேட்டுத் தண்டபாணி பிள்ளை சென்று கதவைத்

திறந்து), வருக மைத்துனரே! வருக மாணிக்கவல்லி! (என்று முகமன்கூறி வீட்டுக்குள் அழைத்துவந்து, குஞ்சிதபாதம் பிள்ளையைப்பார்த்து) ஐயாவே! இவர் என் இளையமனைவியோடு பிறந்த முனியாண்டி பிள்ளை! இந்த அம்மாள் இவருடைய மனைவி (என்று சொல்லிய பின் மாணிக்கவல்லியையும் முனியாண்டி பிள்ளையை யும் வீட்டுக்குள் அனுப்பினார்),

ராஜாம்பாள்.—ஆ! மாணிக்கவல்லியா! அங்கு நிற்பது அண் ணனு? (என்றெழுந்து, எனக்குத் தலைவலியாயிருந் தது). அதனால் படுத்திருந்தேன் (என்று சொல்லிக் கொண்டே பாயொன்றெடுத்துப் போட்டுத் தன் தமை யனை உட்கார வேண்டினாள்).

முனியாண்டி பிள்ளை தன் தங்கையின் குழந்தைகளுக் காகத் தான் கொண்டுவந்த தின்பண்டங்களை அவர்களுக்குக் கொடுத்துத் தூக்கி முத்தங்கொடுத்தான். ராஜாம்பாள் மாணிக்கவல்லியை அழைத்துக்கொண்டு சமையலறைக்குள் சென்று குழைந்துபோயிருக்கும் சாதத்தை எடுத்துக் கொட்டிவிட்டு, வேறுசமையல் செய்ய ஆரம்பித்தாள். முனி யாண்டி பிள்ளை அபூர்வம் படுத்திருக்கும் அறையிற்சென்று, "அக்காள்! என் படுத்துக்கொண்டிருக்கிறீர்கள்? தேகத் துக்கு என்ன?" என்று கேட்டான்.

அபூர்வம்.—வருக தம்பி! எப்பொழுது வந்தாய்? எனக்குத் தேக சௌக்கியமில்லை. (என்று க்ஷேமலாபத்தை விசா ரித்துக்கொண் டிருக்கும்பொழுது, வேறொரு பெண் பிள்ளை வருவதைக்கண்டு), ஆ! சிவஞானம்! நீயா! எப் பொழுது வந்தாய்?

அபூர்வத்தோடு பேசியிருந்த முனியாண்டி பிள்ளை, சிவஞானத்தைக் கவனித்துப் பார்த்து, தண்டபாணியிடம் சென்று சிலநேரம் பேசியிருந்து, கடைத்தெருவுக்குச்சென்று வருவதாக வெளியிற்சென்று, ஒரு அன்னியனோடு பேசி யிருந்து வந்தான்.

சிவஞானம்.—அம்மா! அபூர்வம்! நான் நேற்று வந்தேன். நீங்கள் ஏன் படுத்துக்கொண்டிருக்கிறீர்கள்?

அபூர்வம்.—நான் என்னென்றுசொல்லுவேன்! அதை அவகாசத்தில் சொல்லுகிறேன். உன் சமாசாரத்தை முதலில் கேட்கவேண்டும். நான் லாலாபேட்டையாரைக் குறித்துக் கேள்விப்பட்டது உண்மையா?

சிவஞானம்.—அவரை என்நாயகனும் என் அத்தான் நீலமேகமும் கொன்றார்களென்று யாவரும் சொல்லிக்கொள்ள நான் அதை மறைப்பதில் பலனில்லை. நான் என்ன செய்வேன். என் தலைவிதி அவ்விதமிருந்தது.

அபூர்வம்.—நீலமேகத்தையும் உன் புருஷனையும் பிடித்துக்கொண்டார்களென்றும் பின் அவர்கள் ஓடிவிட்டார்களென்றும் கேள்விப்பட்டதை நான் நம்பவில்லை. பின் பலர் சொல்வதைக்கேட்டு நம்பவேண்டியதாயிற்று. நீலமேகம் உனக்கெவ்விதம் அத்தானாக வேண்டும்?

சிவஞானம்.—நீலமேகத்தின் தாய் கற்பகவல்லியம்மாள் என் தந்தைக்குப் பங்காளியின் தங்கை ஆனதால் நாங்களெல்லாரும் நெருங்கிய பந்துக்களே!

அபூர்வம்.—நீ கற்பகவல்லியம்மாளைப் பார்த்தாயா?

சிவஞானம்.—நான் அங்கிருந்தே வருகிறேன். அந்த அத்தை படுந்துயரத்தைப் பார்க்க முடியவில்லை. நான் போகும் இடமெல்லாம் பெருந்துக்கமாகவே இருக்கிறது.

அபூர்வம்.—எங்கெங்கு போனாய்? யார் யார் துக்கத்தை அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள்?

சிவஞானம்.—ஞானவடிவு எங்கேயோ போய்விட்டாளென அவள் தாய் தந்தை படுந்துயரத்துக் களவில்லை. என் நாயகனுடைய பிராண சினேகர் இராமகிருஷ்ண ஐயரும் அன்னபூரணி என்ற அவர் மனைவியும் அனுபவிக்கும் பெருந்துக்கத்தைச் சொல்வது முடியாது. என்ன

செய்யலாம், யார் யார் எக்காலத்தில் எதை அனுபவிக்கவேண்டுமோ அதை அனுபவித்தே தீரவேண்டும். நான் வரும்பொழுது உங்களோடு பேசியிருந்து எழுந்து போனாரே அவர் யார்?

**அபூர்வம்.**—அவன் ராஜாம்பாளுடைய அண்ணன். அவனுக்கு வந்திருக்கும் அதிர்ஷ்டம் ஒருவருக்கும் வராது. அவனும் அவன் மனைவியும் கஞ்சிக்கே கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தார்கள். இப்பொழுது பெண்டாட்டி கழுத்தில் மோராமாலையும் இடுப்பில் விலையுயர்ந்தசேலையும் ஏறிவிட்டது அவன் காதில் கடுக்கனும் கைவிரல்கள் நிறைய மோதிரங்களும் மின்னுகின்றன.

**சிவஞானம்.**—அவர் வியாபாரம் செய்கிறவரோ? வியாபாரிகளுக்குச சடுதியில் மிக்க லாபம் கிடைப்பதுண்டு.

**அபூர்வம்.**—அவன் வியாபாரியுமல்ல மண்ணுமல்ல! அவன் யாரிடத்திலோ காரியக்காரனாக இருக்கிறானாம். அவர் இவன்மேல் விருப்பங்கொண்டு பெருந் தொகையைக் கொடுத்துக்கொண்டிருக்கிறாராம். (என்று பல விஷயங்களைச சொல்லிக்கொண்டிருந்தாள்).

சிவஞானம் நெடுநேரம் அபூர்வத்தோடு பேசியிருந்து நீங்கினாள். சிவஞானம் தனித்துப் போகும்பொழுது, ஓர் அன்னியன் பின்தொடர்ந்து வருவதைக்கண்டு, "ஐயா! நீர் யார்? என்னைப் பின்தொடர்ந்து வருகிறீர். நான் நின்றால் நீரும் நிற்கிறீர்! நான் நடந்தால் நீரும் நடக்கிறீர்" என்று கேட்டாள்.

**அன்னியன்.**—அம்மா! தங்கள் பெயர் சிவஞானமா? என்று கேட்டான்.

**சிவஞானம்.**—ஆம். என் பெயர் சிவஞானமே! என் பெயரை எவ்வித மறிந்தீர்?

**அன்னியன்.**—நான் தங்களைப் பார்த்திருக்கிறேன். நானும் லாலாபேட்டையில் இருப்பவனே! நான் தங்களிடத்

தில் இரகசியமாக ஒன்றைச சொல்லவேண்டும். ஆனதால் தங்களைப் பின்தொடர்ந்தேன்.

**சிவஞானம்.**—என்னிடத்தில் என்ன சொல்ல வேண்டும்? (என்று ஓர் ஒதுக்கிடத்தில் நின்று) இங்கு ஒருவரும் இல்லை. நீர் சொல்லவேண்டியதைச் சொல்லலாம்.

**அன்னியன்.**—அம்மா! நான் சில நாள்களுக்கு முன் சேலத்துக்குப் போயிருந்தேன். அங்கே ஒருவனைப் பார்க்க நாழிக்கல் என்கிற விடத்துக்குப் போயிருந்தேன். அங்கு இருவரைப் பார்த்தேன். அவர்கள் பெயரைச சொல்லவேண்டுமோ? (என்று நகைத்தான்).

**சிவஞானம்.**—ஆம்! அவர்களைக் குறித்து என்ன சொல்ல வேண்டும்.

**அன்னியன்.**—அவ்விருவரில் ஒருவர் என் பிராண சிநேகர். அவர் பெயர் கருணாநிதி. மற்றவரை நான் அறிந்தவனல்ல. ஆயினும் கருணாநிதியால் மற்றவர் நீலமேகம் என்றறிந்தேன். அவ்விருவருக்கும் நேரிட்டதைச் சொல்லித் துக்கப்பட்டார்கள். அவர்களை அந்நிலையில் பார்க்க என் வயிறு குமுறியது (என்று துக்கத்தோடு இரு கண்களையுந் துடைத்துக்கொண்டு பெருமூச் செறிந்து) என்ன செய்யலாம்? அவர்கள் தங்களிடத்தில் ஒன்று சொல்லவேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள் (என்று அக்கம்பக்கத்தைப் பார்த்தான்).

**சிவஞானம்.**—என்னிடத்தில் என்ன சொல்லவேண்டுமென்றார்கள்?

**அன்னியன்.**—இரத்தினசபாபதி பிள்ளை சாமான் சேகரிக்கக் கொடுத்த பணத்தில் சிறியதொகையே தங்களிடத்தில் மீந்திருந்ததென்றும் அது செலவாய் விட்டதென்றும் அறிவித்து தங்களைக் கொஞ்சம் தொகை கொடுத்தனுப்பும்படி சொல்லச் சொன்னார்கள். நான் என்னிடத்திலிருந்த இருபது ரூபாவைக் கொடுத்துவந்தேன். என்னிடத்தில் அதிகம் இல்லாமற்போனதைக் குறித்துத் துக்கப்பட்டேன்.

**சிவஞானம்.**—தாங்கள் மீண்டும் சேலத்திற்குப் போக முடியு மானல் ஏதாகிலும் கொடுத்தனுப்பலாம்.

**அன்னியன்.**—அம்மணி! நான் கோர்ட்டு வேலையாக வந்திருக்கிறேன். நான் தற்காலம் இவ்வூரைவிட்டுப்போக முடியாது?

**சிவஞானம்.**—நான் யாரிடத்தில் கொடுத்தனுப்புவேன்?

**அன்னியன்.**—தாங்கள் முற்றிலும் நம்பத்தகுந்தவர்களிடத்தில் கொடுத்தனுப்பவேண்டும். இக்காலத்தில் ஒருவரையும் நம்பக்கூடாது. கருணாநிதி பிள்ளையையும் நீலமேகத்தையும் கண்டு பிடிப்பவர்களுக்கு ஆயிரத்தைந் நூறு கொடுப்பதாகத் துரைத்தனத்தார் விளம்பரப் படுத்தி யிருப்பது தங்களுக்குத் தெரிந்திருக்கலா மென்று நினைக்கிறேன். தாங்கள் ஒருவரிடம் பணம் கொடுத்தனுப்பினால் அவர் கருணாநிதியையும் நீலமேகத்தையும் துரைத்தனத்தாருக்குக் காட்டிக்கொடுத்து விட்டால் என்ன செய்கிறது. ஆனதால் தாங்கள் சொந்த மனிதரிடம் கொடுத்தனுப்பினாலும் அல்லது தாங்களே கொண்டுபோய்க் கொடுத்தாலும் உத்தமம் என்று நினைக்கிறேன்.

**சிவஞானம்.**—நான் எப்பொழுதும் சேலத்துக்குப் போனவளல்ல. நான் சேலத்தில் அவர்களை எங்கே தேடிக் கண்டு பிடிக்கக்கூடும்?

**அன்னியன்.**—தாங்கள் அவர்களிருப்பிடத்தைக் கண்டுபிடிப்பது கஷ்டமல்ல. தாங்கள் சேலத்துக்குச சென்று, நாழிக்கல் எங்கிருக்கிறதென்று விசாரித்துப் போய் வெள்ளைக் கவுண்டன் வீடு எது என்று கண்டறிந்தால், அவ்வீட்டில் தங்கள் நாயகனையும் நீலமேகத்தையும் பார்க்கலாம். நான் அவசரமாகப் போகவேண்டும் (என்று சிவஞானத்திடத்தில் விடைபெற்று நீங்கினான்)

அன்னியன் நீங்கியபின் சிவஞானம் தன் நாயகனுக்கு நேரிட்ட கஷ்டகாலத்தைக் குறித்து நினைத்துத் துக்கப்

பட்டு, "இப்புண்ணியவான் தன்னிடத்திலிருந்த ரூபா இரு பதைக்கொடுத்து உதவிசெய்தார். இவருடையநற்குணத்தை எவ்விதம் புகழ்வது. இப்புண்ணியவான் சொன்னதுபோல் நாம் ஒருவரை நம்பிப் பணம் கொடுத்தனுப்பக்கூடாது. நாமே சென்று நம்மிடத்திலிருக்கும் ரூபாவைக் கொடுத்து வரவேண்டும்" என்று நினைத்து மறுநாள் லாலாபேட்டைக் குச் சென்றாள்.

அன்னியன் கோயம்புத்தூரில் பேசிப்போன நான்காம் நாள் காலை நிதானம் ஒன்பதுமணிக்கு சேலத்துக்கு நாலைந்து மைல் தூரத்தில் நாழிக்கல் என்ற பட்டிக்காட்டில் பெருந் தோட்டத்தைக்கொண்ட ஓர் தனித்த வீட்டில் ஓர் சுந்தர மான பெண்பிள்ளை சென்று, அவ்வீட்டில் முப்பது அல்லது முப்பத்தைந்து வயதென்று மதிக்கத்தகுந்தவன் உட்கார்ந் திருப்பதைக் கண்டு, "ஐயா! வெள்ளைக் கவுண்டன் வீடு எதுவென்று தெரிவிக்கவேண்டும்" என்றாள்.

வீட்டுக்குள்ளிருந்தவன் எழுந்துவந்து "அம்மா! நான் தான் வெள்ளைக் கவுண்டன். தாஙகள் வெளியில் நின்று வார்த்தையாடவேண்டாம். வீட்டுக்குள் வரவேண்டும்" என் றான். சிவஞானம் வீட்டிற்குள் செல்ல, அங்கு முப்பது வய தென்று நிதானிக்கத்தகுந்த ஓர் பெண்பிள்ளை சிவஞானத் துக்கு ஓர் பாய் கொண்டுவந்து போட்டு உட்காரவேண்டி னாள்.

**சிவஞானம்.**—(வெள்ளைக்கவுண்டனைப் பார்த்து) ஐயா! நான் வந்திருக்கும் விஷயம் தெரியுமல்லவா?

**வெள்ளைக் கவுண்டன்.**—ஆம், அம்மா, தெரியும். இருவர் கடன்பட்டுக் கொடுக்கமுடியாமற் போகவே அவர்கள் மேல் வியாசசியங்தொடுத்து வாரண்டு எடுத்து அவ்விரு வரையும் பிடிக்கமுயன்றதால், அவர்கள் வாரண்டுக்குப் பயந்து இவ்வூரில் வந்திருக்கிறார்கள். அவர்களைப் பார்க் கத் தாங்கள் வருவதாகச் சொல்லிக்கொண்டிருந்தார் கள். அதுதானே சங்கதி?

**சிவஞானம்.**—ஆம்! அவ்விருவரையும் பார்க்கவேண்டுமே!

**வெள்ளைக் கவுண்டன்.**—அவர்களைப் பார்க்கவேண்டுமென்

ரால் நான்போய் அழைத்துவரவேண்டும். அவர்கள் ஐந்தாறு மைல் தூரத்தி லிருக்கிறார்கள். சாப்பிட்டுப் போனால் விளக்கேற்றும் நேரத்தில் திரும்பிவரலாம்.

சிவஞானம்.—அவர்கள் இவ்வூரி லிருப்பதாகவல்லவோ சொல்லியனுப்பினார்கள்.

வெள்ளைக் கவுண்டன்.—ஆம்! அவர்கள் இவ்விடத்தில்தா னிருந்தார்கள். இரண்டு நாளைக்கு முன் ஒரு போலிஸ் சேவகன் வருவதைக் கண்டு பயந்து நீங்கினார்கள். ஆயினும், அவர்களிருக்குமிடம் எனக்குத் தெரியும். நான் போய் அழைத்துவருகிறேன் (என்று தன் மனைவியைப் பார்த்து) "விரைவில் எனக்குச் சாப்பாடு சித்தப் படுத்து. இந்த அம்மாள் நம்முடைய வீட்டில் சாப்பிட மாட்டார்களாதலால் அவர்களுக்கு வேண்டியதைக் கொடுத்துச சமைத்துச் சாப்பிடசசெய்" என்றான்.

சிவஞானம்.—ஐயா! எனக்குப் பசியில்லை. தாங்கள் விரைவில் சென்று அவர்களை அழைத்து வரவேண்டும் (என்று வேண்டினான்).

வெள்ளைக்கவுண்டன் நான் விரைவில் வருவேன் என்று சாப்பிட்டு நீங்கினான், நீங்கி நெடுநேரமான பின் சிவஞானம் வீட்டுக்குப் பின்புறமுள்ள தோட்டத்தைப் போய்ப் பார்த்தாள். அத்தோட்டம் நாகதாளிக் கள்ளியால் வேலியமைத்து வேலிக்குள்ளிருக்கும் இரண்டு மூன்று காணி நிலத்தில் கத்திரி, மிளகாய், வெண்டை முதலிய பயிர்களுண்டாக்கி யிருப்பதையும் தோட்டத்துக்குள் ஏற்றம்போட்ட துரவு இருப்பதையும் கண்டு, தோட்டததைச சுற்றிக்கொண்டு பொழுதைப் போக்கினாள். சூரியன் அஸ்தமித்தபின்னும் அவர்கள் வாராமையைக் கண்டு, வெள்ளைக் கவுண்டன் மனைவியிடம் சென்று "அம்மா! அவர்கள் இன்னும் வரவில்லையே" என்றாள்.

வெள்ளைக் கவுண்டன் மனைவி.—வருகிற வேளையாயிற்று. தாங்கள் காலையிலிருந்து ஒன்றும் சாப்பிடாம லிருக்கி

நீர்கள். கொஞ்சம் பாலாகிலும் சாப்பிடுங்கள் (என்று ஒரு செம்பில் காய்ச்சிய பாலைக் கொண்டுவந்து கொடுத்தாள்).

சிவஞானம் பாலைச் சாப்பிட்டபின், நெடுநேரமாயும் அவர்கள் வராமையைக் கண்டு படுத்துக் கண்ணுறங்கினாள். இரவு நிதானம் ஒன்பது மணிக்கு இருவர் பேசுங்குரல்கேட்டு எழுந்து உட்கார்ந்தாள். ஒருவன் அருகில் வந்து நின்றான். அவனைப் பார்த்து, "ஐயாவே, தாங்கள் கோயம்புத்தூரிலிருந்து வரமுடியாதென்றீர்களே! தாங்கள் எப்பொழுது வந்தீர்கள்? என் நாயகரும் என் மைத்துனரும் எங்கே?" என்று கேட்டாள்.

**அன்னியன்.**—வரமுடியாதென்று சொன்ன நான் உன்னைத் தனித்து அனுப்பியது நன்றல்லவென்று வந்தேன். உன் நாயகனும் உன் மைத்துனனும் விரைவில் வருவார்கள்.

**சிவஞானம்.**—அவர்களை அழைத்து வருவதாகச் சென்ற இவ்வீட்டுக்காரர் இன்னும் வரவில்லையே! அவரைத் தாங்கள் பார்க்கவில்லையோ?

**அன்னியன்.**—நீ அவர்களைக்குறித்துக் கவலை கொள்ளவேண்டாம். நீ காலையிலிருந்து ஒன்றும் சாப்பிடாமலிருக்கிறதாகச் சொன்னார்கள். ஏன் சாப்பிடாமலிருக்கிறாய்.

**சிவஞானம்.**—எனக்குச் சாப்பாட்டின்மேல் விருப்பமில்லை. இந்த வீட்டுக்கார அம்மாள் கொடுத்த பாலே போதுமானது. என் நாயகர் எப்பொழுது வருவார்! அதைச் சொல்லவேண்டும் (என்று கெஞ்சினாள்).

**அன்னியன்.**—உன் நாயகனும் உன் மைத்துனனும் ஒரு போலிஸ் சேவகனைக் கண்டு இவ்வூரைவிட்டுப்போய் விட்டார்களாம்.

**சிவஞானம்.**—என்ன சொன்னீர்? என் நாயகன் போய்விட்டாரா? ஐயோ! தெய்வமே! நான் இனி என்னசெய்வேன்? (என்று கண்களில் தாரை தாரையாக நீரை வடியவிட்டாள்).

**அன்னியன்.**—நீ உன் நாயகனை நினைத்து அழவேண்டாம் உன் நாயகனுக்குப் பதிலாக நான் வந்திருக்கிறேன் (என்று கையைப் பிடிக்கப் போனான்).

**சிவஞானம்.**—(எழுந்து அன்னியன் கை தன்மேல் படாமல் விலகி நின்று) என்ன சொன்னாய்? என் நாயகனுக்குப் பதிலாகவா நீ வந்திருக்கிறாய்?

**அன்னியன்.**—ஆமடி! என் கண்மணி! நான் உன்னைக் கோயம்புத்தூரில் கண்டு உன்மேல் மோகங்கொண்டு உன்னை இவ்விடத்திற்கு வரும்படி சூழ்ச்சிசெய்தேன். என் சூழ்ச்சியும் பிரயோசனமானதல்லவா (என்று நகைத்தான்).

**சிவஞானம்.**—ஐயோ! தெய்வமே! நான் மோசம்போனேன். ஐயோ! இந்தத்துன்மார்க்கன் என்னை ஏமாற்றி இவ்விடம் கொண்டுவந்துவிட்டானே! அம்மா வீட்டுக்கார அம்மா! விரைவில் வாருங்கள். இந்தத்துன்மார்க்கனை இவ்விடத்தைவிட்டுப் போகச சொல்லுங்கள் (என்று வீட்டுக்காரியைக் கூப்பிட்டாள்).

**அன்னியன்.**—சிவஞானம்! நான் யாரென்றறியாம லிருக்கிறாய். நானே இவ்வீட்டுக் கெஜமான். ஆனதால் உனக்கு உதவி புரிய ஒருவரும் வரமாட்டார்கள். நீ வீணாக ஓலமிடுவதில் பிரயோசனமில்லை. நீ என்னுடைய இஷ்டத்துக் குடன்படுவாயாகில் நீ மேன்மை யடைவாய். கொலைசெய்து ஓடிப்போனவனைக் கண்டுபிடித்துத் தூக்கில் போட்டபின் நீ என்ன செய்யப்போகிறாய்? வேண்டாம்! வேண்டாம்! என் வார்த்தையைக் கேள். நீ உன் ஊரைவிட்டு நெடுந்தூரம் வநதுவிட்டாய். நீ உன் ஊரை மறந்து "எனக்கு மனைவியாக இருப்பதே என் விருப்பம்" என்றிரு. நீ என் விருப்பத்துக் கிடங்கொடுக்காமல் தொந்தரவு கொடுப்பாயாயின், உன்னைக் கெடுத்து உன்னிடததிலிருப்பதை யெல்லாம் பிடுங்கிக் கொண்டு துரத்திவிடுவேன் (என்று நெருங்கினான்).

சிவஞானம்.—அடா ! படுபாவி ! நீ என்னைத் தொடவேண்டாம். என்னைத் தொட்டால் நீ அவமானம் அடைவாய். அடா ! நாயே ! என்னை ஏமாற்றி இவ்வளவு தூரம் வரச்செய்து, என்னை மானபங்கம் செய்யவா யோசித்திருந்தாய் ? நான் என் உயிரை விட்டுவிட நேர்ந்தாலும் சம்மதபபடுவேனே யன்றி உன்னுடைய எண்ணத்துக்கு உடன்படுவேன் என்று எண்ணவேண்டாம். நான் சொல்வதைக் கேட்டு என்னை விட்டு விலகி நில் (என்று வெளியிற்போக எத்தனித்தாள்).

அன்னியன்.—அடி ! நீ எனக்குப் பயங்காட்டியா ஓடப்பார்க்கிறாய். நீ தனித்து என்னிடத்தி லகபபட்டிருக்கிறதை மறந்து பேசுகிறாய். நீ எவ்வளவுநேரம் இவ்விதம் பேசபபோகிறாய் ? உன் மானம் போனபின்னும் பேசுவாயோ பைத்தியக்காரி (என்று சிவஞானத்தின் கையைப பிடிததிழுத்து வீட்டுக்குள் விட்டு வழிமறித்து அவளிடம் நெருங்கினான்).

சிவஞானம்.—ஐயோ ! தெய்வமே ! எனக்கு யாரும் உதவி செய்ய வரமாட்டீர்களா ? என்னை இபபடுபாவி கொல்லுகிறான் ! கொல்லுகிறான் ! (என்று பெருஞ் சத்தம் போட்டாள். ஒருவரும் வாராமையைக் கண்டு) அடா ! துஷ்டா ! நீ பெண்ணோடு பிறக்கவில்லையா ? நீ ஓர் அன்னிய ஸ்திரியை அவமானப படுத்திப் பேசினால் தெய்வத்துக் கேற்காது என்று விளங்காமலாபோனது? அடா ! மானம் ஈனம் அற்ற நாயே ! என்னுயிர் என்னைவிட்டு நீங்கும்படி செய்தால் உன்கதி யென்ன! உன்னைத் துரைத்தனத்தார் சுமமா விட்டுவிடுவாாகளா ? உன் வாழ்நாளை வீணாக்கிக்கொள்ளவேண்டாம். நான் சொல்லும் புத்தியைக் கேட்டுப பிழை.

அன்னியன்.—(தேகங் குலுங்க நகைத்து) ஆமடி ! என் கண்மணி ! நீ எனக்கு மனைவியானபின் உன் வார்த்தையைக் குருவின் உபதேசம்போல நினைத்து நடபபேன் (என்று வெளிக் கதவை மூடித் தாழ்ப்பாளிட்டான்).

சிவஞானம் அன்னியன் கைக்கு அகப்படாமல் தோட்டத்துக்குள் ஓடுவோமென்று போனபொழுது அக்கதவும் வெளிப்புறத்தில் மூடியிருக்கக் கண்டாள். அன்னியன் சிவஞானத்தைப் பிடித்தான். அவள் அவனைத் தள்ளிவிட்டுப் பெருங் கூச்சல் போட்டாள். அத்தருணத்தில் சுளுந்து வெளிச்சத்தோடு சிலர் வந்து கதவு தட்டுகிற சத்தங்கேட்டு, தோட்டத்தி லிருந்த வெள்ளைக்கவுண்டன் பின்கதவைத் திறந்துகொண்டு வீட்டுக்குள் வந்து, எஜமான் குரல்போலிருக்கிறதென்று முன் கதவையுந் திறந்தான். சுளுந்து வெளிச்சத்தோடு வந்தவர்கள் வீட்டுக்குள் வந்தவுடன், ஒரு விருத்தர் அங்கு நிற்பவர்களைப் பார்த்து, "ஆ! சிவஞானம்! நீயா அங்கு நிற்பது!" என்று ஆச்சரியப்பட்டார்.

**சிவஞானம்.**—(ஆ! ஆ! குஞ்சிதபாதம் பிள்ளை தாதாவே நம்மைக் காப்பாற்ற வந்தார் என்று ஓடிப்போய் அவர் கால்களைப் பிடித்துக்கொண்டு) தாதா! என்னைக் காப்பாற்றுங்கள். இப்படுபாவி என்னைத் துன்பப்படுத்துகிறான்.

**குஞ்சிதபாதம் பிள்ளை.**—அம்மா சிவஞானம்! நீ பயப்பட வேண்டாம்! அடே! மன்னா! இதென்ன வேடிக்கை! இந்த அம்மாள் இங்கு எப்படி வந்தாள்?

மன்னார் பதில் சொல்லாமல் மௌனமாய் நிற்பதைக் கண்டு, சிவஞானம் எழுந்து, "இப்படுபாவி என்னை ஏமாற்றி என்னை இவ்விடம் வரும்படி செய்தான்" என்று அவள் தன் நாயகன் விஷயமாகச் சொல்லியவைகளைச் சொல்லி முடித்தாள்.

**குஞ்சிதபாதம் பிள்ளை.**—அடே! வெள்ளைக் கவுண்டா! நீயும் உன் மனைவியும் இப்படுபாவிக்கு உள்கையாக இருந்தீர்களல்லவா! நீங்கள் கொடிய துன்மார்க்கர்கள். ஒருவனிடத்தில் பெருந் தனமிருந்து அது உங்களுக்குக் கிடைக்கக்கூடியதாயிருந்தால் அவனைக் கொண்டுவந்து கொலை செய்துவிடுவீர்கள். உங்களை இனி ஓர் நிமிஷமும் இவ்வீட்டில் வைக்கக்கூடாது. நீயும் உன் மனைவியும் இவ்வீட்டை விட்டு

வெளியில் செல்லுங்கள். அடே! மன்னூர்! உன்னை யோக்கியனென்று நினைத்து என்னுடைய நிலத்தைக் கொடுத்துப பயிரிடச் சொன்னதால் இதைச் செய்யத் துணிந்தாய். நீ மறுவார்த்தையாடாமலும் இவ்வீட்டிலிருக்கும் மாடு கன்றைத் தொடாமலும் இப்பொழுதே வெளியிற் போய்விடு. நீ காலதாமதம் செய்தால் நான் நாளைக்காலையில் உன்னைப் போலிஸார் வசம் ஒபபுவித்துவிடுவேன் (என்று சொல்லிய பின், தன்னோடு வந்திருப்பவனைப் பார்த்து), அப்பா! நாராயணா! நீ இவ்வீட்டையும் நிலத்தையும் ஒப்புக்கொண்டு பயிரிடு (என்று சொல்லி, சிவஞானத்தை அழைத்துக் கொண்டு வெளியில் வந்தார்).

வெள்ளைக் கவுண்டனும் அவன் மனைவியும் குஞ்சிதபாதம் பிள்ளை காலில் விழுந்து, நமஸ்கரித்து, "எஜமானே! எங்களை மன்னிக்கவேண்டும். எங்களுக்கு எஜமானாக இவரிருந்ததால் இவர் உத்தரவு பிரகாரம் நடக்கவேண்டியதாயிற்று" என்றூர்கள்.

**குஞ்சிதபாதம் பிள்ளை.**—அடே! இவன் உங்களுக் கெஜமான் ஆனதால் ஒருவரைக் கொலைசெய்யச்சொன்னாலும் கொலை செய்வீர்களல்லவா? உன் மனைவியும் கொடிய துன்மார்க்கி! பெண்ணென்றால் பேயு மிரங்கு மென்பார்கள். இப்பெண்ணுக்கு உன் மனைவி ஓர் உதவியும் செய்யாமல் இப்படுபாவி கையில் ஒப்படைத்துவிட்டு வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தாளல்லவா? உங்களை நான் நாளைக்காலை இவ்வூரில் பார்த்தால் நீங்கள் மூவரும் போலீஸாரோடு போகும்படி நேரிடும்.

**மன்னூர்.**—எஜமானே! நான் கோயம்புத்தூருக்குத் தங்களைப் பார்க்க வந்திருந்தபொழுது லாலாபேட்டையிலிருந்து வந்த முனியாண்டியின் ஏவுதலால் இதைச் செய்தேன். என்னை மன்னிக்கவேண்டும் (என்று கீழ்விழுந்து நமஸ்கரித்தான்).

**குஞ்சிதபாதம் பிள்ளை.**—அடே! நான் ஐந்துநிமிஷம் தாமதித்து வந்திருப்பேனாகில் நீ பெண்ணின் நிலையைக் கெடுக்க முயன்றிருப்பாய் இப்பெண் உயிரை விட்டுவிடத் துணிந்தாளல்ல

வா ? அநியாயமாக ஓர் பெண் மாளவகைதேடிய பாதகா ! உன்னைப் போலீஸார்வசம் ஒபபடைக்காமல் போவது எனக்குக் கவலையாக இருக்கிறது (என்று கோபித்து நீங்கினுர்.)

நாராயணன் குஞ்சிதபாதம் பிள்ளையையும் சிவஞானத்தையும் தன் வீட்டுக் கழைத்துபபோய், சிவஞானம் சாப்பிடப பிரியமில்லை என்றதால், அவளுக்குப் பால் கொண்டுவந்து கொடுக்கச் செய்து, தான் சிலரை அழைத்துக்கொண்டு வெள்ளைக்கவுண்டன் வீட்டுக்குச் சென்ருன்.

குஞ்சிதபாதம் பிள்ளை சிவஞானத்தை அழைத்துத் தன்னருகிலிருக்கச்செய்து, " அம்மா ! நான் உன் ஆபத்தில் வந்தது அதிசயமாக முடிந்தது. நான் அநேக வருடங்களுக்கு முன் கோயம்புத்தூரில் ஒருவனுக்குக் கடன் கொடுத்திருந்தேன். அவன் கடனைக் கொடுக்கச் சக்தியற்று அவனுக்குக் கோயம்புத்தூரிலிருந்த நிலத்தையும் இபபக்கத்திலிருக்கும் நிலததையும் எனக்குக் கொடுத்துவிட்டான். இப்பக்கத்திலிருககும் நிலத்தில் சிலதை மன்ஞருக்கும் மற்றதை நாராயணனுக்கும் கொடுத்துச் சாகுபடி செய்யச் சொல்லியிருந்தேன். மன்ஞர் யோக்கியமாக நடந்து வந்தான். ஆஞல் கொஞ்சகாலமாக எனககுச் சேரவேண்டியதைக் கிரமமாகக் கொடுககாமல் தவணை சொல்லி வந்ததால் அவனைக் கோயம்புததூருககு வரும்படி எழுதியிருந்தேன். அவன் என்னிஷ்டபபிரகாரம் கோயம்புத்தூருககு வநதவன் என்னைப் பார்க்காமல் வந்துவிட்டான். ஆனதால் நாம் நேரில் சென்று அவன் சமாசாரத்தை அறியலாம் என்று நேற்று மாலை நாராயணன் இருககும் இவ்வீட்டுக்கு வநது நாராயணனைக் கண்டு விசாரித்ததில், மன்ஞர் தானியங்களை இன்னம் விற்கவில்லை என்றறிந்தபின் சநதேகப்பட்டு, அவன் ஊரிலில்லையென்றும் அவன் விரைவில் வருவான் என்றும் கேள்விபபட்டு அவனுக்காகக் காத்திருந்தேன். நான் காலை மூன்று மணி ரெயிலில் போக எண்ணி, அவன் வீட்டுக்கு வந்தவுடன் தெரிவிக்கும்படி நாராயணனுக்குச் சொல்லியிருந்தவிதம் மன்ஞரும் வெள்ளைக்கவுண்டனும் வந்

திருக்கிறார்களென்று கேள்விப்பட்டு அவ்விடம் சென்றேன். அக்காதகர்களைப் போலீஸுக்கு ஒப்படைத்தால் அவர்கள் தண்டனை யடைவார்களாயினும், உனக்குப பெருங் கஷ்டத்தை யுண்டு பண்ணுமென எண்ணி அவர்களை விட்டுவிட நேரிட்டது" என்று துக்கபபட்டார்.

**சிவஞானம்.**—தாதா! என்னிமித்தம் அக்குடும்பத்தைக் கெடுத்துவிடவேண்டாம் (என்று கெஞ்சினாள்).

அச்சமயத்தில் நாராயணன் வந்து, "ஐயாவே! மன்னாரும் வெள்ளைக்கவுண்டனும் காலையில் போய்விடுவதாகக் கெஞ்சி அழுகிறார்கள். நான் பண்ணை ஆட்களைக் காவல்வைத்து வந்திருக்கிறேன். தங்களுக்கு அது சம்மதமில்லாமற்போனால் இப்பொழுதே அவர்களை அனுப்பிவிடுகிறேன்" என்றான்.

**குஞ்சிதபாதம் பிள்ளை.**—அம்மா! சிவஞானம்! நாம் காலை ரெயிலுககுப் போக முடியாது. நானிருந்து நிலத்து விஷயத்துக்கு வேண்டியதைச் செய்தே போகவேண்டும்.

**சிவஞானம்.**—தாதா! தங்களிஷ்டம்போல் செய்யுங்கள் (என்று நெடுநேரம் பேசியிருந்து, பின் பெண்துணையோடு போய்ப் படுத்துக்கொண்டாள்.)

---

## 9—ம் அத்தியாயம்

லாலாபேட்டைக்குக் கிழக்கே ஒருமையில் தூரதிலுள்ள கருப்பத்தூருக்குச் சமீபத்தில் மாலை நாலுமணிக்கு ஓர் சவாரி வண்டியில் நான்குபேர ஏறி வரும்பொழுது, வண்டியை நிறுத்தச் சொல்லி இருவர் வண்டியிலிருந் திறங்கினார்கள். "நீங்கள் வீட்டுக்குப் போங்கள்; நாங்கள் சமீபத்திற் காணும் வயலைப பார்த்து வருகிறோம்" என்று ஒருவர் சொன்னார். வண்டியி லிருப்பவரில் ஒருவர் "ஐயா! பச்சையபப பிள்ளை! என்னை நெடுநேரம் காத்திருக்கும்படி செய்யவேண்டாம். நான் இன்றே குளித்தலைக்குப் போகவேண்டும்" என்றார்.

பச்சையப்ப பிள்ளை.—ஐயா ! சந்தனம் செட்டியாரே ! தாங்கள் எனக்கு அதிகம் சொல்லவேண்டாம். தங்களைக் காத்திருக் கும்படி செய்யமாட்டேன். அடே ! வண்டிக்காரா ! விரை வில் செட்டியாரை வீட்டில் கொண்டுபோய் விட்டு, ஐயரிடத் தில் செட்டியாருக்கு வேண்டியதை வாங்கிக்கொடு, ஜாக் கிரதை !

வண்டிக்காரன்.—எஜமான் உத்தரவு பிரகாரம் செய்வேன் (என்று வண்டியை ஓட்டிக்கொண்டு போனான்).

பச்சையப்ப பிள்ளை.—முனியாண்டி ! அவன் என்ன சொன் னான் ? நீ என்ன சொல்லியிருக்கிறாய் ? (என்று நடந்து கொண்டே கேட்டார்).

முனியாண்டி.—அவன் உள்ளூர் விலைக்குக் காலேயரைக்கால் பதிய விலை போட்டுக்கொள்ளவேண்டு மென்றான். அது கூடாது, கால்ரூபா பதியப் போட்டுக்கொள்ளவேண்டு மென் றேன். அதற்கு உடன்படுவான்போ லிருக்கிறது.

பச்சையப்ப பிள்ளை.—தொகை எவ்வளவு கொடுப்பதாகச் சொல்லுகிறான்.

முனியாண்டி.—தொகையைக் குறித்து நான் கேட்கவில்லை. நாம் எத்தனை கலம் நெல் கொடுக்கிறோமென்று சொல்லுகிறோமோ அவ்வளவுக்கும் பணம் கொடுபபதாகச் சொன்னான்.

பச்சையப்ப பிள்ளை.—நான் இரண்டாயிரங் கலம் நெல் கொடுக்கிறேன் என்றால் அதற்குப பணங் கொடுபபானா ?

முனியாண்டி.—கொடுக்க முடியுமென்று நினைக்கிறேன். தொகை கிடைத்தால் எனக்கேதாகிலுங் கொடுக்கவேண்டும். நானும் செலவுக்கில்லாமல் கஷ்டப்படுகிறேன்.

பச்சையப்ப பிள்ளை.—அடே ! நீயும் உன் மனைவியும் கோயம் புத்தூருக்குச் சென்று உன் மைத்துனனையும் உன் தங்கை யையும் பார்த்துவரவேண்டு மென்று சொன்னதற்கு ஐம் பது ரூபா கொடுத்தேன். ஐம்பதையுமா செலவு செய்து விட்டாய் ?

**முனியாண்டி.**—ஐயாவே! தாங்கள் கொடுத்த ஐம்பதோடு மற்றோர் ஐம்பதும் செலவாகி விட்டது.

**பச்சையப்ப பிள்ளை.**—நூறு ரூபா செலவு செய்தாய்? சபாஷ்! நீ பெரும் பணக்காரன். நூறும் செலவு செய்வாய் இருநூறும் செலவு செய்வாய், உனக்கென்ன குறைவு! உன்னிடத்தில் ஒன்றுமில்லை யென்று ஏன் பொய் சொல்லு கிறாய்?

**முனியாண்டி.**—தாங்கள் இருக்கும் பரியந்தம் எனக்கென்ன குறைவு! நான் பெரும் பணக்காரனே! நான் தங்களிடத் தில் பொய் சொல்லவில்லை. நான் ஐம்பது ரூபா கடன் வாங்கித் தாங்கள் கொடுத்த ஐம்பதோடு செலவு செய்தது உண்மை!

**பச்சையப்ப பிள்ளை.**—கோயம்புத்தூருக்குப் போய் வரவா நூறு ரூபா பிடித்தது (என்று நகைத்தார்).

**முனியாண்டி.**—ஐயாவே! என் தங்கைக்கு விவாகம் ஆனது முதல் நான் அவர்களுக்கு ஒன்றும் செய்யவில்லை. ஆன தால் என் தங்கைக்கு இருபத்தைந்து ரூபாவில் ஒரு சேலை யும் என் மைத்துனருக்குப பதினைந்து ரூபாவில் தோவத்தி அங்கவஸ்திரமும் குழைந்தைகளுக்குத் துணிகளும் வாங்கிக் கொடுத்துச் சில நகைகளும் செய்து கொடுத்தேன். நான் இதனால் வீண்செலவு செய்யவில்லை யென்று தெரிகிறதல் லவா? அதோ நமக்கெதிரில் காணும் வீடே அவருடையது.

இருவரும் வீட்டுக்கு வெளியி லிருக்கையில் அங்கு நின் றிருந்த சிறுவனை முனியாண்டி பார்த்து, "மணவாள நாயுடு வீட் டில் இருக்கிறாரா?" என்று கேட்டான். சிறுவன் வீட்டுக்குள் ளோடி "நாயனு! யாரோ வந்து தங்களைக் கூப்பிடுகிறார்கள்" என்றான். மணவாள நாயுடு வெளியில் வந்து, "வருக, பச்சையப்ப பிள்ளை" என்று உள திண்ணையில் உட்கார வேண்டினார்.

**முனியாண்டி.**—ஐயா! தாங்கள் என்னிடத்தில் ஒப்புக்கொண்ட

விதம் எஜமான் நெல் கொடுக்கச் சம்மதிக்கிருர். எத்தனை கலம் தங்களுக்கு வேண்டும் ?

**மணவாள நாயுடு.**—அப்பா ! முனியாண்டி ! நீ என்னிடத்தில் பேசிபபோனபின் வேமெருருவரிடத்தில் ஐந்நூறு கலம் நெல் லுக்குக் காலே அரைக்கால் பதிய ஒப்பந்தம் செய்துகொண் டேன். ஒப்பந்தம் செய்தபின், முன்விலேயேறிப பின் விலே இறங்குமென்று யாவரும் சொல்லுகிருர்கள். அவர்கள் சொல்வதைக் கேட்டபின் பயமாகவிருக்கிறது. ஆனதால் மேற்கொண்டு ஒபபந்தம் செய்துகொள்ள எனக்குப பிரிய மில்லே. நீங்கள் வேறு யாரிடத்திலாவது ஒபபந்தம் செய்து கொள்ளுங்கள்.

**பச்சையப்ப பிள்ளே.**— நீர் ஒபபநதம் செய்துகொள்ளுகிறேன் என்று என்னுடைய காரியஸ்தனிடம் சொல்லியனுபபிய தால் உமது வார்த்தையை நம்பி வந்தேன். முன் விலே ஏறும் பின் விலே இறங்குமென்று சொல்லுவதால், நீர் விரும்பிய காலத்தில் விலே போட்டுக்கொள்ளும். அவ்விதம் செய்தால் உமக்கு நஷ்டம் வர நியாயமில்லே யல்லவா (என்று நகைத் தார்).

**மணவாள நாயுடு.**—ஆம் ! அவ்விதம் செய்தால் எனக்கு நஷ் டம் வர நியாயமில்லே யாயினும், இலாபம் வரவும் நியாய மில்லே. விலே குறைத்து வாங்கிக் கூட்டி விற்காமல் போனுல் இலாபம் எவ்விதம் வரும் ? எனக்குப் பிரியமில்லாததைச் செய்யும்படி கட்டாயபபடுத்த வேண்டாம். உம்முடைய சிறிய தந்தை பெருந் தனவந்தா. அவருடைய சொத்தெல் லாம் உம்மை விரைவிற் சேரபபோகிறது. ஆனதால் நீர் இலாபத்தைக் கருதவேண்டிய தில்லே. தற்காலம் செலவுக் குப் பணம் வேண்டுமென்முல், நீர் மற்றவர்களுக்கு எழுதிக் கொடுத்திருக்கும் விதம் எனக்கும் எழுதிக்கொடுத்து உமக்கு வேண்டிய தொகையை வாங்கிபபோகலாம்.

பச்சையப்ப பிள்ளை.—மற்றவர்களுக்கு எவ்விதம் எழுதிக் கொடுத்துக் கடன் வாங்கினேன் என்று கேள்விப்பட்டீர் !

மணவாள நாயுடு.—ஒன்றுக் கிரண்டாக, அதாவது, ஆயிரத்துக் கெழுதிக்கொடுத்து ஐந்நூறு வாங்கிக்கொள்கிறதாகக் கேள்விப்பட்டேன். நீர் வேறொருவருக்கு எழுதிக் கொடுக்கிறதை எனக்கு எழுதிக் கொடுக்கக்கூடாதா ? அந்த லாபத்தை நானடைந்தால் உமக்கு என்ன நஷ்டம் ? அந்த உபகாரம் எனக்குச் செய்ய இஷ்டங்கொண்டால் உமக்கு வேண்டிய தொகையை நானே கொடுக்கிறேன். என்னிடத்தில் இல்லாமற்போனாலும் யாரிடத்திலாவது கடன் வாங்கிக் கொடுக்கிறேன். நீர் வேறிடத்தில் போய்ப் பணங் கேட்க அவசிய மில்லை. நீர் பணம் வேண்டுமென்று கவலையடையவேண்டிய கட்டாயமு மில்லை.

பச்சையப்ப பிள்ளை.—(நகைத்து) நீர் சொல்லும் விதம் கடன் வாங்கவில்லை யாயினும், உம்முடைய தயவு தற்காலம் எனக்கு வேண்டியதால், நீர் இரண்டாயிரம் பத்திரத்தோடு கொண்டு வாரும். நான் அவசரமாக ஓர் இடத்திற்குப் போக வேண்டும்.

மணவாள நாயுடு.—நான் அண்டிமாண்டு ரசீதோடு பணங் கொண்டுவருகிறேன், நீர் போகலாம்.

பச்சையப்ப பிள்ளை மணவாள நாயுடு விடத்தில் விடை பெற்று, நேராக வீட்டுக்குப் போகாமல் முனியாண்டியை அனுப்பி விட்டு, வேறோர் மச்சுவீட்டுக்குள் போனார். அவ்வீட்டுக்குள்ளிருந்த ஓர் சுந்தரமான பெண்பிள்ளை ஓடிவந்து, “அத்தான் ! அத்தான் ! வந்தீர்களா” என்று பச்சையப்ப பிள்ளையின் இரண்டு கைகளையும் பிடித்து, “என் ஞாபகம் இருக்கிறதா ? தாங்கள் என்னை மறந்துவிட்டீர்களென்றே நினைத்திருந்தேன். இன்று காலையிலிருந்து காகம் கத்திக்கொண்டிருந்தது. விருந்தாளி யாராகிலும் வருவார்களென்று நினைத்திருந்தேன். காக சகுனம் வீண் போகாமல் தாங்கள் வந்தது என் அதிர்ஷ்டமே” என்றாள்.

**பச்சையப்ப பிள்ளை.**—மதனவல்லி! நான் உன்னை மறந்தவ னல்ல! எனக்கு வேலை அதிகமாய்விட்டதால் வர முடிய வில்லை. என்னை மன்னிக்கவேண்டும்.

**மதனவல்லி.**—நானிருக்கும் வீட்டுக்கு வர நேரமில்லாமற் போனது. நாகரத்தினம் வீட்டுக்கு நாள்தோறும் போகத் தங் களுக்கு நேரமிருக்கிறது. அவள் கேட்டதையெல்லாம் வாங்கிக் கொடுக்கிறீர்கள். தங்கள் பணத்தைக் கொள்ளை யடிப்பவள்மேல் தங்களுக்குப் பிரியம் அதிகம் இருக்க வேண்டியதே! நான் எபபொழுதாகிலும் அதை வாங் கிக்கொடுங்கள் இதை வாங்கிக்கொடுங்கள் என்று கேட்டிருப் பேனா? தாங்கள் கொடுத்தால் பெற்றுக்கொள்கிறதேயன்றி நான் என் வாயைத் திறந்து இன்னது வேண்டுமென்று சொல்லுகிற வழக்கமில்லை என்பதைத் தாங்கள் நன்றா யறிந் தும் என்னிடத்தில் வந்துபோக பயப்படுகிறீர்கள். நாக ரத்தினம் தங்களுடைய பொருளைக் கொள்ளைகொள்ளட்டும். நாம் அத்தானுடைய அன்பைக் கொள்ளைகொள்ளலாம் என்று நினைத்திருக்கு மென்னைக் கைவிட்டீர்கள் (என்று கண்கலங்கினாள்).

**பச்சையப்ப பிள்ளை.**—மதனவல்லி! நீ கவலைகொள்ளவேண் டாம்! இனிமேல் நான் அடிக்கடி உன் வீட்டுக்கு வருவேன். உன்னைக் கவனிக்காமல் விட்டது என்மேல் குற்றமே!

அத்தருணத்தில் ஒரு பெண்பிள்ளை வீட்டுக்குள் வந்து "அம்மா! மதனவல்லி! நீ இராத்திரிக்குக் கோவிலுக்குப் போட் டுக்கொண்டுபோகக் கேட்டுவிட்ட மோராமாலையையும் கெம்பட் டிகையையும் கொடுக்க முடியாதாம்: அந்தம்மாள் எங்கேயோ போகவேண்டுமாம்" என்றாள்.

**மதனவல்லி.**—நகைகள் அகப்படாமற் போனால் தோஷமில்லை! நகைகளில்லாமல் கோவிலுக்குப் போனால் சுவாமி கோபித் துக்கொள்ளமாட்டார். நீ போ!

**பச்சையப்ப பிள்ளை.**—மதனவல்லி! உனக்கு மோராமாலையும் கெம்பட்டிகையு மில்லையா? அடா! அநியாயமே! நான் அதைக் கவனிக்காம லிருந்தது பெருங்குறைவு. நான் நாளைக்கே உனக்குச் சொந்தமாக வாங்கி யனுப்புவேன்.

இந்த வார்த்தை சொல்லும்பொழுது, வேறொரு மனிதன் வீட்டுக்குள் வந்து "அம்மா! நீங்கள் வீட்டுச்செலவுக்கு வேண்டி வாங்கிய ரூபாவை எஜமான் வாங்கிவரச் சொன்னார்" என்றான்.

**மதனவல்லி.**—அப்பா! நான் இரண்டு மூன்று நாளைக்குள் அவருக்குக் கொடுக்க வேண்டியதைக் கொடுத்துவிடுகிறேன் என்று சொல்.

**வந்தவன்.**—அம்மா! தாங்கள் இட்ட கெடுவு தவறுகிறதில்லையாம். இரண்டு நாளைக்குள் ரூபா நூற்றைம்பதையும் கொடுத்தனுப்பாவிட்டால் எஜமான் பணத்தை வசூல் செய்யவேண்டிய முயற்சி எடுத்துக்கொள்ளுவதாகச் சொல்லிவரச் சொன்னார் (என்று நீங்கினான்).

**பச்சையப்ப பிள்ளை.**—மதனவல்லி! நீ செலவுக்குப் பணமில்லாமல் கடன் வாங்கியதாகவும் தெரிகிறது. நான் நாளைக்கு நகைகள் அனுபபும்பொழுது பணமும் அனுபபுவேன்.

**மதனவல்லி.**—அத்தான் தாஙகள் நகைகளும் அனுபபவேண்டாம் பணமும் அனுப்பவேண்டாம். தாங்கள் மட்டும் அடிக்கடி வந்துகொண்டிருந்தால் போதும்.

அச்சமயத்தில் வீட்டிலிருக்கும் வேலைகாரி இரண்டு லோட்டாவில் காபி கொண்டுவர்து இருவருக்கும் கொடுத்து, "அம்மா! இராத்திரிக்கு அரிசியில்லையே, யாரிடத்தில் போய் வாங்கிவருகிறது?" என்று கேட்டாள்.

**மதனவல்லி.**—அடி! கழுதை! அத்தான் முன்னிலையிலா அரிசி இல்லையென்று சொல்லவேண்டும். போ! போ! நாயே! (என்று வேலைக்காரியிடம் லோட்டாக்களைக் கொடுத்தனுப்பினாள்).

பச்சையப்ப பிள்ளை.—வீட்டுச் சாப்பாட்டுக்காகச் சீரகச்சம்பா ஐம்பது கலம் வந்திருக்கிறது. அதில் பத்து கலம் நாளை அனுப்புகிறேன். எனக்கு உத்தரவுகொடு, நான் போய் வருகிறேன்.

மதனவல்லி.—என்ன சொன்னீர்! போகிறீர்களா! இதற்குள்ளாகவா போகப் பிரயாணப்பட்டீர்கள். தாங்கள் யாதொன்றும் அனுப்பவேண்டாம். தாங்கள் போகிறேன் என்றதை மட்டும் சொல்லாமலிருக்கவேண்டும்.

பச்சையப்ப பிள்ளை.—வீட்டில் சிலர் வந்திருக்கிறார்கள். நான் விரைவில் போகவேண்டும். நான் நாளை வருகிறேன்.

மதனவல்லி.—நான் கெஞ்சுதலுக்கு மனமிரங்காமல் போகிறேன் என்று பிடிவாதம் செய்கிறீர்கள். நாளை வருகிறேன் என்பது உண்மைதானே!

பச்சையப்ப பிள்ளை.—அவசியம் நாளை வருகிறேன்.

மதனவல்லி.—நாளை வருகிறது உண்மையானால் நாளை வருகிறேன் என்று என் தலையிலடித்துக்கொடுங்கள்.

பச்சையப்ப பிள்ளை.—இதற்கேன் சத்தியம் செய்துகொடுக்கச் சொல்லுகிறாய். நான் கட்டாயம் வருகிறேன்.

மதனவல்லி.—அத்தான்! என் தலையில் அடித்துக்கொடுத்தாலன்றித் தங்கள் வார்த்தையை நம்பேன்.

பச்சையப்ப பிள்ளை நகைத்துக்கொண்டே மதனவல்லியின் தலையைத் தொட்டு விரைவாக வீட்டிற்குச்சென்று முனியாண்டியைக் கண்டு, "அவர்களெல்லாம் எங்கே?" என்று கேட்டார்.

முனியாண்டி.—சந்தனம் செட்டியாரும் அவரோடு வந்தவரும் விரைவில் வருவதாகப் போயிருக்கிறார்கள். அதோ மணவாள நாயுடு வண்டி வருகிறது.

வண்டியும் வீட்டுக்கெதிரில் வந்து நின்றது. மணவாள நாயுடு வண்டியைவிட்டிறங்கி வண்டியிலிருந்த பணப்பையை முனியாண்டியை எடுத்துவரச் செய்து மூவரும் வீட்டுக்குள் போனார்கள்.

**மணவாள நாயுடு.**—பணத்தை வழியில் யாவரும் பார்க்காம லிருக்க வண்டியிற் கொண்டுவந்தேன். இதுவே நான் எழுதித் தலையொட்டிக் கொண்டுவந்த ரசீது. (என்று அண்டிமாண்டு ரசீதைக் கொடுத்தார்).

**பச்சையப்ப பிள்ளை.**—(அதை வாங்கிக் கையொப்பம் இட்டுக் கொடுத்து) ஐயா, நாயுடு அவர்களே! தங்களா லின்ன மொன்று முடியவேண்டியிருக்கிறது.

**மணவாள நாயுடு.**—என்ன லாகவேண்டியதைச் சொன்னால் செய்யத் தடையொன்று மில்லை.

**பச்சையப்ப பிள்ளை.**—எனக்கு நாளைக்குள் ஒரு மோராமாலை யும் விலையுயர்ந்த கெம்பட்டிகையும் வேண்டும். அவை களைத் தேடி விலைக்கு வாங்கிவரவேண்டும்.

**மணவாள நாயுடு.**—ஐயா! நீர் மிக்க அதிர்ஷ்டசாலி! நீர் வேண்டு மென்ற இரண்டு நகைகளும் என்னிடம் விலைக்கு வந்திருக் கிறது. ஆனால் நீர் விரும்பியவிதம் மோராமாலையா யிராமல் அரைப்பவுன் மாலையாக இருக்கிறது. விலை எண்ணூறாகி றது. கெம்பட்டிகை ஆயிரத்தைந்நூறென்று சொந்தக்கா ரன் விலை சொல்லுகிறான். அவன் சொல்லும் விதம் யாரும் மதிக்கமாட்டார்களாயினும் ஆயிரத்துக்குக் குறையா மல் பார்ப்பார்கள். நாம் வேண்டுமென்றால் ஐம்பது நூறு அதிகம் கொடுத்தே வாங்கவேண்டும்.

**பச்சையப்ப பிள்ளை.**—நீரே விலைபேசி வாங்கிவந்துவிடும்.

**மணவாள நாயுடு.**—இரவு எட்டுமணிக்குள் கொண்டுவருகிறேன். அந்தத் தொகைக்கும் ரசீது எழுதிக்கொண்டு வரவேண்டி டியதா?

**பச்சையப்ப பிள்ளை.**—ஆம்.

**மணவாள நாயுடு.**—பணத்தை எண்ணிப் பார்த்துக்கொள்ளும். நான் போய் வருகிறேன்.

**முனியாண்டி.**—பணத்தை எண்ணட்டுமா?

பச்சையப்ப பிள்ளை.—ஆம்! விரைவில் எண்ணிப் பையில் போட்டுக் கட்டிவை (என்று நீங்கினார்).

முனியாண்டி ரூபாவை எண்ணி இருநூறு ரூபாவை வேறாக எடுத்து வைத்துப் பச்சையப்ப பிள்ளை வந்தவுடன் "எனக் கிந்தக் கொடுக்கவேண்டும்" என்று கெஞ்சினான்.

பச்சையப்ப பிள்ளை.—(நகைத்து) உனக்கு வேண்டியதை எடுத் துக்கொள். வீட்டில் சாப்பாட்டுக்காக வந்திருக்கும் நெல்லில் பத்துக்கலம் நாளைக் காலையில் மதனவல்லி வீட்டுக்கு அனுப்பிவிடு.

முனியாண்டி.—ஐயாவே! எனக்கோ ஐந்து கலம் நெல் கொடுக் கக்கூடாதா?

பச்சையப்ப பிள்ளை.—நல்லது! நீயும் ஐந்து கலம் எடுத்துக் கொள். சந்தனம் செட்டியார் இன்னும் வரவில்லை. அவர் வந்தால் எனக்குத் தெரிவி (என்று பணத்தை எடுத்துப் பெட்டியில் வைத்துப் பூட்டிக்கொண்டு வீட்டுக்குள் சென்றார்).

---

## 10—ம் அத்தியாயம்

லாலாபேட்டைக்குக் கிழக்கே அரை மைலில் தூரத்தில் சாலைக்குத் தெற்கில், பெரியவாய்க்காலுக்கும் சாலைக்கும் மத்தியில் ஓர் பக்கத்தில், முப்பத்தைந்தடி அகலமும் எழுபத்தைந்தடி நிகள மும் உள்ள இடத்தில், கிழக்குமேற்கில் நிகளமாகச் சிறிய கொட்ட கைப்பந்தல் போட்டிருந்தது. வடமுகமாக ஓர் அறைவீடும் பந்தலுக்குள் ஓரடி உயரத்தில் பத்துக்கும் பதினைந்தடிக்கும் ஓர் திண்ணையும் உண்டு. திண்ணைக்கு மத்தியில் பித்தளைத் திரு வாசிகையோடு புட்பங்கள் நிறைந்த விநாயக விக்கிரகம் வைத்து, பந்தலுக்கெதிரில் பூச்செடிகள் நிறைந்த தோட்டம் உண்டாக்கி யிருந்தது. அங்கே, அதிக நீளமான ஜடையைக் கிரீடம்

போல் தலையில் சுற்றிக்கொண்டு முகந்தவிர மற்ற எல்லாப் பக்கமும் சிறு ஜடைகள் தொங்க, பெரிய தாடியும் மீசையும் வைத்துக் காவியில் தோய்த்த நீண்ட அங்கியும் மார்பு நிறைந்த ருத்திராட்ச மாலையும் அணிந்து, முகமெல்லாம் விபூதிபூசிப் பெரிய சந்தனப் பொட்டின்மேல் குங்குமம் வைத்து, காதில் கவச குண்டலம் தரித்து, கையில் ஜெபமாலையோடு விபூதித் தட்டை அருகில் வைத்துக்கொண்டு, விநாயகருக்கு ஐந்தடி தூரத்தில் கிழக்கு முகமாகத் திண்ணையில் நாற்பது அல்லது ஒன்றிரண்டு அதிக மென மதிக்கத் தகுந்த வயதுடைய சாமியார் ஒருவர் மான்தோல் ஆசனத்தில் உட்கார்ந்திருந்தார். அருகில் தலைமயிரைச் சீவி கிருஷ்ணன் கொண்டை போட்டு அதில் சிறிய ருத்திராட்சமாலை சுற்றியும், காதில் கவசகுண்டலமிட்டும், காவி தோய்த்த நீண்ட அங்கியைப்போட்டுக் கொண்டும், கழுத்தில் ருத்திராட்ச மாலை அணிந்தும், நெற்றியில் திரிபுண்டரமாக விபூதிதரித்தும் சந்தனப் பொட்டோடு குங்குமபொட்டு மணிந்தும் சாமியாருக்குத் தெற்கே மான்தோ லாசனத்தில் பதினேழு அல்லது பதினெட்டு வயதென்று மதிக்கத்தகுந்த சாமியாருடைய சீடனொருவன் உட்கார்ந்து ஒரு புத்தகத்தை வாசித்துக்கொண்டிருந்தான். லாலா பேட்டையிலுள்ள ஜனங்கள் காவேரி யாற்றுக்குப்போய்த் திரும்பும்பொழுது சாமியாரிடத்தில் விபூதி வாங்கிக்கொண்டு போகிற தைக்|கண்ட வழிப்போக்கர் இருவர் அந்தமார்க்கம் வரும்பொழுது, ஒருவன் மற்றவனைப பார்த்து "அண்ணே! இதென்ன பெண் பிள்ளைகள் பெருங்கூட்டமாக வருகிறார்கள்?" என்று கேட்டான்.

மற்றவன்.—அவர்களெல்லாம் இங்கு வந்திருக்கும் சாமியாரைப் பார்க்கப் போகிறார்கள். போகிறவர்களெல்லாம் வெறுங் கையோடு போகாமல் சீப்பு சீப்பாய் வாழைப்பழமும் செம்பில் பாலும் கொண்டுபோகிறார்கள். நாமும் சாமியாரைப் பார்த்துப் போகலாம் (என்று பெண்கள் கூட்டத்தோடு சென்றார்கள்).

**பெண்களில் ஒருத்தி.**—அம்மா! செல்லாயி! உன் புருஷனுக்கு விடாச் சுரமாக இருந்தது இப்பொழுது எப்படி இருக்கிறது?

**செல்லாயி.**—அம்மா! கறுப்பாயி! என் புருஷனுக்கிருந்த சுரம் போல் ஒருவருக்கும் வந்திராது. அவர் மூன்று மாதம் சுரத்தால் அவஸ்தைப்பட்டிருந்தார். நாலைந்து வைத்தியர் ஒருவர்பின் ஒருவராக வந்து பார்த்து மருந்து கொடுத்தார்கள். சுரம் ஒன்றிலும் போகாமலிருந்தது. வைத்தியர்களால் பிரயோசனமில்லையால் பலர் சொல்லிய கைமருந்துகளைக் கொடுத்தேன். ஒன்றிலும் குணமாகவில்லை. அனேகர் என்னிடம் அவர் பிழைக்கமாட்டாரென்றும் சொன்ஞர்கள். சிலநாட்களுக்குமுன் காவேரியாற்றுக்குப் போயிருந்தபொழுது சாமியாரைக் குறித்துக் கேள்விப்பட்டு, சாமியாரைப் போய்ப பார்த்து என் புருஷன் சமாசாரத்தைச் சொன்னேன். சாமியார் நெல் எடையுள்ள மூன்று பொட்டணத்தைக் கொடுத்து, விபூதியுங் கொடுத்து, "உன் புருடனுக்குச் சௌக்கியமாய்விடும்: சௌக்கியமானபின் ஐந்து சோமவாரம் இரத்தினகிரிமலைக்குப போகச் சொல்" என்ருர். முதல்வேளை மருந்தில் சுரம் அதிகம் குறைந்தது. இரண்டாம் வேளை மருந்தோடு முற்றிலும் சௌகரியமாய் விட்டது. மூன்று வேளை மருந்தோடு நம்மைபபோல் சாபபிடலாஞர். அவர் இப்பொழுது இரத்தினகிரி மலைக்குப போய் வருகிருர்.

**கறுப்பாயி.**—சாமியார் காசுபணம் கேட்கிருரா?

**செல்லாயி.**—காசு பணமா! காசுபணம் அவர் நமக்குக் கொடுப்பார். பாலும் பழமுங் கொண்டுபோய்க் கொடுத்தால் வாங்கிக்கொள்கிருர். யாராகிலும் மிக்க அன்போடு பாலைக் காய்ச்சிக் கற்கண்டு போட்டு வாழைப்பழத்தோடு கொண்டு போய்க் கொடுத்தால், அவர்களைப் பார்த்து நகைத்து, பழத்தில் ஒன்றிரண்டைச் சாப்பிட்டுப் பாலைத் தான் கொஞ்சம்

சாப்பிட்டுத் தன் சீடனுக்குக் கொடுத்துவிடுகிறார். பால் கொண்டுபோய்க் கொடுக்கிறவர்களெல்லாம் காய்ச்சியே கொண்டுபோய்க் கொடுக்கிறார்கள். ஜனங்கள் கொண்டு போய்க் கொடுக்கிற பால் ஒரு பெரிய தவலை நிரம்பிப் போகிறது. வாழைப்பழமும் அதிகம் சேர்ந்துபோகிறது. சாமியாரைப் பார்க்க வருகிறவர்களோடு வரும் சிறுவர்களுக் கெல்லாம் சாமியார் பாலும் பழமுங் கொடுத்துச் சாப்பிடக் கட்டாயப்படுத்துகிறார். தேர் திருவிழாவிற்குப போகிறது போல் ஜனங்கள் அவரைப் பார்க்கப் போகிறார்கள். மேற்கே கரூர் முதற்கொண்டு கிழக்கே திருச்சிராப்பள்ளி பரியந் தம் ஜனங்கள் வந்து சாமியாரிடத்தில் மருந்தும் விபூதியும் வாங்கிக்கொண்டு போகிறார்கள். ஜனங்கள் சாமியாரைக் கீழ் விழுந்து கும்பிடப்போனால், தன்னைக் கும்பிடவேண் டாம் என்று சொல்லி, சாமியாருக் கருகிலிருக்கும் விநாயகரைக் கும்பிடச் சொல்லுகிறார். பணங் காசு கொடுப்பவர்கள் சாமியாரைக் கேட்காமல் அவருக் கருகி லிருக்கும் சட்டியில் போட்டுக்கொண் டிருப்பதால், அச் சட்டியில் அரைக்கால், கால், அரை, முழு ரூபா, நிறைந்திருக்கிறது. ஏழை நோயாளிகளுக்கு மருந்து கொடுப்பதோடு கைநிறையப் பணத்தையும் அள்ளிக் கொடுத்தனுப்புகிறார். சாமியார்மேல் பக்திவைத்த சிலர் சாமியார் இருக்க இடந்தேடிப பந்தல் போட்டுக்கொடுத்திருக் கிறார்கள். நமக் கெதிரில் வரும் ஜனங்களைப பார்த்தாயா ? எல்லாரும் சாமியாரிடத்தில் போய் வருகிறவர்களே !

**கறுப்பாயி.**—உன் புருஷனைத் தவிர வேறு யாராகிலும் சாமியா ரிடத்தில் மருந்து வாங்கிச் சாப்பிட்டுச் சௌக்கியமடைந் திருக்கிறார்களா ?

**செல்லாயி.**—ஐயோ ! அதை நான் என்னவென்று சொல்லு வேன். நான் இருக்கிற தெருவில் ஒருத்தி பிள்ளை பெற்றது முதல் வயிற்றுப் போக்கால் வாதைப்பட்டுக்

கொண்டிருந்தாள். மற்றொருவனுக்குக் கைகால் வயிறு முதலியன வீங்கி அவன் பிழைக்கமாட்டான் என்று சொல்லிக்கொண் டிருந்தார்கள். அடுத்த தெருவில் ஒரு வனுக்கு ஒரு கையும் காலும் விழுந்துவிட்டது. இம் மூவர்களும் சௌக்கியமடைந்து நாள் தோறும் சாமியாருக் குப் பால் பழம் கொண்டுபோய்க் கொடுத்துவருகிறார்கள். வெளியூரிலிருந்து வருபவர்களில் அனேகர் குணமடைந் திருக்கிறாகளென்று சொல்லிக்கொள்ளுகிறார்கள். சாமியா ரிடத்தில் இந்த மகிமை இல்லாமற் போனால், இவ்வளவு ஜனங்கள் வருவார்களா ?

இங்ஙனம் சாமியார் மகிமையைப் பேசிக்கொண்டே சாமி யார் அருகிற் சென்றார்கள். அங்கு ஜனங்கள் நிறைந்திருப்பதால் சாமியாரிடத்தில் நெடுநேரம் வார்த்தையாட முடியாமல் விநாயக ருக்குக் கீழ்விழுந்து நமஸ்காரம் செய்து விபூதி வாங்கிக்கொண்டு தாங்கள் கொண்டுபோன பாலேயும் பழத்தையும் கொடுத்துவிட்டு, அநேகர் சட்டியில் கால், அரை, போட்டுப போகிறதைக் கண்டு திரும்பினார்கள். சாமியாரிடத்தில் போகும் ஜனங்களின் கூட்டத் தைப் பார்த்துவரலாமென்று போகிற ஆண்பிள்ளைகளும், மெய்ம் மறந்து தாஙகளும் விநாயகருக்குக் கீழ்விழுந்து நமஸ்காரம் செய்து, விபூதி வாங்கிப பூசிக்கொண்டு போனார்கள்.

தம்மைத் தூரத்திலிருந்து பார்த்துக்கொண்டிருந்த ஒரு விருத்தப பிராமணரைச் சாமியார் சமீபத்தி லழைத்து உட்கா ரச் சொல்லி, “ அப்பா ! அடிமை பலவிடங்களைச் சுற்றித்திரியும் நாடோடி ! அடிமையிடத்தில் யாதொரு விசேடமும் இல்லை. நீரோ ! அநேகருககுப பின் வருவதை முன் சொல்லத் தகுந்தவ ரல்லவா ?” என்றார்.

**விருத்தப் பிராமணர்.**—ஆம் ! ஐயா ! நான் சோதிடம் சொல்லு கிறவனாதலால் அவரவர்களுடைய ஜாதகத்தைப பார்த்து அவரவர்களுக்கு நடக்கப்போகிறதைச் சொல்வதுண்டு.

**சாமியார்.**—நீர் பலருக்குப் பின்வருவதை முன் சொல்லுகிறவ

ராயிற்றே! உமக்கு ஒன்று வரப்போகிறதே! அதை அறிந்து கொண்டீரா?

**விருத்தப் பிராமணர்.**—எனக்கு என்ன வரப்போகிறதென்று ஐயாவே சொல்லவேண்டும்.

**சாமியார்.**—அடிமையே சொல்லவேண்டும் என்பதால் அடிமையே சொல்லுகிறேன். இன்றெட்டு நாளைக்குள் உமக்கு உயிரா யிருக்கும் ஒன்றை இழக்கப போகிறீர். அதன் பின் உமக்கு உயிருக் குயிராயிருக்கும் மற்றொன்றையும் இழப்பீர் அதன் பின் உம்மை யாவரும் இகழ்ந்து நிந்திப்பார்கள்.

**விருத்தப் பிராமணர்.**—சாமி சொல்வது ஒன்றும் எனக்கு அர்த்தமாகவில்லை.

**சாமியார்.**—அடிமை சொல்வது உமக்கு இப்பொழுது அர்த்தமாகாது. எட்டு நாளைக்குப் பின் அர்த்தமாகும். ஆனால் அந்த இக்கட்டைத் தடுக்கவேண்டுமாயின் ஒருபாய மிருக்கிறது. அவ்வுபாயத்தை அடிமை சொன்னாலும் நீர் கைக்கொள்ளப போகிறதில்லை. ஆனதால் அதைச் சொல்வது ஒரு பிரயோசனத்தையும் தராது.

**விருத்தப் பிராமணர்.**—சாமி சொல்வதுபோல் செய்வேன். தயவுசெய்து சொல்ல வேண்டும்.

**சாமியார்.**—"அவாவில்லார்க் கில்லாகுந் துன்பம். அஃதுண்டேல் தவாஅது மென்மேல் வரும்"

ஆசையற்றவர்களுககுத் துன்பம் வராது. ஆசை யுண்டாகில் எல்லாத் துன்பமும் உண்டாகும் என்ற செந்நாப்புலவரின் திருவாக்கைக் கவனித்தீரா? அதைக் கவனிக்காமற்போனாலும் பேராசை பெருநட்டம் என்ற உலக வாக்கையாவது நீர் கவனிக்கவேண்டும். உமக்குண்டாகிய ஆசையைப் போல் உம்மை அடுத்திருப்பவருக் கில்லாததால் உமக்கிருக்கும் ஆசையை விட்டுவிடுவது நன்று.

"எனைத்தானு மெஞ்ஞான்றும் யார்க்கு மனத்தானா மாணா செய்யாமை தலை"

உலகத்தில் ஒருவன் செய்யவேண்டிய தருமத்திலெல்லாம் மேலான தருமம் யாதெனில் யாருக்கும் துன்பம் தரும் ஒன்றைச் செய்யாமலிருத்தலே என்று சொல்வதால், நாம் பல சாஸ்திரங்களேயும் நீதி நூல்களேயும் வாசித்துப் பல னென்ன ? வாசித்தறிந்த விதம் நடக்காதவர்கள் உயிரோ டிருந்தும் உயிரற்றவர்களே !

" சுற்றத்தாற் சுற்றப் படவொழுகல் செல்வந்தான்
பெற்றத்தாற் பெற்ற பயன் "

ஒருவனுக்குச் செல்வமிருந்தால் அவன் சுற்றத்தாரைத் தரித் திரத்தில் விடாமல் அவர்களேக் காப்பாற்றுவதே அவனி டத்திலிருக்கும் செல்வத்தாலுண்டாகிய பலனென்றிருக்க, சுற்றத்தார் கையிலுள்ளதைக் கொள்ளேகொண்டு அவர்களேத் தரித்திரத்தில் விட்டுத் தாம் சௌகரியத்தோ டிருப்பதுவோ சிறப்பு ?

" நச்சப் படாதவன் செல்வம் நடுவூருள்
நச்சு மரம்பழுத் தற்று "

ஒருவனுக்கிருக்கும் செல்வம் பிறருக்குப் பயன்படாமற் போனுல் அவனே யாரும் விரும்பார் ; அது ஊர் நடுவே எட்டிமரம் பழுத்திருப்பதுபோல் பிரயோசன மில்லே. பெரிய தனவந்தர் தம்மிடத்திலிருக்கும் செல்வத் தைத் தாம் ஜீவித்திருக்கும் காலத்தில் நல்வழியில் உப யோகப் படுத்தாமல் வைத்து இறந்து போகிறதையும் அவர் களுக்குப் பின் அச்செல்வம் துர்விஷயத்தில் உபயோகப் படுகிறதையும் நாம் பார்த்திருப்பதால், நாம் ஜாக்கிரதையாக இருக்கவேண்டுமல்லவா ? அடிமை சொன்னவைகளே யோசி த்து நீர் பிறருடைய பொருளே இச்சித்து உமக்குள்ளதை இழப்பதைவிட உமக்குள்ளதே போதுமென்றிருந்தால், உம க்கு வரப்போகிற துன்பம் நீங்கும். அடிமை சொல்வதைக் கவனிக்காமல் நீர் கொண்ட கருத்தே மேலானதென்று

நடப்பீராஞல், அடிமை சொல்லியதுபோல் முடிவுபெறும் (என்று சொல்லித் தன் சீடனைப் பார்த்து, ஐயருக்குப் பாலும் பழமுங் கொடுக்கச் சொன்ஞர்).

சீடனல் உபசரிக்கப்பட்ட விருத்தப பிராமணர், உள்ளுக்குள் நகைத்து, நம்முடைய இரகசியத்தை எவ்விதமாகவோ அறிந்தோ, அல்லது நமது சம்மந்தி சூரியநாராயண ஐயர் கேட்டுக் கொண்டோ, சாமியார் நமக்குப் புத்திபுகட்டவந்தார் என்று தம் மனதி லெண்ணி, சாமியாரிடத்தில் விடைபெற்று நீங்கிஞர். விருத்தப பிராமணருக்குச் சொல்லியதைக் கேட்டிருந்த பச்சையப்ப பிள்ளையும் சாமியாரைக் கும்பிட்டுக் கைகட்டிக்கொண்டு நின்ருர். சாமியார் யாவருக்கும் விபூதி கொடுத்துப பச்சையப்ப பிள்ளைக்கு விபூதி கொடுக்கும்பொழுது, " அப்பா ! நீ அதிக துக்கப்படும்படியான சம்பவம் நடந்துவிட்டது. ஓடிபபோனவர்கள் சமீபத்தில் அகப்படுவார்கள். நீ சீக்கிரத்தில் மேன்மை அடைவாய். நீ கவலை கொள்ளவேண்டாம்" என்ருர்.

பச்சையபப பிள்ளை சாமியார் சொல்லியதைக் கேட்டு அதிசயப்பட்டுத் தன் மடியிலிருந்து பத்து ரூபா எடுத்துச் சாமியார் முன் வைத்து "இதை உபயோகபபடுத்திக்கொள்ளவேண்டும்" என்று கும்பிட்டாா.

**சாமியார்.**—(நகைத்து) அப்பா ! அடிமைக்குப் பணம் வேண்டுவதில்லை. அடிமை பணத்தைக் கொண்டு என்ன செய்கிறது. அடிமைக்கு வேண்டியதை இவ்வூரிலிருக்கும் புண்ணியவதிகள் கொண்டுவந்து கொடுககிருர்கள். உங்களிற் சிலர் என்னேடு வரவேண்டும் என்று பச்சையப்பபிள்ளையையும் அவரோடு சில கனவான்களையும் அறைவீட்டுக் கழைத்துப்போய் அங்கிருந்த கள்ளிப் பெட்டியைத் திறந்து காய்ச்சியூற்றி வைத்திருக்கும் மூன்று பாளஙகளை எடுத்துக்காட்டி, "இதைப பாருங்கள். இந்தப பாளத்தை இன்னும் இரண்டு தரம் புடம்போடவேண்டும். முதல் புடத்தில் ஏழரை மாற்றுப் பொன்ஞகும். இரண்டாம் புடத்தில் ஒன்பதரை

மாற்றுத் தங்கமாகும். இந்த இரண்டு பாளத்தையும் ஒன்றை ஐந்து தடவையும் மற்றதை எழுதடவையும் புடம் போட வேண்டும். அடிமை சொல்லிய விதம் செய்தால் எல்லாம் தங்கமாகும். பணம் வேண்டுங்காலத்தில் செய்துகொள்ளலா மென்று வைத்திருக்கிறேன். வாதம் சிவசொத் தாதலால், அடிமையைப போன்ற துறவிகளுக்கே சித்திக்கும். ஆன தால் உங்களிடத்தில் பணம் பெற்றுக்கொள்ளவேண்டிய காரண மில்லை. அடிமையைத் தேடி வருபவர்கள் அடிமை தடுத்தும் கேட்காமல் போட்டுப்போகிறதை ஏழைகளுக்கு வாரிவாரிக்கொடுத்தும் காசு சட்டி நிறைந்திருக்கிறது (என்று சொல்லிக்கொண்டே தம்மிடத்திற்கு அழைத்துவந்தார்).

**பச்சையப்ப பிள்ளை.**—(சாமியாரைப பார்த்து) சாமிகளே! தாங்கள் இவ்விடத்தில் தனித்திருபபது அடுக்காது. தாங் கள் தங்களுடைய சீடனோடு அடியேன் வீட்டில் வந்திருக்க வேண்டும். இரவில் திருடர்கள் வந்து தொந்தரை செய்யக் கூடும் என்று பயப்படுகிறேன்.

**சீடன்.**—(நகைத்து) சாமியிடத்தி லிருக்கும் பாளங்களைத் தெரு வில் எறிந்து எடுத்துக்கொண்டு போங்களென்றாலும் அவைக ளொன்றக்கும பிரயோசனமாகாது. நாங்கள் இவ்விடம் வந்த சிலநாட்களுககுபபின் இரவில் ஒருவன் வந்து காசு சட்டியைத் தொட்டான். கையை எடுதது்க் கொள்ள முடியாமல் வாயிலும் மூக்கிலும் இரத்தம் வா அவன் போட்ட கூக்குரலைக் கேட்டுச் சாமியார் எழுந்து போய், “சீ! நாயே! ஓடிபபோ” என்று சொன்ன உடன், சாமியாருக்குக் கும்பிடுபோட்டு ஓடிபபோனான். ஆனதால் நாங்கள் திருடர்களுககாவது மற்றவர்களுக்காவது பயப்பட வேண்டிய தில்லை.

**சாமியார்.**—அபபா! அடிமை காடே வீடாகக் கொண்டவன். அடிமைக்காக நீங்கள் கவலைகொள்ளவேண்டாம் (என்று யாவருக்கும் விடைகொடுத் தனுபபினார்).

சாமியாரிடம் விடைபெற்றுத் திரும்பிவருகிறவர்களி லொருவர், தம்மோடு வருகிறவர்களைப்பார்த்து, "சாமியாரிடத்தில் ஏதாகிலும் மகத்துவம் இல்லாமற்போனால் ஏராளமான ஜனம் அவரிடம் போகாது." என்றான்.

**மற்றொருவர்.**—சாமியார் விபூதி கொடுத்ததால் தீராத நோயெல் லாம் தீருகிறதாம்.

**மற்றொருவர்.**—எங்கள் வீட்டுக் கருகில் ஒருவருடைத்திய குழந்தை க்கு வலிபபுக் கண்டு வைத்தியனா அழைத்துவந்து காட்டி னார்கள். வைத்தியர் கொடுத்த மருந்தால் பிரயோசனப படாமல் குழைந்தையைத் தூக்கிககொண்டு போய்ச் சாமியாா காலில் போட்டுக் குழந்தையைக் காபபாற்றிக் கொடுகக வேண்டுமென்று பெற்றவள் சாமியார் காலில் விழுந்தழு தாள். சாமியார் நகைத்து, குழந்தை கையில் ஒரு வாழைப பழத்தைக கொடுத்து "குழநதை விளையாடுகிறது நீ என் அழுகிறாய்" என்று விபூதி கொடுத்தனுபபினாராம். குழ ந்தை வலிபபு நீங்கி வாழைப பழததைச் சாபபிடுகிறதைக் கண்ட தாய், துககத்தோடு சென்றவள் சந்தோஷத்தோடு குழந்தையைத் தூக்கிக்கொண்டு வந்தாள். அத்தெருவி லுள்ள வர்களெல்லாம் குழந்தையைப போய்ப் பார்த்து அதிசயப பட்டார்கள். நானும் என் மனைவியும் பார்த்துவந்தோம்.

**பச்சையப்ப பிள்ளை.**—சாமியார் சோதிடர் கோபாலையருக்குச் சொல்லியதைக் கேட்டீாகளல்லவா! சாமியார் நன்றாய் வாசித்தவராகக காண்கிறார். கோபாலையருக்குக் கோபம் வாாமல் அவர் கொண்ட எண்ணத்தை மாற்றப பல நியாயங் களை எடுத்துக் காட்டினார். அவர் சீடன் வைத்து வாசித்துக் கொண்டிருக்கும் புததகம் யாதென்று பார்த்தேன். அது சிவஞானசித்தியாாாகக் காணபபட்டது. ஆனதால் சாமி யார் சாத்திரங்களை வாசித்தவராகவுங் காண்கிறார். வாதம் சுடுவதிலும் கைதோந்தவா.

முனியாண்டி.—சாமியார் காட்டிய பாளம் ஒவ்வொன்றும் அரை வீசைக்குக் குறையாதென்று நினைக்கிறேன்.

மற்றொருவர்.—சாமியார் வாதம் சுடுவதில் கைதேர்ந்திருந்தாலும் அதில் பிரியங்கொண்டவராகக் காணப்படவில்லை.

பச்சையப்ப பிள்ளை.—அவருக்குப் பணத்தின் மேல் விருப்பம் இருந்தாலல்லவா, வாதத்தில் மனத்தைச் செலுத்துவார்.

முனியாண்டி.—சோதிடம் கோபாலையருக்கு எட்டு நாளைக்குள் என்னமோ நடக்கப்போகிறதென்று சொல்லியிருக்கிறார். சாமியார் சொல்லியது நடைபெறின் சாமியாரை முற்றிலும் நம்புவேன்.

பச்சையப்ப பிள்ளை.—நீ அவரை நம்பினாலென்ன! நம்பாமற் போனாலென்ன! ஊரே அவரை நம்பிச் சுகமடைகிறது. என்னிடம் தாசில்தார் சொல்லிய விதம் அவரும் சொல்லியிருக்கிறார். ஆனதால் சாமியார் வார்த்தையைக் கட்டாயம் நம்பவேண்டியதே!

இவ்விதம் சாமியாரைப் புகழ்ந்து அவரவர் தங்கள் தங்கள் வீடுதிக்குச் சென்றார்கள்.

---

## 11—ம் அத்தியாயம்

திருச்சிராப்பள்ளிக் கடுத்த ஸ்ரீரங்கத்தில் இரவு எட்டுமணிக்கு சுவாமி தரிசனை செய்துகொண்டு கோட்டைக்குப் போகும் ஜனங்களில், அம்மாமண்டபம் மார்க்கமாக வந்தவர்களிருவர் மற்றவர்களை முன்போக விட்டுப் பின்னால் மெதுவாக நடந்து போகும்பொழுது, ஒருவர் மற்றவனைப் பார்த்து, "இராமகிருஷ்ணா! உனக்கு சுவாமி தரிசனை நன்றாய்க் கிடைத்ததா?" என் கண் பார்வை மட்டாய்ப்போனதால் நான் இந்தத் தடவை நன்றாய்ப் பார்க்கவில்லை. பகலில் வந்திருப்போமானால் சுவாமி தரிசனை நன்றாய்க் கிடைத்திருக்கும்.

இராமகிருஷ்ணன்.—ஆம்! அப்பா! இன்று காலையில் தாங்கள்

மாலையில்போகலாம் என்று சொன்னதால் நான் தடுத்துச் சொல்லாம லிருந்தேன். எனக்கு சுவாமி தரிசனை நன்றாய்க் கிடைத்தது.

இவர்கள் பேசுவதைக் கேட்டுக்கொண்டு வந்த ஒருவன் அங்குப போகிறது கோபாலையர்போல் காணப்படுகிறது. ஆ! ஆ! அவர்தான் என்று அவர் அருகில் வந்து "சோதிடரே! இரவில் சுவாமி தரிசனைக்கு வந்ததே விசேடம். பகலில் வந்தாலும் சுவாமி பள்ளிகொண்டிருக்கு மிடத்தில் வெளிச் சத்தாலன்றி சுவாமியைப பார்க்கமுடியாது. ஆனதால் பகலில் வந்தாலும் இரவில் வந்தாலும் ஒன்றே" என்று தான் விரைவாக நடந்துபோனான்.

**கோபாலையர்.**—இராமகிருஷ்ணு! அவர் யார் உனக்குத் தெரியுமா?

**இராமகிருஷ்ணன்.**—எனக்குத் தெரியாது. தாங்கள் எங்காகிலும் சோதிடம் சொல்லும்பொழுது தங்களைப பார்த்திருக்கக்கூடும்.

**கோபாலையர்.**—அப்படித்தான் இருக்கும். நாம் வரும்பொழுது சித்திரை வீதியில் மேள சப்தங் கேட்டதே! அது என்ன? இது ஆடிமாதம் ஆதலால் விவாகம் நடக்காதே!

**இராமகிருஷ்ணன்.**—ஓர் பெண் புஷ்பவதியானதால் விமரிசையாக வரிசை எடுத்துக்கொண்டு போகிறார்கள். நான் தங்களை விட்டுத் தங்களுடைய மிதியடியை வைத்துப்போன இடத்திலிருந்து எடுக்கப போனபொழுது பார்த்தேன்.

**கோபாலையர்.**—(பெருமூச்செறிந்து) நான் செய்தது பெரிய முட்டாள் வேலை! நான் வேறிடத்தில் உனக்குப் பெண் கொண்டிருந்தால் மேன்மை அடைந்திருக்கலாம்! அந்தப் பிச்சைக்காரக் கழுதை வீட்டில் பெண்கொண்டது தப்பிதம்! பெண்ணுக்கு விவாகத்தில் அனுபபிய வரிசையைபபோல் இபபொழுதும் அனுபபி நம்மை ஏமாற்றிவிடுவார்களென்று வரிசைக்குப் பதிலாக ரூபாவாகக் கொடு என்று கேட்டால்

சரியான மறுமொழி கிடைக்கவில்லை. ஆடிமாதம் முடியப் போகிறது. ஆவணிமாதத்திலாவது நிஷேதத முகூர்த்தம் வைத்துக்கொள்ளவேண்டு மென்ற எண்ணம் அவர்களுக் கில்லைபோல் காண்கிறது.

**இராமகிருஷ்ணன்.**—அப்பா! தாங்கள் இதுபரியந்தம் இவ்விஷயத்தைக்குறித்து என்னிடத்தில் பேசவில்லை. இன்று தாங்கள் பேசியதால் என்மனதி லுள்ளதைத் தங்களுக்குச் சொல்ல வேண்டும்.

**கோபாலையர்.**—நான் தப்பிதமாகச் சூரியநாராயண ஐயர் மகளைக கொண்டேன் என்றுதானே சொல்லப்போகிறாய். நான் என்ன செய்வேன்! உன் தாயார், அன்னபூரணி அதிக சுந்தரமாக இருக்கிறாளென்றதாலும், நன்றாய் வாசிக்கவும் வீணை மீட்டவும் பாடவும் தெரியுமென்றதாலும், சூரிய நாராயண ஐயர் தன் மகளுக்கு ஸ்ரீதனமும் வரிசையும் மதிப்பாகச் செய்வாரென்றெண்ணியே மோசம்போனேன்.

**இராமகிருஷ்ணன்.**—நான் ஸ்ரீதனத்தைக்குறித்தும் வரிசையைக் குறித்தும் கவனிக்கவில்லை.

**கோபாலையர்.**—உன் தாயார் சொல்லியவிதம் பெண் சுந்தரமாக இல்லை என்பதோ உனக்குக் கவலை? நாம் என்ன செய்யலாம்! அவரவர்கள் அதிர்ஷ்டம்போல் பெண் கிடைக்கும். நான் இளையவனாய் இருக்கும்பொழுது எத்தனையோ சுந்தரமான பெண்களையெல்லாம் எனக்குக் கொடுக்கிறேன் என்றார்கள். என்னுடைய அதிர்ஷ்டஈனத்தால் சுந்தரமான பெண் கிடைக்காமல் குரங்குபோலிருக்கும் உன் தாய் கிடைத்தாள். உன் தாய் அவலக்ஷணமாகத் துவக்கத்தில் காணப்பட்டாலும், பின் என் கண்ணுக்கு அவள் இலக்ஷணமுள்ளவளாகக் காணப்பட்டாள். முதல் பார்வையில் அவலக்ஷணமாகக் காணப்படும் உருவமெல்லாம் நாம் அடிக்கடி பார்க்க நேரிட்டால் நாளடைவில் அருவருப்பைக் கொடுக்காது. நீயும் உன் மனைவியை இடபொழுது அவலக்ஷணமுள்

ளவளென்று நினைத்தாலும் பிறகு நீ அவளை இலக்ஷணமுள்ளவளென்றே சொல்லுவாய். உனக்கு இந்த விஷயத்தில் கவலைவேண்டாம்.

**இராமகிருஷ்ணன்.**—அழகைக்குறித்தும் ஸ்ரீதனத்தைக் குறித்தும் அவர்கள் கொடுக்கும் வரிசையைக்குறித்தும் நான் பேசவில்லை. அவர்களுடைய எளிமையைக்குறித்தே கவலை கொண்டிருக்கிறேன்.

**கோபாலையர்.**—தக்க இடங்களில் பெண்கொண்டு உன் சிநேகிதர்களெல்லாம் மதிப்பாக இருக்கிறார்களே! அவர்களைப் போல் உனக்குக் கிடைக்காமல், ஓர் ஏழை வீட்டில் பெண் கொண்டோம் என்று கவலைகொண்டிருக்கிறாய் எனக் காணப்படுகிறது. நீ உன் மாமனாரைப் பரம ஏழை என்று நினைக்கவேண்டாம். முன் ஸ்ரீதனமாகக்கொடுத்த தொகையைப்போல் இன்னும் இரண்டாயிரம் வாங்காமல் விடேன். நீ அதுவிஷயத்தில் சந்தோஷமாக இருக்கவேண்டும்.

**இராமகிருஷ்ணன்.**—அவர்களை மீண்டும் இரண்டாயிரம் கேட்டால் அவர்களால் கொடுக்க முடியுமா?

**கோபாலையர்.**—ஏன் கொடுக்க முடியாது?

**இராமகிருஷ்ணன்.**—அவர்களுக் கிருந்த நிலத்தில் பாதிக் கதிகம் விற்று விவாகச் செலவும் தாமே செய்ததோடு ஸ்ரீதனமாக இரண்டாயிரமும் கொடுத்திருக்கிறார். முன் கொடுத்தது போக இன்னும் இரண்டாயிரம் கொடு என்றால் அவர் எங்கிருந்து கொடுப்பார்?

**கோபாலையர்.**—தனக்கிருக்கும் மற்ற நிலத்தையும் விற்று ஏன் கொடுக்கக்கூடாது?

**இராமகிருஷ்ணன்.**—அவர்களுடைய சீவனார்த்தத்துக்கு ஆதாரமாக இருக்கிற நிலத்தை விற்க மனம் வருமா? அதவா நிலத்தை விற்றுவிட்டால் பின் அவர்கள் சீவனார்த்தத்துக்கு என்ன செய்வார்கள்?

**கோபாலையர்.**—அவர்களுடைய சீவனார்த்தத்துக்கு இருக்குமோ

இருக்காதோ அதை நாம் கவனிக்கவேண்டியதில்லை. நமக்குக் கிடைக்கவேண்டியதைக் கவனித்து வாங்கவேண்டியதே நமது கடமை.

**இராமகிருஷ்ணன்.**—இவ்விஷயமாக நான் என் தாயாரிடத்தில் பேசியபொழுது அவர்களும் தங்களைபபோலவே பேசினார்கள். அப்பா! நான் சொல்வதைச் சற்றுக் கவனித்துக் கேட்கவேண்டும். என் மாமனாரைத் தாங்கள் அவருக்கிருக்கும் பாக்கி நிலத்தை விற்கும்படி கட்டாயபபடுத்தினால், அவர் அதை விற்றுத் தாங்கள் கேட்கும் தொகையைக் கொடுப்பாரென்பதற்குச் சந்தேகமில்லை. அவருககிருக்கும் நிலத்தை விற்ற மறுநாளே அட்சயபாத்திரம் எடுக்கப் போகவேண்டியதே! அவர் அவ்விதம் பிச்சையெடுக்க வெளிப்பட்டால் பார்க்கிறவர்கள் நம்மைக் கேவலமாகப பேசுவார்களே! அது விஷயத்தைத் தாங்கள் கவனித்தீர்களா? அவர்களிடத்திலிருக்கும் சொத்தையும் பெண்ணையும் நாம் கைக்கொண்டு அவர்களைச் சாப்பாட்டுக் கலையவிடுவது தெய்வத்துக்கேற்காது. தாங்கள் என் தாயை விவாகம் செய்துகொண்ட காலத்தில் தங்களுக்கென்ன ஸ்ரீதனம் கிடைத்தது?

**கோபாலையர்.**—எனக்கு விவாக மாகுங்காலத்தில் மாப்பிள்ளை வீட்டாரே பெண் வீட்டார் கேட்கும் நகைகளைப் போட்டு விவாகச் செலவையும் தாமே போட்டு விவாகம் செய்து கொள்ளவேண்டும் ஆனதால் எனக்குத் தனம் கிடைக்கவில்லை. என் மாமனருக்குப் பணம் செலவில்லாமற் போயிற்று. அதை ஏன் கேட்கிறாய்? அந்தக் காலமா இந்தக் காலம். இந்தக் காலத்தில் பெண் மலிந்திருக்கிறது; பெண் விலைப்படப் பணம் கொடுக்க வேண்டியதே!

**இராமகிருஷ்ணன்.**—ஆம்! அந்தக் காலம் பெண்ணை விலைக்கு வாங்கினீர்கள். இக்காலத்தில் பிள்ளையை விலைக்கு விற்கிறீர்கள்.

**கோபாலையர்.**—புதிதாக ஏற்பட்ட வழக்கத்தை யாவரும் கைக்

கொண்டிருப்பதால் நாமும் கைக்கொள்ள வேண்டியதே! நீ என்ன செய்யவேண்டு மென்கிறாய்?

இராமகிருஷ்ணன்.—நான் சொல்வதைக் கேட்டு என்னைக் கோபிக்க வேண்டாம். என் மாமனார் இஷ்டப்பட்டுக் கொடுப்பதைப் பெற்றுக்கொண்டு அவர் மனம் சந்தோஷமடைய நடப்பதே உத்தமம்.

கோபாலையர்.—என்ன காரணத்தால் அவ்விதம் சொல்லுகிறாய்?

இராமகிருஷ்ணன்.—அன்னபூரணி எனக்கு ஓர் கடிதம் எழுதியிருக்கிறாள். அக்கடிதத்தைத் தாங்கள் வாசித்தால் தங்கள் மனம் கல்லாக விருந்தாலும் கரைந்துபோகும் என்பதற்குச் சந்தேகமில்லை.

கோபாலையர்.—ஆ! ஆ! சபாஷ்! நன்றாக இருக்கிறது! பெண்டாட்டி புருடனுக்குத் தலையணை மந்திரம் போட்டுப் புருடனை வசப்படுத்திக்கொள்கிறாளென்று சொல்லுவார்கள். அவ்விதம் தலையணை மந்திரம் போடுமுன் உனக்குக் கடிதம் எழுதியே வசப்படுத்திக்கொண்டவள் வீட்டுக்கு வந்தபின் என்ன செய்வாளோ தெரியவில்லை. அடே! உன்னைப் பெற்று உனக்கிந்த வயது வரும் பரியந்தம் வளர்க்கவும் உன்னைப படிக்க வைக்கவும் நீ கேட்டதை யெல்லாம் வாங்கிக் கொடுக்கவும் எவ்வளவு பணம் பிடித்திருக்கும். நீ மனிதனைபின் உன் தாய்தந்தையால் அடைந்த எல்லாவற்றையும் மறந்து, உனக்கு வந்த பெண்டாட்டியே உனக்குக் குரு தெய்வம் என்று நினைத்து, அவள் எழுதிய கடிதத்தால் மயங்கிபோனாய். போ! போ! உன் மாமனார் வீடே உனக்குச் சொந்தம். நாங்கள் உனக்குக் கடனுக் குழைத்தோம்.

இராமகிருஷ்ணன்.—அப்பா! தாங்கள் என்னைக் கோபிப்பது நியாயமல்ல! நான் என் பெண்டாட்டி வார்த்தையைக் கேட்டு உங்களுக் கோர் கெடுதியைச் செய்யத் துணிந்தவ

னல்ல ! என்னுடைய மாமனுருடைய நிலைமையை யறிந்து நடக்கும்படி தங்களைக் கேட்டுக்கொண்டதேயன்றி வேறல்ல.

**கோபாலையர்.**—அடே ! இராமகிருஷ்ணு ! நீ உன் மாமனூர் மேல் பரிதாபப்பட்டு என்னிடத்தில் சொல்லுவதெல்லாம் பிரயோஜனபபடாது. வரிசைக்காக இரண்டாயிரம் கொடுக்காமல் அன்னபூரணி என் வீட்டில் வந்து வாழமாட்டா ளென்று நான் அனேகரிடத்தில் சொல்லிவிட்டேன்.

**இராமகிருஷ்ணன்.**—தங்கள் கருத்தைப பலரிடத்தில் சொல்லும் பொழுது என் காதிலும் விழுந்திருக்கிறது. தாங்கள் என் நன்மையைக் கருதி எனக்குப பொருள் சேர்க்க யோசிப்பதை நான் அறியாதவனல்ல. ஒருவரை நோகச்செய்து அவர்களுடைய பொருளைக் கொள்ளைகொண்டு வாழ்வதை விட நாம் ஒருவர் பொருளை விரும்பாமல் நமக்கு நாராயணன் கொடுத்ததே போதுமென் றிருப்பது உத்தமம் என்று சொல்ல வந்தேன்.

**கோபாலையர்.**—அடே ! நீ சொல்வதைப பார்த்தால் நான் ஒருவனுடைய பொருளைக் கொள்ளையடிக்க முயல்கிறதைப் போலும் அது கூடாதென்று நீ தடுக்கிறதுபோலும் அல்லவா இருக்கிறது. நான் லாலாபேட்டைக்குச் சோதிடம் பார்க்கப் போயிருந்த பொழுது எனக் கதிகம் பொருளாசை இருக்கிறதென்று ஒரு சாமியார் என்னைப பயமுறுத்தி அனுப்பினுன். அவன் சொன்னதுபோ லல்லவோ நீயும் சொல்லத் துணிந்தாய்.

**இராமகிருஷ்ணன்.**—அந்தச் சாமியார் தங்களுடைய கருத்தை யறிந்தே சொல்லியிருக்கிறுர். நீங்கள் எனக்காகப் பெருந் தொகையைச் செலவு செய்திருக்கிறீர்கள். நான் உழைத்தே அக்கடனைத் தீர்க்கவேண்டும். நான் சொல்லுகிற விதம் தாங்கள் கேட்கிறீர்களா ? கேட்கமாட்டீர்களா ?

**கோபாலையர்.**—நீ என்ன சொல்லப் போகிருய் ? நான் என்ன கேட்கவேண்டும் ?

இராமகிருஷ்ணன்.—தாங்கள் வரிசைக்காகப் பணம் கேட்கக் கூடாது. அவர்கள் பிரியப்பட்டுச் செய்வதையே ஒப்புக் கொள்ளவேண்டும்.

கோபாலையர்.—அந்த எண்ணத்தை விட்டுவிடு.

இராமகிருஷ்ணன்.—உங்கள் கொடிய எண்ணத்தை மாற்ற மாட்டீர்களோ ?

கோபாலையர்.—என் எண்ணததை மாற்ற மாட்டேன் என்று ஆயிரம் தரம் சொல்லிவிட்டேன்.

இராமகிருஷ்ணன்.—தாங்கள் சொல்லுவது உண்மைதானே.

கோபாலையர்.—உண்மை யென்று பலர் நடக்கும் காவேரி யாற்றுப பாலத்தில் நின்று சொல்லுகிறேன்.

இராமகிருஷ்ணன்.—நீங்கள் கொடிய துன்மார்க்கர்கள். உங்களுக்கா நான் பிள்ளையாய்ப பிறக்கவேண்டும். அடா ! படுபாவி ! நீ ஊரார் பொருளைக் கொள்ளையிடவா இருககிறாய் ! நீ செய்யப போகும் கொடுமையைக் கண்டு மனவருத்தத்தோ டிருப்பதைவிட இறக்கிறதே மேல் என்று நினைக்கிறேன். இதை எடுத்துக்கொள் பேராசை கொண்ட பேயே ! (என்று தன்னிடத்திலிருந்த மூட்டையைத் தன் தந்தையிடம் போட்டு, கிருஷ்ணா என்ற சபதத்தோடு காவேரியாற்றில் குதித்தான்).

இராமகிருஷ்ணன் கோபமாய்ப பேசுவதை எபபொழுதும் கேட்டறியாத அவன் தந்தை அவன் பேசுவதைக் கேட்டு மரம் போல் அசைவற்று நின்றார். ஆடிமாதம் காவேரியாற்றில் போகும் வெள்ளத்தில் நடு ஆற்றில் இரவில் குதித்துவிடவும், "ஐயோ! மகனே ! ஐயோ ! மகனே !" என்று ஓடி ஆற்றைப பார்த்து ஒன்றும் தெரியாம லிருக்கிறதைக் கண்டு "என் மகன் போனபின் நான் இருந்தென்ன பலன். நானும் ஆற்றில் விழுந்துவிடுகிறேன்" என்று ஆற்றில் விழப்போகிறவரைப் பாலத்தில் நடக்கும் ஜனங்கள் பிடித்துக்கொண்டு, "என்ன சமாசாரம் ? என் உன் மகன் ஆற்றில் குதித்து விட்டான்?" என்று கேட்டுக்கொண்டிருந்தார்

கள். சிலர் ஆற்றைப் பார்த்து "அதோ தலை தெரிகிறதுபோ லிருக்கிறது. இபபொழுது ஒன்றுந் தெரியவில்லை" என்று ஆற் றைப் பார்த்துக்கொண்டிருந்தார்கள்.

**கோபாலையர்.**—(தன்னைப் பிடித்திருக்கிறவர்களைக் கெஞ்சி) ஐயோ! அப்பா! என்னை விட்டுவிடுங்கள். நானும் என் மகனோடு காவேரியாற்றில் விழுந்து சாகிறேன். நான் இனி என்ன செய்யபபோகிறேன். எனக்கிருக்கும் ஒரு மகனைக் கொண்டு உயர் நிலைமையி லிருக்கலாமென் றிருந்தேனே! ஐயோ! மகனே! என்னை மோசம்செய்து போய்விட்டாயே! அடா! என் கண்மணி! இவ்விதமான கருத்து உன்னி டத்திலிருக்கிறதென்று அறியாமல் மோசம்போனேனே! நான் அறிந்திருந்தால் உன் மனம்போல் நடந்திருப்பேனே! சாமியார் சொல்லியதுபோல் என்னை யாவரும் நிந்திக்கவோ இந்த வேலை செய்தாய்! உன் நற்குணத்தை அறிந்து சந் தோஷப்படாமல் கோபங் கொண்டதாலோ நீ இறக்கத் துணிந்தாய்? நீ போய்விட்டாயே! இனிமேல் இந்தத் தளர்ந்த வயதில் யார் ஆதரிப்பார்கள்? நீ என்னை விட்டுப் போன பின் நான் உயிரோடிருக்க முடியுமா? உன்னைக் காவேரி யாற்றுக்குப பலி கொடுக்கவா நான் கோயம்புத்தூரி லிருந்து உன்னை அழைத்துக்கொண்டு வந்தேன்! லாலாபேட்டை யில் சாமியார் சொல்லியதைக் கேட்டு யாரோ என் இரகசி யத்தை அவருக்குச் சொல்லியிருந்ததால் அதைக் கேட்டுக் கொண்டு சாமியார் சொன்னார் என்றிருந்தேனே! அவர் சொல்லியதுபோல் உன்னைப பறிகொடுத்தேன். நான் கோயம்புத்தூருக்குப போய் உன் தாயாருககு என்ன சொல் லுவேன். நீ மாண்டா யென்று உன் மனைவிக்கு எவ் விதம் சொல்லுவேன்! "நீ இரண்டாயிரம் வேண்டும்! இரண்டாயிரம் வேண்டும் என்று சொல்லிக்கொண் டிருந்த தால் உன் மகன் மாண்டான்" என்று யாவரும் என்னைக் கேவலமாகப் பேசுவார்களே! அதற் கென்ன செய்வேன்.

(என்று கடகட வென்று புரண்டழுது எழுந்தோடி ஆற்றைப் பார்த்து) இராமகிருஷ்ணா ! இராமகிருஷ்ணா ! நீ வந்துவிடு. நீ சொல்வதுபோல் நடக்கிறேன் (என்று கதறினார்).

சிலர் அவரைப பார்த்து "ஐயா ! பெரியவரே ! நீர் காலம் போக்காமல் சிலரைக் காவேரியின் இருகரையையும் போய்ப் பார்க்கும்படி அனுபபுவதை விட்டு நீர் அழுதுகொண்டிருப்பதில் பிரயோசன மில்லை" யென்று சொன்னார்கள். சிலர் "நாங்களே போய்ப் பார்த்துவருகிறோம்" என்று ஓடினார்கள். சிலர் "காவேரிக் கரையில் எங்கே போயப பார்க்கிறது : இந்நேரம் ஆள் வேலை தீர்ந்திருபபான் : காலை கல்லணைக்குப போனால் பிரேதம் அகப் படக்கூடும்" என்றார்கள். சிலர் "ஆடிமாத வெள்ள மென்று அறியாமற் போனீர்களா ! ஆளைக் கொண்டுபோய் எவ்விடத்தில் மணலில் செருகியதோ ? தேடிப்பார்பபதில் பிரயோஜன மில்லை" என்றார்கள்.

இராமகிருஷ்ணன் ஆற்றில் குதித்த விடத்தில் பெருங் கூட்டம் இருபபதைக் கண்ட போலீஸ் சேவகர் போய்ப்பார்தது, கோபாலையரை அழைத்துபபோய் ஆண்டாத் தெருவில் அவரைத் தெரிந்தவர்கள் வீட்டில் விட்டு நீங்கினர். கோபாலையர் இரவெல்லாம் அழுதுகொண்டிருப்பதை வீட்டி லிருப்பவர்கள், கண்டு பரிதாபபபட்டு மறுநாள் காலையில் காவேரியாற்றின் இரு கரையையும் பார்க்கும்படி ஆள்களை அனுபபிவிட்டு, கோபாலையரைக் கல்லணைக் கழைத்துக்கொண்டுபோய்ப் பிரேதங் கிடைக்காமல் திரும்பிவந்தார்கள். காவேரியாற்றுக் கரையைப் பார்க்கப் போனவர்களும் நெடுந்தூரம் போய்ப்பார்த்தும் பிரேதம் அகப்படவில்லை யென்று வந்தார்கள். கோபாலையர் மூன்று நாள் பரியந்தம் அங்கிருந்தும் பின் அவரை வைத்திருப்பதில் பிரயோசன மில்லையென்று அவரைக் கோயம்புத்தூருக்குப் போகும்படி ரெயில் ஏற்றி அனுப்பினார்கள்.

## 12—ம் அத்தியாயம்

கோயம்புத்தூரில் பேரூருக்குப் போகும் மார்க்கத்தில் தெலுங்கு பிராமணர்கள் வீதிக்கடுத்த ஓர் வீட்டில் காலையில் பத்து மணிக்கு கோபாலையர் ஓடி வந்து விழுந்து கோவென்றலறினார். வீட்டுக்குள்ளிருந்த அவர் மனைவி ஓடி வந்து, "என்ன! என்ன! இராமகிருஷ்ணன் எங்கே?" என்று துடி துடித்துக் கேட்டாள்.

**கோபாலையர்.**—ஐயோ! ருக்மணி! நான் எவ்விதம் சொல்லுவேன்?

**ருக்மணி.**—எவ்விதம் சொல்லுவீர்களா? ஐயோ! ஏதோ மோசம் நடந்ததுபோ லிருக்கிறதே! ஐயோ! சொல்லுங்களேன்!

**கோபாலையர்.**—ஐயோ! மகனே! உன்னைக் காவேரியாற்றுக்குப பலி கொடுத்து வந்து இன்னும் நான் உயிரோடிருக்கிறேனே! நான் கொடும்பாவி.

**ருக்மணி.**—(அச்சொல்லைக் கேட்டவுடன்) ஐயையோ! மகனே! மகனே! (என்று வயிற்றிலும் மார்பிலும் அறைந்துகொண்டு கடகட வென்று புரண்டு) அடா! மகனே! என் வாயில் மண்ணைப போட்டுவிட்டாயா! ஐயோ! நான் இனி என்ன செய்வேன்! ஐயோ! அப்பா! சுவாமி தரிசனைக்கு அப்பாவோடு போய் வருகிறேன் என்று போனாயே! ஐயோ! நீ திரும்பி வந்து உன் முகத்தைக் காட்டாமல் மோசம்செய்து போய் விட்டாயே! ஐயோ! மகனே! இனிமேல் நான் யாரை நம்பி உயிரோடிருப்பேன்.. உன்னைப் பெற்ற வயிறு பற்றியெரிகிறதே! என் பாழும் வயிறு செய்த பாக்கியம் இது தானோ! ஐயோ! மகனே! என்னையும் உன் தந்தையையும் காப்பாற்றுவாய் என்றிருந்தேனே. எங்களைக் காப்பாற்றும் மார்க்கம் இதுதானோ! ஐயோ! அப்பா! ஆடிமாதத்து வெள்ளத்தில் அகப்பட்டோ மாண்டாய்! உன்னை வெள்ளம் இழுத்துக்கொண்டுபோய் மணலில் செருகியபொழுது

உன் உயிர் எப்படித் துடித்ததோ ! எவ்வளவு தண்ணீர் குடித்தாயோ ! நீ திக்குமுக்காடியோ உயிர் விட்டாய். அப்பா ! இனிமேல் நான் யாரைப் போய் இராமகிருஷ்ணு என்று கூப்பிடுவேன் ! என்னை யார் வந்து அம்மா என்று கூப்பிடுவார்கள்! ஐயோ ! அப்பா ! நீ உன் மனைவியோடு கொஞ்சிக் குலாவுவதைப் பார்த்துச் சந்தோஷ மடையலா மென் றிருந்தேன். என் பாழுங்கண் அதைப் பார்க்கக் கொடுத்துவைக்காமற் போனதே ! நான் உன் மனைவியை எவ்விதம் பார்ப்பேன் ; நீ மாண்டாயென்று அவளுக்கு எவ்விதம் சொல்லுவேன் ? ஐயோ! அப்பா ! உனக்கு நீண்ட ஆயுள் என்று உன் அப்பா சொன்னாரே ! உனக்கு அற்ப ஆயுளாய்ப் போனதே ! நான் பெற்ற வரம் இவ்வளவு தானு !

இவ்விதம் சொல்லி அழுதுகொண் டிருக்கும்பொழுது அண்டை அயலார் வந்தனர். பெண் பிள்ளைகளெல்லாம் ருக்மணியைக் கட்டிக்கொண்டழுதார்கள். ஆண் பிள்ளைகள் கோபாலையரோடு துக்கப்பட்டுப பின் அவருக்குத் தேறுதலை சொல்லி நீங்கினார்கள். பெண் பிள்ளைகள் ருக்மணி யடைந்திருக் கும் துக்கத்தைப் பார்க்க முடியாதவர்களாகி, அவளுக்குத் தைரியம் சொல்லி நீங்கினார்கள். யாவரும் நீங்கிய பின் ருக்மணி தன் நாயக னைப் பார்த்து, "இராமகிருஷ்ணன் காவேரி யாற்றில் நீராடும் பொழுது நீங்கள் அருகில் இல்லையா ? வேறு மனிதர்கள் சமீபத் தில் இல்லாமலா போனார்கள் ?" என்றாள்.

கோபாலையர்.—ருக்மணி ! அவன் ஆற்றில் நீராடும்பொழுது அவனுக்குக் கெடுதலாக முடியவில்லை. அவன் வேணு மென்றே காவேரி யாற்றில் விழுந்திறந்தான் (என்று நடந் ததைச் சொன்னார்).

ருக்மணி.—(தன் நாயகன் சொல்லியதைக் கேட்டுப் பிரமித்து நெடுநேரம் மௌனமாயிருந்து தன் நாயகனைப் பார்த்து)

தாங்கள் நெல்வட்டிக்குக் கொடுக்கலாம் அல்லது நிலமாவது வாங்கலாமென்று கொண்டுபோன ரூபா எங்கே?

**கோபாலையர்.**—இராமகிருஷ்ணனே அதைத் தன் மூட்டையில் வைத்துக் கட்டியிருந்தான். அவன் மூட்டையை நான் அவிழ்க்கவில்லை (என்று மூட்டையைக் கொடுத்தார்).

ருக்மணி மூட்டையை அவிழ்த்து, அதில் துணிகளும் ஒரு புத்தகமும் இருக்கக் கண்டு, புத்தகத்துக்குள் நோட்டுகள் இருக்குமென்று பார்த்து, அதில் நோட்டுகளில்லாமல் ஒரு கடிதம் உறையோடு இருப்பதை எடுத்து, "மூட்டையில் நோட்டுகளில்லை; இதற்குள் ளிருக்கும்போலிருக்கிறது பாருங்கள்" என்று தன் நாயகனிடம் கொடுத்தாள்.

கோபாலையர் அதை வாங்கி இது பளுவாக வில்லையே என்று கடிதத்தின் உறையைக் கிழித்து அதில் நோட்டுகளில்லாம லிருப்பதை யறிந்து திடுகுற்று, உறைக்குள்ளிருந்த கடிதத்தை எடுத்து வாசித்தார். அதில் அடியிற் கண்ட விதம் இருந்தது.

தந்தை தாயே!

என்னைப் பெற்று வளர்த்துப் பள்ளியில் வைத்துக் கல்வி கற்கச் செய்து என்னை மனிதனுக்கி விவாகமும் செய்துவைத்தீர்கள். இதனால் உங்களுக்குப் பெரும் பொருள் செலவாகி யிருக்கும் என்பதற்குச் சந்தேக மில்லை. உலகத்தில் நான் நாலு பணத்தோடு மேன்மையாக இருக்கவேண்டு மென்கிற எண்ணத்தோடு என் மனைவிக்கு ஸ்ரீதனமாக இரண்டாயிரம் கொடுக்கவேண்டு மென்றதில் என் மாமனர் பின்வாங்காமல் தன் மகளும் மருமகனும் சௌகரியமாய் இருந்தால் போதுமென்று நீங்கள் கேட்டதைக் கொடுத்தார். அவர் கொடுத்ததோடு திருப்தியடையாமல் மீண்டும் இரண்டாயிரம் வரிசைக்காக நான் கேட்பதாகக் கேட்கத் துணிந்தீர்கள். என் மாமனருக்குப் பெருந்தன மிருந்தால் தோஷமில்லை என்று எண்ண இடந்தரும். அப்படிக்கில்லாததால் நீங்கள் கேட்பதை என் மாமனர் கொடுப்பாராயின்,

பின் அவர் அட்சய பாத்திரம் எடுக்கவேண்டியதே ! என் மாமனு ரிடத்தில் நாலாயிரம் பெற்று நாம் சௌகரியமாக இருக்கவும், என் மாமனர் தன் குடும்பத்தோடு துன்பத்தை அனுபவித்துக் கொண்டிருப்பதை நாம் பார்த்துக்கொண்டிருப்பது நியாயமில்லை யென்று என் தாயாரிடத்தில் சொன்னபொழுது, அவர்கள் ஏருது நோயைக் காகம் கவனிக்கவேண்டியதில்லை என்ற நியாயத்தோடு பதில் சொல்லி என்னையே கோபித்துக்கொண்டார்கள். நான் இவ்விஷயத்தைக் குறித்து என் தந்தையிடம் பேசுகிறதில்லை. ஆயினும் இதற்குள் அடக்கம் செய்திருக்கும் கடிதத்தை என் மனைவி எனக்கு எழுதியதைக் கண்டபின் என் தந்தைக்கு என் மாமனருடைய எளிய நிலைமையை எடுத்தோதினேன். அவர் தான் கொண்ட கருத்தை மாற்றவே யில்லை. என் மாமனர் தனக்கிருக்கும் பொருளையெல்லாம் எனக்குக் கொடுத்துவிட்டு அவர் நிலைகுலைந்திருப்பதைப் பார்க்கிறவர்கள் என்னை நிந்திக்கா மல் விடார். நான் என்ன செய்கிறது ? நான் தாய்தந்தை மனமகிழ நடந்தால் என் மாமனரை ஈன ஸ்திதியில் விடவேண்டும் ; உலக நிந்தைக்கும் ஆளாகவேண்டும். என் மாமனருடைய நன்மை யைக் கருதி நடந்தால் என்னைப் பெற்றுப் பிரியமாய் வளர்த்த தாய் தந்தையின் மனம் நோகும். இருபக்கத்தாருக்கும் மனவருத்த மில்லாமல் எவ்விதம் நடந்துகொள்ளுகிறதென்று நான் யோசித் துப் பார்த்தும் என் புத்திக்கு ஒன்றும் எட்டாமல், நான் தற் கொலை செய்துகொண்டாலன்றி நல்ல முடிவு ஏற்படாதென்று தீர்மானித்துக்கொண்டேன். என் மூலமாக என் மனைவி சுகத்தை அனுபவிப்பாள் என்ற எண்ணத்தோடு என் மனைவிக்கு ஸ்ரீதனமாக இரண்டாயிரம் கொடுத்தார்கள். நான் இறந்த பின் என் மனைவி கொண்டுவந்த ஸ்ரீதனத்தால் அவள் ஒரு நன்மையை யும் அடையமாட்டாள். ஆதலால் அவ்விரண்டாயிரத்தையும் என் மாமனருக்குத் திருப்பி யனுப்பிவிட்டேன். உங்களுடைய கெடு நினைப்பாலும் நீங்கள் உலக வசைக்கு அஞ்சாமையாலும் நான் நல்ல வாலிப திசையில் உயிர்விட நேரிட்டது. நான் என் தந்தை

பிடம் பேசு முன் அவர் தங்கருத்தை மாற்றமாட்டார் என்றே இக்கடிதத்தை எழுதி வைத்திருந்தேன். என் தந்தை என் வேண்டுகோளுக் கிரங்கினல் உங்களுக்கு இக்கடிதம் வந் திருக்காது.

இப்படிக்கு,

இராமகிருஷ்ணன்.

அதற்குள் அடக்கம் செய்திருந்த கடிதத்தில் அடியிற்கண்ட வித மிருந்தது.

பிரிய பர்த்தா அவர்களுக்கு,

அனேக நமஸ்காரம் செய்து எழுதும் சில வரிகளுக்கு மனமிரங்க வேண்டுகிறேன். நான் பிரவேசிக்கக்கூடாத விஷயத் தில் பிரவேசித்து, பின் கண்ட விஷயத்தைப்பற்றி எழுதுவதைக் குறித்து என்னை மன்னிக்க வேண்டும். எனக்கு ஸ்ரீதனமாகக் கொடுத்ததுபோக மீண்டும் நிஷேத முகூர்த்த வரிசைக்காக இரண் டாயிரம் வேண்டுமென்று தாங்கள் கேட்பதாகத் தங்கள் தந்தை சொல்லியனுப்பியபின் என் தந்தை தமக்குள்ள மற்ற நிலத்தையும் விற்றுத் தாங்கள் கேட்ட தொகையைக் கொடுக்க நிலத்தை விலை கூறிக்கொண்டு திரிகிறார். 'நமக்கு ஆதாரமாயிருக்கும் நிலத்தை விற்றுவிட்டால் சாப்பாட்டுக்கு என்ன செய்கிறது ? சென்னையில் வாசிக்கும் நமது குமாரனுடைய சம்ரக்ஷணைக்கு என்ன செய்கி றது ?' என்று என் தாய் கேட்டால் என் தந்தை கோபித்துத் தன் மகளும் மருமகனும் க்ஷேமமாக இருந்தால் போதுமானது என்று சொல்லுகிறார். என் தாய், என் தந்தை இல்லாத காலத்தில் அழுது கொண்டிருக்கிறார்கள். பிரிய நாயகா ! என் தந்தை அங்கிலேய பாஷை கற்று உத்தியோகம் செய்யத் தகுந்தவரல்ல. தமக்கு இருக்கும் நிலத்தை வைத்துக்கொண்டு உபாய ஜீவனம் செய்து கொண்டிருப்பவரென்பது தாங்கள் அறிந்ததே ! இவ்வித நிலை மையிலுள்ளவரைத் தாங்கள் பிச்சையெடுத்துண்ண விடுவது

தருமமா ? ஒரு பெண்ணைப் பெற்றுத் தமக்குள்ளதை யெல்லாம் விற்றுக் கொடுத்துவிட்டுக் கஞ்சிக் கழுகிறான் ? பெற்ற பெண்ணினுடைய மனமும் வந்த மருமகனுடைய மனமும் எவ்விதமானதோ என்று பலர் சொல்லுவார்களே என்பதை யும் தாங்கள் கவனிக்காமல் போனீர்கள் போலும். நாம் பொருள் தேடி நாம் சௌகர்யமாய் இருக்கவேண்டுமே யொழிய, ஒருவருடைய சொத்தைப் பிடுங்கிக்கொண்டு அவர் களைக் கஞ்சிக் கலையவிட்டு நாம் சௌக்கியமாய் இருக்க நினைப்பது தெய்வத்துக் கேற்காது. என்னைப் பார்க்கிறவர்களும் இப்பாவியால் பெற்றோர் சுகமிழந்தார் என்று சொல்லார்களா ? ஐயோ ! நான் பாவி என் பெண்ணாகப பிறந்தேன் ! என் தாய் தந்தை சுகமிழந்து துன்பபபடுவதைப பாாக்கவா ? நான் பிறந்த வுடன் இறந்திருந்தாலும் அல்லது எனக்கு விவாகம் முடியு முன் இறந்திருந்தாலும், என் தாய் தந்தை தங்கள் சுகத்தை இழக்கமாட்டார்கள். முக்கியமாகத் தாங்கள் கவனிக்கவேண் டியது யாதெனில், தாங்கள் மாமனார் வீட்டுக்குப் போக வர இருக்கவேண்டாமோ ! அவர்களுடைய நிலத்தை விற்றபின் பிச்சை யெடுத்துண்ணுங் காலத்தில் தாங்கள் அவர்கள் வீட் டுக்குப் போவீரானால் தங்களுக் கென்ன மரியாதை செய்வார்கள். பார்க்கிறவர்கள், “இருந்த சொத்தைப் பிடுங்கிக்கொண்டான். பிச்சையெடுத் துண்பதிலும் பங்குக்கு வந்திருக்கிறான்” என்று சொல்லார்களா ? தங்களுடைய தந்தையே பொருளின்மேல் விருப்பங்கொண்டவரென் றெண்ணியிருந்தேன். ஆனால் தாங் கள் தங்கள் தந்தையைவிடப பொருளின்மேல் மிக்க அவாக் கொண்டவரெனக் கேள்விப்பட்டு மிகவும் துக்கபபடுகிறேன். தாங்கள் நன்றாய் வாசித்தவ ராதலால் நான் அதிகம் எழுதுவது நன்றல்ல. நான் சொல்லியவைகள் தங்கள் மனதுக்கு விரோத மில்லாதிருந்தால் தங்களுடைய மாமனாருக்கு மீதியாய் இருக்கும் நிலத்தை விற்கவிடாமல் தடுப்பது தங்களுடைய கடமை. நான்

எழுதியதில் ஏதாகிலும் குற்ற மிருந்தால் க்ஷமிக்கத் தங்களை நமஸ்கரித்துக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

இப்படிக்கு,
தங்கள் அடிமை,
அன்னபூரணி.

கோபாலையர் (இரண்டு கடிதங்களையும் தன் மனைவிக்குக் காட்டிய பின்) ருகமணி ! இராமகிருஷ்ணன் நம்மைக் கெடுத்துப் போனான். நாம் இனிமேல் என்ன செய்யபபோகிறோம் (என் றழுதார்).

**ருக்மணி.**—அந்தச் சிறுக்கி எழுதிய கடிதத்தைப பாாத்தே ரூபாவை அனுபபிவிட்டான். நாம் அந்த ரூபாவைக் கொடு என்று கேட்டால் கொடுக்கமாட்டார்களா ?

**கோபாலையர்.**—மருமகன இறந்தபின் பணத்தைக் கொடுபபார்களா ? கேட்டாலும் பணம் ஏது ? யார் பணம் அனுப்பியது ? போ ! போ ! என்பார்கள். அல்லது பணத்தைப பெண்ணினுடைய சீவனார்த்தத்துக்கு வைத்துவிடுகிறேன் என்று சொன்னாலும் சொல்லுவார்கள்.

**ருக்மணி.**—இராமகிருஷ்ணன் முடிவை அவர்களுக்குச் சொல்லியனுபபவேண்டும். நீங்கள் ஒருவரை அனுப்பிச் சொல்லி வரும்படி செய்யுங்கள்.

**கோபாலையர்.**—நான் சொல்லி யனுப்புகிறேன். அவர்கள் வந்தால் இராமகிருஷ்ணன் காவேரியாற்றில் குதித்து தற்கொலை செய்துகொண்டானென்று சொல்லவேண்டாம். ஆற்றில் நீராடிக்கொண்டிருக்கும்பொழுது வெள்ளம் இழுத்துக்கொண்டு போய்விட்டதென்றே சொல்லிவிடு (என்று வெளியிற் சென்றார்).

ருக்மணி தன் மகனைக குறிதது அழுகிறதைவிடப பணம் போய்விட்டதே என்று பணத்துக்காக அதிகம் துக்கப்பட்டு அழுதுகொண்டிருந்தாள். ஒருமணி நேரத்துக்குப பின் அன்னபூரணியும் அவள் தாயும் வீட்டுக்குள் ஓடிவந்து அடித்து மோதி

விழுந்து ஓலமிட்டலறினார்கள். அவர்கள் அழுகுரலைக் கேட்டு அனேக பெண்டுகள் வந்து அன்னபூரணியைக் கட்டிக்கொண்டழுதார்கள்.

அன்னபூரணி.—பெருந்துக்கத்தோடு ஆ! என் பிராண ஆதாரமே! என்னை அனாதரவாய் விட்டுப்போக மனம் துணிந்ததா ! ஆ ! நாயகா ! நாயகா ! என்னுடைய சினேகைகளெல்லாம் உனக்கு நல்ல நாயகன் கிடைத்தானென்று சொல்வதைக் கேட்டுச் சந்தோஷத்தில் பூரித்திருந்தேனே ! என் சந்தோஷத்தில் நெருப்பையள்ளிக் கொட்டிவிட்டீரே ! ஐயோ ! நாயகா ! நீர் சேற்றில் முளைத்த செழுங்கமலமென்று பலர் சொன்னார்களே ! நீர் நன்னடக்கையைக் கைப்பற்றிய புண்ணியவான் என்றார்களே ! ஐயோ ! என் தந்தை உம்முடைய ஜாதகத்தைப் பல சோதிடர்களிடத்தில் கொடுத்துப் பார்க்கச் சொன்னதில் அவர்களெல்லாம் நீர் பெருந் தனவந்தனாக நீண்ட ஆயுளோடிருப்பீரென்று சொன்னதாகச் சொன்னாரே ! அதெல்லாம் பொய்யாய்ப் போய்விட்டது என்னுடைய வினையா ? ஆ ! நாதா ! நீர் என்னை விட்டு நீங்கினால் நான் உயிரோடிருக்கேன் என்று நீர் அறியீரா ? நீர் இறந்தீர் என்று கேள்விப்பட்டும் இன்னும் உயிரோடிருக்கிறேனே ! என்போலுங் கொடும்பாவி இருப்பாளா ! நான் கொடும்பாவி என்றறிந்தோ என்னை விட்டு நீங்கினீர் ! என்னுடைய சிறுவயதில் எனக்குச் சிரிப்பு விளையாட்டில் பாடம் சொல்லிக்கொடுத்துப் படிக்கச்சொல்வதைக் கண்டவர்கள் இவன் பெண்டாட்டியை மிகக்ப் பிரியமாக வைத்திருப்பானென்று சொல்லுவார்களே ! அவர்கள் சொல்வதைக் கேட்டு மன மகிழ்ந்தேனே ! அந்த மகிழ்ச்சியில் மண்ணைவாரிப் போட்டுவிட்டுப் போய்விட்டீரே ! நான் இனி ஓர் நிமிஷமும் உயிரோடிருக்கேன் (என்று சுவரில் மோதிக்கொள்வதை மற்றவர்கள் தடுத்துக்கொண்டிருந்தார்கள்).

அன்னபூரணியின் தாய்.—(வயிற்றிலும் மார்பிலும் அறைந்து கொண்டு) ஐயோ ! ஐயோ ! தெய்வமே ! நான் இக்கொடுமைக்கு என்ன செய்வேன் ! நமக்குக் கிடைக்காத மருமகன் கிடைத்தான். அவனும் அவன் மனைவியும் சந்தோஷமாக இருப்பதைப் பார்ப்பதே நமக்குப் பெருந்தனம் என்று என் நாயகன் சொல்லிக்கொண் டிருந்தாரே ! வீட்டில் பலகாரம் பக்ஷணம் செய்தால் மாப்பிள்ளைக்குக் கொடுத்தனுப்பவேண்டு மென்பாரே ! மாப்பிள்ளை சொல்வது தனக்குக் கெடுதியாக விருந்தாலும், அதைக் கேட்டுச் சந்தோஷப்படுவாரே ! ஐயோ ! அப்பா ! நீ கேட்ட இரண்டாயிரத்தைக் கொடுக்கவேண்டு மென்று நிலத்தை விற்க வெளியூருக்குப் போயிருக்கிறாரே ! அவர் வந்து நீ இறந்ததைக் கேட்டால் உயிர்தரிப்பாரா ! ஐயோ ! நாங்கள் உன் மனைவியை எவ்விதம் வைத்துப் பார்த்திருப்போம் (என்று அழுதுகொண் டிருந்தாள்).

நெடு நேரத்துக்குப் பின் டலர் அவர்கள் துக்கத்தை மாற்றி இராமகிருஷ்ணன் எவ்விதம் இறந்தானென்று கேட்டு அவனுக்கு நேரிட்டதை அவன் தாய் சொல்லக் கேட்டுக்கொண் டிருந்தார்கள்.

வெளியூருக்குச் சென்றிருந்த சூரியநாராயண ஐயர் திரும்பித் தம் வீட்டுக்கு வரும்பொழுது வழியில் இராமகிருஷ்ணனுக்கு நேரிட்டதைக் கேள்வியுற்றுக் கோபாலையர் வீட்டுக்குள் வந்து தடாலென்று விழுந்து மூர்ச்சையானார். வீட்டிலிருந்தவர்கள் அவரைத் தூக்கி உட்காரவைத்துத் துணிப்புகை காட்டி அவர் கண் திறந்தபின் ஜலங் குடிப்பாட்டி அவர் மூர்ச்சையைத் தெளியவைத்தார்கள். அவர் மூர்ச்சை தெளிந்தபின் தன் கண்களில் நீர் ஆறாயோட "ஐயோ ! தம்பி ! நீ நீண்ட ஆயுளோடிருப்பாயென்று நம்பியிருந்த என்னை மோசம்செய்து போய்விட்டாயே ! நீயும் என் மகளும் சந்தோஷமாக இருப்பதைப் பார்ப்பதே என்பாக்கியமென்றிருந்தேனே ! என்னைச் சதா துக்கத்தோடிருக்கவோ செய்துவிட்டாய் ! நான் என் துக்கத்தை எவ்விதம் ஆற்றிக்கொள்ளு

வேன்'' என்று அழுகிறதைக் கண்டு, கோபாலையரும் கண்களில் நீரை வடியவிட்டுக்கொண் டிருந்தனர். வெளியார் அவர்களுக்குச் சமாதானம் சொல்லி நீங்கினார்கள்.

அடுத்த நாள் சூரியநாராயண ஐயர் தனித்துத் தம் வீட்டுக்குப் போகும்பொழுது, தபாற்காரன் அவரைப் பார்த்து, "ஐயா! தங்களுக்கு ஓர் ரிஜிஸ்டர் கடிதம் வந்திருக்கிறது. தாங்கள் ஊரில் இல்லாததால் கொடுபடவில்லை'' என்று கையொப்பம் வாங்கிக் கொண்டு ஓர் கடிதத்தைக் கொடுத்துப் போனான். அவர் அக் கடிதம் அதிக கனமாக இருப்பதைக் கண்டு வீட்டுக்குப் போய்க் கடிதத்தைப் பார்த்தார். அதில் இரண்டாயிரம் ரூபாவுக்கு நோட்டுகளும் ஓர் கடிதமும் இருந்தது. அதில் அடியிற்கண்ட விதம் எழுதியிருந்தது.

பிரிய மாமா அவர்களுக்கு,

அனேக நமஸ்காரம்,

என்னுடைய விவாகத்தில் ஸ்ரீதனமாக இரண்டாயிரம் கேட்டு வாங்கியதும் பின் வரிசைக்காக இரண்டாயிரம் வேண்டுமென்று கேட்டதும் நானென்று என் தந்தை தங்களிடம் சொல்லியதாகக் கேள்விப்பட்டு நான் துக்கப்படுகிறேன். தாங்கள் தங்களுடைய நிலத்தை விற்று இரண்டாயிரம் கொடுத்தது என் மனதுக்கு விரோதமாக இருந்தது. தங்களை மீண்டும் கஷ்டப்படுத்த வேண்டாமென்று நான் என் தந்தைக்குச் சொன்னதைக் கேட்காமல் தங்களிடத்தில் இரண்டாயிரம் வாங்கவேண்டியதே என்று சொல்லிக்கொண்டிருந்தார். தங்களுடைய நன்மையைக் கருதாது என் தாய் தந்தை சொல்வதைக் கேட்க என் மனம் சகிக்கவில்லை. என் தாய் தந்தையின் பேராசையைக் கண்டபின் அவர்கள்மேல் எனக்கு வெறுப்பாய் விட்டது. நம்மவர்களுக்குள் கொஞ்ச காலமாக வரதக்ஷிணை கொடுக்கிற வழக்கம் உண்டாய் விட்டது. அங்கிலேய பாஷை கற்றவனா யிருந்தால் வரதக்ஷிணை அவனுக்கு அதிகம் கொடுக்க வேண்டியதா யிருக்கிறது.

அங்கிலேய பாஷை கற்காதவனுக்கு ஸ்ரீதனம் கொடுக்காமல் அவனிடத்தி லிருந்து பணம் வாங்குகிறார்கள், இவ்வழக்கம் எனக்கு விரோதமாகக் காண்கிறது. ஏனெனில் நம் குல தரு மத்துக்கு வேண்டியவைகளை வாசித்திருப்பவர்களுக்கு வரும்படி அதிகம் கிடைக்க நியாயமில்லை. அங்கிலேய பாஷை கற்றவர் களுக்கு வரும்படி அதிகம் கிடைக்கக்கூடும். ஆனதால் ஸ்ரீதனம் யாருக்குக் கொடுக்கவேண்டும்? ஆங்கிலேய பாஷை கற்றவர் களுக்கே ஸ்ரீதனம் கொடுக்க வேண்டுமென்று சொல்லுவார்களா யின் நம் குல தருமத்துக்கு வேண்டிய வேதாகமங்களை நம்ம வர்கள் வாசிப்பதை அறவே ஒழித்துவிட்டு அங்கிலேய பாஷை கற்பதே முக்கியமென் றிருக்கவேண்டும். நம்மவர்கள் இதைக் கவனித்தல் உத்தமம். கவனிக்காமல் போனால் வேதாகமங்கள் வாசிப்பது முற்றிலும் நாளடைவில் ஒழிந்துபோகும் என்பதில் ஐயமில்லை. நான் கிஞ்சித்து அங்கிலேய பாஷை கற்றிருப்ப தால் என் தாய்தந்தை பெருந்தனத்தை எதிர்பார்க்கிறார்கள். நான் தங்களை வறுமையில் விடாமல் காக்கவேண்டுமானால் நானா வது அன்னபூரணியாவது இறக்கவேண்டும். அன்னபூரணி இறந்தால் என் தாய் தந்தை கேட்கும் இரண்டாயிரத்தைக் கொடுக்காம லிருக்கலாம். முன் தாங்கள் கொடுத்த இரண்டா யிரம் போனது போனதே! அன்னபூரணி இறந்தபின் நானா கிலும் சந்தோஷமாக இருக்க முடியுமோ என்றால் அதுவும் முடி யாது. என் தாய் தந்தை முன் ஒரு குடியைக் கெடுத்தது போதா தென்று வேறொரு குடியைக் கெடுப்பார்கள். நான் இறந்தால் தங்களுடைய குமாரத்தியின் நன்மையைக் கோரித் தாங்கள் கொடுத்த பணத்தால் அவள் ஓர் நன்மையும் அடையப்போகிற தில்லை. ஆதலால் அப்பணத்தால் வரும் இலாபத்தை என் தாய் தந்தை அனுபவிக்கவிடாமல் உங்களுக்கே அனுப்பிவிடுவது உத்த மம் என்று நினைத்துத் தாங்கள் கொடுத்த ஸ்ரீதனத்தை அனுப்பி விட்டேன். நான் என் பிரியமுள்ள அன்னபூரணியை விட்டுப் போவதே எனக்குப் பெருந்துக்கமாக இருக்கிறது. என்ன செய்ய

லாம்! என் ஆயுளும் முடிவானதால் என் எண்ணத்தை முடித்துக் கொள்ளத் துணிந்தேன். தாங்களும் மற்றவர்களும் எனக்காகக் கவலை கொள்ளவேண்டாம்.

இப்படிக்கு
ஸ்ரீராமகிருஷ்ணன்.

சூரியநாராயண ஐயர் கண்களில் நீர் தாரை தாரையாக வடிய கடிதத்தை வாசித்து முடித்தார்.

---

## 13—ம் அத்தியாயம்

லாலாபேட்டைக்குச் சமீபத்திலிருக்கும் சாமியாருடைய மகிமை அதிகதூரம் பரவி ஜனங்கள் அபரிமிதமாக வந்து சாமியாரைப் பார்த்துப் போகிறதோடு, நோயாளிகளும் ஔடதம் வாங்கிச் சாப்பிட்டுக் குணப்பட்டார்களென்று பச்சையப்ப பிள்ளை கேள்விப்பட்டு, சாமியார்மேல் அதிகம் பற்றுள்ளவராய் நாள் தோறும் பாலும் பழமும் முனியாண்டிவசம் அனுப்பிக்கொண்டிருந்தார். முனியாண்டி வழக்கப்பிரகாரம் சாமியாரிடத்தில் போய் வந்தபின் பச்சையப்ப பிள்ளையை அடுத்து, "ஐயா! சாமியாரை இன்று பார்க்கவந்தவர்கள் இவ்வளவென்று சொல்வது முடியாது. இன்று சிவஞானம் அம்மாளும் சாமியாருக்குப் பாலும் பழமுங் கொண்டுபோனார்கள்.

**பச்சையப்ப பிள்ளை.**—ஆம்! அவள் கொண்டுபோகிறதை நானும் பார்த்திருக்கிறேன். ஆனால் அவள் கொண்டு போகிற நாளில் சாமியார் நிஷ்டையிலுட்கார்ந்துவிடுகிறார்.

**முனியாண்டி.**—ஆம்! ஐயா! சாமியார் இன்று நிஷ்டையிலிருக்கிறார். போன ஜனங்கள் யாவரும் சாமியாரைப் பாராக்காமல் திரும்பிவிட்டார்கள்.

**பச்சையப்ப பிள்ளை.**—அத்தன்மார்க்கிக்குச் சாமியார் தரிசனை கிடைத்திருக்குமென்று நான் நினைக்கவில்லை. அவளால் இன்று யாவருக்கும் சாமியார் தரிசனை கிடைக்காமற்

போனது. நான் இரண்டு மூன்று தடவை அவள் சாமி யாரிடம் போவதைக் கண்டிருக்கிறேன்.

**முனியாண்டி.**—சிவஞானத்தின் நடமாட்டம் அதிகமாகக் காணப் படவில்லை.

**பச்சையப்ப பிள்ளை.**—அவளுக்கென்ன கேடு! அவளுடைய மாப்பிள்ளை ஓடிப்போன பின் அவளிஷ்டம்போல் கண்ட விடமெல்லாம் திரிகிருள் என்று கேள்வி.

**முனியாண்டி.**—கருணாநிதியையும் நீலமேகத்தையும் கண்டு பிடித் துக்கொண்டு வரும்படி அனேகருக்குப் பெருந் தொகையைக் கொடுத்தும் பிரயோசனப்பட வில்லை. அவர்களெல்லாம் பணத்தை வாங்கிக்கொண்டு தங்கள் வீட்டில் படுத்து நித் திரை போகிருர்கள்போல் காண்கிறது.

**பச்சையப்ப பிள்ளை.**—அப்படிபாவிகள் அகப்படவில்லை. அவர் கள் அகப்பட்டால் நம்முடைய கஷ்டமெல்லாம் நீங்கும். (என்று சொல்லிக்கொண் டிருக்கும்பொழுது தபாற்காரன் ஒரு கடிதத்தைக் கொடுத்துப் போனுன்).

**பச்சையப்ப பிள்ளை.**—(அக்கடிதத்தைப் பிரித்து வாசித்துப் பார்த்து நகைத்து) முனியாண்டி! நீ இப்பொழுது என்ன சொல்லுவாயோ தெரியவில்லை. சாமியார் கோபாலைய் ருக்குச் சொன்னது ஞாபக மிருக்கிறதா?

**முனியாண்டி.**—ஏன் ஞாபகமில்லை! அவர் எட்டு நாளைக்குள் ஏதோ ஒன்றை இழப்பாரென்றும் பின் மற்றொன்றை இழப்பாரென்றும் சாமியார் சொன்னுர்.

**பச்சையப்ப பிள்ளை.**—சாமியார சொன்ன எட்டா நாள் அவ ருக்கு என்ன நடந்தது தெரியுமா?

**முனியாண்டி.**—என்ன நடந்தது (என்று ஆத்திரத்தோடு கேட் டான்).

**பச்சையப்ப பிள்ளை.**—கோபாலையர் மகன் இராமகிருஷ்ணன் காவேரியாற்றில் குதித்து இறந்தான்.

**முனியாண்டி.**—அடடா! என்ன அதிசயம்.

**பச்சையப்ப பிள்ளை.**—அது மட்டுமல்ல! கோபாலையருடைய மகனுக்குக் கிடைத்த ஸ்ரீதனம் இரண்டாயிரமும் போய் விட்டது.

**மூனியாண்டி.**—சபாஷ்! சாமியார் சொல்லியது முற்றிலும் உண்மையானது. ஐயாவே! சாமியாரைச் சாமியாரென்று சொல்லக்கூடாது. அவர் தெய்வம் என்றே சொல்லவேண்டும். எனக்கு அவரருகிற் போகப் பயமாக இருக்கிறது. அவர்மேல் சந்தேகப்பட்டதைக் குறித்துத் துக்கப்படுகிறேன். தங்களுக் கிந்தச் சமாசாரத்தை யார் தெரிவித்தார்கள்?

**பச்சையப்ப பிள்ளை.**—சாமியார் கோபாலையருக்குச் சொன்னதை என் மாமன் மணிவாசகம் பிள்ளைக்கு எழுதியிருந்தேன். அவர் கோபாலையருக்கு நேரிட்டதை எழுதியிருக்கிறார் (என்று வந்த கடிதத்தைக் காட்டினார்).

**மூனியாண்டி.**—தாங்கள் என்னை மணவாள நாயுடு வீட்டுக்குப் போகச் சொன்னீர்களே! நான் போய் என்ன சொல்ல வேண்டும்?

**பச்சையப்ப பிள்ளை.**—மூவாயிரம் ரூபா அவசரமாக வேண்டும். இன்றே அவசியம் கொண்டுவரும்படி சொல்லு. நீ போய் வரும்பொழுது மதனவல்லியைக் கண்டுவா.

**மூடியாண்டி.**—ஐயா! என்னை மன்னிக்கவேண்டும். நான் தங்களிடத்தில் சொல்லவேண்டிய தொன்றை மறந்தேன். நேற்று நான் அம்மார்க்கம் வர நேரிட்டது. மதனவல்லி என்னை அழைத்து நான் பிள்ளைக்கு விருந்து செய்ய வேண்டுமென்று திருச்சிராபபள்ளியிலிருந்து வரவழைத்து வைத்திருபபதைப் பாரென்று மூன்று புட்டி விஸ்கியும் மூன்று புட்டி பிராண்டியும் இருப்பதைக் காட்டி, 'அவர் நகைகளையும் பத்துக்கல நெல்லோடு இருநூறு ரூபாவையும் அனுப்பிவிட்டு இபபக்கம் எட்டிபபார்க்காம லிருக்கிறார். அவரை வரும்படி நான் நமஸ்கரித்துக் கேட்டுக்கொண்டதாகச் சொல்" என்று கேட்டுக்கொண்டார்கள். நான் வரும

பொழுது தாங்கள் பலரை உட்காரவைத்துக்கொண்டு பேசி யிருந்தமையால் பின் சொல்லலாமென்று எண்ணியிருந் தவன் சொல்லாமல் விட்டேன்.

பச்சையப்ப பிள்ளை.—மதனவல்லி என்மேல் அதிகப் பற்றுள் ளவளாகக் காண்கிறாள். என் சிற்றப்பன் சொத்து என்னைச் சேர்ந்தவுடன் அவளைப் பணக்காரி யாக்கிவிடவேண்டும். நான் நாளை வருகிறேன் என்று சொல்லிவா.

அடுத்த நாள் காலை ஐந்து மணிக்குச் சாமியார் உலாவிக் கொண்டிருக்கும்பொழுது, சமீபத்தில் ஒருவர் அங்கவடியில் கால் மாட்டிக்கொண்டு கீழ்விழுந்திருக்கவும் குதிரை வேகமாக அவரை இழுத்துக்கொண்டு வருவதையுங் கண்டு பரிதாபமுற்று, ஓடிப் போய்க் குதிரையின் கடிவாளத்தைப் பிடித்துக் குதிரையை நிறுத் திக் குதிரைமேலிருந்தவர் காலை அங்கவடியிலிருந்து எடுத்து விட்டு, குதிரையின் வாரைப் பந்தலில் மாட்டித் தன் சீடனை அழைத்துச் சீடனும் தானும் பிரக்ஞை தப்பிக் கிடக்கிறவரைத் தூக்கிவந்து பந்தலுக்குள் வைத்துத் தண்ணீர்கொண்டு அவர் முகத்தைக் கழுவி, அவர் போட்டிருந்த உடுப்பைக் கழற்றி, அவர் தேகத்திலிருக்கும் காயங்களுக்குத் தைலம் தடவிக்கொண்டிருக்கும் பொழுது, பிரக்ஞை தப்பிக்கிடந்தவர் கண்விழித்துப் பார்த்து முதுகில் எரிகிறதென்றார்.

சாமியார்.—நீர் கவலை கொள்ளவேண்டாம். விரைவில் எரிச்சல் நின்றுபோகும் (என்று எரிகிற இடத்தில் விசிறும்படி தன் சீடனுக்குச் சொன்னார்).

குதிரையி லிருந்து விழுந்தவருக்கு உதவிசெய்து அவரைக் கொண்டுவந்து உபசாரணை செய்துகொண்டிருக்கும்பொழுது, ஜனங்கள் அதிகமாக வந்து சேர்ந்தார்கள். வந்தவர்களி லொருவர் சாமியார் உபசாரணையி லிருப்பவரைப் பார்த்து "ஆ! ஆ! குளித் தலை தாசில்தா ராயிற்றே" என்று அவர் அருகில் சென்று "ஐயாவே! தங்களுக்கா இவ்வாறு வந்தது" என்று துக்கப் பட்டார்.

தாசில்தார்.—பச்சையப்ப பிள்ளையா ! நான் கட்டளைக்குப் போயிருந்தேன். இன்று காலை நாலுமணிக்கு நான் புறப்பட்டு வரும் வழியில் இருட்டில் குதிரை எதையோ கண்டு மிரண்டு என் கைக்கு அடங்காமல் கிளம்பி என்னைக் கீழே தள்ளிவிட்டது. என் கால் அங்கவடியில் மாட்டிக் கொண்டதால் என்னை நெடுந்தூரம் இழுத்துக்கொண்டு வந்ததுபோல் காண்கிறது. (சாமியாரைக் காட்டி) இந்தச் சாமியார் என் உயிரைக் காபபாற்றினார். இவர் என் விஷயத்தில் செய்த உபகாரத்திற்குப் பதில் என்ன செய்யப்போகிறேன் (என்று படுத்துக்கொண்டே சொன்னார்).

பச்சையப்ப பிள்ளை.—ஐயாவே ! இந்தச் சாமியார் ஒன்றையும் விரும்பினவரல்ல. இப்புண்ணியவாளால் எவ்வளவோ ஜனங்கள் நன்மை அடைந்திருக்கிறார்கள். சாமியாரால் தற்காலம் எங்களூர் பெருமை யடைந்திருக்கிறது.

தாசில்தார்.—(எழுந்து உட்கார்ந்து) சாமி ! எனக்குச் சௌக்கியமாக இருக்கிறது. எனக்கு உத்தரவு கொடுத்தால் நான் போய் வருகிறேன். ஐயா ! பச்சையபப பிள்ளை ! ஒரு வண்டி கொண்டுவரும்படி செய்யவேண்டும்.

சாமியாரும் உத்தரவு கொடுத்தார். பச்சையப்ப பிள்ளை தன் வண்டியைக் கட்டிக்கொண்டு வரும்படி ஓராளை அனுப்பினார். சாமியார் தாசில்தாருக்குப் பால் கொடுத்துக் குடிக்கச்செய்து ஒரு சிறிய புட்டியைக் கொடுத்து "ஐயாவே ! இம்மருந்தை மற்றோர் முறை காயம்பட்ட விடத்திலும், நோகிற விடத்திலும் தடவும்படி செய்யவேண்டும். இத்தைலம் மிக்க அருமையானது. இது நோவைக் கண்டிபபதோடு இரணத்தையும் விரைவில் ஆற்றும்" என்றார்.

தாசில்தார்.—(சாமியாரைக் கும்பிட்டு) சாமி ! அடியேன் இவ் வூருக் காறு மயில் தூரத்தி லிருககிறேன். அடியேனால் தங்களுக்கு ஏதாகிலும் செய்யவேண்டியதா யிருந்தால் மிக்க மகிழ்வோடு செய்வேன். தாங்கள் எபபொழுதாகிலும்

குளித்தலைக்கு வந்தால் அடியேனைப் பார்த்துப் போக வேண்டும்-(என்று சாமியாரைக் கேட்டுக்கொண்டு, பச்சையப்ப பிள்ளையைப் பார்த்து) ஐயா! குதிரையை ஓர் ஆளோடு அனுப்பிவிடவேண்டும் (என்று அவரிடத்திலும் விடைபெற்று பச்சையப்ப பிள்ளையின் வண்டியிலேறி வண்டியை ஓட்ட உத்தரவு கொடுத்தார்).

அன்றிரவு நிதானம் எட்டு மணிக்கு நிலவு வெளிச்சத்தில் சாமியாருடைய கொட்டகைக்குச் சமீபமாகச் சாலையில் முனியாண்டியோடு சிலர் உட்கார்ந்து வார்த்தையாடிக்கொண் டிருக்கும்பொழுது, ஒருவன் வேகமாக ஓடி வந்து அவர்களருகில் நின்று, "என்னை அடிக்கத் துரத்திகொண்டு வருகிறான்" என்றான்.

**முனியாண்டி.**—என்னடா! சின்னையா! உன்னை யாரடா அடிக்கத் துரத்துகிறது?

**சின்னையா.**—என்னை மாரியப்பன் அடிக்கத் துரத்திக்கொண்டு வருகிறான்.

**முனியாண்டி.**—எதற்காக உன்னை அடிக்க வருகிறான்?

**சின்னையா.**—இரத்தினசபாபதி பிள்ளை வீட்டில் மூன்று நாள் பந்தலில் வேலை செய்தேன். அதற்காக ஒரு காசும் கிடைக்கவில்லை. நான் அடிககடி என் கூலியைக் கொடுக்கும்படி மாரியப்பனைக் கேட்டுக்கொண்டிருந்தேன். அவன் பச்சையப்ப பிள்ளையிடம் கேட்டு வாங்கிக் கொடுக்கிறேன் என்று சொல்லிக்கொண் டிருந்தவன் இன்று பணமுமில்லை காசுமில்லை என்றான். அதன்மேல் இருவருக்கும் பேச்சு வளர்ந்தது. பின் என்னை அடிக்கத் துரத்தினான். நான் ஓடி வந்துவிட்டேன். அதோ! அவனும் வருகிறான்; நீயும் எங்களோடு பந்தலில் வேலை செய்துகொண்டிருந்தாயே! நீயாகிலும் மாரியபபனிடம் சொல்லி எனக்குக் கொடுக்கவேண்டியதைக் கொடுக்கச்சொல்.

இவ்விதம் சொல்லிக்கொண்டிருக்கும்பொழுது, ஒருவன் ஓடிவந்து சின்னையாவை முதுகில் குத்தி, "என்னசொன்னாய்! நாயேடா! மோசக்காரப் பயல்."

முனியாண்டி.—(எழுந்து நின்று) மாரியப்பா! நீ தூரத்தில் நின்று பேசு; அவனை ஏன் அடிக்கிறாய்?

மாரியப்பன்.—நாம் பந்தல் வேலை செய்ததில் யாருக்காகிலும் பச்சையப்ப பிள்ளை ஒரு காசாகிலும் கொடுத்தாரா? அவரைக் கேட்கும்பொழுதெல்லாம் "ஆகட்டும்" "ஆகட்டும்" என்கிறார். நான் அவரிடத்தில் இரகசியமாகப பணத்தை வாங்கிக் கொண்டு இவனுக்குக் கொடுக்காமல் மோசம் செய்கிறேன் என்று பலர் முன் என்னை மோசக்காரப பயல் என்றும் வயிற்றுச் சோற்றுக்கு வழியில்லாதவனென்றும் மனம்போல் பேசினான். இவனைச் சும்மா விடலாமா?

முனியாண்டி.—நீங்கள் வீணுக்குச் சண்டைபோட்டுக் கொள்ள வேண்டாம். நான் பச்சையபப பிள்ளையிடம் சொல்லி உங்களுக்குச் சேரவேண்டியதை வாங்கிக் கொடுக்கிறேன்.

மாரியப்பன்.—இநத யோக்கியர் அந்த யோக்கியரிடத்திற் சொல்லிப பணம் வாங்கிக் கொடுக்கபபோகிறார்.

முனியாண்டி.—அடே! என்ன சொன்னாய்?

மாரியப்பன்.—அடே! நான் இதற்கு முன் எத்தனை தடவை அந்த யோக்கியரிடத்தில் பணம் வாங்கிககொடுக்கச் சொன்னேன். நீ அபபொழுதெல்லாம் என்ன சொன்னாய்? அப்பொழுது சொன்னதுபோல் இபபொழுதும் சொல்லுகிறாய்! உன் பேச்சையும் அவா பேச்சையுங் கொண்டுபோய் ஓடுகிற தண்ணீரில் எழுதவேண்டும்.

முனியாண்டி.—அடே! நீ பச்சையபப பிள்ளையைக கேவலமாகப பேசினால் உனக் கது கெடுதியாய் முடியும். நீ ஜாக்கிரதையாக இரு.

மாரியப்பன்.—அடே! முனியாண்டி! உனக்கு பச்சையப்ப பிள்ளை தயவு வேண்டும். பச்சையபப பிள்ளைக்கு உன் தயவு

வேண்டும். எனக்கு ஒருவருடைய தயவும் வேண்டிய தில்லை. என்னை ஜாக்கிரதையாக இரு என்று சொல்லு கிறதற்குப் பதிலாக நீங்கள் இருவரும் ஜாக்கிரதையாக இருங்கள். உங்கள் இரகசியமெல்லாம் எனக்குத் தெரியும் என்று அறிந்துக்கொள்.

**முனியாண்டி.**—எங்கள் இரகசியம் என்னடா விருக்கிறது? அடே! உன் தலைப்புழு மாண்டுபோனதால் இவ்விதம் பேசத் துணிந்தாய்! உனக்குக் கேடுகாலம் கிட்டிவிட்டதாகக் காணப்படுகிறது.

**மாரியப்பன்.**—அடே! உங்களுடைய தலைப்புழு மாண்டுபோய் விட்டது என்று அறியடா பாதகா!

முனியாண்டி "நானோடா பாதகன்" என்று மாரியப்பனை அடித்தான். மாரியப்பன் முனியாண்டியை அடித்தான். இவர்க ளிருவரும் சண்டை போட்டுக்கொண் டிருக்கும்பொழுது, சின்னை யாவும் அங்கிருந்த மற்றவர்களும் சேர்ந்து மாரியப்பனை அடித்துக் கொண்டிருந்தார்கள். இவர்கள் வார்த்தை யாடுவதை முதலி லிருந்து கேட்டிருந்த சாமியாருப் அடா சீடனும் ஓடிவருவதைக் கண்டு யாவரும் மாரியப்பனை மூர்ச்சையில் விட்டு நீங்கினார்கள். சாமியார் மாரியப்பன் மூர்ச்சையைத் தெளியவைத்து அவனை அழைத்துக்கொண்டுபோய் நெடுநேரம் அவனோடு பேசியிருந்து, பின் மாரியப்பனைப் பார்த்து "உனக்கு மனைவியுண்டா? குழந்தைகளுண்டா?" என்று கேட்டார்.

**மாரியப்பன்.**—என்னுடைய மனைவி நெடுநாளைக்கு முன் காலம் சென்றாள். எனக்குக் குழந்தைக ளில்லை. எனக்குத் தாயும் தங்கையும் உண்டு. தங்கையைக் கோயம்புத்தூரில் தண்ட பாணி பிள்ளை என்றவருக்குக் கொடுத்திருக்கிறது. இந்தப்படு பாவி முனியாண்டியின் தங்கையையும் அவருக்கே இரண் டாந்தாரமாகக் கொடுத்திருக்கிறான். ஆனதால் அவன் எனக் குச் சகோதர முறை யாகவேண்டும்.

**சாமியார்.**—அப்பா! மாரியப்பா! நீ முனியாண்டியை விரோதித்துக்கொண்டால், நீ சொந்த பந்துவென்றும் கவனியாமல், அவன் பச்சையப்ப பிள்ளையிடம் சொல்லி உனக்கு ஏதாகிலும் கெடுதல் செய்ய எண்ணுவான். நீ இவ்வூரி லில்லாமல் எங்காகிலும் போய்விடுதல் உத்தமம் என்று நினைக்கிறேன். உன்னுடைய கருத்தென்ன?

**மாரியப்பன்.**—சாமி! நான் பச்சையப்ப பிள்ளைக்காகிலும் முனியாண்டிக்காகிலும் பயந்தவன் அல்ல. பச்சையபப பிள்ளையிடமிருந்து முனியாண்டி அதிக பணம் வாங்கிக் கண்ட விதம் செலவு செய்கிறதால், சில போககிரிகள் முனியாண்டியைச் சுற்றிக்கொண்டு திரிகிறார்கள். இன்றைக்கும் சிலர் அவனோடிருந்து, நானும் முனியாண்டியும் சண்டை போட்டுக்கொண் டிருக்கும்பொழுது, சும்மா பார்த்துக்கொண்டிராமல் அவனோடு சேர்ந்து என்னை அடித்தார்கள். ஆனதால் நான் மூர்ச்சையாய் விழுந்தேன். அல்லாமற்போனால் முனியாண்டியை இலேசில் விட்டிருக்கேன். நான் அவனுக்குப பயந்து ஊரைவிட்டுப் போனால் என் தாயார் சாப்பாட்டுக்கு என்ன செய்வார்கள்.

**சாமியார்.**—மாரியபபா! முனியாண்டி கைபபொருளைக் கொள்ளைகொள்ளச் சிலர் அவனைச் சுற்றிக்கொண் டிருபபவர்கள் அவன் சந்தோஷமடைய அவன் விரும்பியதைச் செய்வார்கள். ஆனதால் நீ ஜாக்கிரதையாக இருக்கவேண்டியதே. 'மிண்டனுக் கிரண்டாள்' என்பதை நீ ஞாபகத்தில் வைக்கவேண்டும். நாங்கள் நாளை மாலை இவ்வூரைவிட்டு வெளி யூருக்குச் சில மூலிகைகள் கொண்டுவரப் போகிறோம். உனக்கிஷ்டமானால் எங்களோடு வரலாம். நாம் திரும்பி வந்த பின் உனக்கு விவாகம் செய்துவைப்பதோடு நீயும் உன் மனைவியும் உன் தாயாரோடு சௌகர்யமா யிருக்கப் பணம் கொடுபபேன். சாமியார் பரதேசியாயிற்றே அவர் எங்கிருந்து பணம் கொடுபபாரென்று நினைக்கவேண்டாம்.

என்னிடத்தி லிருப்பதைப் பார் (என்று பாளங்களைக் காட்டி) இவைகளைப் புடம் போடவே மூலிகைகளுக்குப் போகிறோம் (என்றார்).

**மாரியப்பன்.**—சாமி! என்னுடைய நற்காலத்தால் தங்களுடைய உதவி கிடைத்தது. நான் எங்காகிலும் இரண்டு மூன்று ரூபா கடன் வாங்கி என் தாயாருக்குக் கொடுத்துவிட்டுத் தங்களோடு வருவேன்.

**சாமியார்.**—நீ எங்கும் போய்க் கடன் வாங்கவேண்டாம். நான் கொடுப்பதைக் கொண்டுபோய் உன் தாயாருக்குக் கொடுக்க வேண்டியதைக் கொடுத்து உனக்கும் வேண்டியதை வாங்கிக் கொண்டு நாளை மாலை எங்களோடு போகச் சித்தமாக ரெயில்வே ஸ்டேஷனில் எங்களுக்காகக் காத்துக்கொண்டிரு (என்று சொல்லி ஐம்பது ரூபா கொண்டுவந்து கொடுத்தார்).

**மாரியப்பன்.**—(ரூபாவை வாங்கிக் கண்களில் ஒத்திக்கொண்டு சாமியாருக்கு விழுந்து நமஸ்காரம் செய்து) நாளை மாலை ரெயில்வே ஸ்டேஷனில் காத்துக்கொண்டிருப்பேன் (என்று நீங்கினான்).

அடுத்த நாள் காலை சாமியார் தன்னைவந்து பார்க்கிறவர்களுக்கெல்லாம் விபூதியும் ஔஷதமுங் கொடுத்துத் தான் வெளியூருக்குப் போவதாகச் சொல்லி அனுப்பிவிட்டு, பச்சையப்ப பிள்ளையைக் கண்டு, மூலிகைக்காகத் தான் வெளியூருக்குப் போக வேண்டும்; ஆகையால் தான் வரும் பரியந்தம் பூச்செடிகளுக்குத் தண்ணீர் விடவும் தம்முடைய கொட்டகையில் ஓராள் இரவில் படுத்துக் கொள்ளவும் ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக் கொண்டார். பச்சையப்ப பிள்ளை "சாமி! தாங்கள் வருகிற பரியந்தம் ஒருவனுக்குப் பதிலாக இருவரைப் படுத்துக்கொள்ளச் செய்வதோடு, தங்கள் பூந்தோட்டத்தை நானே வந்து பார்த்துக் கொள்ளுகிறேன்" என்றார்.

## 14—ம் அத்தியாயம்

ஐப்பசி மாதம் மத்தியில் சிதம்பரத்தில் காலையில் பத்து மணிக்குக் கடைவீதியில் ஜனங்கள் அதிகம் நடமாடுவதைக் கண்ட இருவர் பாதையோரம் போகையில், அவர்கள் பேசினால் கேட்கத் தகுந்த தூரத்தில் ஒரு சாமியாரும் அவருடைய சீடனும் அவர்களுக்குப் பின்னாகப் போனார்கள். முன் போகிறவர்களிருவரில் ஒருவன் மற்றவனைப் பார்த்து "நீர் சொல்லும் ஜவுளிக் கடைக்கு இன்னம் அதிக தூரம் போகவேண்டுமோ" என்று கேட்டார்.

**முதல் மனிதன்.**—சமீபத்தில் வந்துவிட்டோம்.

**இரண்டாவது மனிதன்.**—நாம் எப்பொழுதும் வாங்கும் கடையை விட்டு ஒரு புதிய கடைக்குப் போனால் அவன் விலையை உயர்த்தியே சொல்லுவான். கடைக்காரன் சொல்லிய விலையில் ஒன்றிரண்டு குறைத்துக் கேட்க வேண்டுமே யொழிய, நாம் என்ன செய்ய விருக்கிறது. வாங்கப் போகும் துணி எத்தனையாவது நம்பர் நூலில் நெய்திருக்கிறது? நூலின் விலை என்ன? நெசவு கூலி எவ்வளவு? சாயத்தின் விலை என்ன? இலாபம் என்ன? என்று இவைகளை அறிந்தோ விலை கேட்கிறோம். நாம் அறிந்தவர்களில் அவர்கள் இந்த விலைக்கு வாங்கினார்கள்: இவர்கள் இந்த விலைக்கு வாங்கியிருக்கிறார்கள்: ஆனதால் நாம் இந்த விலைக்குக் கேட்கவேண்டு மென்றதே ஒழிய வேறு என்ன செய்ய விருக்கிறது.

**முதல் மனிதன்.**—நான் அழைத்துப் போகும் ஜவுளிக் கடைக்காரன் மிக்க யோக்கியன். நாம் ரூபாவுக்கு ஒன்றரை அணா இலாபம் கொடுக்கிறோமென்றால் கொள்முதல் பட்டியை எடுத்துக் காட்டிவிடுகிறான்.

**இரண்டாவது மனிதன்.**—கொள்முதல் பட்டியை நம்புவதும் முடியாத காரியம். கொள் முதல் பட்டிகள் இரண்டு வருகிறதென்றும் ஒன்று உண்மையான விலை என்றும் மற்றொன்

றில் ரூபாவுக்கு ஒரு அணு அதிகம் சேர்த்து எழுதியிருக்கிற தென்றும் சொல்லுகிறார்கள். அதையே நமக்குக் காட்டி விலை வாங்குகிறார்களாம்.

**முதல் மனிதன்.**—நீ சொல்வது உண்மையே! நான் அழைத்துப் போகுங் கடைக்காரன் அவ்விதம் செய்யத் துணியான். சமீபத்தில் கல்கத்தாவில் போட்ட லாட்டரி சீட்டில் அவனுக்கு மூன்று லக்ஷம் கிடைத்ததென்றும் ஓர் ஜவளிக்கடையைச் சரகேோடு நல்ல லாபம் கிடைக்கும் விதம் விலை குறைத்து வாங்கியிருக்கிறான் என்றும் கேள்வி.

**இரண்டாவது மனிதன்.**—லாட்டரியிலா வந்தது? அதிர்ஷ்டம் வந்தால் இப்படியல்லவா வரவேண்டும். அவன் நம்முடைய ஜாதியானா?

**முதல் மனிதன்.**—ஒருவன் அல்ல; மூன்று பேர். அவர்கள் காரைக்காலிலிருந்து வந்திருக்கிறார்கள். அவர்கள் கூட்டாகக் கடை வைத்திருக்கிறார்கள்போல் காண்கிறது. அவர்கள் நம்முடைய ஜாதியாரல்ல.

**இரண்டாவது மனிதன்.**—சம்பளத்துக்கு ஆளும் வைத்திருக்கிறார்களோ?

**முதல் மனிதன்.**—கடையில் முன் சம்பளத்துக்கு இருந்தவர்களையே வைத்து வேலை வாங்கினாலும், பணங்காசைத் தாங்களே வைத்துக்கொள்ளுகிறார்கள்.

அப்பால் அவ்விருவரும் கடைக்குள் நுழைந்து, கடைக்குள் மூன்று மகமதியர் நல்ல உடுப்போடு தனித்தனி உட்கார்ந்திருப்பதையும், பார்க்கிறவர்களுடைய கண்களைக் கவரும்படி கொடியில் விலையுயர்ந்த காசிச் சேலைகளும் சரிகை வேஷ்டிகளும் தொங்கவிட்டிருப்பதையும், ஐந்தாறு சிப்பந்திகள் கடைக்கு வருகிறவர்கள் கேட்பதை எடுத்துக் காட்டி விலை சொல்வதுமாக இருப்பதையும் கண்டு தங்களுக்கு வேண்டியதை வாங்கிக்கொண்டு நீங்கினார்கள்.

சாமியாரும் அவர் சீடனும் ஜவளிக்கடையை எட்டிப்

பார்த்துக் கொடியில் தொங்குகிறதைக் கண்டு உள் நுழைந்து மூன்று மகமதியர் விலையுயர்ந்த உடுப்புகளோடிருப்பதை நோக்கி அதிசய முற்றதைக கண்ட சிபபந்திகளி லொருவன் சாமியா ரைப பார்த்து, “ வருக சாமியாரே! என்ன வேண்டும்! காசிச் சேலைகள் வேண்டுமா? சரிகை வேஷ்டிகள் வேண்டுமா?” என்று கேலியாகக் கேட்டான்.

**சாமியார்.**—அபபா! நாங்கள் காசிச் சேலையையும் சரிகை வேஷ்டியையும் வாங்கி என்ன செய்கிறது?

**சிப்பந்தி.**—காசிச சேலை வாங்கி உம்முடைய பெண்டாட்டிக்குக் கொடும்.

**சாமியார்.**—எங்களைப் பார்த்தால் நாங்கள் பெண்டாட்டி பிள்ளை களோடு இருப்பவர்களென்று உன் கண்ணுக்குக் காணப் படுகிறதா?

சிபபந்தியும் சாமியாரும் பேசிக்கொண்டதைக் கேட்ட எஜமான், சிப்பந்தியை அதட்டி, “ சாமியாரை ஒன்றும் சொல்ல வேண்டாம். சாமியார் விலையுயர்ந்த சேலைகளைப் பார்க்க வந் திருக்கிறார்போ லிருக்கிறது” என்றார்.

**சாமியார்.**—பார்த்தால் ஆசை தீர்ந்துபோகாது. இங்கிருக்கும் விலையுயர்ந்த சேலைகளில் எனக்கொன்றும் என் சீடனுக்கு ஒன்றும் கொடுத்தால் எங்கள் ஆசை தீரும் (என்று நகைத் தார்).

**எஜமான்.**—சாமியார் இஷ்டப்பட்டதைக் கொடுக்கிறேன்; எடுத் துக்கொண்டு போகலாம் (என்று கொடியிலிருந்த சேலையை எடுத்தான்).

**சாமியார்.**—அப்பா! நீ மகிழ்வோடு கொடுக்கிறேன் என்றதே கொடுத்ததுபோ லாயிற்று. சேலையை எடுக்கவேண்டாம். இதைப் பெற்றுக்கொள்ளுங்கள் என்று விபூதி எடுத்துக் கொடுத்து உங்களைப் பிடித்த பீடை விரைவில் நீங்கிவிடும் என்று மற்றவர்களுக்கும் விபூதி கொடுத்தார்.

எஜமானும் மற்ற இரு மகமதியரும் விபூதியை வாங்கி ஓர்

கடுதாசியில் வைத்துக்கொண்டார்கள். சிப்பந்திகள் வாங்கி நெற்றியிலும் மார்பிலும் பூசிக்கொண்டார்கள்.

**சாமியார்.**—அப்பா ! உத்தமர்களாகிய உங்களைப் பார்த்து எங்கள் கண்கள் குளிர்ந்தன. நாங்கள் போய்வருகிறோம் (என்று நீங்க எத்தனித்தார்).

சாமியவர்கள் எங்களிடத்தில் ஒன்றும் பெற்றுக்கொள்ளாமல் போகிறது நன்றல்ல என்று எஜமான் ஒரு ரூபாவை எடுத்துக் கொடுக்கப போனான்.

**சாமியார்.**—பரிபூரணமாயிற்று. எங்களுக்குப் பணங்காசு வேண்டியதில்லை (என்று தன் சீடனோடு நீங்கித் தம்மிருப்பிடம் உற்றார்).

ஜாகையி லிருந்தவன் சாமியாருக்கும் அவர் சீடனுக்கும் பாலும் பழமுங் கொண்டுவந்து வைத்தான்.

**சாமியார்.**—மாரியபபா ! இவ்வூரில் சாப்பாட்டுக் கிளப்புகள் அநேகம் இருக்கின்றனவே ! நீ என் அங்கு போய்ச் சாதம் சாபபிட்டு வரக்கூடாது ? எங்களைப்போல் பாலும் பழத்தோடிருக்கிறாய்.

**மாரியப்பன்.**—சாமி ! நாம் வேளைக்கு ஒன்றரைப்படி பாலும் ஒரு சீப்பு வாழைபபழமும் வாங்குகிறோம் ? பாலைக் காய்ச்சினால் ஒருபடி தேறுகிறது. தாஙகளும் தங்களுடைய சீடனும் ஆளுக்குக் கால்படி பாலும் மூன்று பழமும் சாப்பிடுகிறீர்கள். எனக்கு அரைப்படி பாலும் ஐந்தல்லது ஆறு பழமும் கிடைக்கிறது. அதையே முற்றிலும் சாபபிட முடியவில்லை. இதைவிடச் சாதம் உயர்வென்றோ நினைக்கிறீர்கள். நான் முன்னிருந்ததை விட அதிகம் பருத்திருக்கிறேன்.

**சாமியார்.**—நீ எங்களோடு இரண்டு இரண்டரை மாதமாகத் திரிகிறது உனக்குக் கஷ்டமாக இருக்கிறதல்லவா ?

**மாரியப்பன்.**—சாமி ! வருடமெல்லாம் தங்களோடு திரியச் சொன்னாலும் சந்தோஷமாகத் திரிவேன். நான் பார்க்காத

கோவிலெல்லாம் பார்த்தேனே ! நான் தனித்து வந்து இத்தனை சாமிகளைப் பார்த்திருக்க முடியுமா ? தங்களுடைய தயவினால் பார்க்கக் கிடைத்தது.

**சாமியார்.**—இவ்வூரில் பார்க்கவேண்டியதைப் பார்த்தாயிற்று. இன்றிரவு நாம் இவ்வூரை விட்டு வேறிடம் போகவேண்டும்.

**மாரியப்பன்.**—தங்கள் இஷ்டம்போல் செய்யலாம் (என்று நீங்கினான்).

**சீடன்.**—சாமி ! ஜவுளிக்கடையிலுள்ள மகமதியர் போட்டிருக்கும் உடுப்புகளைக் கவனித்தீரா ? ஒவ்வொருத்தரும் போட்டிருப்பது நூறு நூற்றைம்பது ரூபாவுக்குக் குறையாதென்று நினைக்கிறேன் (என்று நகைத்தான்).

**சாமியார்.**—தமிழராயிருந்தால் இடுப்பு வேஷ்டியோடிருப்பார்கள். அவர்கள் மகமதியரானதால் விலையுயர்ந்த உடுப்போடிருக்கிறார்கள்.

இவ்விதம் பேசிக்கொண்டிருந்து இரவு நிதானம் ஒன்பது மணிக்கு ரெயில்வே ஸ்டேஷனுக்குப் போகப் பிரயாணப்பட்டார்கள்.

சிதம்பரத்து ரெயில்வே ஸ்டேஷனுக்கும் ஊருக்கும் மத்தியிலுள்ள வெளியில் குத்துச்செடிகளும் மரங்களும் இருக்குமிடத்தில், பதினேழு அல்லது பதினெட்டென்று மதிக்கத் தகுந்த சுந்தரமான ஓர் பெண், கையில் நீளமான கயிற்றை வைத்துக்கொண்டு ஓர் மரத்தில் தாழ்ந்திருக்கும் கிளையில் விட்டெறிந்துகொண்டிருந்தாள். கயிறு மரக்கிளையில் மாட்டிக்கொள்ளாமல் தவறிக்கொண்டே யிருந்தது. அச்சமயத்தில் அம்மார்க்கம் வந்த ஒருவன் அப்பெண் அருகிற் சென்று, "நீ யார் ? நீ ஏன் கயிற்றை மரக்கிளையில் போடப் பார்க்கிறாய் ?" என்று கேட்டான்.

**பெண்.**—இந்தக் கயிறு பாதையில் கிடந்தது. அது காலில் சிக்கி யாராவது விழுவார்களென்று கயிற்றை மரத்தில் எறியப் போனேன்.

அன்னியன்.—நீ மரக்கிளையில் கயிற்றை எறிந்ததின் காரணம யாதென்று நான் கண்டுகொண்டேன். நீ இந்த ஊரா?

பெண்.—நான் இந்த ஊரல்ல (என்று போக எத்தனப்பட்டாள்).

அன்னியன்.—நீ போகவேண்டாம்! நான் கேட்பதற்குப் பதில் சொல்லியே போகவேண்டும். நீ அவசரப்பட்டுப் போவாயானால் உன்னை நான் போலீஸார் வசம் ஒப்படைக்கவேண்டியதாய் முடியும்.

போலீஸார் என்று சொன்னவுடன் பெண் பயந்து நின்றாள்.

அன்னியன்.—நீ உன் மாமி, நாத்தி, அல்லது உன் புருடனால் ஏதோ துன்பபபட்டு உன் உயிரை விட்டுவிடத் துணிந்தாய் போல் காண்கிறது. இருட்டில் உன் முகம் நன்றாய்த் தெரியவில்லை யாயினும், நீ ஒரு சுந்தரமான பெண்ணாகக் காணபபடுகிறாய். நீ இநத இளம் வயதில் இறக்க நினைப்பது நன்றல்ல. உன்னைக் கொடுமையாக நடத்தியவரை விட்டு நீங்கினால், நீ சந்தோஷமாக இருக்கக்கூடும். நான் சொல்வதைக் கவனித்துக் கேள். நானும் இவ்வூரானல்ல: கப்பலேறிப போகிற சிங்கபபூரிலிருந்து வந்தவன். பிறந்த ஊரைப பார்க்க வந்தேன். சில நாளில் சிங்கப்பூருக்குப் போவேன். அங்கு எனக்குப போதுமான சொத்திருக்கிறது. ஆனால் எனக்கு மனைவி இல்லை. உன்னை நான் போலீஸாரிடம் ஒப்படைத்தால, நீ உன் உயிரை மாய்த்துக் கொள்ளப்போனதால் உன்னை ஏழு வருடம் தண்டித்து விடுவார்கள். வீணாகச் சிறைச்சாலையில் காலங்கழிபபதை விட எனக்கு மனைவியா யிருக்கச் சம்மதப்பட்டால் உன்னைச் சிங்கப்பூருக்கு அழைத்துக்கொண்டு போய் உனக்கு வேண்டிய நகைகளைப போட்டு உனக்குப பணிவிடை செய்ய ஆள்களோடு உன்னை மேன்மையாக வைத்திருப்பேன். உன் சம்மதத்தைச் சொல்லவேண்டும்.

பெண்.—ஐயா! உம்மை இருட்டில் தெரியவில்லையாயினும்

உம்மைப் பார்த்தால் நற்குடியிற் பிறந்தவராகக் காணப்படு கிறது. நான் இரவில் தனித்து உம்மிடத்தில் அகப்பட்ட தால், உம்முடைய நற்குணத்தை ஒழித்து என்னிடத்தில் தகாத வார்த்தைகளைச் சொன்னீர். நான் உம்முடைய கருத்துக்கு உடன்பட்டு வருகிறவளென்று நினைக்கவேண் டாம். நீர் சொல்லியதுபோல் நான் மாமி நாத்தி முத லானவர்களால் துன்பமடைந்து வெளிபபட்டவளல்ல. என் நாயகன் உயிர்துறந்ததால் அவருக்குப்பின் உலகத்தி லிருக்க இஷ்டங்கொள்ளாமல் என் ஆயுளை முடித்துக் கொள்ளத் துணிந்தேன். தன் நாயகன் இறந்தபின் தான் உயிரோடிருக்க இஷ்டங்கொள்ளாதவள் வேறொரு வருக்கு மனைவியா யிருக்க இஷ்டங்கொள்ளமாட்டா ளென்று நீரறியவேண்டும். நாம் இவ்விரவில் இவ்விடத் தில் நின்று வீண் வார்த்தை யாடிக்கொண்டிருபபது நன் றல்ல. நான் போகிறேன், என்னைத் தடைபபடுத்தவேண் டாம் (என்று அவ்விடத்தை விட்டு நீங்க எத்தனித்தாள்).

**அன்னியன்.**—போகாதே! நில். "என் நாயகன் இறநதான் நானும் இறந்துபோக இவ்விடம் வந்தேன்" என்றாய். புரு டன் இறந்தால் பெண்டாட்டியும் உடன்கட்டை ஏறிய காலம் போனது. ஆனதால் நீ உயிர் துறபபது நன்றல்ல. உன் னுடைய வாலிபகாலம் வீணாய்ப போகாமல் எனக்கு மனைவி யாக இருந்து எல்லாச் சுகத்தையும் அனுபவிககலாம. உன் புருஷன் சமீபததி லிறநததால் அததுக்கம் உன்னை விட்டு நீங்காமல் உயிரைவிடத் துணிநதாய். இரண்டொரு மாதத் தில் உன் துககம் நீஙகி இறநத புருடனை முற்றிலும் மறந்துவிடுவாய். உலகில் புருடனை யிழந்த கைம்பெண்கள் எத்தனைபே ரென்பது சொல்ல முடியுமா? நீ அதைக கவ னித்தால் நீ தைரியத்தோ டிருபபாய். நானும் உன் துக்கம் விரைவில் நீங்கும்படி வேணடியதைச் செய்வேன்.

**பெண்.**—என் துககம் என் கட்டையோடு நீங்கும்; அதற்குமுன்

நீங்காது. நான் உம்முடைய இஷ்டத்துக்கு உடன்படுகிறவ ளென்று நினைக்கவேண்டாம் (என்று நடந்தாள்).

**அன்னியன்.**—உன்னைத் தூரத்தில் விட்டு வார்த்தையாடிக்கொண் டிருந்ததால், என்னை விட்டுப் போகப் பார்க்கிறாய். இந்நேரத் தில் இத்தனித்த விடத்தில் நீ என்னிடத்தில் அகப்பட்டுத் தப்பிப் போகலாமென்றோ நினைத்திருக்கிறாய். அது முடி யாத காரியம் (என்று அப்பெண்ணின் கையைப் பிடிக்கப் போனான்).

**பெண்.**—சீ! என் கையைத் தொடவேண்டாம்! நீ பேசாமல் போகிறாயா? இல்லையா? வீணில் அவமானப்பட்டுப் போவாய். பேசாமல் போய்விடு (என்று நடந்தாள்).

**அன்னியன்.**—என்னடி சொன்னாய்? நானா அவமானம் அடை வேன் (என்று அப்பெண்ணைக் கட்டிப் பிடித்தான்).

பெண் அன்னியன் கைப்பிடியிலிருந்து திமிறிக்கொள்ள முடியாமல் "ஐயோ! என்னைக் கொல்லுகிறான் கொல்லுகிறான்" என்று பெருங் கூச்சல் போட்டாள். அன்னியன் அப்பெண் போடுகிற சப்தத்தைக் கவனிக்காமல் அவளைக் கட்டிப் பிடித்துக் கொண்டபொழுது, ஒருவன் ஓடிவந்து அன்னியன் அருகிற் சென்று, "ஏன் அந்தப் பெண்ணைத் தொந்தரை செய்கிறாய்? அந்த பெண்ணை விட்டுப் போ" என்றான்.

**அன்னியன்.**—நீ யாரடா! அதிகாரத்தோடு பேசவந்தவன்.

**வந்தவன்.**—நான் அதிகாரத்தோடே பேசுகிறேன். நீ ஏன் அந் தப் பெண் கதறும்படி கட்டிப்பிடித்துக்கொண் டிருக்கிறாய்?

**அன்னியன்.**—நான் உனக்குச் சொல்லவேண்டிய அவசியமில்லை. நீ வந்த வழியே போகாமற்போனால் என்னிடத்தில் அடி படுவாய்.

**வந்தவன்.**—என்னையா அடிக்கப்போகிறாய்! என்று அன்னியன் முகத்தில் குத்தினான்.

அன்னியன் அப்பெண்ணைப் பிடித்திருந்த பிடியை விட்டு வந்தவன் மார்பில் குத்தினான். வந்தவனும் அன்னியனைக் குத்தி

இருவரும் ஒருவரை யொருவர் அடித்தும் குத்தியும் உதைத்தும் சண்டைபோட்டு, முடிவாக, வந்தவன் அன்னியன் மார்பில் குத்தி நிலத்தில் படுக்கவைத்தான். அச்சமயத்தில் மற்றொருவர் அவ்விடம் வந்து " மாரியபபா ! என்ன சண்டை ? இது யார் கீழ் விழுந்திருக்கிறது ? இஙகு நிற்கும் பெண் யார் ?" என்று கேட்டார்.

**மாரியப்பன்.**—சாமி ! நான் தங்களுக்கு முன் வந்தவன். இவ்விடத்தில் இந்த அம்மாள் போட்ட சத்தத்தைக் கேட்டு ஓடிவந்தேன். (கீழ் விழுந்திருபபவனைக் காட்டி) இவன் இந்த அம்மாளைப் பலவந்தம் செய்து கட்டிப் பிடித்ததால் இவனைக் கீழே படுக்கவைத்து இந்த அம்மாளை மீட்டேன்.

**சாமியார்.**—கீழ் விழுந்திருப்பவனைப் பார்த்து இவனுக்கு உயிர் இருக்கிறதா இல்லையா (என்று கேட்டார்).

**மாரியப்பன்.**—சாமி ! அவருக்கு ஒன்றுமில்லை. கொஞ்சநேரம் படுத்திருந்து எழுந்துபோய்விடுவார். அவர் மாரபில் விழுந்த குத்து அவரைத் தூங்கவைத்திருக்கிறது.

**சாமியார்.**—(அங்கிருக்கும் பெண்ணைப பாரத்து) அம்மா ! நீ யார் ? நீ எபபடி இவன் கையில் அகப்பட்டாய் (என்று கேட்டுக்கொண்டே அழைத்துச் சென்றார்).

பாதையில் நின்றிருந்த சீடன் "சாமி ! காட்டுககுள் போனவர் ஓர் பெண்ணை அழைத்துக்கொண்டு வந்தீாகளே !" (என்று நகைத்தான்).

**சாமியார்.**—அபபா ! உனக்கோ தங்கை இருக்கவேண்டியது அவசியமென நினைத்து அழைத்துவந்தேன் (என்று நகைத்தார்).

அச்சமயத்தில் லாந்தரோடு வந்தவன் பாதையிற்போகிறவர்கள் யாரென்று லாந்தரைத் தூக்கிபபார்த்தான். அவ் வெளிச்சத்தால் சாமியார் தான் அழைத்துவந்த பெண்ணின் சுந்தரத்தைக் கண்டு ஆச்சரியபபட்டு " அம்மா ! நீ எங்கு போகவேண்டும் " என்று கேட்டார்.

சீடன்.—சாமி ! என் தங்கை என்னிடத்தில் தன் விருப்பத்தைச் சொல்வார்களன்றித் தங்களிடம் சொல்லார்கள்.

சாமியார்.—ஆ ! ஆ ! அப்படியா சமாசாரம் ! அது எனக்குத் தெரியாமற்போனது. நீயே உன் தங்கையின் கருத்தைக் கேள் (என்று மாரியப்பனோடு முன் சென்றார்).

சாமியாரும் மாரியபபனும் முன்னால் போனபின், சீடன் அப்பெண்ணைப பார்த்து, "நீ ஏனம்மா அழுதுகொண்டே வருகிறாய்" என்று கேட்டான்.

பெண்.—ஐயாவே ! நான் என் தலைவிதியை என்னென்று சொல்லுவேன் (என்று மீண்டும் அழுதாள்).

சீடன்.—அம்மா ! நீ என்னருகில்வா (என்று அவள் காதில் இரக சியமாகச் சில வார்த்தைகளைச் சொல்லி) நீ இனிமேல் சந்தோஷமாக இருககலாம் அல்லவா (என்று நகைத்தான்).

பெண்.—(முன் துக்கத்தால் அழுதுகொண்டிருந்தவள் சீடன் சொல்லிய வார்த்தைகளைக் கேட்டபின், சீடன் இருகரங்களை யும் பிடித்துக்கொண்டு சநதோஷ மிகுதியால் கோடுகோ டென்றழுது), "இநத நல்ல சமாசாரம் என் காதில் விழ வேணடியிருபபதால் நான் என் உயிரை விட்டுவிட மரக் கிளையில் போட்ட கயிறு கிளையில் மாட்டிக்கொள்ளாமல் இருந்தது. எல்லாம் நடராஜனுடைய திருவிளையாடல் (என்று மீண்டும் ஆனந்த பாஷ்பஞ் சொரிநதாள்).

சீடன்.—தஙகாய் ! உனக் கெங்கு போக இஷ்டம்?

பெண்.—ஐயாவே ! நீங்கள் என்னை எங்கு அழைததுபபோகிறீர் களோ அங்குவரச் சித்தமாயிருககிறேன் (என்று நகைத் தாள்).

பெண் சொன்னதைக் கேட்டுச் சீடன் சந்தோஷப்பட்டு விரைவாய் நடந்து சாமியாரிடத்தில் அபபெண்ணின் கருத்தைத் தெரிவித்தான்.

சாமியார்.—நகைத்து! உன் தங்கை உன்னிடத்தில் சொன்ன என்றி என்னிடத்தில் சொல்ல மனம் துணிந்தாளில்லை (என்று மீண்டும் நகைத்தார்).

பெண்.—சாமி! அண்ணன் தங்கைக்குள்ள நேசம் அன்னியரிடத்தில் இருக்காதல்லவா (என்று நகைத்தாள்).

சாமியார்.—ஆமாம்.

பின் யாவரும் ரெயில்வே ஸ்டேஷனுக்குச் சென்று டிக்கட்டுகள் வாங்கிக்கொண்டு வண்டி வருகையை எதிர் பார்த்திருக்கும்பொழுது, ஒருவன் போகிறதைக் கண்டு மாரியப்பன் சாமியாரைப் பார்த்து, "சாமி! இவன்தான் அங்கு அடிபட்டு விழுந்துகிடந்தவன்."

சாமியார்.—காட்டுக்குள் அவனை விட்டுவந்தது எனக்குக் கவலையாக இருந்தது. இப்பொழுது அக்கவலை நீங்கியது.

இவ்விதமாகப் பேசிக்கொண்டிருந்து, இரவு ஒரு மணிக்கு வண்டிவர, யாவரும் வண்டியிலேறினார்கள்.

## 15—ம் அத்தியாயம்

கோயம்புத்தூரில் இரங்கைய கௌண்டன் தெருவில் மணிவாசகம் பிள்ளை வீட்டில் பாக்கியம் அழுதுகொண்டிருப்பதை அவள் நாயகன் கண்டு, "பாக்கியம்! நீ எப்பொழுதும் அழுதுகொண்டிருப்பதில் பிரயோசனமில்லை. நான் தேடிப் பார்க்காத இடமில்லை. கருணாநிதியும் நீலமேகமும் என் கண் பார்வையில் அகப்படவில்லை. நாம் என்ன செய்யலாம்?" என்றார்.

பாக்கியம்.—பெற்றவயிறு கேட்கவில்லையே! நான் என்ன செய்வேன்! ஞானவடிவு வீட்டைவிட்டுப் போய் எத்தனை மாதமாகிறது. அவள் உயிரோடிருக்கிறாள் அல்லது இறந்தாளென்று சொல்லுவோர் ஒருவருமில்லையே! ஐயோ! தெய்வமே! உயிரோடு ஒரு பெண்ணைக் கொடுக்கவா என் தலையிலெழுதினாய் (என்று கதறி அழுதாள்).

அச்சமயத்தில் குஞ்சிதபாதம் பிள்ளை வீட்டுக்குள் வந்து "அப்பா! மணிவாசகம்! நீ எப்பொழுது வந்தாய்" என்று கேட்டார்.

**மணிவாசகம் பிள்ளை.**—நான் இராத்திரி வந்தேன். நான் அனேக ஊர்களுக்கெல்லாம் சென்றிருந்தேன். ஞான வடிவு அகப்படவில்லை (என்று கண்கலங்கினார்).

**குஞ்சிதபாதம் பிள்ளை.**—நீ ஊர் ஊராய்த் தேடினாலும் ஞான வடிவைக் கண்டுபிடிப்பது முடியாத காரியம்! நாம் ஒவ்வொரு ஊரிலுள்ள வீடுகளையெல்லாம் உள் நுழைந்து பார்க்க முடியுமா! உன் மகள் இந்த ஊரிலேயே ஒரு வீட்டுக்குள் ளிருப்பாளாயின், நாம் எவ்விதம் அறி கிறது? நீ எடுத்துக்கொள்ளும் தொந்தரவு வீண் என்று நீ போகுமுன் சொன்னேன். என் வார்த்தையைக் கேட்காமல் அலைச்சல்பட்டு வந்தாய்! ஞானவடிவு மிக்க புத்திசாலி! அவள் தானாக வீட்டுக்கு வருவாள். நீயும் உன் மனைவியும் கவலையற்றிருங்கள். நீ உன் தங்கை யைப் போய்ப் பார்த்தாயா? உன் தங்கை சாப்பிடாமல் பட்டினிகிடந்தே தன் உயிரைப் போக்கிக்கொள்வாள் போல் காண்கிறது.

**மணிவாசகம் பிள்ளை.**—அந்த அம்மாள் பிள்ளை போனான் என்று கவலைகொண்டிருக்கிறார்கள். அந்த அம்மாள் பிள்ளையால் எங்கள் மகள் போனாளென்று நாங்கள் கவலைகொண் டிருக்கிறோம். அவர்கள் என் மகளால் தன் மகன் போனான் என்று என்னை சபித்துக்கொண் டிருக்கிறார்கள். இவ்வித எண்ணத்தோடிருக்கும் நாங் கள் ஒருவரையொருவர் பார்த்து வார்த்தையாடுவ தெவ்விதம்? அந்தம்மாள் பிள்ளையைக் கண்டுபிடித்துத் தூக்குக்கு அனுப்பாமுன் அந்தம்மாள் இறப்பது உத்தமம்.

**குஞ்சிதபாதம் பிள்ளை.**—உன்ஜாதகத்தைச் சோதிடர் கோபா லையரிடத்தில் காட்டக்கூடாதா?

**பாக்கியம்.**—கோபாலையர் தன் மகனைப் பறிகொடுத்துப் பைத்தியம் பிடித்தவர்போல் திரிகிறார்.

அந்த வார்த்தை சொல்லும்பொழுது ஒருவர் வருவதைக் கண்டு, "அவரும் வந்துவிட்டார்" என்றாள்.

**துஞ்சிதபாதம் பிள்ளை.**—கோபாலையரே! தங்களுக்கு வயது நூறு. தங்களைக் குறித்துப் பேசிக்கொண்டிருக்கும் பொழுது தாங்கள் வந்தீர்கள்.

**கோபாலையர்.**—நூறுவயதோடா நான் இருக்கவேண்டும். அப்படிபாவி போனபின் நான் உயிரோடிருந்தென்ன பலன்? என்னை ஒன்றுமில்லாதவனாக்கிச் சென்றானே (என்று பெருமூசசெறிந்தார்).

**துஞ்சிதபாதம் பிள்ளை.**—ஏன் அப்படிச சொல்லுகிறீர்? உம்முடைய மகன் காலம் சென்றாலும், அவன் மாமனார் கொடுத்த ஸ்ரீதனம் உம்மிடத்தி லிருக்கிறதே: அதை எங்காகிலும் வட்டிக்குக் கொடுத்து உம்முடைய காலத்தைச் சுகமாய்க் கழிக்கலாமே!

**மணிவாசகம்பிள்ளை.**—ஸ்ரீதனமும் இல்லை. மண்ணும் இல்லை.

**துஞ்சிதபாதம்பிள்ளை.**—அப்பா! மணிவாசகம்! நீ என்ன அறியாதவன்போல் பேசுகிறாய். இவ்வூர் முற்றிலும் அறியச் சூரியநாராயண ஐயர் இரண்டாயிரம் கொடுத்தாரே! அதை இல்லை என்றோ இவர் சொல்லுகிறார்.

**மணிவாசகம் பிள்ளை.**—ஸ்ரீதனம் இரண்டாயிரம் கொடுத்தது உண்மையே! இராமகிருஷ்ணன் இறக்கு முன் அதைத் தன் மாமனாருக்குத் திருப்பிக் கொடுத்துவிட்டான். அந்தத் துக்கசமாசாரத்தைக் கிளறவேண்டாம்.

**கோபாலையர்.**—கேட்கிறவர்களுக்குப் பதில் சொல்லியே தீரவேண்டும். நீர் போன சமாசாரம் என்ன? உன்மகள் அகப்பட்டாளா!

**மணிவாசகம் பிள்ளை.**—அகப்படவில்லை! நான் ஒரு காரியம் செய்யாமற் போனதைக்குறித்துத் துக்கப்படுகிறேன்.

நான் திருச்சிராப்பள்ளிக்கு வந்தபொழுது, 'லாலா பேட்டையில் ஒரு சாமியார் வந்திருக்கிறார்; அவரைக் கண்டு கேட்டால் ஞானவடிவுக்கு நேரிட்டதைச் சொல்லக்கூடு' மென்றார்கள். தாங்களும் அச்சாமியாரைக் குறித்துச் சொல்லி யிருந்தமையால், நான் காலம்போக்காமல் லாலாபேட்டைக்குவந்து சாமியார் எங்கிருக்கிறாரென்று விசாரித்ததில், அவர் தன் சீடரோடு வெளியூருக்குப் போயிருக்கிறாரென்று கேள்விப்பட்டு வந்தேன். சாமியாரைக்குறித்து அதிகம் சொல்லுகிறார்கள். அவரைப் புகழ்ந்து பேசாதவரில்லை. நான் அவரைப் பார்க்காமல் வந்ததே தவறு.

**கோபாலையர்** —லாலாபேட்டை சாமியாரா! நான் அவர் வார்த்தையைத் தட்டி நடந்ததால் எனக்குத் துன்பம் நேரிட்டது.

**குஞ்சிதபாதம்பிள்ளை.**—தாங்கள் அந்தச் சாமியாரைப் பார்த்திருக்கிறீர்களோ?

**கோபாலையர்.**—ஆம்! நான் சோதிடம் பார்க்க லாலாபேட்டைக்குப் போயிருந்தபொழுது சாமியாரை யாவரும் புகழ்வதைக்கேட்டு அவரைப் பார்த்துவரலாமென்று சென்றேன். ஆ! ஆ! அந்தச் சாமியாருக்கு என்ன மரியாதை நடக்கிறது நான் சாமியாருக்கருகில் போகாமல் தூரத்தில் நின்று வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தபொழுது, சாமியார் என்னை அருகிலழைத்து, எனக்கு நேரிடப்போகிறதைச சொல்லி, எனக்கிருக்கும ஒன்றை விட்டால் க்ஷேமமாய் இருக்கலாம் என்று சொன்னார். தெருவில் திரியும் சாமியார்களைப்போல் அவரையும் மதித்து அவர் வார்த்தையை நம்பாமல் மோசம்போனேன், அவரை மீண்டும்போய்ப் பார்க்க என் மனங் கூசுகிறது.

**குஞ்சிதபாதம் பிள்ளை.**—அந்தச் சாமியார் வயது சென்றவரோ?

**கோபாலையர்.**—அந்தசசாமியாருக்கு வயது நாற்பதுக்குமேலிருக்குமென்று நான் நினைக்கவில்லை. அவருடைய சீட

னுடைய முகலக்ஷணத்தை நான் என்னென்று சொல்லுவேன். முகத்தில் பால்வடிகிறது. சீடன் பெண்ணுகை இருந்து சாமியார் பக்கத்தில் உட்காருவானேயாகில் சிவபெருமான் உமாதேவியோடு இருப்பதுபோல் காணப்படும். அவருடைய உதார குணத்தை என்னென்று சொல்லுவேன். ஏழையென்று கையேந்துகிறவர்களுக்குப் பிடிப்பிடியாகக் காசு பணத்தை அள்ளி அள்ளிக் கொடுக்கிறுர்.

**மணிவாசகம் பிள்ளை.**—அவருக்குக் காசு பணம் ஏது?

**கோபாலையர்.**—சாமியாரைப் பார்க்கப்போகிற நோயாளிகளும் மற்றவர்களும் சாமியாருக் கருகிலிருக்கும் சட்டியில் காசு பணத்தைப் போட்டுக்கொண்டிருக்கிறுர்கள். சாமியாருக்கு வைத்தியம் நன்றுய்த் தெரியும்போலிருக்கிறது. அனேக நோயாளிகள் குணப்பட்டிருக்கிறுர்களென்று கேள்வி.

**குஞ்சிதபாதம் பிள்ளை.**—மணிவாசகம்! நீ அவசியம் சாமியாரைப் போய்ப் பார்க்கவேண்டும்.

**மணிவாசகம் பிள்ளை.**—சாமியார் லாலாபேட்டைக்கு வந்தவுடன் தெரிவிக்கும்படி பச்சையப்பனுக்குச சொல்லி வந்திருக்கிறேன். நான் அவனுக்குச சொல்லிவந்ததைக் கவனிக்கிறுனே இல்லையோ!

**குஞ்சிதபாதம் பிள்ளை.**—நீ என் பச்சையப்பன்மேல் சந்தேகப்படுகிறுய்! அவன் சாமியார் வந்தவுடன் தெரிவிப்பான்.

**மணிவாசகம் பிள்ளை.**—பச்சையப்பன் நிலைமையைத் தாங்கள் இப்பொழுதல்லவோ பார்க்கவேண்டும். அவனுக்கு வெவவேறு விதமான வண்டிகள் ஐந்திருக்கின்றன. நான்கு ஜதை மாடுகள் இருக்கின்றன. ஒவ்வொரு ஜதையும் இருநூறு இருநூற்றைம்பதுக்குக் குறையாது. அவன் வெளியில் புறப்பட்டால் எழெட்டுபேர் தொடர்ந்து செல்லுகிறுர்கள். அவனுடைய காரியஸ்தனைப் பார்த்தால் ஓர் தனவந்தனைப்போல் இருக்கிறுன். அவன் சாப்பாட்டில் உட்கார்ந்தால் பத்துப் பதினைந்துபேர் அவ

மீனுடு உட்காருகிருர்கள். இவ்வித சம்பத்தி விருப்ப வன் என்னைக் கவனித்து நான் கேட்டுக்கொண்டதைச் செய்யப்போகிருனே !

**பாக்கியம்.**—அவருடைய மனைவி எங்கிருக்கிருள்?

**மணிவாசகம் பிள்ளை.**—அவனுடைய மனைவி அவள் சொந்த வீட்டி லிருக்கிருள். அவளுடைய சாப்பாட்டுக்கு என்ன மோ கொடுத்துக்கொண்டிருக்கிருன் என்று கேள்வி. அவன் தன்னுடைய சிற்றப்பன் வீட்டி லிருக்கிருன். மனைவி யிடத்தில் பேச்சுவார்த்தை யில்லை. எந்நேரமும் தாசிவீடே கதியாய் இருக்கிருன்.

**குஞ்சிதபாதம் பிள்ளை.**—அவனுடைய சிற்றப்பனுடைய சொத்து அவனைச சேர்ந்துவிட்டதா?

**மணிவாசகம் பிள்ளை.**—அது சமீபத்தில் சேர்ந்துவிடுமென்று அநேகர் அவனுக்கு மேல்விழுந்து கடன் கொடுக்கிருர் கள். இதுபரியந்தம் இருபதினுயிரம் செலவு செய்தி ருக்கிறதாகச் சொல்லுகிருர்கள்.

**குஞ்சிதபாதம் பிள்ளை.**—அவனுக்கு வரப்போகிறது மூன்று லக்ஷம் என்று பலர் சொல்லுகிறதால் அதில் இருபதினு யிரம் போனுல் தோஷமில்லை.

**மணிவாசகம் பிள்ளை.**—நாற்பதினுயிரத்துக்கு எழுதிக் கொடுத்தே இருபதினுயிரம் வாங்கி யிருக்கிருன்.

**கோபாலையர்.**—நாற்பதினுயிரம் போனுலும் தோஷமில்லை. ஐயா ! மணிவாசகம் பிள்ளை ! நான் வந்தவேலையைக் கொஞ்சம் கவனிக்கவேண்டும்.

**மணிவாசகம் பிள்ளை.**—தங்களுக்கு என்ன செய்ய வேண் டும்?

**கோபாலையர்.**—இராமகிருஷ்ணன் இறந்து நெடுநாளாகி றது. அவனுக் கின்னம் கருமசசடஙகு முடியவில்லை. அதற்குச் சூரியநாராயண ஐயா இடக்கொடுக்கிருரில்லை. உமக்கவர் நெருங்கிய சிநேக ரானபடியால் நீர் அவரி டம் பேசிக்கருமச்சடங்கை முடிக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

**மணிவாசகம் பிள்ளை.**—இன்னம் கருமாதியை முடிக்காமலா இருக்கிறீர்கள் ?

**கோபாலையர்.**—தன் பெண்ணில்லாமல் செய்யக்கூடாதென் கிற சமாசாரம் உங்கள் பரியந்தம் எட்டாமலா இருக்கி றது ? இராமகிருஷ்ணன் இறந்தான் என்று வந்த சூரிய நாராயண ஐயர் மகள், என்னுடைய வீட்டி லிருந்தவள் ஒருவருக்கும் தெரியாமல் எங்கோ போய்விட்டாள். அவளை எங்கும் தேடிப்பார்த்தும் அகப்படவில்லை. அவள் இராம கிருஷ்ணனுக்கு எழுதிய கடிதத்தைப் பார்த்த பின் அவள் இறந்திருப்பா ளென்றே சொல்லவேண்டும்.

**மணிவாசகம் பிள்ளை.**—இதென்ன அநியாயம் ! என் மகள் போனதுபோல் என் சிநேகரும் தன் மகளை இழந்தாரே! நான் ஊரிலில்லாமற் போனதால் அவருடைய சமாசா ரம் எட்டாமற்போனது. தாலியறுக்க வேண்டியவள் அவர் பெண்ணாதலால் அப்பெண் இறந்தாளென்று கண் டறியா முன் கருமத்தை எவ்விதம் முடிப்பது ?

**கோபாலையர்.**—அன்னபூரணி மிக்க புத்திசாலி ! அவள் தன் நாயகனுக்கு எழுதிய கடிதத்தைப் பார்த்தவுடன் அவளை நிந்தித்தேன். பின் அவளெழுதியதை யோசித்து எனக் குப் பொருளின்மே லிருக்கும் ஆசையை நீக்கிப் பார்த்த பொழுது அவளைப் புகழ நேரிட்டது. வாயிற்படி தலை யில் பட்டபின் தலை குனிவதுபோல் எனனையே நான் நிந்தித்துக்கொண்டேன். அவள் தன் நாயகன் இறந்த பின் வெளிப்பட்டதால், அவள் உயிரோ டிருக்கவேண்டு மென்கிற எண்ணத்தோடு போயிருக்கமாட்டாள். அவள் உயிரோடிருக்க எண்ணங் கொள்ளுவாளாயின், அவள் வீட்டைவிட்டுப் போகவேண்டிய நியாய மில்லை. அல் லாமலும் அவள் கைக்கொண்டு போன பொருளோ அவளை நெடுநாள் வைத்துக் காப்பாற்றாது. அவள் கையி லிருப்பதைச் செலவுசெய்துபின் பிச்சை யெடுத்துண்ண

இச்சை கொள்ளுவாளென்று சொல்ல மனந் துணியவில்லை. இவைகளையெல்லாம் யோசித்துப் பார்த்தால் இது பரியந்தம் அவளைப் புதைத்திருக்கும் இடத்தில் புல் முளைந்திருக்குமென்றே சொல்லவேண்டும். என் சம்பந்தி அவ்விதம் நினைக்காமல் தன் மகள் உயிரோடிருப்பாள் என்றே சொல்லுகிறார். அவர் மனைவியும் தன் நாயகரோடு கைதட்டுகிறாள். நீர் அவருக்கு நான் சொல்லியகாரணங்களை எடுத்துக்காட்டிக் கருமத்தை முடித்துவிட விடைகொடுக்கச் சொல்லும்.

அத்தருணத்தில் மணிவாசகம்! மணிவாசகம்! என்றழைத்துக்கொண்டே ஒருவர் வீட்டுக்குள் வந்தார்.

**மணிவாசகம் பிள்ளை.**—ஆ! ஆ! சூரியநாராயணமா! வருக! வருக! என்றார்.

**சூரியநாராயணஐயர்.**—குஞ்சிதபாதம் பிள்ளையும் என் சம்பந்தியும் இருக்கிறார்கள். மணிவாசகம்! நீ வந்திருக்கிறாயென்று கேள்விப்பட்டு வந்தேன்.

**மணிவாசகம் பிள்ளை.**—நண்பரே! எனக்கு நேரிட்டதைப் போல உம்முடைய மகள் அன்னபூரணியும் போய்விட்டாளென்று உம் சம்பந்தி சொன்னார். இதென்ன அநியாயம்.

**சூரியநாராயண ஐயர்.**—நாம் என்ன செய்யலாம். நாம் எந்தக் காலத்தில் எதை அனுபவிக்கவேண்டுமோ அதை அனுபவித்தே தீர்க்கவேண்டும். அன்னபூரணிக்கு நேரிட்டதை நினைத்தால் என் தேகம் நடுங்குகிறது. என் சம்பந்தி என் மேல் குறை கூறினாரோ?

**கோபாலையர்.**—நான் குறை என்ன சொல்லப்போகிறேன். இராமகிருஷ்ணனுக்குக் கருமாதியை முடித்துவிடவேண்டுமென்றே மணிவாசகம் பிள்ளையிடம் சொல்லிக்கொண்டிருந்தேன்.

**குஞ்சிதபாதம் பிள்ளை.**—ஆம்! ஐயா! கருமாதியை முடிக்காமலிருப்பது நன்றல்ல!

**மணிவாசகம் பிள்ளை.**—நீர் என் சடங்கை நடத்தவேண்டா மென்கிறீர்?

**சூரிய நாராயண ஐயர்.**—கருமாதியை நடத்தவேண்டியவள் என் மகள். அவள் இறந்தாளோ! உயிரோடிருக்கிறாளோ! தெரியவில்லை. இன்னம் இரண்டு மூன்று மாதத்திற்குள் என் மகள் அகப்படாமற்போனால், அப்புறம் சடங்கை முடித்துவிடலாம் என்றிருக்கிறேன்.

**மணிவாசகம் பிள்ளை.**—ஆம்! ஐயா! பொறுத்தாரெல்லாம் பொறுத்தீர். என் சினேகர் கேட்டுக்கொள்ளும் விதம் செய்வதே உத்தமம். என் சினேகர் உடனே செய்துவிடச் சம்மதப்பட்டாலும் எனக்குச் சம்மதமில்லை. நாம் எல்லாரும் ஓர் பயணம் லாலாபேட்டைச் சாமியாரைப் போய்ப்பார்த்து அவர் சொல்வதைக் கேட்டுப் பின் எதொன்றையும் செய்யவேண்டுமென்பது என் கருத்து.

**சூரிய நாராயண ஐயர்.**—மணிவாசகம்! நீயுமா சாமியார் விஷயத்தில் நம்பிக்கை வைத்திருக்கிறாய்?

**மணிவாசகம் பிள்ளை.**—நான் முதலில் சாமியார்விஷயத்தில் நம்பிக்கை கொள்ளவில்லை. நான் லாலாபேட்டையில் கேள்விப்பட்டதோடு உம்முடைய சம்பந்தி சொல்லியதைக் கேட்டபின் எனக்கு அவர் விஷயத்தில் அதிக நம்பிக்கை உண்டாயிருக்கிறது.

**சூரிய நாராயண ஐயர்.**—அவ்வித எண்ணம் உமக்கிருந்தால், நாம் இப்பொழுதே ஏன் போகக்கூடாது?

**மணிவாசகம் பிள்ளை.**—அவர் வெளியூருக்குப் போயிருக்கிறார். அவர் லாலாபேட்டைக்கு வந்தபின் நாம் போய்ப் பார்க்கலாம்.

**குஞ்சிதபாதம் பிள்ளை.**—அப்பா! மணிவாசகம்! நீ போகும் பொழுது என்னை மறந்து போகவேண்டாம்! நானும் அந்தச சாமியாரைப் பார்க்கவேண்டும்.

**மணிவாசகம் பிள்ளை.**—கோபாலையரே! நான் சொல்லியது தங்களுக்குச சம்மதந்தானே?

**கோபாலையர்.**—உங்கள் இஷ்டம்போல் செய்கிறேன். சாமி யார் வந்தாரென்று கேள்விப்பட்டவுடன் எனக்குத் தெரிவியும் (என்று எழுந்தார்).

**சூரியநாராயண ஐயர்.**—சற்று நிதானியும் (என்று கோபாலையருக்குச் சொல்லி மணிவாசகத்தைப் பார்த்து) மணிவாசகம்! நீ ஊரிலில்லாததால் நான் நினைத்திருக்கும் எண்ணத்தை முடிக்காமலிருந்தேன். நீயும் குஞ்சிதபாதம் பிள்ளையுமிருந்து அதை முடித்துவிடவேண்டும் (என்றார்).

**குஞ்சிதபாதம் பிள்ளை.**—என்ன முடிக்கவேண்டும்.

**சூரியநாராயண ஐயர்.**—நான் என் மகளுக்கு விவாகம் ஆகும் பொழுது ஸ்ரீதனமாக இரண்டாயிரம் ரூபா கொடுத்திருந்தேன். அந்தத்தொகையை என்மருமகன் எனக்கு அனுப்பிவிட்டு இறந்துபோனான். அத்தொகையை நான் எடுத்துக்கொள்வது நியாயமாகக் காணப்படவில்லை. ஆனதால் இதை என் சம்பந்தியை எடுத்துக் கொள்ளசசொல்லவேண்டும் (என்று இரண்டாயிரம் ரூபா நோட்டை எடுத்துக்கொடுத்தார்).

**கோபாலையர்.**—கிருஷ்ணா! கிருஷ்ணா! நான் என்ன காரியம் செய்தேன். இவ்வளவு தயாளகுணம் உள்ளவரைக் கவனியாமல் இவரிடத்திலிருப்பதை முற்றிலும் கொள்ளைக்கொள்ள விரும்பினேன். இவர் பின்வாங்காமல் தனக்கிருக்கும் பொருளைக் கொடுக்கத்துணிந்தார். இவருடைய தயாளகுணத்தை அறிந்தே ஸ்ரீராமகிருஷ்ணன் இவருடைய ரூபா இரண்டாயிரத்தையும் இவருக்கே அனுப்பிவிட்டான். அவன் செய்தது முற்றிலும நியாயம். அவனுடைய கருத்துக்கு விரோதமாக அந்த இரண்டாயிரத்தை நான் கைப்பற்றேன்.

**சூரியநாராயண ஐயர்.**—மைத்துனரே! நீர் அவ்விதம் சொல்

லக்கூடாது; இந்த ரூபா உம்முடையது. நீர் அதை எடுத்துக்கொள்ளவேண்டியதே!

**கோபாலையர்.**—நீர் எனக்காக இந்த ரூபாவைக் கொடுக்கவில்லை உம்முடைய மருமகனுக்கும் மகளுக்கும் கொடுத்தீர். அவர்கள் இருவரும் இல்லாமற்போனதால் இந்தப் பணத்தை எடுத்து யார் உபயோகப்படுத்துகிறது! எனக்கு வேண்டியதில்லை (என்று எழுந்து விரைவாகச சென்றார்).

**மணிவாசகம் பிள்ளை.**—நண்பரே! நாம் சாமியாரைக் கொண்டு இதைக் கொடுக்கலாம் அது பரியந்தம் இதைக் கொண்டுபோய் வைத்திரும்.

**சூரியநாராயண ஐயர்.**—நான் அந்த ருபாவைத் தொடவே மாட்டேன். நீரே எடுத்துவைத்துக்கொள்ளும் (என்றார்).

**மணிவாசகம் பிள்ளை.**—இருவரும் வேண்டாமென்பதால் நானே வைத்திருக்கிறேன்.

**சூரியநாராயண ஐயர்.**—மணிவாசகம்! நான் கற்பகவல்லி அம்மாளைப் பார்க்கப்போகிறேன். நீர் வருகிறீரா?

**மணிவாசகம் பிள்ளை.**—அந்த அம்மாள் என்னைக் கண்டவுடன் என்னை நிந்திப்பார்களென்றே பயப்படுகிறேன்.

**குஞ்சிதபாதம் பிள்ளை.**—உன்னை நிந்திக்கமாட்டார்கள். வருக (என்று மூவரும் எழுந்து இராஜ வீதியில் கற்பகவல்லியம்மாள் வீட்டுக்குச் சென்றார்கள்).

கற்பகவல்லி படுத்திருந்தவள் எழுந்து உட்கார்ந்து வீட்டுக்குள் வருகிறவர்களைப் பார்த்து முகமன்கூறி உட்கார வேண்டினாள்.

**குஞ்சிதபாதம் பிள்ளை.**—அம்மா! கற்பகவல்லி! நீ பட்டினிகிடந்து உன் தேகம அதிகம் மெலிந்துபோகும்படி செய்துகொண்டாய்.

**கற்பகவல்லி.**—நீலமேகம் போனபின் நான் உயிரோடிருந்து என்ன பிரயோசனம் (என்றழுதாள்).

**மணிவாசகம் பிள்ளை.**—அம்மா! கற்பகவல்லி! என்னால்

நீ இத்துன்பத்தை அனுபவிக்கநேரிட்டதல்லவா (என்று கதறி யழுதார்).

**கற்பகவல்லி.**—நீலமேகத்தின் தலைவிதி அவ்விதம் இருந்தால் யார் என்ன செய்யலாம் (என்றழுதாள்).

**சூரியநாராயண ஐயர்.**—அம்மா! கற்பகவல்லி! நீயும் உன் தமையனும் அழுகிறதைப் பார்க்க என் மனந் தாளவில்லை. நாமெல்லாம் ஒரேவித வினையைச் செய்திருப்பதால் நமக்கெல்லாம் ஒரேவித துன்பம் நேரிட்டிருக்கிறது.

**குஞ்சிதபாதம் பிள்ளை.**—நாம் வாலாபேட்டை சாமியாரைக் கண்டால் நம்முடைய துன்பமெல்லாம் நீங்கும்.

**சூரியநாராயண ஐயர்.**—அந்த ஒரு ஆசையிருக்கிறது. அதையும் பார்த்துவிடவேண்டும். இறந்தவரை எழுப்ப முடியாதாயினும் முடிவையாவது அறியலாம் (என்று சாமியாருடைய வல்லமையைக் கற்பகவல்லிக்குச் சொல்லிக்கொண்டிருந்தார்).

## 16—ம் அத்தியாயம்

கோயம்புத்தூரில் சவுடம்மன் கோவிலுக்கருகிலுள்ள ஒப்பனைக் காரத்தெருவில் ஓர் மச்சு வீட்டில் தண்டபாணி பிள்ளை நலியாக இருக்கிறாரென்று குஞ்சிதபாதம் பிள்ளை ஒரு வைத்தியனை அழைத்துவந்து நோயாளியைக் காட்டினார். வைத்தியர் தண்டபாணி பிள்ளையின் கைநாடியைப் பார்த்து "இவருக்கு உள் சுரமிருக்கிறது; இருமலுமிருக்கும். இவர் எத்தனை நாளாகப் படுக்கையி லிருக்கிறார்? யாராகிலும் ஔஷதங் கொடுத்தார்களா" என்று கேட்டார்.

**தண்டபாணி பிள்ளை.**—மூன்று மாதத்துக்குமுன் ஓர் நாள் நான் வெளியிற்போயிருந்து மழையிலகப்பட்டு நனைந்து வந்தவன் வெண்டைக்காயும் கீரைத்தண்டும் போட்ட மோர்க்குழம்பும், வாழைத்தண்டும் பச்சைப் பருப்பும் போட்ட கூட்டுக்கறியும் சாப்பிட்டு, நெடுநேரம் படுத்துத் தூங்கினேன். அன்றிரவு எனக்குச் சுரமிருக்கிற

துபோ விருந்தது. அதைச் சட்டைசெய்யாமல் மறுநாள் எண்ணெய் தேய்த்துக்கொண்டு ஸ்நானம் செய்து வீட்டில் மீதியாக இருந்த மோர்க் குழம்பை விட்டுக் கொண்டு சாப்பிட்டேன். அன்றிரவு என்தேகம் சுடுகிற தென்று என் மூத்தமனைவி சொல்லிக் காப்பி மட்டும் சாப்பிட்டுப் படுத்துக் கொள்ளுங்கள் என்று போனாள். இளையாள் வந்து என்னைத் தொட்டுப் பார்த்து "இதை யார் சுரமென்று சொன்னது? உங்களுடைய தேகம் எப்பொழுதும் சுட்டுக் கொண்டுதானே இருக்கிறது. நீங்கள் பட்டினியாகப் படுக்கக் கூடாது" என்று என்னை அழைத்துப்போய்ப் பீர்க்கங்காய்க் கறியோடு சாப்பாடு போட்டாள். மறுநாள் எழுந்திருக்க முடியாமல் தலைவலியும் காய்ச்சலும் இருந்ததோடு இருமலும் இருந்தது. அது என்ன செய்யப்போகிறதென்று மூன்று நாளைக் கழித்தேன். சுரம் விடாமலிருந்ததால், எனக்குத் தெரிந்த வைத்தியரை அழைத்துவரச் சொல்லிக் கையைக் காட்டினேன். அவர் இது குளிர்ச்சியால் வந்திருக்கிற தென்றும் தான் கொடுக்கும் மாத்திரையைச் சாப்பிட்டால் இரண்டு மூன்று தடவை வயிற்றால் போகுமென்றும் இரண்டு மாத்திரைகளைக் கொடுத்துப் போனார். அவர் கொடுத்த மாத்திரைகளைச் சாப்பிட்டேன். அன்றெல்லாம் பேதியானது. பேதியை நிறுத்திக்கொள்ள வைத்தியர் சொல்லிப் போனதையெல்லாம் சாப்பிட்டுப் பார்த்தேன்; பேதி நிற்க வில்லை. வைத்தியரைத் தேடிப் பார்த்ததில் அவர் ஊரிலில்லை என்று கேள்விப்பட்டு வேறு வைத்தியரிடம் மருந்து வாங்கிச் சாப்பிட்டேன். அம்மருந்து மலபந்தம்செய்து விட்டது. எத்தனையோ வைத்தியர்கள் வந்து பணத்தை வாங்கிக் கொண்டு போனார்களேயொழிய நோய் நீங்கவில்லை.

**குஞ்சிதபாதம் பிள்ளை.**—வைத்தியரே! தண்டபாணி பிள்ளை படுகிற கஷ்டத்தைக் கண்டே உம்மை அழைத்துவந்தேன். இதுபரியந்தம் கொடுத்த ரூபா ஐம்பதாகிறது.

**வைத்தியர்.**—ஐயாவே! நோய் இன்னதென்று அறியாமல் மருந்து கொடுத்திருக்கிறார்கள். கண்ட மருந்தைச் சாப்பிட்டதால் நோய்பலப்பட்டிருக்கிறது. முதலாவது அவர்கள் கொடுத்த மருந்தை முறித்து வேறு மருந்து கொடுக்கவேண்டும். ஒரு கஷாயத்தில் மருந்தை முறித்துவிடலாம். நோயைக் கண்டிக்க லேகியமும் பஸ்பமும் செய்யவேண்டும். இவ்விரண்டையும் செய்து விரைவில் கொடுக்காமல் காலதாமதம் செய்தால் இவருக்கிருக்கும் இருமல் க்ஷயத்தில் கொண்டுவந்து விடும். க்ஷயம் வந்தால் பின் ஆள் பிழைப்பதரிது. மருந்து செலவுக்கு ரூபா இருபத்தைந்து வேண்டும். என்னுடைய தற்காலச செலவுக்குப் பத்துரூபா கொடுக்க வேண்டும். நோய் குணமானபின் நீங்கள் வெற்றிலைப் பாக்கில் என்ன வைத்துக்கொடுத்தாலும் சந்தோஷமாகப் பெற்றுக் கொள்கிறேன். நான் கொடுக்கும் மருந்தை மூன்று நாள் ஆறுவேளை சாப்பிட்டபின் இவருடைய நிலைமையைக் கண்டு ஆச்சரியப்படுவீர்கள். அரைமண்டலம் சாப்பிடுவாரானால் இவர் தேகம் கருங்கல்போலாகும். நான் கேட்பது அதிகமென்று காணப்படின், நீங்கள் வேறு யாரைப்கொண்டாவது பார்த்துக்கொள்ளுங்கள்.

**சிந்தாம்பரம் பிள்ளை.**—வைத்தியரே! நீர் தண்டபாணி பிள்ளையைக் குணப்படுத்துவீரென்று உம்மை அதிகம் நம்பி அழைத்துவந்தேன், தண்டபாணி பிள்ளை தனவந்தரல்ல. ஆனதால் அவருடைய நிலைமையைக் கவனித்து நீர் கேட்கவேண்டும். மருந்து கொடுக்கப் பிரியமில்லாத வைத்தியர்களே தொகை அதிகம் கேட்பது வழக்கம். அதுபோல் நீரும் அதிகம் கேட்கிறீர். உமக்கு மருந்து கொடுக்க இஷ்டமில்லையா?

**வைத்தியர்.**—நான் மருந்து கொடுக்க இஷ்டங்கொண்டே கேட்டேன்.

**குஞ்சிதபாதம் பிள்ளை.**—நீர் முப்பத்தைந்து ரூபா கேட்டால் அவர் எங்கிருந்து கொடுப்பார்?

**வைத்தியர்.**—ஐயா! தாங்கள் என்னை அழைத்து வந்தமையாலும், தண்டபாணி பிள்ளை பணக்காரராக இல்லாததாலும், நான் கேட்கவேண்டியதை அதிகம்குறைத்து மருந்து செலவுக்கு வேண்டியதைமட்டும் கேட்டேன். மருந்துசரக்குகள் வாங்கவேண்டுமென்று கடைக்குப் போனால் பணக்காரருக்கு ஒரு விலையும் ஏழைகளுக்கு ஒருவிலையுமாகக் கொடுப்பார்களா? எல்லாருக்கும் ஒரே விலையாகத்தானே கொடுப்பார்கள். வேண்டிய மருந்துகளை எழுதிக்கொடுக்கிறேன்: நீங்களே வாங்கிவாருங்கள். தண்டபாணி பிள்ளையினுடைய நோயைக் கண்டிக்கத்தக்க ஔடதங் கொடுத்தாலன்றிக் குணப்படுத்த முடியுமா?

**குஞ்சிதபாதம் பிள்ளை.**—வைத்தியரே! நீர் இப்பொழுது இரண்டு வராகன் வாங்கிக்கொண்டு மருந்தைக் கொடும். சௌக்கியமானபின் இன்னும் மூன்று ரூபா கொடுக்கச் சொல்லுகிறேன்.

**வைத்தியர்.**—தாங்கள் சொல்வதைப்பார்த்தால் நான் அதிகம் கேட்டதாக நினைத்திருக்கிறீர்கள். நோய்க்கு வேண்டிய ஔஷதம் கொடுக்கவேண்டுமென்று தாங்கள் நினைக்கவில்லை. தாங்கள் வேறொரு வைத்தியனை அழைத்துக் காட்டுங்கள். தாங்கள் சொல்லிய தொகையில் மருந்து கொடுக்க முடியாது. நான் போய்வருகிறேன் (என்று சொல்லி நீங்கினார்).

**தண்டபாணி பிள்ளை**—வைத்தியர் போய்விட்டாரே! என்ன செய்கிறது?

**குஞ்சிதபாதம் பிள்ளை.**—இந்த வைத்தியனுக்குக் கைராசி உண்டென்று கேள்விப்பட்டிருக்கிறேன். நோயறிந்து மருந்து கொடுப்பான்.

**அபூர்வம்.**—என்ன கைராசி இருந்தாலும் முப்பத்தைந்து ரூபாவா கொடுக்கிறது? அவன் கெட்டானே!

**ராஜாம்பாள்.**—இருந்த நகைகளை விற்று விற்று வைத்தியர்களுக்குக் கொடுத்தாய்விட்டது. இப்பொழுது எந்த நகையைவிற்று வைத்தியனுக்கு முப்பத்தைந்து கொடுக்கிறது. நாம் செலவழித்தது போதும் போதும். இன்னும் எத்தனை நாளைக்கு வைத்தியர்களுக்குக் கொட்டிக்கொண்டிருக்கிறது. சௌக்கியமாகிற காலம் வந்தால் சௌக்கியமாகிறது.

**அபூர்வம்.**—வைத்தியருக்குக் கொடுக்கும் பணத்தை அவருடைய தேக சௌகரியத்துக்கேற்ற சாப்பாட்டு விஷயத்தில் செலவு செய்வது உத்தமம்.

**தண்டபாணி பிள்ளை.**—ஐயாவே! தாங்கள் வைத்தியரை அழைத்து மருந்து கொடுக்கச் சொல்லுங்கள்.

குஞ்சிதபாதம் பிள்ளை வெளியில் சென்று வைத்தியர் சமீபத்தில் ஒருவரோடு நின்று பேசிக்கொண்டிருப்பதைக் கண்டு அவரை அழைத்துவந்தார். தண்டபாணி பிள்ளை எழுந்துபோய் இருபது ரூபா கொண்டுவந்து வைத்தியருக்குக் கொடுத்து, "ஐயா! என்மேல் இரக்கங்கொண்டு மருந்து கொடுஙகள். எனக்கு வெளியிற்போகச சக்தி வந்தவுடன் நீர் கேட்ட மற்றத் தொகையையும் கொடுக்கிறேன் (என்று வைத்தியரைக் கும்பிட்டார்.)

**வைத்தியர்.**—உம்முடைய பரிதாப நிலையைப் பார்த்துப் போகப்பிரியமில்லை. என் கைப்பொருளைப் போட்டு உமக்கு மருந்து செய்து கொடுக்கிறேன். உம்மைக் குணப்படுத்தி நல்லபேர் வாங்கவேண்டுமென்பதே என் கருத்து நான் சொல்லும் கஷாயத்தை முதலில் சாப்பிட்டு, நான் லேகியம் கொண்டுவருந்தனையும் இந்தச் சூரணத்தைத் சாப்பிடும் (என்று கொடுத்துக் கஷாயத்துக்கு வேண்டிய மருந்து தினுசுகளைச சொல்லிப் பத்தியமும் சொல்லிக் குஞ்சிதபாதம் பிள்ளையைப் பார்த்து), ஐயாவே! இவர் தங்களுக்குச் சொந்தமோ (என்று கேட்டார்).

**குஞ்சிதபாதம் பிள்ளை.**—நான் இவருடைய வீட்டுக்குச் சமீபத்தி லிருப்பவன். இவர் படுங் கஷ்டத்தைப் பார்த்துச் சகிக்க முடியாமல் உம்மை அழைத்துவந்தேன் (என்று வைத்திய ருக்கு விடைகொடுத்து அனுப்பினார்).

மூன்று நாளைக்குப்பின் வைத்தியர் லேகியமும் பஸ்பமும் கொண்டுவந்து கொடுத்தார். தண்டபாணி பிள்ளை மருந்து சாப் பிட்டுவந்தாலும் பிணி நீங்காமல் இருமல் அதிகரித்துக்கொண்டே வந்தது. அவர் மனைவிகள் இருவரும் வைத்தியரைக் கண்டால் கோபித்து, “வீணில் உனக்கு இருபது ரூபா அழுதோம்” என்று வசை கூறிக்கொண் டிருந்தார்கள். நாளுக்கு நாள் தண்டபாணி பிள்ளை எழுந்து நடமாடச் சக்தியற்றுப் படுக்கையி லிருந்தார். இரண்டு வாரத்துக்குப் பின் ஒரு நாள் மாலை தண்ட பாணி பிள்ளை தன் மூத்த மனைவியை அழைத்து “அதிக தாகமாக விருக்கிறது கொஞ்சம் வெந்நீர் கொண்டுவா” என்றார்.

**அபூர்வம்.**—நாளெல்லாம் நான்தானே உனக்குப் பணிவிடை செய்யவேண்டும்? உன் பிரிய நாயகியைக் கூப்பிட்டு உனக்கு வேண்டியதைச் செய்யச் சொல் (என்று முகத்தைத் திருப் பிக்கொண்டு வெளி வாயிலில் போய் நின்று போவாரை வருவாரைப் பார்த்துக்கொண் டிருந்தாள்).

தண்டபாணி பிள்ளை தன்னிளைய மனைவியை அழைத்தார். அவள் நெடுநேரத்துக்குப் பின் வந்து “நான் வருகிறதற்குள் ஏன் கத்துகிறாய்” என்று கேட்டாள்.

**தண்டபாணி பிள்ளை.**—ராஜம்! எனக்குத் தாகமாக இருக் கிறது; வெந்நீர் கொண்டுவா என்றேன். அவள் கொண்டு வரவில்லை. நீயாகிலும் கொண்டுவா!

**ராஜம்பாள்.**—இதற்குத்தானே காது செவிடுபடக் கத்தினாய் (என்று தண்ணீர் கொண்டு வந்து கொடுத்தாள்).

**தண்டபாணி பிள்ளை.**—ராஜம்! இந்தச் செம்பைத் துலக்கா மல் இதில் கொண்டுவந்தாய். இதை நன்றாய்த் துலக்கிப் பின் ஜலங் கொண்டுவா! இதில் துர்வாஸனை வீசுகிறது.

**ராஜம்பாள்.**—செம்பை நன்றாய்த் துலக்கியே ஜலங்கொண்டு வந்தேன். குடித்தால் குடி; குடிக்காமற்போனால் வைத்துக் கொண்டிரு (என்று நீங்கினாள்).

தண்டபாணி பிள்ளை செம்பிலிருந்த ஜலத்தில் ஒரு மிடறு குடித்து துர்வாஸனையால் ஒக்காளித்து வாந்தி யெடுத்துப் படுக்கையில் விழுந்து மூர்ச்சையாய்க் கிடந்தார். இரண்டு மனைவிகளில் ஒருத்தியாவது அவரைப் போய் பார்க்கவில்லை. தண்டபாணி பிள்ளை நோயில் விழுந்தபின், குஞ்சிதபாதம் பிள்ளை அடிக்கடி வந்து பார்த்துக்கொண்டிருந்தவர், அன்று வந்து தண்டபாணி பிள்ளை அருகில் உட்கார்ந்து தொட்டுப் பார்த்து, "அதிக நித்திரையி லிருக்கிறதுபோல் காண்கிறது" என்றார். தண்டபாணி பிள்ளை கண் விழித்துப் பார்த்து 'தண்ணீர்' என்றார்.

**குஞ்சிதபாதம் பிள்ளை.**—அம்மா அபூர்வம்! அம்மா ராஜம்! விரைவில் வெந்நீர் கொண்டுவாருங்கள்.

**ராஜம்பாள்.**—ஏன் தாதா கூப்பிட்டீர்கள்? (என்று வந்து கேட்டாள்).

**குஞ்சிதபாதம் பிள்ளை.**—உன் புருஷன் வெந்நீர் வேண்டுமென்கிறான்; விரைவில் கொண்டுவந்து கொடு.

**ராஜம்பாள்.**—ஐயோ! அவர் தேகம் என்னத்துக்காகும். காலையிலிருந்து இது பரியந்தம் அவர் குடித்த தண்ணீர் ஒரு குடம் இருக்கும். அதன்மேல் கஞ்சியும் ஊற்றிக்கொண்டிருப்பதால் வயிறு கொள்ளாமல் வெளி நோக்குகிறது. நோயாளி இஷ்டப்பட்டுக் கேட்பதையெல்லாம் கொடுக்க வேண்டாமென்று வைத்தியர் சொல்லிப்போனார். நாங்கள் வைத்தியர் சொல்லுகிறதைக் கேட்கிறதா? அல்லது தாங்கள் சொல்லுகிறதைக் கேட்கிறதா?

**குஞ்சிதபாதம் பிள்ளை.**—அம்மா! ராஜம்! வைத்தியர் கொடுக்க வேண்டாமென்ற வஸ்துவை நான் கொடுக்கச் சொல்லவில்லை. நோயாளி தாகமா யிறக்கிற தென்றால் தண்ணீர் கொடுக்க வேண்டாமென்றா வைத்தியர் சொல்லிப்போனார்?

**ராஜம்பாள்.**—முன் நான் கொண்டுவந்த வெந்நீரைச் சாப்பிட்டு வயிற்றில் இடமில்லாமல் வாந்தி எடுத்துவிட்டாரே ! மீண்டும் தண்ணீர் கொடுக்கலாமா ?

**தண்டபாணிபிள்ளை.**—ஐயா! இபபடுபாவிகள் இருவரும் சேர்ந்து என்னைக் கொன்றுவிடுவாாகள். தாங்கள் என்னைக் கொண்டு போய் துரைத்தன வைத்தியசாலையில் விட்டுவிடுங்கள். அது தஙகளுக்குப பெரும்புண்ணியமாகும். மூத்தவளைத தண்ணீர் கேட்டேன் : அவள் இளையவளைக் கேள் என்றாள். இளையவளைக் கேட்டேன். அவள் தூவாஸனையுள்ள செம்பில் வெந்நீர் கொண்டுவந்து கொடுததாள். அதைக் குடித்ததும் வாந்தியெடுத்து விழுந்தேன். ஒருத்தியும் எட்டிப பார்க்கவில்லை. காலையி லெனககுக் கொணடுவநத கஞ்சி நான் குடிததது போக மீந்ததில் ஈ எறும்பு மொய்த்துககொண்டிருக்கிறது. அதையே என்னை இபபொழுதும் குடிக்கச் சொல்லுவார்கள்.

தணடபாணி பிள்ளை சொல்வதைக கேட்டுககொண்டே வந்த மூத்தவள், "மடியில் எடுதது வைத்துககொண்டு தாலாட்டவில்லை என்று இந்தக குழந்தை கவலைபபடுகிறது. அடி ராஜம் ! உன் மாப்பிள்ளையை மடியில் எடுத்து வைத்துக்கொண்டு தாலாட்டுகிறதுதானே !" என்றாள்.

**ராஜம்பாள்.**—நீயே எடுத்து வைத்துக்கொண்டு தாலாட்டடி !

**அபூர்வம்.**—நீ மூன்று பிள்ளைகளைப பெற்றுத் தாலாட்டி வழககப பட்டவளாயிற்றென்று உன்னைத் தாலாட்டச் சொன்னேன் (என்று அவ்விடத்தை விட்டு நீங்கினாள்).

**குஞ்சிதபாதம் பிள்ளை.**—தண்டபாணி பிள்ளை தன்னை மடியில் எடுத்து வைத்துக்கொண்டிருககச சொல்லவில்லை. நோயாயிருபபவருக்கு அருகிலிருந்து வேண்டியதைச் செய்வது உங்கள் கடமையல்லவா ? ஒருவருக்குப பதிலாக இருவரிருந்தும் அவரைக் கவனிக்காமல் இருக்கிறீர்கள். இனிமேலாகிலும் அவரைக் கவனித்துப் பாருங்கள். மணி எழுக்

கதிகமாகிறது. அவருக்கு இன்னம் கஞ்சி கொடுக்கவில்லை. விரைவில் கஞ்சி காய்ச்சிக் கொண்டுவாருங்கள்.

ராஜம்பாள்.—காலையில் காய்ச்சி வைத்திருக்கும் கஞ்சியை யார் தலையில் ஊற்றிக்கொள்கிறது! அல்லாமலும் அவர் கஞ்சிகுடித்தாலும் தக்கவில்லையே! வீணில் காய்ச்சிக் கழுநீர்ப்பானையில் ஏன் ஊற்றவேண்டும்? அவர் தன்னை ஆஸ்பத்திரியில் கொண்டுபோய் விடச் சொல்லுகிறாரே! அங்கே கொண்டுபோய்விட்டால் அவர் அக்காள் தங்கை வந்து பணிவிடை செய்வார்கள். அங்கே போகிறதே உத்தமம். அவர் இங்கிருந்தால் அவருக்குச் சரியான உபசாரணை நடக்காது (என்று அவளும் வெளியில் சென்றாள்).

குஞ்சிதபாதம் பிள்ளை.—அப்பா! தண்டபாணி! இரண்டு பெண்டாட்டி கொண்ட சுகத்தைப் பார்த்தாயா? உலகத்தில் ஒரு எமனிருந்து எல்லா உயிர்களையும் கொண்டுபோகிறான். நீ இரண்டு எமனை வைத்துக்கொண்டிருக்கிறாயே! உன்னை அவர்கள் சும்மா விட்டுவிடுவார்களா? நான் சென்று என் வீட்டில் கஞ்சி காய்ச்சிக்கொண்டு வருகிறேன் (என்று வெளியிற் சென்றவர் மூத்தாளைக் கண்டு) அம்மா! அபூர்வம்! உன் புருஷனுக்கொன்றானால் உங்களுடைய கதி என்னவென்று கவனித்தீர்களா? நீங்கள் கவனித்துப் பார்க்காமல் உங்கள் புருஷனைக் கொன்றுவிடுவீர்கள்போல் காண்கிறது. நான் சொல்வதால் உங்களுக்குத் தற்காலம் கோபம் வரும். பின்னால் உங்களுடைய நன்மையைக் கருதிச் சொன்னதாக அறிவீர்கள்.

அபூர்வம்.—தாதா! தாங்கள் உள் மர்மத்தை அறியாமல் சொல்கிறீர்கள். ராஜம்பாளைக் கட்டிக்கொண்டு வந்த நாள் முதல் அவளையே குலதெய்வமாக அவள் காலில் விழுந்து கும்பிட்டுக்கொண்டிருந்தாரே! இப்பொழுது அவர் நோயாயிருக்கிற காலத்தில் அவளல்லவா அவருக்கு வேண்டிய பணிவிடை

செய்துகொண் டிருக்கவேண்டும். அவள் முற்றிலும் கவனிக் காம லிருக்கும்பொழுது, நான் என் புழுக்கைவேலை செய்ய வேண்டும்? அல்லவென்று அவருக்கு வேண்டியதைச் செய்து குணபபடுததினால், அவா மீண்டும் அவளுடைய காலில் விழபபோவாா. நேற்று நாள் அவாருகிற் போய நின் றிருக்கும்பொழுது நான் கட்டியிருநத புது சரிகைச் சேலை யில் இரததமாக வாநதி யெடுததாா. சேலையை அவிழத்துப் போட்டிருந்தேன். இரத்தம பட்ட இடததையெல்லாம் எலி கடித்துச் சேலையை ஒன்றுமில்லாமல் செய்துவிட்டது. அச் சேலையை நினைக்க எனககுத் துககமாக இருக்கிறது (என்று அழுதாள்).

**குஞ்சிதபாதம் பிள்ளை.**—இரததததையா உன் புருஷன் ககினா? வைத்தியரிடததில் சொன்னீர்களா?

**அபூர்வம்.**—நான் சேலையை எலிககுக் கொடுத்த துக்கத்திலிருந் தேன். வைததியரிடத்தில் ஒனறும சொல்லவில்லை.

**குஞ்சிதபாதம் பிள்ளை.**—அடா! பைததியமே! உன் புருஷன் இரததம் ககியது நனறல்லவே! இதை வைத்தியரிடததில் சொல்லாம லிருக்கலாமா (என்று நீங்கினாா).

மறுநாள் காலை குஞ்சிதபாதம் பிள்ளை வீட்டுக்குள் வந்து தண்டபாணி பிள்ளை எபபடி யிருககிறாா (என்று கேட்டாா).

**ராஜம்பாா.**—தாங்கள் கஞ்சி கொடுத்த பின் நன்றாய்த தூங்கி நடு ஜாமத்தில் கூபபிட்டாா. நான் எழுநதுபோக எத்தனித் தேன்; குழந்தை விடமாட்டேன் என்றது. பின் அவா என்னைக கூபபிடவில்லை. இன்னும் தூங்குகிறாா. நான் போய் எழுபபவில்லை. தாஙகளும் அவரைப போய் எழுபப வேண்டாம். நன்றாய்த தூஙகி அவரே எழுந்தால் நல்ல தென்று வைத்தியர் சொல்லிப போனாா.

**குஞ்சிதபாதம் பிள்ளை.**—நான் எழுபபவில்லை (என்று தண்ட பாணி பிள்ளை படுத்திருந்த அறைககுள் சென்று) ஆ! ஆ!

தண்டபாணி பிள்ளை ! உமது காலத்தை முடித்துக்கொண் டீரா (என்று அவர் மனைவிகளை வந்து பார்த்து) அடி ! பாவி களா ! தண்டபாணி பிள்ளை உங்களுடைய கொடுமையிலிரு ந்து நீங்கினார் ! போய்ப பாருங்களடி பாதகிகளே (என்று நீங்கினார்).

---

## 17—ம் அத்தியாயம்

திருச்சிராபபள்ளி புத்தூர்சாலைப் பாலத்தில் காலை நிதானம் பத்தரை மணிக்கு ஏறக்குறைய முபபத்தைநது வயதுடைய ஓர் சுந்தரமான புருஷன் தலையில் விலையுயர்ந்த கொட்டடித் தலை குட்டை கட்டிக்கொண்டும், கருமையான பட்டுக்கோட்டின்மேல் வலது தோளில் சரிகை அங்கவஸ்திரமும் இடது தோளில் பட்டணததுக் குட்டையும் தொங்கவிட்டுக்கொண்டும், காலில் திருச்சிராபபள்ளி ஜோடு போட்டுககொண்டும் போகிறதைக் கோர்ட்டில் பில்லை சேவகம் செய்யும் இருவர் கண்டு, ஒருவன் மற்றவனைப பார்த்து, “இவரைபபோன்ற சுந்தர புருஷனைப் பார்த்திருககிறீரா ? இவர் மீசையில் எலுமிச்சம் பழத்தை நிற்க வைக்கலாம். இவர் இந்நேரத்தில் இம்மார்க்கம் போவதால் சில வேளை கோர்ட்டு வேலையாகப போகிறீரோ என்னமோ தெரிய வில்லை” என்றான்.

**இரண்டாவது சேவகன்.**—அவர் கோர்ட்டு வேலையாக வந்திருப் பின் அவருக்கு வேண்டியதற்கு உதவியாக நின்றால் நமககுக் கா லரை கிடைக்கக்கூடும். நீர் அவரைக் கண்டறியும்.

**முதல் சேவகன்.**—ஆம் ! நான் கண்டறிகிறேன் (என்று அந்தச் சுந்தர புருஷன் அருகிற் சென்று) ஐயா ! தாங்கள் எந்த ஊர் ?

**சுந்தர புருடன்.**—நான் இந்த ஊரல்ல ! ஏன் கேட்கிறீர் ?

**முதல் சேவகன்.**—தாங்கள் இந்த ஊரல்லவென்றே மதித்தேன். தாங்கள் ஏதாகிலும் கோர்ட்டு விஷயமாக வந்திருந்தால் தங்

களுக்கு வேண்டிய உதவி செய்ய முடியும். நாங்கள் இந்தக் கோர்ட்டில் உத்தியோகம் செய்கிறவர்கள்.

சுந்தர புருடன்.—உங்களுக்குக் கோர்ட்டில் என்ன வேலை?

முதல் சேவகன்.—எங்க ளிருவருக்கும் கோர்ட்டில் பில்லை சேவகம்.

சுந்தர புருடன்.—(நகைத்து) கோர்ட்டில் பில்லைசேவகம் செய்பவர்கள் எனக் கென்ன உதவி செய்யமாட்டுவீர்கள்?

முதல் சேவகன்.—ஐயாவே! எங்களால் முடியத்தகுந்தது குமஸ்தாக்களாலும் செய்ய முடியாது. நியாயாதிபதி யிடத்தில் ஏதாகிலும் மனுவுக்கு உத்தரவு வாங்கவேண்டுமென்றால் அதை உடனே வாங்கிக்கொடுக்கவும் அல்லது நெடுநாள் உத்தரவு கொடுக்காமலிருக்கவும் செய்துவிட எங்களால் முடியும். எவ்விதம் செய்ய முடியுமென்றால் துரைகளிடத்தில் கையெழுத்து வாங்கவேண்டியவைகளை யெல்லாம் குமஸ்தாக்கள் எங்களிடத்தே கொடுத்து வாங்கச் சொல்லுவார்கள். ஆனதால் கட்சிக்காரருடைய வேண்டுகோளின்படி கையெழுத்து உடனே வாங்கவேண்டுமானால் அதை முதலில் துரைக்குக் காட்டிக் கையெழுத்து வாங்கிவிடுவோம். எதிர் கட்சிக்காரர் ஒன்றைத் தவணைப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொண்டால் அதைக் கட்டுகளுக்குக் கீழ் வைத்துவிடுவோம். அது நெடுநாள் கையெழுத் தாகாமலிருக்கும்.

சுந்தர புருடன்.—(நகைத்து) உங்களிஷ்டப் பிரகாரம் கோர்ட்டு வேலைகளெல்லாம் முடிகின்றன வென்று காணப்படுகிறது. எனக்குக் கோர்ட்டில் வேலை யொன்றுமில்லை. இப்பக்கத்தில் கோர்ட்டு வியாச்சியம் எவ்விதம் நடைபெறுகிறதென்று வேடிக்கை பார்க்க வந்தேன். என்னை வியாச்சியம் நடக்கும் இடத்தில் இடங்கொடுத்து உட்காரும்படி செய்யுங்கள் (என்று ஆளுக் கொரு ரூபா கொடுத்தான்).

முதல் சேவகன்.—மகா ராஜா! உங்களை நல்ல இடத்தில் உட்காரச் செய்வோம். இன்று ஓர் கொலைக் கேஸ் விசாரணை

யாகிறது (என்று சுந்தர புருஷனை அழைத்துப் போய் வெளி யார் வந்து உட்கார்ந்து வேடிக்கைப பார்க்குமிடத்தில் ஒதுப்புரமாக ஓர் இடத்தில் உட்காரவைத்தான்).

சுந்தர புருஷன் கோர்ட்டு கலையும் பரியந்தம் உட்கார்ந் திருந்து வீட்டுக்குச் சென்று அது முதல் அனேக நாள் கோர்ட் டுக்கு வந்து வக்கீல்கள் பேசுவதையும் நியாயாதிபதி சொல்வதை யும் மிக்க கவனமாகக கேட்டுக்கொண்டுவநதான். பின் தாசில்தார் கச்சேரி முன்சீப கோர்ட்டு முதலிய விடங்களுக்கெல்லாம் சென்று அங்கு நடபபதை யெல்லாம் பார்த்துக் காலங்கழித்துக்கொண் டிருந்தான்.

* * * *

கார்த்திகை மாதம் மூன்றாந் திகதி மாலை, சாமியாரும் அவர் சீடனும் குளித்தலையில் மேலத்தெரு வழியாகத தண்ணீர்ப் பந்தலுக் கருகில் போகும்பொழுது, ஒரு பில்லை சேவகன் ஓடி வந்து "சுவாமி! சுவாமி! தங்களை எஜமான் அழைததுவரச் சொன்னார். தாங்கள் தயவுசெய்து வரவேண்டும்" என்றான்.

**சாமியார்.**—அப்பா! அடிமை நாடோடி! உன் எஜமான் யார்? உன் எஜமான் அடிமையை என் அழைத்துவரச் சொல்லு கிறார்?

**பில்லை சேவகன்.**—என் எஜமான் யாரென்று தங்களுக்குத தெரியவில்லைபோல் காண்கிறது. அவர் இவ்வூர் தாசில் தார்.

**சாமியார்.**—தாசில்தாரிடததும் கலெக்டரிடத்தும் பரதேசி களுக்கு என்ன வேலை இருக்கப்போகிறது. ஆயினும் எங்களை அழைபபதால் நாங்கள் வருகிறோம் (என்று திரும் பிச் சேவகனோடு சென்றார).

சேவகன் தண்ணீர்பபந்தலுககுச் சமீபத்திலுள்ள ஓர மெத்தை வீட்டுக்குள் அழைத்துச் சென்றான். வீட்டுக்குள்ளிருந்த தாசில்தார் எழுந்துவந்து சாமியார் கைகளைப பிடித்துக்கொண்டு

"சாமி! இன்று தங்களை இவ்வூரில் கண்டது என் அதிர்ஷ்டம போ லிருக்கிறது" என்று சாமியாரை ஓர் நாற்காலியில் உட்கார வைத்து வீட்டுக்குள் சென்று தன் மனைவி மக்களை அழைத்துவந்து "லாலாபேட்டையில் ஒரு சாமியார் என் உயிரைக் காபபாற்றினார் என்று சொன்ன புண்ணியவான் இவரே" என்று தன் மனைவிக்குக் காட்டினார்.

தாசில்தார் மனைவி.—"சாமி! தங்களைக குறிதது என்நாயகர் அதிகம் சொன்னார். தாங்கள் கொடுத்தனுபபிய தைலம் என் நாயகரைக் குணபபடுத்தியதோடு கைகால் பிடிபபுள்ள வேறு மூவரையும் குணப்படுத்தியது. நான் தங்களைப் பார்க்க வேண்டுமென்று என் நாயகரிடம் சொன்னேன். அவர் லாலாபேட்டையிலிருந்து வந்தவாகளை விசாரித்துத் தாங்கள் வெளியூருக்குப போயிருககிறீரென்று கேள்விப்பட்டுத் தாஙகள் வந்தவுடன் என்னை அழைத்துப போகிறதாகச் சொன்னார். இன்று தாஙகளே வநது தரிசனை கொடுத்தீர்கள் (என்று சொல்லிய பின், சாமியாரோ டிருக்கும் சிஷனைப் பார்த்து) சாமி! தங்களுடைய சிஷனுககு வயது கொஞ்சமாக விருக்கிறது. இந்த வயதில் இவா இல்லறத்தை வெறுத்துத் துறவறம் பூண்டது அதிசயமே!

சாமியார்.—அம்மணி! இவன் சாஸ்திரங்கள் மிகப பிரியமாக வாசித்துக்கொண் டிருப்பதால் இவனுடைய மனம் இல்லறத்தை நாடவில்லை.

தாசில்தார்.—சாமி! என்னைக குதிரை நெடுந்தூரம் இழுத்து வரும்பொழுது என் தேகத்தில் அனேக இடத்தில் அடிபட்டது. அதனால் நான் இரண்டொருமாதம் படுககையி லிருக்க வேண்டுமென்று எண்ணியிருந்தேன். தாங்கள் என் தேகத்தில் பூசிக் கொடுத்தனுபபிய தைலத்தின் வல்லமையை நான் என்னவென்று சொல்லுவேன். அது என்னை மூன்று நாளையில் சௌக்கியப படுத்திவிட்டது.

**சாமியார்.**—எல்லாம் சிவன் செயல் (என்று தாசில்தார் மனைவிக்கும் சிறுவர்களுக்கும் விபூதி கொடுத்து) உங்களைப் பார்த்து அடிமையினுடைய மனம் சந்தோஷமடைந்தது.

**தாசில்தார்.**—சாமி! நான் என் நன்றியறிதலை எவ்விதம் காட்டுவதென்று எண்ணியிருந்தேன். தாங்கள் நான் சொல்வதைத் தட்டாது சிலகாலம் என்னோடிருக்கப் பிரார்த்திக்கிறேன்.

**சாமியார்.**—அப்பா! அடிமை இல்லற தருமத்தை நடத்திக்கொண்டிருக்கும் இடத்தில் இருப்பவனல்லவே! ஏழைகள் யாராகிலும் அடிமையைப் பார்க்க வருவார்கள்: அடிமை இவ்விடமிருந்தால் அது தங்களுக்குக் கஷ்டமாயிருக்குமென்பதைக் கவனிக்கவில்லைபோல் காண்கிறது. அடிமை லாலாபேட்டையி லிருந்தால் சௌகரியமல்லவா (என்று நகைத்தார்).

**தாசில்தார்.**—லாலாபேட்டையில் தங்களைப் பார்க்க வருகிறவர்கள் எவ்வளவென்று நான் அறிவேன். பச்சையப்ப பிள்ளையும் தங்களைக் குறித்துச் சொல்லியிருக்கிறார். தாங்கள் எனனுடைய வீட்டிலிருக்கச் சம்மதப்படாமற் போனால் வேறிடத்திலிருக்க ஏற்பாடு செய்கிறேன். தாங்கள் சிலநாள் இவ்வூரில் இருந்தே போகவேண்டும் (என்று சொல்லித் தன் சேவகனை யழைத்து) சாமியார் வசதியா யிருக்கும்படி ஓரிடம் சித்தப்படுத்து (என்று கட்டளையிட்டு, பாலும் பழமும் சாமியாருக்குக்கொண்டு வந்து கொடுக்கும்படி தன் மனைவியிடம் சொன்னார்).

சாமியாரும் அவர் சிஷ்யனும் பாலும்பழமும் சாப்பிட்ட பிறகு தாங்கள் தரிசித்து வந்த ஸ்தலங்களின் விசேஷங்களைச் சொல்லிக்கொண்டிருக்கையில், சதங்கை சப்தத்தோடு ஓர் வண்டி வீட்டுக் கெதிரில் வந்து நின்றதும், ஒருவர் வண்டியிலிருந் திறங்கிவருவதைத் தாசில்தார் கண்டு "வருக, பச்சையப்ப பிள்ளை" என்றார்.

**பச்சையப்ப பிள்ளை.**—சாமியாரை இங்கேயோ இருத்திக்

கொண்டீர்கள். லாலாபேட்டையும் கோயம்புத்தூரும் சாமியாரைத் தேடிக்கொண்டிருக்கிறதே.

**தாசில்தார்.**—கோயம்புத்தூரில் யார தேடிக்கொண்டிருக்கிறது?

**பச்சையப்ப பிள்ளை.**—என் மாமன் தேடிக்கொண்டிருக்கிறூர். சாமியார் லாலாபேட்டைக்கு வந்தவுடன் தெரிவிக்கும்படி என்னிடம் சொல்லியிருக்கிறூர்.

**தாசில்தார்.**—சாமியார் சிலநாள் இஙகிருந்தே லாலாபேட்டைக குப போவார். நீர் ஏது இந்நேரத்தில் வந்தது?

**பச்சையப்ப பிள்ளை.**—நான் ஒரு வேலையாகக குளித்தலைக்கு வந்தேன். குளித்தலைக்கு வந்த பின் தங்களைப பார்க்காமல் போக மனங்கொள்ளவில்லை. ஆனதால் தஙகளைப பாரததுப போக வந்தேன்.

**தாசில்தார.**—உமது சிறிய தந்தையைக கொன்ற கொலையாளிகள் இன்னும் அகப்படவில்லையே! நீர் அது விஷயத்தில் ஏதாகிலும் செயதுகொண்டிருக்கிறீரா?

**பச்சையப்ப பிள்ளை.**—போலிஸாரை நம்புவதில் காரியமில்லையென்று நான் அனேகரை அனுபபித் தேடும்படி செய்திருககிறேன்: ஒன்றும் பிரயோசனபபடவில்லை. கொலையாளிகள் கண்காணுத தேசம் போய்விட்டார்களென்றே நினைக்க வேண்டியதாக விருக்கிறது.

**தாசில்தார்.**—கொலையாளிகள் அகபபடாததால் அவ்விதம் எண்ண இடந்தருகிறது.

**பச்சையப்ப பிள்ளை.**—அநேகா அவ்விதமாகவே அபிப்பிராயபபடுகிறூர்கள்.

**தாசில்தார.**—உமது சிறிய தந்தையின் நிலத்தின் மாகூலை வசூல் செய்து கணக்கோடு கச்சேரிக்கு ஒப்படைக்க நீர் விரும்பிய வண்ணம் ரிசீவரை நியமித்தும், அவர் என் இதுபரியந்தம் கச்சேரிக்குக் கணக்கும் பணமும் அனுப்பவில்லை? நீரும் அவருக்கு உதவியாயிருக்க நியமனம் பெற்றிருப்பதால் உடனே அனுப்பும்படி செய்யவும்.

**பச்சையப்ப பிள்ளை.**—கணக்குகளை யெல்லாம் ரிசீவர் ஒழுங்காய் வைத்திருக்கிறார். என் சிறிய தந்தை சொத்துகளெல்லாம் விரைவில் என்னைச் சேரப்போகிறதென்றும் சொத்துகள் என்னைச் சேருமாயின் கணக்கையும் பணத்தையும் என்னிடத்தில் கொடுத்துவிடலா மென்றும் எண்ணியிருக்கிறார்.

**தாசில்தார்.**—கொலையாளிகள் அகப்பட்டு அவர்கள் தண்டனை யடைவதற்குமுன்னே உமது சிறிய தந்தை சொத்துகள் உம்மைச் சேரமாட்டா. கொலை செய்தவர்கள் கருணாநிதியும் நீலமேகமும் என்று நாம் இப்பொழுது நினைக்கிறோம். விசாரணையில் அது எவ்விதம் முடியுமோ அறியோம். ஆனதால் வசூல் செய்த பணத்தையும் கணக்கையும் அனுப்பும்படி ரிசீவருக்குச் சொல்லும். நாளைக்குக் கச்சேரியிலிருந்து தாக்கீதும் வரும்.

**பச்சையப்ப பிள்ளை.**—உடனே அனுப்பும்படி சொல்லுகிறேன் (என்று நீங்கினார்).

வெளியிற் சென்று வண்டியிலேறி உட்கார்ந்த பின், சொத்தெல்லாம் விரைவில் நம்மைச் சேரப்போகிறதென்று ரிசீவரிடத்தில் பெருந்தொகையைக் கைமாற்றாக வாங்கிக்கொண்டோம்; அந்தத் தொகையை வேறிடத்தில் கடன் வாங்கிக் கொடுத்துக் கச்சேரியில் கட்டச் சொல்லவேண்டும் என்று எண்ணியிருந்தார்.

**சாமியார்.**—லாலாபேட்டையில் இரத்தினசபாபதி பிள்ளையைக் கொலை செய்தவர்களைப் போலிஸாரும் பச்சையப்ப பிள்ளையின் ஏவலாளிகளும் கண்டுபிடிக்கவில்லை யல்லவா (என்று நகைத்தார்).

**தாசில்தார்.**—கருணாநிதியையும் நீலமேகத்தையும் கண்டு பிடிப்பவர்களுக்குப் பச்சையப்ப பிள்ளை ஆயிரம் ரூபா கொடுப்பதாகவும், அவர்களைக் கொண்டுவந்து அவர்கள் செய்த கொலை நிரூபிக்கப்பட்டால் துரைத்தனத்தார் ஐந்நூறு ரூபா கொடுப்பதாகவும் விளம்பரம் செய்திருக்கிறது.

**சாமியார்.**—தாங்கள் சொன்ன இருவரையுங் கண்டுபிடித்துக் கொடுத்தால், பச்சையபப பிள்ளை ஆயிரம் ரூபா கொடுப்பா ரென்பது என்ன நிச்சயம் ?

**தாசில்தார்.**—அது விஷயத்தில் சந்தேக மில்லை. பச்சையபப பிள்ளை கொடுக்கிறேன் என்ற ரூபாவைப் போலிஸாரிடம் கொடுத்துவைத்திருக்கிறார்.

**சாமியார்.**—அடிமை அவர்களைக் கண்டுபிடித்தால் அடிமைக்கு ஆயிரம் ரூபா கிடைக்கும்போ லிருக்கிறதே (என்று நகைத் தார்).

**தாசில்தார்.**—தடையில்லாமல் கிடைக்கும்.

**சாமியார்.**—போலிஸாரும் மற்ற ஏவலாளிகளும் அவர்களிருக்கு மிடத்தைக் கண்டுபிடிக்காமற் போனாலும், அவர்களிருக்கு மிடத்தை அடிமை அறிவேன்.

**தாசில்தார்.**—என்ன சொன்னீர் ? கொலையாளிகள் இருக்கு மிடந் தெரியுமா ? சாமி ! தாங்கள் தயவுசெய்து சொல்ல வேண்டும். நான் அவாகளைக் கண்டுபிடித்தால் எனக்கு நல்ல பேர கிடைக்கும். பணம் எனக்கு வேண்டியதில்லை. தங்க ளுககே கொடுத்துவிடுகிறேன் (என்று ஆத்திரத்தோடு சொன்னார்).

**சாமியார்.**—அடிமை பரதேசி ! அடிமைக்குப பணம் வேண்டுவ தில்லை. ஒரு விஷயததுககு மட்டும் தாங்கள் உத்தரவு கொடுபபீரானால், அவர்கள் இருக்கும் இடத்தைச சொல்லு கிறேன்.

**தாசில்தார்.**—(ஆத்திரத்தோடு) நான் எந்த விஷயத்துக்கு உத் தரவு கொடுக்கவேண்டும்.

**சாமியார்.**—கொலையாளிகளைத் தங்கள் கச்சேரிக்குக் கொண்டு வநதால், அவர்களையும் சாக்ஷிகளையும் அடிமை வக்கீல்போ லிருந்து கேள்விகள் கேட்கவேண்டும். அதற்கு உத்தரவு கொடுக்க முடியுமா ? (என்று நகைத்தார்).

தாசில்தார்.—தாங்கள் என்ன கேள்விகள் கேட்கப்போகிறீர் ?

சாமியார்.—அடிமை கொலையுண்டவரை அறிவேன். அவரைக் கொன்ற கொடும்பாவிகளை அடிமையின் உதவியில்லாமல் தண்டிக்க முடியாது. அவ்வுண்மையைப பின்னால் அறிவீர்கள்.

தாசில்தார்.—தாங்கள், துரை ததனத்தாருக்குச் சார்பாகவிருந்து வியாச்சியத்தை நடத்துவது எனக்குச் சந்தோஷமேயாயினும், வக்கீல்களல்லாதவாகள் நியாயஸ்தலத்தில் கேள்விகள் கேட்க முடியாதே! இதற் கென்ன செய்கிறது (என்று சில நேரம் யோசித்து) இதற்கோர் உபாயமி ருக்கிறது (என்றார்).

சாமியார்.—என்ன உபாயம் ?

தாசில்தார்.—தாங்கள் நியாயஸ்தலத்தில் கேள்விகள் கேட்க முடியாதாயினும், தாங்கள் வக்கீலுக் கருகிலிருந்து தாங்கள் கேட்கவேண்டிய கேள்விகளை வக்கீலிடம் சொல்லிக் கேட்கச் சொல்லலாம். தாங்கள் கேட்கும் கேள்விகள் கோர்ட்டாருக்கு விரோத மில்லாதிருந்தால், வக்கீல் தாங்கள் கேட்கச் சொல்வதைக் கேட்பார். நான் அவ்விதம் செய்யும்படி வக்கீலுக்குச் சொல்லுகிறேன். அவ்விதம் செய்தால் தங்கள் எண்ணம் பூர்த்தியானதுபோ லல்லவா ?

சாமியார்.—ஆம்! அவ்வளவு செய்தால் போதுமானது (என்று ஓடிப்போனவர்கள் இருக்குமிடத்தைச் சொன்னார்).

அச்சமயத்தில் பில்லே சேவகன் வந்து "சாமியாரிருக்கப் பெரிய வாய்க்கால் பாலத்துக்கருகில் ஓர் வீடு அகபபட்டது" என்றான்.

தாசில்தார்.—சாமி! தாங்கள் சேவகனோடு சென்றால் அவன் தங்களுக்கு வேண்டியதை யெல்லாம் செய்வான்.

சாமியார் தாசில்தாரிடம் விடைபெற்றுத் தானும் சீஷனும் சேவகனோடு சென்றார். தாசில்தார் போலிஸ் இன்ஸ்பெக்டரை வரவழைத்து, ஓடிப்போன கொலையாளிகளிருப்பிடத்தைச் சொல்லி, அவர்களைக் கொண்டுவரும்படி உத்தரவு செய்தார்.

## 18—ம் அத்தியாயம்

பச்சையபப பிள்ளைக்குத் தாசில்தார் சொல்லியவிதம், ரிசீவர் தாக்கீது பெற்று அதைப் பச்சையப்ப பிள்ளையிடம் காட்டி, "தாங்கள் நாளைக்குப் பணம் வருகிறது எடுத்துக்கொள்ளலாம் என்று ஐயாயிரத்துக்கதிகம் எடுத்துக்கொண்டீர்கள். இபபொழுது கோர்ட்டாருககு என்ன சொல்லுகிறது" என்றார்.

பச்சையபபபிள்ளை "ஐயா! நீர் நாளைக் காலையில் வந்து முன் கொடுத்த ரூபாவை வாங்கிக்கொண்டு போம்" என்று ரிசீவரை அனுபபிவிட்டு, பணம் இராத்திரிக்குள் சரிபபடுத்த வேண்டுமே என்ற யோசனையி லிருககும்பொழுது, மணவாள நாயுடு வரக்கண்டு, அவருக்கு முகமன்கூறி, "ஐயா! நீர நல்ல சமயத்தில் வந்தீர்" என்றார்.

மணவாள நாயுடு.—ஐயா! நீர் மூன்று மாததததில் பணம் கொடுததுவிடுகிறேன் என்று சொன்னது என்னவாயிற்று? நான் என் கையிலுள்ளதை யெல்லாம் உம்மிடத்தில் கொடுத்துவிட்டு, உமது கையை எதிரபாராததுககொண்டிருககவேண்டியதாயிற்று. கொலையாளிகள் அகப்படபபோகிறதுமில்லை: உமது சிறிய தந்தை சொத்து உம்மைச் சேரப்போகிறதுமில்லை. நான் எத்தனை நாள் காததிருபபேன். நான் உம்மைக் கேளாம லிருபபதைக் கண்டு நீரும் பேசாம லிருக்கிறீர்.

பச்சையப்ப பிள்ளை.—ஐயா! நான் நேற்று குளித்தலைக்குப போய்வந்ததைப பார்த்தீரல்லவோ! கொலையாளிகள் அகபபட்டாலும் அல்லது அகபபடாமற்போனாலும் அதைக் கவனிக்காமல் என்னுடைய சிறிய தந்தையின் சொத்து என்னைச் சேரும்படி செய்கிறேன் என்று தாசில்தார் சொல்லிவிட்டார். நீர் இனி கவலைகொள்ள வேண்டிய காரணம் இல்லை. விரைவில் உம்முடைய கணக்கைத் தீர்த்துவிடுகிறேன். ஆனால் தற்காலம் ஐயாயிரம் ரூபா அவருக்குக்

கொண்டுபோய்க் கொடுத்தால் ஒருவாரத்துக்குள் உம முடைய பொருள், உம்மை வந்து சேரும்.

**மணவாள நாயுடு.**—ஐயா! என்னிடத்தி லிருந்த பணத்தை யெல்லாம் உமக்குக கொடுத்துவிட்டதோடு, என் நிலததை எல்லாம் ஈடுவைத்துக் கடன் கொடுத்திருக்கிறேன். நீர வாங்கிய கடனைக கொடுக்காமற்போனால், என்னுடைய கதி அதோகதிதான். உமக்கு நான் கடன் கொடுத்திருக்கிறதை அறிந்த அனேகர், 'தன் கையில் உள்ளதை யெல்லாம் மண வாள நாயுடு பச்சையபப பிள்ளைக்குக் கொடுத்துத் தொலைத் தான்' என்று சொல்லுகிறதைக் கேட்டதுமுதல் என் தேகம் நடுங்குகிறது. என்னுடைய வாழ்வும் தாழ்வும் உம்முடைய கையிலிருக்கிறது. தற்காலம் உம்மிடத்தில் கொஞ்சத்திற் கொஞ்சமாகிலும் வாஙகிப போகலா மென்று வந்திருக்கும் பொழுது, என்னை மேற்கொண்டு கடன் கேட்கிறீர். என் னால் இனி ஒரு காசும் கடன் கொடுக்க முடியாது. என்னை எபபொழுது வரச் சொல்லுகிறீர்? தவணை தூரத்தில் வைகக வேண்டாம்: சமீபத்திலேயே இருக்கட்டும்.

**பச்சையப்ப பிள்ளை.**—உம்மால் ஐயாயிரம் கொடுக்க முடியா தென்றால், நான் தவணை சமீபத்தில் எவ்விதம் வைக்க முடி யும்! நீர் இன்னம் மூன்று மாதம் பொறுததுககொள்ள வேண்டியதே!

**மணவாள நாயுடு.**—என்ன சொன்னீர்? இன்னும் மூன்று மாதம் பொறுத்துக்கொள்ள வேண்டுமா! அவ்வளவு நாள் பொறுத்துக்கொள்ள முடியாது. எனக்கு எட்டு நாளைக் குள் பணம் வேண்டும்.

**பச்சையப்ப பிள்ளை.**—ஐயா! உம்மிடத்தில் கடன் வாங்கிய பெட்டியில் வைதது அழகு பார்ககவோ ஆயிரத்துககு இரண்டாயிரம் கொடுபபதாகக கடன் வாங்கினேன்? கொலை யாளிகளைக் கண்டுபிடிக்கிறேன் என்றவர்களுக்கெல்லாம் ஆயிரம் இரண்டாயிரமாக அள்ளி அள்ளிக் கொடுத்தேன்.

வக்கீல்களுக்கும் ஏராளமான தொகையையும் கொடுத்துவிட்டேன். கோர்ட்டி லிருப்பவர்களுக்கும் பெரிய தொகையைக் கொடுத்துவிட்டேன். இதை யெல்லாம் யோசிக்காமலும் ஆயிரத்துக் கிரண்டாயிரம் வாங்கிக்கொள்ளப் போகிறதை நினைக்காமலும் எட்டு நாளையில் பணம் வேண்டு மென்கிறீர். போம்! போம்! என் சிறிய தந்தையின் சொத்து என்னைச் சேர்ந்தவுடன் நான் உமக்குச் சொல்லி யனுப்புவேன். அப்பொழுது வந்து உமது கடனை வாங்கிக்கொண்டு போகலாம். அது பரியந்தம் என்னிடத்தில் வரவேண்டாம், போய்வாரும்.

**மணவாள நாயுடு.**—நான் என் கையில் மடியில் இருந்ததை யெல்லாம் கொடுத்ததோடு என் மனைவி கழுத்திலிருக்கும் தாலி நீங்கலாக மற்ற எல்லா நகைகளையும் ஈடு வைத்துக் கடன் வாங்கிக் கொடுத்ததில் கடன் கொடுத்தவன் வட்டிக்கு நெருக்குதலால் உம்மிடத்தில் வந்தேன். நான் கொடுத்த பெரிய தொகையை என்ன செய்தீர் என்று கணக்குக் கேட்க வரவில்லை. நான் எட்டு நாளைக்குப் பின் வருவேன். நீர் எதாகிலும் கொடுக்கத்தான் வேண்டும் (என்று நீங்கினார்).

மணவாள நாயுடு நீங்கிய உடன் ஒரு நாட்டுக்கோட்டைச் செட்டியார் வீட்டுக்குள் வந்தார்.

**பச்சையப்ப பிள்ளை.**—முருகப்ப செட்டியாரா! வருக! வருக! (என்று முகமன்கூறி உட்காரச் சொன்னார்.)

**முருகப்ப செட்டியார்.**—ஐயா! பச்சையப்ப பிள்ளை! நீர் ஒரு மாதத்தில் பணம் வந்துவிடும் என்று கடன் வாங்கி வந்தவர் பேசாம லிருந்துவிட்டீரே! காரணம் யாதென்று அறிந்து போகலாம் என்று வந்தேன்.

**பச்சையப்ப பிள்ளை.**—செட்டியாரே! நான் என்ன செய்வேன். நான் கோர்ட்டுக்கும் கச்சேரிக்கும் அலைந்துகொண்டிருக்கிறேன். இன்னும் எட்டு நாளைக்குள் என் சிறிய தந்தையின் சொத்து என்னைச் சேர்ந்துவிடும். ஆனால் நான்

அதற்காக ஓர் ஐயாயிரம் ரூபா செலவு செய்ய வேண்டும். நான் கருவூருக்கு வந்து தங்களைப் பார்க்கவேண்டுமென்றிருந்தேன் : தாங்களே வந்து விட்டீர்கள். தாங்கள் இப்பொழுது எனக்கு வேண்டியதைக் கொடுத்தால் பதினைந்து நாள்களுக்குள் தங்கள் கணக்கைத் தீர்த்துவிடுவேன்.

**முருகப்ப செட்டியார்.**—ஐயாவே ! நான் முன் தங்களுக்குக் கொடுத்திருக்கும் தொகையை முதலாளி அறிந்து உடனே கடனை வாங்கும்படி கண்டித்து எழுதியிருக்கிறார். முன் கொடுத்திருக்கும் தொகையைக் கேட்க வந்திருக்கும்பொழுது நீர் மேற்கொண்டு கடன் கேட்கிறீர் (என்று நகைத்தார்).

**பச்சையப்ப பிள்ளை.**—செட்டியாரே ! எல்லாம் முடிந்து வருகிற சமயத்தில் இந்த உதவி செய்ய வேண்டும். தாங்கள் வழக்கம்போல் ஐயாயிரத்துக்குப் பதினாயிரம் எழுதிக்கொள்ளும். தங்களுக்கு இனமாக இரண்டாயிரம் எழுதிக் கொடுக்கிறேன்.

**முருகப்ப செட்டியார்.**—ஐயா ! நீர் கவனிக்காமல் பேசுகிறீர். முன் கொடுத்திருப்பதைச் சம்மதிக்காமல் அதை வாங்கிவிடு என்று முதலாளி எழுதியிருக்கவும், நான் முதலாளி உத்தரவைத் தட்டி மேற்கொண்டு அவர் வேண்டாமென்ற இனத்தில் மீண்டும் கடன் கொடுத்தால் நாளையே பதிலாள் வந்துவிடும். என்னால் கடன் கொடுக்க முடியாது. நீர் முன் வாங்கியிருக்கும் கடனுக்கு என்ன சொல்லுகிறீர் ?

**பச்சையப்ப பிள்ளை.**—என் சிறிய தந்தையின் சொத்து என்னைச் சேர்ந்தவுடன் நான் பணத்தோடு கருவூருக்கு வருவேன். நீர் வந்து அலையவேண்டாம். நான் அவசரமாக ஓரிடத்திற்குப் போகவேண்டும் (என்றெழுந்தார்).

முருகப்ப செட்டியார் கவலையோடு எழுந்து போனார். செட்டியார் நீங்கியபின் முனியாண்டி வந்து பச்சையப்ப பிள்ளையைக் கண்டு, “ஐயா ! சமாசாரம் கேட்டீர்களா ! தங்களுக்குக் கோமுட்டி பெருமாள் செட்டியும், திருவரங்கம் பிள்ளையும், முத்

துப பிள்ளையும் ஆளுக்கு இரண்டாயிரம் கொடுத்து நாலாயிரத்துக்கு எழுதி வாங்கிக்கொண் டிருக்கிறார்களே! அவர்களுக்கு யாரோ என்னமோ சொன்னார்களென்று என்னை அழைத்து, தங்களுககுப பணம் வேண்டுமாகையால் உடனே வாங்கிக் கொடுக்காமற்போனால் மேல் நடததுவதாகச சொன்னார்கள். நான் அவர்களுக்குச் சமாதானம் சொல்லி வந்தேன். ஆயினும் அவர்கள் சும்மா இருப்பார்களென்று நான் நினைக்கவில்லை" என்றான்.

**பச்சையப்ப பிள்ளை.**—இந்த அற்பக் கழுதைகளிடததில் கடன் வாங்கக் கூடாதென்று நான் சொன்னதைக கவனிக்காமல் அவாகளை இழுத்துவந்து என்னிடத்தில் மாட்டிவிட்டாய். இபபொழுது என்ன செய்கிறது? சொத்துகள் என்னைச் சேருமுன் அவர்கள் என்ன துள்ளினாலும் பணம் கிடைககாதெனறு சொல்லிவிடு. நான் இந்தக் கடன்களுககுப பயபபடவில்லை. நான் ரிசீவரிடத்திலிருந்து கைம்மாற்றாக வாங்கிய ஐயாயிரத்தை விரைவில் கொடுககவேண்டுமென்று மணவாள நாயுடுவையும் கருஞா முருகபப செட்டியாரையும் கேட்டும், அவர்கள் கொடுக்க முடியாதென்று சொல்லி விட்டாாகள். என்ன செய்கிறதோ தெரியவில்லை. நீ வேறு யாரிடத்திலாவது கேட்டுபபாாககக முடியுமா?

**முனியாண்டி.**—நான் போய்ப பாாககிறேன். கிடைத்தால் உத்தமம். கிடைக்காவிட்டால் என்ன செய்கிறது? எனககோர் யோசனை தோன்றுகிறது. என் யோசனையைக கேட்டால் தஙகளுககுத தற்காலம நேரிட்ட கஷ்டததை நீககிக கொள்ளலாம்.

**பச்சையப்ப பிள்ளை.**—உன்னுடைய யோசனை என்ன?

**முனியாண்டி.**—நாம் காலம் போக்காமல் சாமியாரை வரவழைத்து அவர் காட்டிய பாளங்களைப புடம்போடச் சொல்ல வேண்டியதே! நாம் கையில் வெண்ணெயை வைத்துக்கொண்டு நெய்க கழுவானேன்.

**பச்சையப்ப பிள்ளை.**—சாமியாரைக் குளித்தலைத் தாசில்தார் நிறுத்திக்கொண்டிருக்கிறார். அவர் இப்பொழுது இங்கு வரமாட்டார்.

**முனியாண்டி.**—நாம் சர்க்கார விஷயத்தில் ஜாக்கிரதையாக இருக்கவேண்டும். தாங்கள் தற்காலம் மதனவல்லியிடத்தில் இரண்டாயிரத்தைந்நூறும் ஜாகரத்தினத்திடத்தில் இரண்டாயிரத்தைந்நூறும் வாங்கிக்கொண்டால், பிறகு திருப்பிக் கொடுத்துவிடலாம்.

**பச்சையப்ப பிள்ளை.**—அவர்கள் பணம் வைத்துக்கொண்டிருக்கிறார்களா! அவர்களுக்குப் பணமேது?

**முனியாண்டி.**—அவர்களிடத்தில் ரொக்கமாக இல்லாமற்போனாலும் தாங்கள் வாங்கிக்கொடுத்த நகைகள் இல்லையா? அவைகளை வாங்கிவந்தால் அடுவைத்துப் பணம் வாங்க முடியாதா?

**பச்சையப்ப பிள்ளை.**—அதுதான் நல்ல யோசனை! நான் இப்பொழுதே போய் வாங்கிவருகிறேன் (என்றெழுந்து மதனவல்லி வீட்டுக்குச் சென்றார்).

**மதனவல்லி.**—வருக! வருக! அத்தான! இன்று கட்டாயம் மழை வரும் (என்று நகைத்து நாற்காலியில் உட்கார வேண்டினாள்).

**பச்சையப்ப பிள்ளை.**—நான் அடிக்கடி வரவில்லையென்று உனக்குக் கோபமிருக்கும். நான் என்ன செய்வேன், சற்று நேரம் ஓய்ந்து உட்கார்ந்திருக்க முடியவில்லை.

**மதனவல்லி.**—தாங்களும் நேற்றுக் குளித்தலைக்குப் போய் வந்தீர்கள் அல்லவா (என்று நகைத்தாள்).

**பச்சையப்ப பிள்ளை.**—நான் குளித்தலைக்குப் போய் வந்தது உனக்கு எப்படித் தெரியும்?

**மதனவல்லி.**—தாங்கள் எங்களைக் குறித்து விசாரிக்காமற் போனாலும் நாங்கள் உங்களைக் குறித்து விசாரிக்காமலிருக்க முடியுமா (என்று மீண்டும் நகைத்தாள்).

**சையப்ப பிள்ளை.**—நான் உன் மனதை நன்று யறிந்திருக்

கிறேன். என் சிறிய தந்தையின் சொத்து என்னைச் சேர்ந்த வுடன் உன்னை என் சொந்த மனைவியைப்போல் வைத்து நடத்துவேன். உனக்குக கொஞ்சம் நிலமும் வாங்கிவைக்க யோசித்திருக்கிறேன்.

**மதனவல்லி.**—நான் தங்களுக்கு அடிமை என்று நினைத்திருக் கிறேன். தாங்கள் என்னை எவ்விதம் வைத்திருந்தாலும் எனக்குச் சம்மதமே !

**பச்சையப்ப பிள்ளை.**—மதனவல்லி ! உன்னிடத்தில் ஓர் வேலை யாக வந்தேன்.

**மதனவல்லி.**—என்னிடத்தில் என்ன வேலையாக வந்தீர்கள் ?

**பச்சையப்ப பிள்ளை.**—எனக்குக் கொஞ்சம் தொகை அவசர மாக வேண்டும், உன்னிடத்தில் பணமில்லை யென்பது எனக்குத் தெரியும். உன்னிடத்தி லிருக்கிற நகைகளைக் கொடுத்தால் அவைகளை ஈடு வைத்துக் கடன் வாங்கிக் கொண்டு பின் பத்துப் பதினைந்து நாளில் மீட்டுக் கொடுக் கிறேன்.

**மதனவல்லி.**—என் துரையே ! தாங்கள் எனக்கு வாங்கிக் கொடுத்த நகைகள் தங்களுடைய அவசரத்துக்கு உபயோகப்படா மல் அவைகள் இருந்தென்ன பலன். தாங்கள் அந்த நகை களை ஈடுவைத்துப் பணம் வாங்கி வட்டி கொடுக்கவேண்டிய அவசியமில்லை. தாங்கள் அந்த நகைகளை விற்றுப் பணத்தை உபயோகப்படுத்திக்கொள்ளுங்கள். வாங்குகிறவர்களுக்கு அவை புதிதாகக் காணப்படும். நான் அவைகளைப் பழுக்கச் சுட்டு மெருகுபோட்டுக் கொடுக்கும்படி திட்டப்படுத்தியிருக் கிறேன். தங்களுக்கு நகைகள் எப்பொழுது வேண்டும் ?

**பச்சையப்ப பிள்ளை.**—இப்பொழுதே வாங்கிப்போக வந்தேன்.

**மதனவல்லி.**—நான் நகைகளைக் கொடுத்திருக்கும் தட்டானை யாரோ நோயாயிருக்கிறாரென்று அழைத்துப் போயிருக் கிறார்கள். அவன் வந்தவுடன் நகைகளை வாங்கி அனுப்பு கிறேன்.

**பச்சையப்ப பிள்ளை.**—அவன் எப்பொழுது வருவான்?

**மதனவல்லி.**—நான் ஒவ்வொரு விநாடியும் அவனை எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறேன்.

**பச்சையப்ப பிள்ளை.**—தட்டான் வந்தவுடன் எனக்குச் சொல்லியனுப்பு. நான் வந்து நகைகளை வாங்கிப் போகிறேன். நீ ஒருவரிடத்தும் கொடுத்தனுப்ப வேண்டாம். (என்றெழுந்தார்).

**மதனவல்லி.**—தாங்கள் ஒன்றும் சாப்பிடாமல் போகக்கூடாது (என்று விஸ்கி புட்டியையும் வெள்ளி டம்ளரையும் கொண்டு வந்து வைத்தாள்).

அவர் கொஞ்சம் சாப்பிட்டு நீங்கினார். அவர் நீங்கியபின் மதனவல்லி தன் தாயிடம் ஓடி நடந்ததைச் சொன்னாள்.

**மதனவல்லியின் தாய்.**—தாசிக்குக் கொடுத்ததை வாங்கிக்கொள்ளப் பார்க்கிறான்போல் காண்கிறது. அவன் வந்து கேட்கும்போதெல்லாம் தட்டான் வரவில்லை யென்று சொல்லிக் கொண்டிரு.

பச்சையப்ப பிள்ளை மதனவல்லியை நற்குணமுள்ளவளாகவும் அவளுடைய நகைகள் தன் கையிலிருப்பதாகவும் நினைத்துக் கொண்டு நாகரத்தினத்தின் வீட்டுக்குள் சென்றார்.

**நாகரத்தினம்.**—(நகைத்து) ஐயோ! இதென்ன! இவர் மதனவல்லி வீட்டுக்குப் போக வந்தவர் வழி தெரியாமல் இவ்விடம் வந்தாரே! ஐயா! கொஞ்சதூரம் கிழக்கே சென்று பின்னடக்கே திரும்பினால் நீர் விரும்பிய வீட்டுக்குப் போகலாம் (என்று மீண்டும் நகைத்தாள்).

**பச்சையப்ப பிள்ளை.**—(நகைத்து) இது மதனவல்லி வீடென்றே நினைத்து வந்தேன் (என்று நாற்காலியில் உட்கார்ந்தார்).

**நாகரத்தினம்.**—இன்றேது அத்திப பூத்ததுபோல் வந்தீர். தாங்கள் என்னை முற்றிலும் மறந்துவிட்டீர்களென்றே நினைத்திருந்தேன்.

**பச்சையப்ப பிள்ளை.**—நாகரத்தினம் ! பொறுமை உன்னிடத்தில் அதிகம் குடிகொண்டிருக்கிறது. நான் நேற்றும் அதற்கு முந்தின நாளும் இங்கு வரவில்லை. ஒரு நாள் நான் இவ்விடம் வராமற்போனால் ஒரு வருடம் வராம லிருந்தது போல் பேசுகிறாய.

**நாகரத்தினம்.**—இந்த இரண்டு நாளும் அங்கே போயிருநதீா போல் காணபபடுகிறது.

**பச்சையப்ப பிள்ளை.**—நேற்று நான் போயிருந்த இடத்தைப பின் சொல்லுகிறேன். உன்னிடத்தி லிருக்கும் நகைகள் ஒரு வருக்கு இரவல் வேண்டும். நான் உன்னிடநதிலிருநது வாங்கிக் கொடுக்கிறேன் என்று சொல்லிவிட்டேன். நீ நகைகளைக் கொடுத்தால் இரண்டு மூன்று நாளில் கொணடு வநது கொடுத்துவிடுவார்கள்.

**நாகரத்தினம்.**—"தன்னுயுதமும் தன் கையிற் பொருளும் பிறன் கையிற் கொடுககும் பேதையும் பதரே" என்றதை வாசித்ததில்லையா ?

**பச்சையப்ப பிள்ளை.**—நாகரததினம் ! எனககுக கொஞ்சம் பணம் வேண்டும். நீ உன் நகைகளைக கொடுத்தால் அவைகளின் மேல் கடன் வாங்கிப பின் பத்து நாளில் உன் நகைகளை மீட்டுக கொடுக்கிறேன்.

**நாகரத்தினம்.**—அடி ! பாவி ! என்னைக கெடுத்தாயா ! மாப்பிள்ளையை வசபபடுத்திக்கொண்ட தல்லாமல் என்னிடத்திலிருககும் நகைகளையுமா பிடுங்கிககொண்டு வரச்சொன்னாய் ! என்னிடததி லிருக்கும் நகைகளைப பிடுங்கிக்கொண்டால், நான் இவ்வூரை விட்டுப போய்விடுவேன் அதன் பின் மாபபிள்ளை உன்னை விட்டுப பிரியாரென்ற எண்ணமோ ! அடி ! நாயே ! என்னை எளிதில் ஏமாற்றிவிடலா மென்றோ நினைத்தாய் ! அடி ! குளித்தலையில் ஒரு பட்டை சாதத்துக்கு எதிர்பார்த்திருந்த உனக்கு மன்மதனைப்போன்ற நாயகன் கிடைத்தான் ; கழுத்தில் கெம்பட்

டிகையும் காசுமாலையும் எறியது; கைகளுக்குக் கெட்டிக் காப்போடு கெட்டிக் கொலுசும் ஆனது; சாபபாட்டுக்குச் சீரகச்சம்பா வருகிறது; மேற்செலவுக்கு வேண்டிய பண மும் கிடைக்கிறது. இவைகளெல்லாம் போதாதென்று அத்தான் அன்பை முற்றிலுங் கைக்கொள்ளவா இந்த யோசனை? அத்தான்! தங்களுக் கென்ன குறைவு செய் தேன். அந்த நாரியின் வார்த்தையைக கேட்டு என்னைத் துரத்திவிட யோசித்தீர். அவளுடைய வஞ்சனையைக் கேட் டுத் தங்களை அடைக்கலமென்று நம்பியிருக்கும் என்னை நீக்கி விடத் துணிந்தீர். ஆ! என் துரையே! நீரே என் உயிர்! நீரே என் வாழ்வு! நீரே என் தெய்வம்! எனறு நானிருகக என்மேலிருந்த ஆசையெல்லாம் அச துன்மார்க்கியின் போதனையாலோ தொலைந்தது? ஆ! என் சாமி! உம்மை விட்டுப பிரிந்திருகக என்றால் முடியுமா? ஐயோ! தெய் வமே! நான் இனி என்ன செய்யபபோகிறேனா? ஐயோ! நான் திக்கற்றவளானேனே! நீர் என்னைப போய்விடு என் றால் அபபொழுதே என்னுயிர் போய்விடுமென்று அறியா மற் போனீரோ? (என்று பச்சையபப பிள்ளை முகத் தோடு முகம் வைத்துத தேம்பி அழுது) நாதா! நீர் குபேர னைபபோ லிருபபவா, "பணம் வேண்டும் நகைகளைக் கொடு" என்றால் நான் நம்புவேனா? முழு மூடாகளும் நம பார்களே! உமக்கு உண்மையாக வறுமை யுண்டாகி என்னு டைய நகைகளைக் கேட்டால் நகைகள் மட்டுமல்ல என்னு யிரையும் மகிழ்வோடு கொடுப்பேனே! இதை யறியாமல் போனீரே (என்று கோடுகோடென்று அழுதாள்).

பச்சையபப பிள்ளை நாகரத்தினம் பேசியதைக் கேட்டுப் பெருமையடைந்து, நாம் பணம் வேண்டுமென்று என்ன சொன்ன லும் நம்முடைய வார்த்தையை நம்பமாட்டாள் என்று நினைத்து, "நாகரத்தினம்! நீ கவலையற்றிரு! உன்னை நீக்கிவிட நான் எண்ணவில்லை. நானும் உன்னை என் உயிர்போல் நினைத்திருக்

கிறேன். நான் அவசரமாக ஓரிடத்துக்குப போகவேண்டும்" என்று நாகரத்தினத்தின் கன்னத்தில் முத்தங் கொடுத்து நீங்கினன்.

பச்சையபப பிள்ளை நீங்கியபின் நாகரத்தினம் முகத்தைத் துடைத்துக்கொண்டு, "நாம் இவ்விதம் பாசாங்கு செய்யாமல் நகைகளைக் கொடுக்கமாட்டேன் என்ருல் அவனுக்குக் கோபம் வரும். அவனுடைய சிற்றபபன் சொத்து அவனைச் சேரபபோகும் தருணத்தில் அவனை விரோதிப்பது நன்றல்ல" என்று தனக்குள் எண்ணிச் சந்தோஷமாக இருந்தாள்.

பச்சையபப பிள்ளை பணம் வேண்டுமே என்ன செய்கிற தென்று கவலையோடு வீட்டுக்குப போகும்பொழுது, சிவஞானம் வெளி வாயிற்படியில் நின்றிருநதவள் வீட்டுககுள் போகிறதைக் கண்டு, அவள் வீட்டுக்குள் சென்ருர்.

சிவஞானம்.—அத்தான்! வருக! வருக! நாற்காலியில் உட் காருஙகள். தாங்கள் என்னைத் தேடிவநதது என்னுடைய நற்காலமா?

பச்சையப்ப பிள்ளை.—சிவஞானம்! எனக்கு வேலை தொந்தரவால் இபபக்கம் வர முடியவில்லை. நீயும் ஊரிலில்லாமல் அங்குமிங்கும் திரிந்துகொண்டிருக்கிருய்.

சிவஞானம்.—ஆம்! அத்தான்! என் நாயகன் கொடுந்தொழிலைச் செய்து நீங்கிய பின், நான் இவ்வளவு பெரிய வீட்டில் தனித்திருக்கப் பிரியபபடாமல் திருச்சிராபபள்ளியில் என் தாய் வழியைச் சேர்ந்தவாகள் வீட்டுக்குப் போவதும் வருவதுமாக இருக்கிறேன்.

பச்சையப்ப பிள்ளை.—உன் நாயகனிடத்திலிருந்து கடிதம் ஏதாகிலும் வநததா?

சிவஞானம்.—அக்கொலைப பாதகன் எனக்குக் கடிதம் ஏன் எழுதப் போகிருன். அக்கொடும் பாவியை எப்பொழுது பிடித்து வந்து கோர்ட்டில் நிறுத்துவார்களென்று எதிர்பார்த்திருக்கிறேன்.

**பச்சையப்ப பிள்ளை.**—உன் புருஷன்மேல் மனவெறுப்பு அதிகம் இருக்கிறதாகக் காண்கிறது.

**சிவஞானம்.**—செய்யத்தகாத காரியத்தைத் தாங்கள் செய்தால் தங்களுடைய மனைவி தங்களை விரும்புவாளா?

**பச்சையப்ப பிள்ளை.**—உன் புருஷனைக் கொண்டுவந்து தண்டித்துவிட்டபின் நீ என்ன செய்வாய் என்பதே எனக்குக் கவலையாக இருக்கிறது.

**சிவஞானம்.**—திருடன் பெண்டாட்டி எப்பொழுதாகிலும் கைம்பெண்டாட்டி ஆகவேண்டியதுதானே! கொலைபாதகனுக்குப் பெண்டாட்டியாய் இருப்பதைவிடக் கைம்பெண்ணாக இருந்து காலங் கழிப்பது உத்தமம் என்று நினைக்கிறேன். என் நாயகனுக்குப் பின் என்னைத் தாங்கள் ஆதரிக்கமாட்டீர்களா?

**பச்சையப்ப பிள்ளை.**—நீ அதற்காகக் கவலைப்படவேண்டாம். உன்னையோர் எஜமாட்டியாக வைத்து யாவரும் உன் சொற்படி நடக்கும்படி செய்வேன்.

**சிவஞானம்.**—தாங்கள் சொல்லிய விதம் செய்வீரென்று எனக்குத் தெரியும். ஆனதால் எனக்கு ஒருவித கவலையும் இருக்க வேண்டிய காரணமில்லை.

**பச்சையப்ப பிள்ளை.**—உன் புருஷன் இருக்கும்பொழுது நீ அடைந்த சுகத்தைவிட மேலான சுகத்தைக் கொடுக்கவே யோசித்திருக்கிறேன்.

**சிவஞானம்.**—நான் மிக்க நன்றியறிதலுள்ளவளாக இருப்பேன்.

**பச்சையப்ப பிள்ளை.**—சிவஞானம்! நீ பேசுகிற மாதிரியைப் பார்த்தால் நீ என் எண்ணத்துக்கு உள்படுவாயென்று நம்புகிறேன். இன்னம் என் மனதிலிருப்பதைச் சொல்லாமலிருக்க முடியவில்லை. உன் சுந்தரமான முகத்தைப் பார்த்தபின் என் மனம் படாதபாடு படுகிறது. எனக்கோர் முத்தங் கொடுப்பாய், என் கண்மணி!

**சிவஞானம்.**—என்ன சொன்னீர்?

**பச்சையப்ப பிள்ளை.**—உன் நாயகன் இறந்தபின் உன்னைக் கைம்பெண் கோலத்தோடு வைத்திருப்பேன் என்று நினைக்க வேண்டாம்! உனக் கெல்லா நகைகளையும் போட்டு என் மனைவியாக வைத்துக்கொள்ளுவேன்.

**சிவஞானம்.**—என்னையா தாங்கள் தங்கள் மனைவியாக வைத்துக் கொள்வீர்?

**பச்சையப்ப பிள்ளை.**—ஆம்! என் மாணிக்கமே! நீயே என் முதல் மனைவியாக இருப்பாய்.

**சிவஞானம்.**—நீர் உம்முடைய அறிவைப் பறிகொடுத்துவிட்டீர்போல் காணப்படுகிறது. உம்மையன்றி வேறொருவர் இவ்விதமான வார்த்தைகளை என்னிடம் சொல்வார்களானால் அவர்களை அவமானப்படுத்தி அனுப்பியிருப்பேன். நீர் மற்றோர் வார்த்தை யாடாமல் எழுந்து போய்விடும்.

**பச்சையப்ப பிள்ளை.**—சிவஞானம்! நீ என்னைப் பகைத்துக் கொள்ள வேண்டாம். பகைத்துக்கொண்டால் நீ துன்பப் படுவாய். நீ நன்றாய் யோசித்துப் பேசு.

**சிவஞானம்.**—அடா! துன்மார்க்கா! பனங்காட்டு நரி சலசலப் புக் கஞ்சாது என்பதை நீ அறியவேண்டும். மற்றப் பெண் களைப்போல் என்னையும் நினைத்துக்கொண்டாய். அவ்விதம் நீ எண்ணியிருப்பது குற்றம். அடா! முழு மூண்டமே! என்னுடைய வல்லமையை யறிந்தும் அறியாதவன்போ லிருக்கிறாய். பேசாம லெழுந்துபோடா கொலைப்பாதகா!

**பச்சையப்ப பிள்ளை.**—அடி! கொலைப்பாதகனைக் கட்டிக் கொண்ட கொலைப்பாதகி! உன் புருஷன் போனபின் ஊரிலொரு மாப்பிள்ளையைத் தேடிக்கொண்டதாலோ உனக்கு இந்தத் தைரியம் வந்தது. நீ தேடி வைத்திருக்கும் மாப்பிள்ளையை விட நான் தாழ்ந்தவனென்றோ நினைத்தாய்? இதோ உன்னை நன்றாய் உதைத்துப் புத்தி கற்பித்துப் போகிறேன் (என்றெழுந்தார்).

**சிவஞானம்.**—(வீட்டுக்குள் ஓடி வெளியில் வந்து ஓர் குத்துவாளைக் காட்டி) அடே! துரோகி! நீ என்னருகில் வந்தால் இது உன் உயிரை எமலோகத்துக்கு அனுபபுமென்றறி.

**பச்சையப்ப பிள்ளை.**—(அடங்காக் கோபத்துடன்) அடி! சிவஞானம்! உன்னை நான் பார்த்துக்கொள்ளுகிறேன் (என்று சொல்லி நீங்கினார்).

பச்சையபப பிள்ளை நீங்கியபின் சிவஞானம் சாபபிட்டுக் கதவுகளை மூடிக்கொண்டு விடிவிளககு வைததுப படுத்து நித்திரை போனாள். இரவு நிதானம் ஒரு மணிக்கு ஒருவன் புழைக்கடையில் உலாவிக்கொண்டிருந்தான். ஒருவன் சிவஞானத்தின் வீட்டின் பின்புறச் சுவரேறிக் குதித்துப பின் கதவைத் திறந்து, வெளியில் உலாவிக்கொண்டிருந்தவனை வீட்டுக்குள் அழைத்துக் கதவைச் சாத்திக்கொண்டான். அப்பால், சந்தடி செய்யாமல் வீட்டில் நித்திரையிலிருக்கும் சிவஞானத்தின் வாயை ஒருவன் கையால் மூடிக்கொண்டான்; மற்றவன் இரண்டு கைகளையும் பிடித்துக் கொண்டு, "அடே! முனியாண்டி! நீ வாயை மூடிக்கொண்டிருக்க வேண்டாம்: வாயில் துணியைத் துறுத்துவிடு" என்றான்.

முனியாண்டி வாயில் துணியைத துறுததுவிட்டு இரண்டு கைகளையும் கட்டிவிட்டான்.

**மற்றவன்.**—அடி! சிவஞானம்! பச்சையபப பிள்ளையின் வல்லமை இபபொழுது உனக்குத தெரிந்ததா? கத்தியைக் காட்டிப் பயமுறுத்தினாயே! இப்பொழுது உன்னுடைய கதி யென்ன? அடி! சண்டாளி! உன் மாப்பிள்ளை போனபின் உன் மனதுக்கேற்ற மாப்பிள்ளையைத் தேடித்திரிகிறாய். அடி! பாதகி! உன்னைக் கொண்டவனைக் கண்டு பிடித்துக் கொண்டுவந்து தண்டனை செய்தபின் என்ன செய்யப்போகிறாய்? உனக்கு மாபபிள்ளைகளனேகா இருக்கிறார்களென்ற தைரியத்தைக் கெடுத்து, உன்னை அலங்கோலப்படுத்தாமல் விடேன்.

சிவஞானம் எழுந்து உட்கார்ந்து பேசச் சக்தியற்று 'நாம் என்ன செய்யப் போகிறோம். இப்படுபாவி நம்மை அலங்கோலப் படுத்தியபின் நாம் உயிரோடிருக்கப் போகிறதில்லை. நமக்கு ஆயுள் இன்றோடு முடிவானது' என்று எண்ணிக்கொண்டே கண்களில் நீரை வடியவிட்டாள்.

பச்சையப்ப பிள்ளை பின்னும், 'அடி! உன்னை மேன்மையாக வைத்து நடத்துவேன் என்று சொன்னதைக் கேட்டும் உன் மனம்போல் என்னைக் கேவலமாகப் பேசினாயல்லவா? உன்னுடைய அகங்காரம் இப்பொழுது எங்கே போனது? அடி! நாயே! உன்னையோர் பொருட்டா யெண்ணினதால் நீ கர்வம் கொண்டாய். உன்னைக் கெடுத்து உன் கர்வத்தைப் பாழாக்குகிறேன் பார்' என்று உட்கார்ந்திருந்த சிவஞானத்தின் கையைப் பிடித்துக் கீழே தள்ளிப் படுக்கவைத்தான்.

அத்தருணத்தில் "கொல்லுகிறார்கள், கொல்லுகிறார்கள்" என்ற சத்தம் தெருவில் கேட்க தெருவில் சத்தம் போடுகிறது யாரென்று பார்க்க முனியாண்டி ஓடினான். பச்சையப்ப பிள்ளை குனிந்து சிவஞானத்தைத் தள்ளும்பொழுது, முதுகில் பாணைத் தடி அடிவிழ அப்படாடா என்று கவிழ்ந்த விதம் விழுந்தான். மீண்டும் இடுப்பிலும் காலிலும் இரண்டடி விழுந்தன. அடி சத்தங் கேட்டவுடன் முனியாண்டி அவ்விடம் ஓடிவந்து அடித்தவனைப் பார்த்து, "ஆ! ஆ! மாரியப்பனா" என்று அவனைப் பிடிக்கக் கையை நீட்டினான். நீட்டிய கை சமீபிக்குமுன் மாரியப்பன் பாணைத்தடியால் அடித்து முதுகிலும் அடித்து முனியாண்டியையும் நிலத்தில் படுக்கவைத்து, சிவஞானத்தின் வாயிலிருக்கும் துணியைப் பிடுங்கியெறிந்து, தெருவாயிலின் கதவைத் திறந்து, வெளியில் நின்றிருந்த பெண்பிள்ளையோடு அக்கம் பக்கத்தாரைக் கூவிப் பச்சையப்ப பிள்ளையும் முனியாண்டியும் செய்ததைச் சொல்லி அழைத்துவந்தான். வெளியார் வந்து பார்த்தபொழுது, சிவஞானம் கைக்கட்டோடு மூர்ச்சையாயிருப்பதை மாரியப்பனோடு வந்த பெண்பிள்ளை கண்டு

பரிதாபமுற்றுக் கைக்கட்டை அவிழ்த்து, "அவர்கள் பின்புறமாக ஓடிப்போய்விட்டார்கள்" என்று சிவஞானத்தின் மூர்ச்சையைத் தெளியவைத்தாள்.

**சிவஞானம்.**—அம்மா ! அபூர்வம் ! தாங்களும் தங்கள் தமையனும் என் உயிரைக் காப்பாற்றினீர்கள். உங்களைத் தெய்வமே நல்ல தருணத்தில் கொண்டுவந்து விட்டது. நீங்கள் என் விஷயத்தில் செய்த நன்றியை என் காயம் உள்ளளவும் மறக்கேன். அப்படுபாவிகள் நல்ல அடிபட்டு நீங்கினார்கள்.

**மாரியப்பன்.**—நாம் போலீஸாருக்குத் தெரிவிக்க வேண்டாமோ?

**பக்கத்து வீட்டுக்காரன்.**—இவ்வூரில் போலீஸார் அத்திப் பூத்ததுபோல் வருகிறார்கள். அவர்களிருந்தாலும் அவர்களிடம் தெரிவிப்பதில் பிரயோசனமில்லை. பச்சையப்ப பிள்ளையையும் முனியாண்டியையும் நீர் பார்த்தீரேயன்றி நாங்கள் பார்க்கவில்லை. நாங்கள் வீட்டுக்குள் வருமுன்னம் போய்விட்டார்களே.

**சிவஞானம்.**—அவர்கள் ஓடிவிட்டதே அவர்களுக்கு நற்காலம்; ஆயினும் தோஷமில்லை. அம்மா ! அபூர்வம் ! நீங்கள் இந் நேரத்தில் எதற்காக இங்கு வந்தீர்கள் ?

**அபூர்வம்.**—என் தாயாருக்கு நேற்றெல்லாம் புளி யேப்பமாக இருந்தது. இராத்திரி ஒன்பது மணிமுதல் வாந்தியுமாய்க்கொண்டிருக்கிறது. ஆனதால் உன்னிடத்தில் ஏதாகிலும் மருந்து வாங்கிப் போகலாம் என்று என் தமையன் துணையோடு வந்து கதவைத் தட்டினேன். பதில் கிடைக்காமையால் வீட்டுக்குள் வெளிச்சம் இருப்பதைக் கதவிடுக்கால் தெரிந்து, கதவிடுக்கில் பார்த்தபொழுது, நீ படுத்திருக்கவும் இருவர் ஏதோ செய்துகொண்டிருப்பதை என் தமையனுக்குக் காட்டினேன்.

**மாரியப்பன்.**—நான் கதவிடுக்கில் பார்த்துத் தங்களைக் கொலை செய்கிறார்களென நினைத்துச் சந்து வழியாகப் பின்புற

மோடிச் சுவரேறிக்குதித்து வந்து இருவர்களையும் நன்றா யடித்தும், அவர்கள் அவ்வடிபட்டு ஓடிபபோனது அதி சயமே.

**சிவஞானம்.**—அம்மா ! அபூர்வம் ! அபபாவியால் நம்முடைய கற்பழியும் ; நம்முடைய கற்பழிந்தால் உயிரை விட்டுவிட வேண்டியதே என்று எண்ணியிருந்தேன. தருணத்தில் எனக்கு உதவி புரிந்தீர்கள். இபபெரிய உபகாரத்திற்குப் பதில் செய்ய முடியாதாயினும், நான் என் நன்றியறிதலைக் காட்டிக்கொள்ளுவேன் (என்று வீட்டுக்குள் சென்று மருந்து கொண்டுவந்து கொடுத்து) இதைக கொண்டுபோய்க் கொடுத்தவுடன் உம்முடைய தாயார் சுகமடைவார்கள் (என்றாள்).

மாரியபபனும், மற்றவர்களும் சிவஞானததுககுத் தைரியம் சொல்லி நீஙகினார்கள். சிவஞானம் அபபடிபாவிகளை என்ன செய் கிறதென்ற கவலையோடிருந்தாள்.

## 19—ம் அத்தியாயம்

குளித்தலை தாசில்தார் வீட்டில் ஜனங்கள் நிறைநதிருக்கும் பொழுது சாமியாரும் அவர் சீஷனும் அங்கே சென்றார்கள். தாசில்தார் அவர்களை எதிர்கொண்டழைத்து, அவ்விடததி லிருக் கும் ஒருவரைச் சுட்டிக் காட்டி, " சாமி ! இவரால் சித்தாந்தப பிரசங்கம் ஒன்று நடக்கபபோகிறது. ஆனதால் தங்களை வர வழைத்தேன் " என்று கூறி அவரைப பிரசங்கியாரருகில் உட் காரவைத்தார்.

**சாமியார்.**—ஞான சாஸ்திரங்களைக கேட்பது பிறவியை ஒழிக கும். பிரசங்கியாரவர்கள் எதைக் குறித்துச் சொல்லப் போகிறார்கள் ?

**பிரசங்கியார்.**—சாமிகளே ! தாசில்தாரவர்கள் ஆன்ம லட்சணத் தைச் சொல்லவேண்டு மென்றதால் அதைக் குறித்துச் சொல்ல எண்ணங்கொண்டிருக்கிறேன்.

**சாமியார்.**—சந்தோஷம், அது முக்கியமான விஷயமே. அதை யாவரும் அறிவது அவசியம்.

**தாசில்தார்.**—(பிரசங்கியாரைப் பார்த்து), ஐயா! தாங்கள் ஆரம்பிக்கலாம் (என்றூர்).

பிரசங்கியார் கடவுள் வணக்கஞ் சொல்லி, "ஆன்மா வென்னும் பசுவினுடைய இலக்கணமாவது.—ஆன்மா வென்று சொல்லபபடுவது இந்த தேகததுக கன்னியமாய், தேகம் வேறு, ஆன்மா வேறு என்று பிரிததறியாவண்ணம் தேகத்தைப பொருந்தி, தேகந தானுய் நின்று, குற்றத்தைப பொருந்தின மல சகித இச்சா ஞானக் கிரியைகளையுடையதாய், முன் சனனத்தில் ஆர்ச்சித்திருக்கிற இருவினைக் கீடான சுகதுககங்களையும் புசியா நிற்கும். இதனுண்மையை விசாரிததுப பார்க்குமிடத்து, சாக்கிரம், சொபபனம், சுழுத்தி, துரியம், துரியாதீதம் என்னும் ஐநதவத்தை யடையும். இந்த ஐந்தவத்தையிலும் இயற்கையான அவததைத துரியாதீதமே. மற்ற நான்கவததைகளும் செயற்கையே." என்றூர்.

**சாமியார.**—ஐயாவே! தாங்கள் சொல்லிக்கொண்டு வரும் பொழுது உண்டாகும் சநதேகங்கள் நிவர்ததியாகும் விதம் கேள்விகள் கேட்டாலன்றி உணமை விளங்காது. ஆனதால் நான் கேள்விகள் கேட்கும்படி நீங்கள் அநுமதி கொடுகக வேணடுகிறேன்.

**பிரசஙகியார்.**—கேள்விகளை அடியேனே வருவித்து அவற்றிற்குச் சமாதானம் சொல்லுகிறதை விடத் தாங்கள் கேள்விகள் கேட்க அவற்றிற்கு அடியேன் சமாதானம் சொல்வது விசேஷமே! ஆனதால் தாங்கள் கேள்விகளைத் தாராளமாய்க் கேட்கலாம்.

**சாமியார.**—ஐயாவே! இந்தத தேகத்துக்கு வேருக ஓரான்மா உண்டென்று சொல்லுகிற தெவ்விதம்? இந்தத் தேகமல்லவா யாவையு மறிகிறது?

**பிரசங்கியார்.**—தேகம் அறியுமென்று நீர் சொல்லின் இந்தத் தேகம் பிணமான போதும், அது யாவையும் அறிய வேண்டுமே!

**சாமியார்.**—பூதககூட்டத்தின் சமுதாயமான தேகத்திலிருந்து வாயு நீங்கினதால் அறியாமற் போகிறது.

**பிரசங்கியார்.**—நீர் சொல்லுகிற வாயு நித்திரையில் நீங்காமலிருந்தும் அபபொழுது அறியாமற் போகிறதால் தேகம் அறியாது. ஆன்மாவே அறியும்.

**சாமியார்.**—ஐம்பொறியே அறிவதன்றி வேறொன்று லறிவதென்று காணபபடாமையால் இநதிரியங்களே ஆன்மா!

**பிரசங்கியார்.**—பிணமாம்பொழுது கெட்டொழியும் ஐம்பொறிகளே அறியுமென்றால் அவை நித்திரையில் ஒன்றையும் அறியா.

**சாமியார்.**—உறக்கத்தில் ஐம்பொறியும் ஒடுங்கி நிற்பதால் அறியவில்லை.

**பிரசங்கியார்.**—அது பொருநதாது. நனவிலுங்கூட அவை ஒவ்வொரு பொறியா யறிவதன்றி ஒருங்கே அறிவனவல்ல.

**சாமியார்.**—ஒன்றொன்று யறியுமதுவே அவற்றி னியல்பு.

**பிரசங்கியார்.**—அவ்விதமாயினும் இந்திரியங்களில் ஒன் றறிந்தது மற்றொன் றறியாது. இவ்வைந்து பொறியையுங் கொண்டு அறிவதொன் றுண்டு. அதுதான் ஆன்மா. ஐம்பொறிகள் அறியமாட்டா.

**சாமியார்.**—பிராண வாயுவானது உஸ்வாஸ நிஸ்வாஸங்களைப் பண்ணிககொண்டு நின்ற காலத்தில் அறிவு உண்டாகக் காண்டலால், அதுவே அவ் வைந்தையுங் கொண்டறிவதாகிய ஆன்மா வென்று சொல்வது பொருநதும்.

**பிரசங்கியார்.**—உறககத்தில் பிராணவாயு உஸ்வாஸ நிஸ்வாஸங்களைப பண்ணிக கொண்டிருந்தும் அறிவில்லாமற் போகிறதே! ஆகையால் பிராணவாயு ஆன்மா வல்ல.

**சாமியார்.**—உறக்கத்தில் உடம்பின்கண் பிராணவாயு இயங்கிக் கொண்டிருந்தாலும் அப்பொழுது இந்திரியங்களாகிற கரணமில்லாமையால் விஷயங்களை அறியாமலிருக்கிறது.

**பிரசங்கியார்.**—அறிகைக்குக் கர்த்தா பிராணவாயுவென்று சொன்னால், பிராணவாயு நின்று சீவிக்கும்பொழுது கரணங்களும் சீவிக்கவேண்டுமல்லவா? அரசன் கொலுவீற்றிருக்குங் காலத்தில், மந்திரி பிரதானி முதலானவர்களில்லாமல் போய்விடுவார்களா! ஆனதால் பிராணவாயுவை ஆன்மாவென்று சொல்லுதல் பொருந்தாது. நீர் சொல்லும் பிராணவாயுவைக் கும்பித்தும், ரேசித்தும், பூரித்தும், தன் வசப்படுத்திச் சகல விஷயங்களையும் அறியும் ஆன்மா வேறொன்றுண்டென்பது இதனால் காணப்படுகிறதல்லவா?

**சாமியார்.**—சகல விஷயங்களையும் அறிகிறது ஆன்மா என்னில், ஏக காலத்தில் எல்லாம் அறிய வேண்டுமே. அவ்விதம் அறியாமலிருப்பதின் காரணம் என்ன?

**பிரசங்கியார்.**—ஆன்மானுக்குணமாக நித்திரைக்கு ஏதுவான ஆணவ மலத்துடனே தோற்ற சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி, துரியம், துரியாதீதம் என்னும் ஐந்தவத்தையும் ஆன்மா அடைகிறதால் ஏக காலத்தில் அறியும் அறிவில்லாமற்போகிறது.

**சாமியார்.**—தாங்கள் சொல்லுகிற ஆன்மா என்பதொன்றில்லை. ஐம்பொறிகள் வாயிலாக விஷயங்களை அறிவது மனம், புத்தி, சித்தம், அகங்காரம் என்ற அந்தக்கரணங்களே ஆன்மா.

**பிரசங்கியார்.**—அந்தக்கரணங்களும் ஐம்பொறிபோல ஒன்றையொன்றறியா. மனம் சந்தேகித்துப் பற்றும் தொழிய நிச்சயிக்காது; புத்தி நிச்சயிப்பதை விட்டுச் சந்தேகத்தைப் பண்ணாது; அகங்காரம் கிரகிக்கிறதை விட்டுச் சந்தேகத்தையும், நிச்சயத்தையும் பண்ணாது; சித்தம் சிந்தனை செய்வதை விட்டுச் சந்தேகத்தையும், நிச்சயத்தையும், கிரகித்தலையும்

பண்ணாது. ஆகையால் ஆன்மா அவற்றின் வேறாகியும், யான் எனது என்னும் செருக்குக் கேதுவாகிய ஆணவம் உடனாயிணைந்து நிற்றலால் தனக்கென அறிவின்றியும், இவ்வந்தக் கரணங்களாலாகிய நான்கு தொழிலையும் இவற்றோடு கூடிப் பற்றியும், நிச்சயித்தும், எழுந்திருந்தும், சிந்தித்தும், இவற்றை அடக்கியும், தோற்றுவித்தும், உள்ளே அறிகைக்குப் பொருந்தப்பட்ட உட்கருவிகளாக வைத்துக்கொண்டும், புறத்தே அறிகிற இந்திரியங்களிடத்தில் விட்டும் பொருந்தியிருக்கும். இவ்விதம் பொருந்தி வருகிற அந்தக் கரணங்களுக்கு வேறாய், யான் என்றும், பிறரென்றும், என்னுடையதென்றும், பிறருடையதென்றும் நிற்கிற தெதுவோ அதுவே ஆன்மா.

**சாமியார்.**—அந்தக்கரணங்களை உட்கரணமென்றும் ஆன்மாவோடு வேறற்றிருக்குமென்றும் ஏன் சொல்லவேண்டும்?

**பிரசங்கியார்.**—மனம், புத்தி, அகங்காரம், சித்தம் என்று சொல்லப்பட்ட அந்தக்கரணங்கள் நான்கும் ஒரு விஷயத்தை அறிகிறதற்குக் கருவியாகப் பொருந்தி இவையே ஆன்மா என்னும்படி ஆன்மாவோடு அனன்னியமாயிருக்கும். அந்த அந்தக்கரணங்கள் இருளில் பொருளைக் கண்ணுக்குக் காட்டுகிற விளக்குப்போல் நிற்பதால் இவ்வுண்மையை அறிந்து இவற்றை நீக்கி ஆன்மா கருவிகளுடனே சேர்ந்தாலன்றி ஒன்றையும் அறியாதென்று ஆராய்ந்தறிந்தவர்களுக்கு ஆன்ம சொரூபம் எளிதில் விளங்கும். அவ்விதம் ஆராயுமறிவே பசு ஞானம். அதற்குமேல் கலாதிகளையும், கலாதிகளுக்குக் காரணமாயிருக்கிற அசுத்த மாயையையும் நீங்கிச் சிவனுடைய பராசக்தி பதிய அதனாலே ஆணவாதிகள் நீங்கிச் சாமர்த்தியத்தை யுடையதாகிய ஞான திருஷ்டியினாலே சிவனையும், சத்தியையும், தன்னையும், ஆன்மாவில் தரிசிப்பது சிவஞானம். இருதயம், கண்டம், நா, நெற்றி, துவாதசாந்தம், இவ்வைந்து தலத்தையும்,

அடைந்திருக்கும் அகாரம், உகாரம், மகாரம், விந்து, நாதம், என்ற அகாரங்களில் அகாரமாகிய அகாரம் சூரியப்பிரகாசம் போன்ற மனத்தையும், உகார அகாரம் சந்திரப பிரகாசம் போன்ற புத்தியையும், மகார அகாரம் அக்கினிப பிரகாசம் போன்ற அகங்காரத்தையும், விந்து தீபப பிரகாசம் போன்ற சித்தத்தையும், நாதம் ஆயிரம் கோடி சூரியப பிரகாசம் போன்ற புருடனையும், நிரனிறையாக அதிட்டித்து நின்று செலுத்தாநிற்கும். ஆகையால் இவ்வைந்தும் ஒன்று சேர்ந்தபொழுது பிரணவ மென்றும் சூக்கும பஞ்சாக்ஷர மென்றும் சொல்லப்படும். இவற்றுடனே ஆன்ம போதம் கன்மத்துக் கீடாக விஷயங்களைப புசித்து மாறி மாறித் தோன்றி ஒடுங்குகிற முறைமை எபபடியெனில் சமுத்திரத்தி னலைகள் புதிது புதிதாகத தோன்றி கரையளவாகச் சென்று திரும்புவது போலாம். இதை யாராய்ந்து விசாரித்துத் திருவருளினுல் காணில், இவ்வியல்பு இனிது விளங்கும். இவ்விதம் சொல்லபபட்ட அகாரத்துக்குப பிரம்மா, உகாரத்துககு விஷ்ணு, மகாரத்துக்கு உருத்திரன், விந்துவுககு மஹேஸ்வரன், நாதததுககுச சதாசிவம் ஆக இநத முறையிலே ஐவரும் அககரங்களைச் செலுத்தும் அதி தெய்வங்களாய் அவைகளை யதிஷ்டித்து நிற்பாராதலால், இவ்வாறு கரணமும், அக்கரமும், அதி தெய்வமும், என்னும் இம்மூத் திறத் தைந்தோடு ஆன்மா சோந்தபொழுது அறியுந் தன்மை எய்தும்; ஆன்மா அவைகளைச் சேராதபொழுது ஜடம்போல அறிவில்லையாய்விடும். இவ்வுண்மையை வலிபொருந்திய உஸ்வாஸ நிஸ்வாஸங்களை யடககிபபாாக்கில், அந்தக் கரணங்கள் காரியப படுவதையும் ஒடுங்குவதையும் காணலாம். இவை யோகபபயிற்சி யுள்ளவர்களுக்கே இனிது விளங்கும்.

**சாமியார்.**—ஞான சந்ததியாகிய விஞ்ஞான கந்தம், வாசனு சமூகமாகிய சம்ஸ்கார கநதம், சுகபுத்தி, துக்கபுத்தி, உபேக்ஷா புத்திகளாகிய வேதனுகந்தம்; சதத சமூகமாகிய

சம்ஞகந்தம், மூர்த்தபூத சமூகமாகிய ரூபகந்தம்; என்னும் இவ்வைந்து கொத்தினுலும் அக்கொத்துக்கு அபின்ன மாகி வரும் ஞான சமுதாய புத்தியே ஆன்மாவாகும். வேறு ஆன்மா என்பதொன் றில்லை என்கிறார்களே! அதையும் விளக்கவேண்டும்.

**பிரசங்கியார்.**—பஞ்சகந்த விவேகம் (ஆன்ம தரிசனம் பண்ணு வோர்க்குக் கூட்டமென ஒரு பொருளின்மையால்) ஆன்மா வென்ப தொன்றின்றிப பஞ்சகந்த பதார்த்தமே உள்ள பொருளாக முடியும்.

**சாமியார்.**—கூட்டமென்று ஒன் றில்லாதபடியினலே கூடிய பல பொருள்களே ஆன்மா.

**பிரசங்கியார்.**—இந்தக் கருவி கரணுதிகளாகிய பொருள்களைப் பொருந்தினின் றறிகிற சேதனபொருள் இவைகளுகசு வேருயுள்ளது. ஆதலால் யாதொரு பொருளை யாவர் அறிகிருர்களோ அவ்விதம் அறிகிறவர்களுக்கு அறியபபட்ட பொருள் வேரு யிருபபதுபோல, அதாவது காண்பானும் காணபபடு பொருளும் வேருகக் காணபபடுவதுபோல் தத்து வங்களை அறியும் ஆன்மா வேறே யன்றி நீர் சொல்வது போல் சமுதாயம் அல்லது கூட்டமல்ல. இதை விளக்கிச் சொல்லவேண்டு மாயின், கருவி கரணங்கள் தனித்தனி ஒவ்வொரு பொருளை யறிகிறதினுல் அவைகள் ஒன்று சேர்ந்தபொழுதும் தனித்தனியாக அறியுமே யன்றி யாவை யும் சோத்து அறியுந் தன்மை எவ்விதம் உண்டாகும். ஆன தால் கருவிகளைக்கொண்டு யாவையும் அறிவது கருவி கரணங்களுக்கு அன்னியமாக இருக்கும் ஆன்மாவே.

**சாமியார்.**—அக்கினி ஒன்ரு யிருந்தும் அனேகமாய்த் தானடை ந்த விடத்திலெல்லாம் வெம்மையைக கொடுத்துக் கொண்டு நின்ருற்போல, பிரமம் ஒன்றே பரிணமித்து இச்சா ஞானக் கிரியைகளைப பொருநதி, ஒரு குணிக்கு அனேக குணங்க ளிருபபதுபோல் சாவமும் பிரம சொரூபமாய் அனேக சீவ

ர்ாசிகளாக நிற்கிறதன்றி ஆன்மாவென வேறொரு பொரு ளில்லை. சீவன் என்றதெல்லாம் பிரமமே.

**பிரசங்கியார்.**—பிரமம் கரணங்களில்லாமல் யாவும் அறியும் ஆத லால் சீவனும் கரணங்களில்லாமல் அறிய வேண்டுமே! சீவன் கரணங்களின்றி அறியாதாகையால் சீவன் வேறு பிரமம் வேறு என்பது தெளிவாய்க் காணபபடுகிறதன்றோ.

**சாமியார்.**—குண குணித் தன்மை யின்றிக் கேவலம் அறிவு மாத் திரையாய் நிற்றலே ஆன்மாவி னியல்பு.

**பிரசங்கியார்**—ஆன்மாவுக்குக் கேவலம் அறிவே இயல்பெனின் ஆன்மா இச்சா ஞானக்கிரியைகளைப பொருந்தாது.

**சாமியார்.**—ஆன்மாவின் சந்நிதியில் இச்சா ஞானககிரியைகள் உடனிடமாக நின்று மாறிமாறிக் காரியபபட்டு வாரா நிற்கும்.

**பிரசங்கியார்.**—சந்நிதி எங்கு முண்டாயிருக்க இநதத் தேகம் சவமானபொழுதும், சுழுத்தியை யடைந்தபொழுதும், தேகம் காரியபபட்டதில்லையே!

**சாமியார்.**—அபபொழுது அந்தக கரணம் சீவியாதபடியாலே இச்சா ஞானக்கிரியைக ளில்லை.

**பிரசங்கியார்.**—நீர் முன் ஆன்ம சந்நிதானத்தில் தேகத்தில் இச்சா ஞானக்கிரியைகள் பொருந்தி சீவிக்குமென்றது எவ் வாறாயினை?

**சாமியார்.**—வியாபகமாய் நிற்பதுவே சந்நிதியன்று. காந்த முன் ஊசி போல ஆன்மா முன் தேகந் தொழிற்படுதற்கு ஏது வாகிய ஒரு விசேஷ குணங் கொள்ளப்பட்டதாகலின் சந் நிதி என்றது பொருந்தினதே.

**பிரசங்கியார்.**—நீர் சொல்லும் காநதத்துக்கு ஊசியை இழுக்குந் தொழிலன்றி அதற்கு மாறாக விலக்குந தொழி லில்லையே! ஆதலால் நினைத்தல், ஒடுங்கல், ஓடல், இருத்தல், கிடத்தல், நிற்றல் என்னும் மாறுபட்ட தொழில்களை ஆன்மாவே செய்யுமென் றறிவீராக.

**சாமியார்.**—இவ்விதம் சொல்லபபட்ட ஆன்மா உருவப்பொருளோ!

**பிரசங்கியார்.**—ஆன்மா உருவமென்று சொன்னால் இவ்வுடலி னுள் காணவேண்டும். அங்ஙனமாயின் இவ்வுடலுக்குள்ளே வேறொரு வடிவங் காணவேண்டும். அல்லாமலும் உருவப் பொருளாய வருவது பரிணமித்துத் தோன்றிய பூதத்தோ டொன்ருக வேண்டும். அஃதல்லாமல் அது கருபபத்தி லடைவதுந் தெரியவேண்டும்.

**சாமியார்.**—உருவடிவாயினும் அது கட்புலனுக்குக் காணப் படாது.

**பிரசங்கியார்.**—அவ்விதமானால் உம்முடைய வாக்காலே தானே ஆன்மா உருவமல்லவெனச் சொல்லுவீராக.

**சாமியார்.**—ஆன்மாவின் ரூபம் சூக்கும மென்றதே என் கருத்து•

**பிரசங்கியார்.**—பூதம்போலக் காட்சிப்புல னுடுதற்குரிய தூல வுரு வாகாமல் சூககும ரூபியாய் ஆன்மா இருக்குமென்ருல் இந்தத் தூல தேகமாகிய காரியத்துக்கு அது காரணமாய் இருக்க வேண்டும். அஃதன்றியும் சூக்குமம் என்று சொல்லப்பட்ட அது மனம் புத்தி அகங்காரமும் சத்த பரிச ரூப ரச கந்த மும், ஆக இவ்வெட்டுங் கூடின புரியட்ட தேகமாய், வேண் டும் அபபோது அது ஜடமாதலால் ஆன்மாவாகாது.

**சாமியார்.**—ஆன்மா அல்லவென்று தள்ளபபட்ட சூக்கும சரீரத் துக் குள்ளிருக்கும் ஓர் சூக்கும வடிவாதலால் அதுவே ஆன்மா.

**பிரசங்கியார்.**—அபபடியானால் அது ஆராயபபட்ட கலைமுதல் பிருதிவி ஈருயுள்ள பரதேகமாதலால் அவ்வுருவங்க ளனைத் தும் அசேதனமுமாய் அழிந்துபோகும். ஆகையால் ஆன்மா சூககும மென்ப தெவ்விதம் ?

**சாமியார்.**—ஆன்மா அருவமாயும் உருவமாயும் இருக்கும்.

**பிரசங்கியார்.**—அருவமாயிருப்பது உருவமாகாது: உருவமா யிருபபது அருவமாகாது. ஒரு பொருளுக் கிரண்டு தன்மை உண்.ாகமாட்டாது.

**சாமியார்.**—ஒரு பொருளுக் கிரண்டு தன்மையுண்டு. எவ்வித மெனில், விறகில் அக்கினிபோல அருவுருவப் பொருளென் பதே என் கருத்து.

**பிரசங்கியார்.**—அவ்விதமாயின், விறகிலுள்ள அக்கினி காணப் படுவதால் ஆன்மா காணபபட வேண்டுமே! காணப்படும் பொருள் யாவும் அழியுமாதலால் ஆன்மாவும் அழியவேண் டும். ஆன்மா நித்திய மென்பதும் இல்லாமற் போய்விடும்.

**சாமியார்.**—நான் எடுத்துக்காட்டிய உவமானம் பொருத்தமில்லா மற்போனாலும், சந்திரன் அமாவாசையில் அருவமாயும் பின் முறை முறையாக வளர்ந்து பூரண சந்திரனானபோது தூல உருவமாயும் இருக்குந் தன்மைபோல், ஆன்மாவும் அருவாய் நின்றே கருவுட் பதிந்து முறை முறையான் வளர்ந்து இவ்வுடம் புருவாய்த் தோன்றுவதால் அரு உருவம் [illegible] அமையும்.

**பிரசங்கியார்.**—சித்தாய், நித்தியமாய், பந்தத்திற்பட்டு நீங்குவ தாகிய ஆன்மா, அவ்விதமின்றி, அசித்தாய், பூதகாரிய மாய், பந்த மாவதாகிய உடம்புருவமாவது எவ்விதம்? ஆத லால் நீர் சொல்வது பொருந்தாது.

**சாமியார்.**—ஆன்மா ஆகாசம் போல அருவமாயும், விகார மற்ற தாயு மிருக்கும்.

**பிரசங்கியார்.**—அவ்விதம் சொல்லுதல் பொருந்தாது. ஆன்மா ஒரு தேகத்தைப பொருந்தி அதன்கண் நடித்தும், இறந் தும், பிறந்தும், நின்றும், இருந்தும், கிடந்தும், மண்ணிற் புரண்டும் இங்ஙனம் அனேக விவகாரங்களை யெல்லாம் செய்வானேன்? ஆனதால் ஆன்மா அருவமல்ல.

**சாமியார்.**—ஆன்மாவுக் கறிவில்லை. அது அசேதனம் என்றே சொல்ல வேண்டும்.

**பிரசங்கியார்.**—ஆன்மா அசேதன மென்றால் அது ஒன்றையும் அறிய மாட்டாதே!

**சாமியார்.**—அசேதனமாகிய ஆன்மா சேதனத்துடன் சேர்ந்த பொழுது சேதனமாயும் அசேதனத்துடன் சேர்ந்தபொழுது அசேதனமாயு மிருக்கும்.

**பிரசங்கியார்.**—அசேதனம் சேதனமாகிறதும் சேதனம் அசேதனமாகிறதும் உலகத்தி லில்லையே !

**சாமியார்.**—அசேதனம் ஒரு புறமும், சேதனம் மற்றொரு புறமுமாய் நிற்கும்.

**பிரசங்கியார்.**—ஒருபொருள் சேதனமாய் ஒருபுறமும் அசேதனமாய் மற்றொரு புறமும் நில்லாது.

**சாமியார்.**—ஆன்மாவை அசேதனமென்று சொல்லுதல் பொருந்தாதென அறிந்தேன். ஆனதால் ஆன்மா சேதனமென்றே சொல்லவேண்டும்.

**பிரசங்கியார்.**—ஆன்மா சேதனமென்றால், அசுத்தமாயையிலுள்ள இந்திரியாதி அந்தக் கரணங்களைக்கூடி அறியவேண்டிய தில்லையே ! ஆனதால் ஆன்மா சேதனமென்று சொல்லுதலும் பொருந்தாது.

**சாமியார்.**—ஆன்மா அணு ரூபமா யிருக்குமென்றே சொல்லவேண்டும்.

**பிரசங்கியார்.**—தேகத்துக்குள் பரமாணு ரூபமாய் ஆன்மாவிருக்குமென்று சொல்லில் இந்த தேகத்துக்கு நவத்துவாரங்களுண்டல்லவா ; அந்த துவாரங்கள் ஒன்றில் நின்றும் ஓடிப் போகும். அன்றியும் தேகத்திலே கட்டுபட்டு நின்று ஒரு பாரத்தையும் சுமக்காது. அழிவை யடையும் ஜடமாயும், பூத பரமாணுக்களோ டொன்றாயும் அவயவங்களெல்லாம் அழியுமாறுபோல் தானும் அழிந்துபோகும். ஆனதால் ஆன்மாவை அணுவென்று சொல்லுதல் பொருந்தாது.

**சாமியார்.**—ஆன்மா தேகத்தி னோரிடத்தி லிருக்கு மென்பதே பொருத்தம்.

**பிரசங்கியார்.**—ஆன்மா தேகத்தி னோரிடத்தி லிருக்குமென்றதால் ஆன்மாவுக்கு உருவத்தைக் கற்பித்தீர். உருவமென்றால்

அழிவை யடையுமே! ஆன்மா ஒரு தானத்திலேயே யிருந்தால் தேகமுழுதும் வியாபித்து அறியுந் தன்மை யிராதே!

**சாமியார்.**—தீபம் ஓர் வீட்டுக்குள்ளிருக்க அதன் பிரகாசம் அவ்வீடெங்கும் நிறைந்திருப்பதுபோல் ஆன்மா தேகத்தின் இருதய ஸ்தானத்தி லிருந்து எவ்விடத்திலுமுள்ள காரியங்களையும் அறியும்.

**பிரசங்கியார்.**—விளக்கின் சுடரைத் தொட்டால் சுடுமேயன்றி அதன் பிரகாசத்தைத் தொட்டால் சுடாததுபோல் ஆன்மா தான் இருந்த விடத்தை அறியுமேயல்லாது மற்றுள்ள விடத்தைப் பரிசத்தா லறியாமற் போய்விடவேண்டும். அவ்விதமில்லாமல் அது தொட்ட விடத்தை யெல்லாம் பரிசத்தாலறிகிறதே.

**சாமியார்.**—விளக்கின் பிரகாசத்தையே உவமானமாக எடுத்ததன்றி விளக்கைக் கொள்ளவில்லை என்றதைக் கவனிக்க வேண்டும். ஐந்து கண்ணாடிகளுக் குள்ளிருக்கும் ஒரு விளக்கு, தன் பிரகாசத்தை அவ்வைந்தின் துவாரா வெளிப்படுத்துவதுபோல, ஆன்மாவும் இந்திரியங்கள் துவாரா யாவையும் அறியும்.

**பிரசங்கியார்.**—நீர் சொல்வதுபோலாயின் ஏககாலத்தில் ஐந்து பக்கத்திலும் பிரகாசம் வெளிப்படுவதுபோல் பஞ்ச இந்திரியங்கள் துவாரா ஏககாலத்தில் ஆன்மா சமமாய் அறியவேண்டுமே. அவ்விதமில்லாம லிருக்கிறதால் நீர் சொல்வது பொருந்தாது.

**சாமியார்.**—ஆன்மா சரீரத்துள்ளிருந்து சரீர மெங்கும் பூரித்தறியும்.

**பிரசங்கியார்.**—அவ்விதமாயின் ஆன்மா நித்திரை முதலான அவத்தைகளைப் பொருந்தாது. அல்லாமலும் பஞ்சேந்திரியங்கள் துவாரா ஒவ்வொன்று யறியாமல் ஒருங்கே அறிய அறிவு நிகழவேண்டும். அவ்விதமோ இல்லை. பெரிய உருவத்தில் அறிவு பெரிதாகவும் சிறிய உடலில் அறிவு சிறிதாக

வும் பேதபபட்டிருக்கவும் வேண்டும். இவ்வாறு தேகம் குறையக் குறைய ஆன்மாவும் அவ்வுடலோடு குறைந்தும் தேக மழியும்பொழுது ஆன்மாவும் அழிந்தும் போகா நிற்கும்.

**சாமியார்.**—ஆன்மா எவ்விடத்தும் விபுவாய் மறைபபற்று விரிந்து விளங்கிய அறிவுடையதாகி அறியும்.

**பிரசங்கியார்.**—அவ்விதம் சொல்லின், அறிவு குன்றி குன்றிப போய் மறையும் சாக்கிர முதலிய பஞ்சாவத்தைகளிலே இறங்குதல் ஏறுதல், சொர்கக நரகங்களிலே போதல் மீளல் இவை முதலியவைகள் எது காரணமென்று சொல்ல வேண்டும். அல்லாமலும் குற்றமுடைய சத்த ஸ்பரிச ரூப ரஸ கந்தங்களை ஏககாலத்தி லறியாமல் ஒன்றொன்று யறிகிற காரணத்தையும் சொல்ல வேண்டும். இந்தத் தேகாதி பிரபஞ்ச மழிந்ததால் ஆன்மா எங்கே நிற்குமென்றும் சொல்ல வேண்டும்.

**சாமியார்.**—அநாதியே சுத்தமாயு மிருக்கின்ற ஆன்ம அறிவைக் குற்றமான மாயாகாரியமாகிய இந்தச் சரீரமே மறைத்திருக்கிறது.

**பிரசங்கியார்.**—மாயா காரியமான சரீரத்தால் மறையுண்டாயின் ஆன்மா உடலினிடமாக இந்திரியங்களையும் அந்தக் கரணங்களையும் கூடி நின்றாலும் அதற்கு ஞான முண்டாகமாட்டாது. முன் சுத்தமா யிருந்த ஆன்மாவை அது பந்தித்ததென்றால் வீடுபெற்றபின்னும் அது வந்து சேரக்கூடுமாதலால் முத்தியென்பது இல்லையாய்விடும். அநாதியே சுத்தனாயின் மாயாபந்தத்தை யடையான். முத்தனேயே பிரகாசிபபான்.

**சாமியார்.**—நான் இவ்வாறு ஆன்ம லட்சணம், ரூபம், அரூபம், ரூபா ரூபம், அசித்து, சித்து, சித்தசித்து, கிஞ்சிஞ்ஞன், ஏகதேசி, அணுபரிமாணம், மத்திய பரிமாணம், அவிகாரி, அகர்த்தா, அபோக்தா, சுத்த சைதன்யம் எனப் பல சமயத

தார் கொண்டுள்ள அபிப்பிராயங்களை யெல்லாம் மேற் கொண்டு சொல்லியவைகளைப பூர்வபக்ஷப் படுத்தி நிரா கரித்துவிட்டீர். இனி சித்தாந்தத்தில் கூறியுள்ள ஆன்ம லட்சணந்தா னென்ன ?

**பிரசங்கியார்.**—சித்தாந்தம் சொல்லும் இலக்கணமாவது:—அரு வாயும், வியாபகமாயும், ஜடமாயு மிருக்கும் ஆகாசம்போல அருபமும் ஜடமும் வியாபகமு மில்லாததாய், யாதாமொரு தத்துவத்தைப பொருந்தினால் அத்தத்துவ முழுதும் வியா பித்து அறியக்கூடிய வியாபி என்று சொல்லத்தக்கதாய், தன்னிடத்தில் அழியாத இச்சா ஞானக்கிரியைகளை அநா தியே ஆணவமல மறைத்து நிற்க அது காரணமாய்ப பசு வென்றும் பெயர் பெற்றதாய் நிற்பது ஆன்மா. அவ்விதம் பசுத்துவ மாத்திரையாற் கேவலப்பட்டு நின்ற ஆன்மா மல மறைத்த இச்சா ஞானக் கிரியைக ளுடையதாய் சூக்கும தேகத்தினுற் சிற்றறிவு சிறியதொழில் விளங்கலாற் சூக்கும தேகங் காரணமாக மாயையின் வயிற்றில் வசித்து, தன் ஞேடு பொருந்திய கலாதிகள் ஐந்தென்று சொல்லபபட்ட மூன்றினுலும் புருடனுகிய ஒன்ருய்ப பொருந்தி, புருட தத் துவத்துக்குபபின் முக்குணங்களும், மனம், புத்தி, சித்தம், அகங்காரம் முதலியன வெல்லாம் வெகுவிதமான தேகங் களுமாய், இவற்றுடனே கலந்து அது வதுவாய் நிற்பன். முடித்துக் கூறுமிடத்து ஆன்மா சூக்கும சரீரியாய் சூக்கும சரீரத்தின் காரியமாகிய தூலதேகத்திலே நிலைபெற்றும், சாக்கிர முதலாயுள்ள ஐந்தவத்தை யடைந்தும், எல்லா யோனிகளிலும், பிறந்திறந்தும், புண்ணிய பாவங்களைச் செய்தும், அவைகளின் பலன்களாகிய சுகதுக்கங்களைப் புசித்துக்கொண்டும் நிற்பன். ஆன்மாவுக்குக் காரண சரீர முதலிய வடிவங்கள் மாயையினின்று தோன்றி ஆன்மாவைப் பொருந்தியதாய் ஆனந்த மயகோசம் (கேவலம் ஆனந்தமா யிருத்தல்), விஞ்ஞான மயகோசம் (விசிட்டமான அறிவைப்

பொருந்தியிருத்தல்), மனோ மயகோசம் (கேவலம் மனத்தோடிருத்தல்), பிராண மயகோசம் (பிராணவாயுவோடிருத்தல்), அன்ன மயகோசம் (ஸ்தூல சரீரத்தோடிருத்தல்) ஆகிய ஐவகைப பெயர்பெற்று, இவைகளினாலே தேகமாகத்தக்க முறைமையினை யுடையதாய், அநாதியே அன்னமயகோச முதலாக ஒன்றுக்கொன்று சூக்குமமாய் அன்னமயகோசந் தூலமாய் நிற்க அவ்வன்னமயகோசத்தைப பற்றியே மற்ற நாலு கோசங்களும் உண்டாகா நிற்கும். கேவலத்திலொன்று மின்றி மலமாத்திரையாய் நின்ற ஆன்மா இந்தப் பஞ்சகோச மயமாய் வசிப்புண்டு போக்குவரவு செய்து நிற்கும். இவ்வைங்கோசத்தில் ஆனந்த மயகோசத்தையே ஏகான்ம வாதிகள் ஆன்மா என்பார்கள். விஞ்ஞான மயகோசத்தையே பௌத்தர் ஆன்மா என்பார்கள். மனோமய கோசத்தையே அகங்கார வாதிகள் ஆன்மா என்பார்கள். பிராண மயகோசத்தையே சமணர் ஆன்மா என்பார்கள். அன்ன மயகோசத்தையே உலோகாயதர் ஆன்மா என்பார்கள். சித்தாந்தம் இபபஞ்ச கோசமும் மாயோபாதான்மாயிருக்கும் தூல சரீரத்தும் சூக்கும சரீரத்தும் அடங்கும். (கோசம் - உறை, மேற்போர்வை).

**சாமியார்.**—பஞ்சகோசமாயிருக்கிற சரீரத்தை ஆன்மா பொருந்தி எவ்விதம் காரியப்படுத்தும் ?

**பிரசங்கியார்.**—ஆன்மாவைப பந்தித்த அன்னமய கோச முதலிய ஐந்து கோசத்தில் ஆன்மா வேற்றுமையின்றி நின்று செலுத்துமாறு:—அன்னமய கோசத்தில் தேரைப் பாரிற் செலுத்துவோர் போலும், பிராணமய கோசத்தில் மரப் பாவையை ஆட்டுவோர் போலும், மனோமய கோசத்தில் தோற்பாவையை ஆட்டுவோர் போலும், விஞ்ஞானமய கோசத்தில் பரகாயப பிரவேசஞ் செய்வோர் போலும், ஆனந்த மயகோசத்தில் பல வேடங்கட்டி ஆடுவோர் முறை போலுமே ! அன்னமய கோசமாகிய தூல சரீரத்தில்

ஆன்மா நின்றபொழுது அதற்குள்ளாயிருக்கும். பிராண மயகோசத்தை யறியும்பொழுது அன்னமய கோசத்துக்குள்ளும் பிராண மயகோசத்துக்குப் புறம்புமாகும். பிராணமய கோசத்தில் நின்று மனோ மயகோசத்தை யறியும்பொழுது பிராணமய கோசத்துக்குள்ளும் மனோமய கோசத்துக்குப் புறம்புமாகும். மனோமய கோசத்தினின்று விஞ்ஞானமய கோசத்தை யறியும்பொழுது மனோமய கோசத்துக்குள்ளும் விஞ்ஞானமய கோசத்துககுப் புறம்புமாகும். விஞ்ஞானமய கோசத்தினின்று ஆனநத மயகோசத்தை யறியும்பொழுது விஞ்ஞானமய கோசத்துக்குள்ளும் ஆனநதமய கோசத்துக் துக்குப புறம்புமாய் சிவஞானத்தால் ஆனநதமய கோசத்தை யறியும்பொழுது ஆனந்தமய கோசத்துக்குள்ளும் அதற்குப புறம்புமாம். இவ்வாறு ஆன்மா பஞ்சகோசங்களுககு உள்ளும் புறம்புமா யிருக்கும்.

**சாமியார்.**—அன்னமய கோசம், பிராணமய கோசம், மனோமய கோசம், விஞ்ஞானமய கோசம், ஆனந்தமய கோசம் என்று சொல்லிய ஐந்தும் எங்கெந்த காலத்தில் அதாவது எதைப் பொருந்திய பொழுது இந்தப பெயர் பெறுகிறது ?

**பிரசங்கியார்.**—அதை உமக்கு விளஙகக கூறுகிறேன். அன்னத்தினால் பிறபபாய், தூலமாய், கரசரண வவயவாகாரமாய், உன்னுதல், ஒடுங்கல், ஓடல், இருததல், கிடததல், நிற்றல் என ஷட்பாவ விகாரமாய், ஆறு உறுபபுகளுடையதாய், தோற்றப்படுகிற தூல சரீரமே அன்னமய கோசம்; கருமேந்திரியம் ஐந்தும், பிராணாதி பஞ்சகமுங் கூடினது பிராணமய கோசம்; மனமும் ஞானேந்திரிய மைந்தும் கூடினது மனோமய கோசம்; புததியும் ஞானேந்திரிய பஞ்சகமுங் கூடினது விஞ்ஞானமய கோசம்; பிரியம் (இஷ்டமான வஸ்துவைப பார்த்த மாத்திரத்தில் வருகிற சநதோஷம்); மோதம் (இஷ்டமான வஸ்துவை அடைந்த பிறகு வருகிற சந்தோஷம்). பிரமோத விருத்திகளை யுடையதாய்ப பிரதானமாகிய அஞ்ஞானம் ஆனந்தமய கோசம்.

**சாமியார்.**—இவைகளுக்குக் கோசமெனப் பெயரேன் வந்தது ?

**பிரசங்கியார்.**—உறையானது கத்தியை மூடிக்கொண்டிருக்கிறதுபோல ஆன்மாவை மூடிக்கொண்டிருக்கிறபடியால் கோசமெனப பெயர் வந்தது.

**சாமியார்.**—மேற்சொன்ன பஞ்சகோசங்களுக கன்னியமாய் ஆன்மா இருக்கிற தென்பதை விளக்கவேண்டும்.

**பிரசங்கியார்.**—என் வீடு, என் மாடு, என்னடிமை என நீர் அபேதமாய் வழங்கிவந்தனவெல்லாம் உமக்கு வேறாயிருப்பதைக் கண்டாற்போல, என்னுடைய தேகம், என்னுடைய இந்திரியம், என்னுடைய வாயு, என்னுடைய கரணம், என்னுடைய அறிவு என்று சொன்னபொழுது இவையெல்லாம் அபபடிச் சொல்லுகிறவனுக்கு வேறாயிருககும்.

**சாமியார்.**—வீடு மனை முதலிய புறப பொருள்கள் என்னின் வேறாயிருந்தாலும் உடல் பொருள் முதலியவை என்னை விட்டு நீங்குவதில்லையே ?

**பிரசங்கியார்.**—உம்முடையனவாகி அபேதமாய் வழங்கபபடும் நகம், மயிர், முதலிய சில உம்மிடத்தினின்றும் நீங்கப் படுகிறதுபோல் ஆன்மா இவற்றிற்கு வேறென்பதும் இவையெல்லாம் ஆன்மா அல்லவென்பதும் நீர் அறிவீராக. அல்லாமலும் பொன்னாற் செய்யபபட்ட ஆபரணங்களும், வஸ்திரங்களும், மாலைகளும், பூககளுமாகிய புறப பொருள்களை நீர் அணிந்திருக்கும்பொழுது அவற்றை எம்முடையதென்றிருந்தீர். அவை உம்மைவிட்டு நீங்கிய பொழுது உமக் கன்னியமாய் நீரல்லவாயினீர். அதுபோல உமது தேகம் பொறி முதலிய அனைத்தும் உமககு வேறாகவே யிருக்கும். ஆகையால் உம்முடைய உண்மையை அறிந்து அவற்றை நீங்கிநின்று காண்பீராக.

**சாமியார்.**—இநதச் சரீரம் நானல்ல என்பதறிந்தேன். இப்படியறிகிற அறிவே நான். இதை நானல்லேன் என்பதெவ் விதம் ?

**பிரசங்கியார்.**—என்னுடைய அறிவென்று நீர் வேருக அனுபவித்துக் கண்டு செல்லுகையாலே நீர் அறியும் அறிவு நீரல்ல.

**சாமியார்.**—என்னுடைய ஆன்மா என்றபொழுது நான் வேறு ஆன்மா வேறே ?

**பிரசங்கியார்.**—இப்படிச் சொல்பவர் உண்மையாக ஆன்மாவை ஐங்கோசத்தினின்றும் பிரித்துக் காணமாட்டாதவர்களே ; இராகுக்குத் தலையில்லையென்றறிந்தும் இராகுவின் தலை என்பதுபோல இது ஒருசாரார் கூறுஞ் சிறு பான்மை வழக்காகும். ஓரவதாரத்திலே புத்தியை மனமென்றும், மனத்தைப் புத்தியென்றும், சித்தத்தைச் சீவனென்றும், ஆன்மாவைச் சித்தமென்றும், கர்த்தாவை ஆன்மா வென்றும், ஆன்மாவைக் கர்த்தாவென்றும், அவ்வவ் வமயங்களிலே உபகாரமாகச் சொல்லப்படுகிறது. என்னுடைய ஆன்மாவென்று நீர் சொல்லுகிறது வேறே ; உமக்கு வேருய்ப்படுதலால் பிராணனுயிருக்கிற பொருளை என்றறிவீராக.

**சாமியார்.**—அசேதனமாயிருக்கிற அந்தக்கரணங்களைச் சேதனமா யிருக்கிற ஆன்மாவென்று சொன்ன ஹேதுகாரணம் ?

**பிரசங்கியார்.**—ஆன்மாவின் வேருகிய அவ்வைங்கோசங்களை ஆன்மா பொருந்தி அத்துவிதமாய் நிற்கையால் அவைகளையும் ஆன்மாவென்று உபநிடதங்கள் கூறின. எவ்விதமெனில், பிரகாசத்தோடு விளங்குகிற தீபமிருக்கிற விடத்தை விளக்கென்றும், விளக்குத்தண்டு விளக்குத்தகளி முதலியவைகளைத் தீபம் என்றும் சொல்லுகிறதுபோல், உபநிடதங்களும் சொல்லியதென் றெண்ண வேண்டும். புறக்காரணமாகிய இந்திரியங்கள், கன்மமாகிய சத்தாதி விடயங்கள், அந்தக்கரணமாகிய மனம் புத்தி அகங்காரங்கள் முதலியன முற்றும் ஆன்மாவுக் கனனியமாயும், ஒன்றுக் கொன்று வேருயும் அறியப்படும். வியாபித்து அறியப்படும் பொருளைக் காண்பது உயிர். ஆன்மாவால் அறியப்பட்ட பொருள்களெல்லாம் அவனுக் கன்னியமாகவே யிருக்கும்.

**சாமியார்.**—ஆன்மாதானே அறியுஞ் சக்தியுடையதா ?

**பிரசங்கியார்.**—சாக்கிராவத்தையிற் சத்தாதி விஷயங்களை உள்ளபடி அறிந்த ஆன்மா சாக்கிரத்துக்கு வேறாய்க் கனவினிடத்தில் பஞ்சவிஷயங்களையும் அனுபவிப்பன் ; அப்பால் சொப்பனுவஸ்தைக் கருவிகளெல்லா முபாதியாகச் சுழுத்தியவஸ்தையை யடைவன். பின் மூலாதாரத்தி லொடுங்கித் தேகமானது புசிப்பும் உற்சாகமு மின்றி உஸ்வாஸ நிஸ்வாஸத்தைச்செய்து கிடந்திடவும் இறைவன் கருவிகாரணாதிகளைக் கூட்டிச்செலுத்த உணர்வன். பிறகு சொப்பனத்திற்றான் கண்ட வியாபாரங்களையெல்லாம் நனவின் கண் பிறரிடத்திற் சொல்லித் தனதொடுக்கத்தையுங் குறித்து, உண்டியும் செயலுமடைந்தவனாய் அங்கு இறைவன் உணர்த்திட ஆன்மா உணராநிற்பன்.

**சாமியார்.**—இப்படிக் கர்த்தா உணர்த்த வேண்டியதில்லை. ஆன்மாதான் அறிவு அல்லவே. ஆனதால் ஆன்மாவே அறியும்.

**பிரசங்கியார்.**—ஆன்மா எல்லாவற்றையும் அறியுமாகில் இந்திரியங்கள் கரணங்கள் முதலான தத்துவங்கள் இவனுக்கறிவைக்கொடுக்க அறிவானேன். ஆன்மா தத்துவங்களைக் கொண்டறிகிறபடியினால் ஆன்மாவுக்குத் தனக்கெனச் சுதந்தர அறிவில்லை யென்பது திண்ணம். ஆன்மாவினுடைய அறிவானது கன்ம பலன்களைப் புசிக்கையின் பொருட்டு மாயா காரியமான தனுகரண புவனபோகங்களைப் பொருந்திவராநிற்கும்.

**சாமியார்.**—சேதனனாயிருக்கிற ஆன்மாவுக்கு அசேதனமா யிருக்கிற மாயா கருவிகள் அறிவைக் கொடுக்க வேண்டியதேன் ?

**பிரசங்கியார்.**—ஆன்மா அரூபியாய் அநாதியே ஆணவமலத்தாலே மறைப்புண்டு அறியாதிருப்பன். ஆனலிந்த மாயா கருவிகள் ஆன்மாவைக் கூடியிருந்தாலும், அரசன் படையுடனும் அமைச்சருடனும் கூடியிருக்கவும் தானே தலைமை பெற்றி

ருபபதுபோல, மாயா கருவிகளோடு பொருந்தியும் பொருந்தாமலும் நிற்பன்.

**சாமியார்.**—ஆன்மா கரணங்களோடு பொருந்தியும் பொருந்தாமலு நிற்பன் என்று சொன்னது விளங்கவில்லை.

**பிரசங்கியார்.**—அதை உமக்கு ஓர் உவமானமுகத்தால் விளக்குகின்றேன் கேட்டருளும். அமைச்சர் படைத்தலைவர் முதலிய பரிசனங்களோடு பவனிபோன அரசன் திரும்பித் தன் அரண்மனைக்குள் புகும்பொழுது வாயில்கள் தோறும் அவ ரவர்களுக்கு விடைகொடுத்து நிறுத்திக் காவலும் வைத்துப பின் அந்தப்புரத்திற் றனியே செல்வதுபோல, ஆன்மாவும் இவ்வுடம்பின்கண் முறையே கருவிகளில் நீங்கிப பிராண வாயுவைக் காவலாக நிறுத்தி ஐந்தவத்தை யடையும் அரசன் போல விட்டுவிட்டுச் சேருதலா லடையும் அவத்தைகளுள், இலாடத்தானத்திலே சேத்ரஞ்ஞனும் சோத்திராதியும், வாக்காதியும், சத்தாதியும, வசனாதியும், வாயுக்களும், அந்தக் கரணங்களும், ஆகிய முப்பத்தைந்து தத்துவங்களோடுங் கூடி நிற்பது சாக்கிராவத்தை; கண்டதானத்தில் சேத்ரஞ் ஞனும் சத்தாதியும், வசனாதியும், வாயுக்கள் பத்தும், அந்தக் கரணங்களும் ஆகிய இருபத்தைந்தோடுங் கூடிநிற்பது சொப்பனவத்தை; இருதயஸ்தானத்தில் சேத்ரஞ்ஞனும் சித்தமும், பிராணவாயும், ஆக மூன்றுடனுங்கூடி நிற்பது சுழுத்தி; நாபித்தானத்தில் சேத்ரஞ்ஞனும் பிராணவாயுவும் ஆகிய இரண்டெனும் நிற்பது துரியாவத்தை; சேத்ரஞ்ஞனோடு தனித்து மூலாதாரத்தில் நிற்பது துரியாதீதாவத்தை. இவ்விதம் சொல்லப்பட்ட அவத்தைகளில் நிற்குங் கருவிகளைச் சொல்லுமிடத்து சாக்கிரத்தில் இந்திரியக் கொத்து (ஞானேந்திரியம் கருமேந்திரியம்) ஒன்று, இருவகை மாத்திரைக்கொத்து ஒன்று, வாயுக்கொத்து ஒன்று, அந்தக்கரணக்கொத்து ஒன்று, புருடக்கொத்து ஒன்று ஆகக் கொத்து ஐந்து; சொப்பனத்தில் தன்மாத்திராதி கொத்து

ஒன்று, வாயுவாதிகொத்து ஒன்று, காணக்கொத்து ஒன்று, புருடக்கொத்து ஒன்று, ஆகக் கொத்து நான்கு; சுழுத்தியில் வாயுக்கொத்து ஒன்று, அகங்காரக்கொத்து ஒன்று, புருடக் கொத்து ஒன்று, ஆகக்கொத்து மூன்று; துரியத்தில் வாயுக் கொத்து ஒன்று, புருடக்கொத்து ஒன்று ஆகக் கொத்து இரண்டு; துரியாதீதத்தில் புருடக்கொத்தொன்றே. இவ்விதம் சாக்கிர முதலிய தானங்கள்தோறும் வந்து கூடி ஆன்மா கருவியால் விஷயங்களை அறியும் என்பதை அறிவீராக. இவ்விதம் சொல்லிய ஐந்தவத்தையினுள் முதலவத்தையாகிய சாக்கிராவத்தையில் ஐந்தவத்தையுங் கூடும். எவ்விதமெனில் ஒரு பண்டத்தை வைத்து மறந்து போனவன் பண்டம் போச்சுதென்று நினைத்தபொழுது பிராண வாயுவும் இயங்காமல் மூர்ச்சித்திருந்த சமயம் சாக்கிரத்தில் துரியாதீதம்; பின் பிராண வாயு இயங்கின வவதரம் சாக்கிரத்தில் துரியம்; இந்த விடத்திலே யல்லவா போயிருக்தோம் என்று நினைத்து எழுந்திருந்த அவதரம் சாக்கிரத்தில் சுழுத்தி; இன்னவிடத்தில் வைத்தோமென்று நினைவு வந்தது சாக்கிரத்தில் சொப்பனம்; அந்தவிடத்திற் சென்று பண்டத்தைக்கண்ட அவதரம் சாக்கிரத்தில் சாக்கிரம். இவ்விதமல்லாமலும் பிறிவரியஞானத்தை அறிந்த ஞாதாக்கள் பிறப்பு நீங்க மேலாலவத்தை ஐந்தையும் மோக்ஷம் அடையும்பொருட்டும் சாக்கிரஸ்தானத்திலேயே அடைவார்கள்.

**சாமியார்.**—இவ்விதம் சொல்லப்பட்ட அவத்தைகள் ஒருவகைபபட்டிருக்குமோ அல்லது இருவகைபபட்டிருக்குமோ?

**பிரசங்கியார்.**—முன்சொல்லிய சாக்கிர முதலிய ஐந்தும் கீழ் நோக்கிச் சென்றொடுங்கு முறைமையும் மேல் நோக்கித் தோன்று முறைமையும் பற்றி இருவகைப்படும். அவைகளிலொன்று (ஒடுங்கு முறையானது) தேடியவினைக்கீடாகக் கீழ்ச்செலுத்திப் பிறவிக்கு வித்தாகும். மற்றொன்று (தோன்று

முறையானது) மிகவும் மேலே செலுத்தி, குற்றத்தை யுடைத்தாய் ஜனங்களைப போக்குதற்கு ஏதுவாகும். முன் சொன்ன இரண்டுவகையுமன்றிச் சிவயோகத்திலுண்டாகப் பட்ட சமாதியுடையவர்கள் இந்த ஜனனத்தில் பிறபபறுது பின்பொரு ஜனனமெடுத்து ஞானசிரிய கடாட்சத்தினாலே பிறவா நெறியை அடைவார்கள். இவ்வாறு கேவலாவத்தை யென்றும், சகலாவத்தையென்றும், சுத்தாவத்தை என்றும் ஆக மூன்றவத்தையை ஆன்மா பொருந்தி நிற்பன்.

**சாமியார்.**—கேவலாவத்தை என்பதென்ன ?

**பிரசங்கியார்.**—சங்காரகாலத்தில் ஆன்மாவினுடைய இச்சா ஞானக்கிரியைகள் விளங்காமல் மலமேலீட்டினாலே மறைப் புண்டு மைக்குழம்பில் விழுந்த மாணிக்கம் ஒளிநீங்கி யிருப் பதுபோல ஆன்மா இருபபது கேவலாவத்தை.

**சாமியார்.**—சகலாவத்தையோ ?

**பிரசங்கியார்.**—கர்த்தா தனது சிற்சத்தியாலே மாயாகாரிய மாகிய கலை முதலிய கருவிகளைத் தோற்றுவித்துக் கருவி களை ஆன்மாக்களுக்குக் கூட்டிக் காரியப்படுத்திப போகங் களைப புசிபபித்தலே சகலாவத்தை.

**சாமியார்.**—சுத்தாவத்தை என்பதையும் விளக்கவேண்டும்.

**பிரசங்கியார்.**—பஞ்சமலங்களும் நீங்கிச் சிவத்தோடு கூடி அவ் விச்சா ஞானக்கிரியைகளெங்கும் வியாபித்து விளங்குவதே சுத்தாவத்தை.

**சாமியார்.**—கேவலாவத்தையில் ஆன்மா எவ்விதமிருபபன் ?

**பிரசங்கியார்.**—தனக்கென ஒன்றைச் செய்தற் கறிவில்லாதவனு மாய், எவ்வித வடிவு மில்லாதவனுமாய், எக்காலத்தினு மழி வில்லாது உள்ளவனுமாய், புருதிகுண மெட்டினையும் பொருந் தாதவனுமாய், கலாதி முதலான தத்துவங்களோடு கூடாத வனுமாய், எத்தொழிலுஞ் செய்தற்குச் செயலற்றவனுமாய், எவ்வித அடையாளங்களு மில்லாதவனுமாய், தனக்கெனச் சுதந்தர மில்லாதவனுமாய், புசிக்கத்தக்க கோட்பாடுக

ளொன்று மில்லாதவனுமா யிருப்பன். அப்படியிருந்தாலும் ஆணவமலத்தை விட்டு நீங்கப்படாத வியாபகத்தையுமுடைய னாய்க் கேவலத்தி லிருப்பன்.

**சாமியார்.**—சகலாவத்தையில் ஆன்மா எப்படியிருப்பன் ?

**பிரசங்கியார்.**—கேவலாவத்தையி லிருப்பதற்கு மறுதலையாய்க் கன்மத்துக்கீடாக வெவ்வேறு சரீரங்களை எடுத்துக்கொண்டு கலைமுதல் கருவிகளுடன்கூடி மாயைமுதற் பிருதிவியீறாக உள்ள தத்துவங்களிற் சுகதுக்க ரூபமாகிய போகங்களைப் புசிக்கிறதிலே விருப்பமுடையவனாய், சத்தாதி விடயங்களி லுண்டான சுகதுக்கங்களையும் அனுபவித்து அவ்விடத்து எண்பத்து நான்கு நூறாயிரம் யோனி பேதங்களில் கன்மத் துக் கீடாகப் பிறந்துழன்று திரிவதே சகலாவத்தை.

**சாமியார்.**—சுத்தாவத்தையில் ஆன்மா எப்படி யிருப்பன் ?

**பிரசங்கியார்.**—மலபரிபாகாதிக்கத்தினால் புண்ணிய பாவங்க ளிலே சமபுத்தி வந்துள்ள அளவில் இறைவனது சத்தி இவனிடத்திலே பதிய அதனாலே குருவருள் பெற்று, சிவ ஞானத்தைப் பொருந்து முறைகளினாலே சென்று பொருந்தி, அந்தப் பிரகாசத்தினாலே அநாதியே இவனைக் கூடி நின்று மறைக்கிற மூன்று மலங்களின் காரியத்தைப் போக்கி அதனாலே பழைய ஆன்ம போதமுங் கெட்டு, அநா தியே இவனிடத்தில் அப்பிரகாசமாய் நின்ற ஞானமும் பிரகாசித்துச் சிவனது திருவருளைக் கூடுதலே சுத்தா வத்தை.

**சாமியார்.**—கர்த்தா ஆன்மாக்களுக்குச் செய்வதுதா னென்ன ?

**பிரசங்கியார்.**—ஐம்பொறி யந்தக்கரண முதலிய தத்துவங்கள் பிரபஞ்ச விஷயங்களைப் புருஷனாலே அறியாநிற்கும். தத்தம் விஷயங்களை இன்னதென் றளவிட்டறிந்தும், அவ் விதம் அறிகின்ற தத்துவங்கள் தம்மை யதிட்டித்து நின்று செலுத்தும் அப்புருஷனையும் அறியாததுபோல் ஆன்மாக் கள் எவ்விடத்தும் வியாபகமாகிய சிவனது சிற்சத்தியால்

வினைப்பயன்களை அறிந் தனுபவிக்குந் தம்மையும், தம்மைச் செலுத்தி நிற்கும் சிவனையும் அறியமாட்டா. எல்லாவற்றை யும் உள்ளபடி யறியுஞ் சிவன்றானே அறிந்தும் அறிவித்தும் உடனாய் நிற்பன்.

**சாமியார்.**—கர்த்தா சர்வ ஆன்மாக்களுக்கும் அறிவைக் கொடுப் பானென்று சொல்லில், சர்வான்மாக்களுக்கும் அறிவு ஒத்திருக்கவேண்டும். அப்படியல்ல, ஏற்றத்தாழ்வாயிருப் பதற்கு அவரவர்கள் கன்மமே காரணமென்று கொள்ள வேண்டுமெனில், அந்தக் கன்மமே அதைக் கொடுக்கும். கர்த்தா வேண்டுவதில்லையே !

**பிரசங்கியார்.**—கன்மம் ஜடமாகையால் தானே பலனைக் கொடாது. உழுதல், எருப்போடல், விதை தெளித்தல், நட்டல், நீர் பாய்ச்சல், காத்தல் இவை முதலிய செயல் களின் பலனுக்குக் கிடைக்கும் விளைச்சல் அச்செய லேயல்லாமல் அவ்விதம் விளைகிறதற்குக் காரண மான நிலத்தைப்போலும், பக்குவமுறை தப்பாது மலருந் தாமரைப்பூவுக்குச் சூரியனைப்போலும், சொல்லுகின்ற அவ்வக்கன்மம் பக்குவமாதலும் பயன்றருதலும் வேறொ ரிறைவனை யின்றி நிகழாதாதலால் கர்த்தா வேண்டுவதவ சியம்.

**சாமியார்.**—ஆன்மாதானே அறிவன்; அவனுக் கொருவ ரறிவிக்க வேண்டுவதில்லை.

**பிரசங்கியார்.**—தானே அறியுமென்று சொன்ன ஆன்மா ஒவ் வொரு விஷயங்களை ஒவ்வொரு இந்திரியங்களைப் பொருந்தி நின்று அறியவேண்டியதாலும், அவ்விதம் அறியப்பட்டவை களை மறந்து விடுகையாலும், ஒருவனுணர்த்த உணர்த லாலும், இவ்வாறறிகின்ற தன்னையுந் தானறியாமையாலும், கர்த்தாவைப்போல் சுதந்தர அறிவின்றி அறிவிக்க அறியுந் தன்மையுடையவ னாதலாலும் தானே அறியமாட்டான். உயிர் செலுத்தப்படும் ஆன்ம தத்துவத்தாலும், தாத்துவித

மாகிய பொருளாலும், உயிரின் அறிவு இச்சை செயல்களை விளக்குவதான கலைமுதலியவைகளாலும், காலத்தை முந்தாது பிந்தாது வரையறுத்துச் செலுத்தும் காலதத்துவத்தாலும், கருமத்தை ஏறாது குறையாது நிறுத்தும் நியதி தத்துவத்தாலும், தேகத்தாலும், பிரமாணங்களாலும், நூல்களுக்குக் காரணமாகிய நால்வகை வாக்குகளாலும், ஒரு சேதனப் பொருள் ஒரு விஷயத்தை யுணர்த்த ஆன்மா உணர்தலாலும், தன்னுடைய உண்மையான கேவலத்தை விசாரித்துப பார்க்கில் அரூபியாய்த் தானாக ஒன்றையும் அறிய மாட்டாமல் நிற்கையாலும், இவையனைத்தையுங் கொண்டு கூட்டி அருளால் அறிவிபபா ைெருசேதனன் இவற்றிற்கு வேறு வேண்டபபடு மாகையால் கர்த்தாவின்றி அறிதல் முடியாது.

**சாமியார்.**—காத்தா எவ்வாறறிவன் ?

**பிரசங்கியார்.**—கர்த்தா ஒருவனே தனக்குக் கருவி முதலியன கூடி அறிவிக்க வேண்டுவதின்றி கேவலத்தில் சூக்கும ஐந்தொழில் செய்தும் தூல ஐந்தொழில் செய்தும் ஆன்மாக்களுக்கெல்லாம் பிராணனுமாய் அவரவர்கள் மதத்துக்கீடாகப பிரபஞ்ச விஷயத்தை யறிவித்துநிற்பன்.

**சாமியார்.**—கர்த்தா எல்லாவற்றையும் அறிந்து ஆன்மாக்களுக்கு அறிவிபபானுைல் அவனும் சுகதுக்கங்களை யனுபவிக்க வேண்டியவனுவானே ?

**பிரசங்கியார்.**—கர்த்தாவினது சந்நிதியிலே பிரபஞ்சம் சீவித்தொடுங்குமென்று வேதங்களிற் சொல்லுகிறதை நீரறிய வில்லை போலும். நின்மலனு யிருக்கிற கர்த்தா மலசம்பந்தமாகிய மாயா தத்துவங்களை யடையான்.

**சாமியார்.**—காத்தா மாயா காரியத்தில் பொருந்தாமற் போனுலும் அந்த மாயா காரியம் கர்த்தாவைப பொருந்திக் காரியப்படுமே !

**பிரசங்கியார்.**—ஒளி முன் இருள் தோன்றுதவாறுபோல் சேதனமாயிருக்கிற கர்த்தாவிடத்தில் அசேதனமான வஸ்துக்

கள் ஒருபோதும் பொருந்தி சீவியா. சர்வ வியாபியாயிருக் கிற கர்த்தாவின் சந்நிதியில் தேகத்தையுடைய ஆன்மாக் களுக்கெல்லாம் நிலைபெற்றுள்ள கன்மத்துக் கீடாகப் பிர பஞ்ச விஷயங்கள் தோன்றிக் காரியபபடும், ஆயினும் ஆன்மா தேக முதலியவற்றைக் கொண்டுநின்று உணருமாறுபோல் கர்த்தாவும் தனக்கு இருநூற்றிருபத்து நாலு புவனமும் திருமேனியாகவும், எண்பத்து நான்கு நூறுயிர யோனி பேதங்களும் அவயவங்களாகவும், மிகுந்த பிரகாசத்தை யுடைய இச்சா ஞானக்கிரியைகள் உட்கரணமாகவும், எண் ணிறந்த உயிர்களிடத்து அறிவுக்கறிவாய் நின்றுணர்த்து தலையும் கொண்டு நலமிகுந்த ஐந்தொழில்களை நாடகமாக நடிபபன்.

**சாமியார்.**—கர்த்தா ஆன்மாக்களுக்குப போகத்தைக் கொடுக்கிற முறைமையும், மோக்ஷத்தைக் கொடுக்கிற முறைமையும் எவ்விதம் ?

**பிரசங்கியார்.**—கர்த்தா இங்ஙனம் ஐம்பொறி வழியாக விஷயங் களில் ஒவ்வொன்றையறிந்து செல்லுகிறதற் கேதுவாகிய ஏக தேச அறிவை ஆன்மாக்களுக்குத் தோற்றுவித்து, அவரவர் கள் கன்மத்துக்கீடாகச் சுகதுக்கங்களைக் கொடுதது, எண் பத்து நான்கு நூறுயிரம் யோனிகள் தோறும் மாறிமாறிப் பிறக்குமபடி செய்வன். அபபடி ஆன்மாக்கள் எண்ணிறந்த பல பிறவிகளாலும் பிறந்திறந்து கன்மத்தைப புசித்துத் துக் கித்தவாறே மலபரிபாகம் வந்த காலத்தில் அவர்களுடைய பக்குவத்தை யறிந்து அவர்களுக்கு வியாபக அறிவைக் கொடுத்துப பர போகத்தையும் அதாவது மோக்ஷத்தையும் அளிப்பன்.

**சாமியார்.**—இப்படி ஆன்மாக்கட் கனுக்கிரகம் செய்யுமிடத்துக் கர்த்தா வேண்டுமோ ? முதன்மையான அனுக்கிரக சத்தி யே போதாதோ ?

**பிரசங்கியார்.**—அங்ஙனங் கொடுத்துக் காட்டி யளிப்பதாகிய அக்கருணைக் குணம் கர்த்தாவுக்கு இயற்கைக் குணமெனப் படும் சத்தியாதலால் சிவமும் சத்தியுங் குணகுணி முறைமை யாக நிற்கும். குணம் குணியைவிட்டு நீங்காதவாறு போல, அதாவது அக்கினியைவிட்டு வெம்மையானது பிரியாதிருப் பதுபோல, அந்தச் சிவசத்தியானது அவனிடத்திலிருந்து ஒருபோதும் பிரிவதில்லை. ஆகையினாலே சிவன் பருவ மடைந்த ஆன்மாக்களுக்குத் தன்னுடைய சத்தியால், அவன் தனது அறியாமையாகிய இருளின் வல்லமையைத் தடுத்து, அனுக்கிரகத்தைச் செய்வன். அஃதெதன்போலென்னில், சூரியன் எப்படித் தன் கிரணங்களினாலே இருளை யோட்டிக் கண்ணுக்குக் காட்சியைக் கொடுக்கின்றானோ அதுபோலச் சிவனும் ஆன்மாக்கட்குண்டாய ஆணவாதி தோஷத்தை யடக்கி ஞானத்தைப் பிரகாசிக்கச் செய்வன்.

**சாமியார்.**—கர்த்தா அறியப்படும் பொருளோ அறியப்படாத பொருளோ ?

**பிரசங்கியார்.**—ஆன்மாவினாலே சுட்டி யறியப்படும் பொருள்க ளெல்லாம் ஜடம் ஆனதால் ஜடமெல்லாம் அழியாநிற்கும். கர்த்தா அறியப்படாத பொருளென்றால் ஆகாயத் தாமரை யும் முயற்கோடும்போல் சூனியமாய்விடும். உண்மை நெறி யாகிய சிவஞானத்தாற்றரப்படும் சிவசந்நிதியில் அசத்தாகிய பாசஞானம் சிறிதும் நில்லாமையால், எவ்விடத்தும் வியாபக மாகிய சிவன் அவ்விரண்டு மின்றிச் சிவத்துடன் சித்தாயும் அசத்துடன் அசத்தாயும் நிற்பன்.

**சாமியார்.**—அறிபொருள்களெல்லாம் அசத்தென்று எவ்விதம் சொல்லலாம் ?

**பிரசங்கியார்.**—காணப்பட்ட பிரபஞ்ச மெல்லாம் தோன்றி நின்றழிகிறதாலும், ஆன்ம போதத்தால் அது இது என்று சுட்டியறிகையாலும், மாயா காரியமாகிய தனுகரண புவன போகங்களுமாய்ப் பொருந்துகையாலும், மாயா மலமாகவும்

கன்ம மலமாகவும் பொருந்துகையாலும், ஓர் அவதாரத்திலே ஆன்மாவுக் கன்னியமாய் நீங்குகையாலும், இவ்வகைச் சொல்லப்பட்ட காரணங்களால் ஆன்மாவால் சுட்டி யறியப பட்டவை யெல்லாம் நிலையில்லாத அசத்தென் றறிவீராக. மண்ணுலகில் அரசனாய் வாழ்தலும், மேலுலகத்து இந்திரன், அயன், மால், உருத்திரன் முதலியோா பதவியைப் பொருந்தி வாழ்தலும், எண்பத்து நான்கு நூறாயிர யோனி பேதங்களிற் பொருந்தி வாழ்தலும், காணபபட்டனவாகிய இவ்வனைத்தும் காண்கிறவாகளுக்கு உள்ளதுபோலவும், காட்டுகிறவாகளுக்கு இல்லையான இந்திர ஜாலம் போலவும், கனவு காணும்பொழுது உள்ளதுபோலவும், நனவிலது இல்லாமற்போனது போலவும், பாாவைக்கு நீர்போலத் தோன்றி நெருங்கிப பார்த்தபொழுது பொய்யாய்ப போகும் கானற்சலம் போலவும், நெடுங்காலம் நிலைபெற்று நிற்பது போலத் தோன்றி இல்லாமற் போகுமியல்பால், உலகத்தை அசத்தென்று சொல்லப்படுகிறதும் பொருத்த முடையதே.

**சாமியார்.**—சிவன் எவ்விதத்திலும் அறியப்படாத பொருளே.

**பிரசங்கியார்.**—ஒருவராலும் என்றும் அறியபபடாத பொருளைச் சிவனென்று சொல்லில் அதனால் போக மோக்ஷங்கள் வந்து கூடாதே! அதுவும் நம்மை வநது பொருநதாது. நமக் கறிவினமையால் நாமும் சென்று அவனைப பொருநதபபோகிற தில்லை. எபபொழுதும் விட்டுநீங்காத பஞ்ச கிருத்தியங்களும் உண்டாகமாட்டா. இவ்விதமான வஸ்து உணடென்கிறது ஆகாயத் தாமரையாற் கட்டிய மாலைபோலும் ஆமை மயிராற் றிரித்த கயிறுபோலும் ஆகும். ஆனதால் அவ்விதம் சொல்லுதல் பொருநதாது.

**சாமியார்.**—முன் சொல்லிய விதம் இருதிறமு மல்லாத பிரமம் உள்ள பொருளுமல்ல, இல்லாத பொருளுமல்ல, இரண்டுமாவதுமல்ல, வேறுமல்ல ஆனதால், அதை அநிர்வசனமென்று சொல்லுதலே பொருத்தம்.

**பிரசங்கியார்.**—நீர் சொல்லிய அநிர்வசனமாய்க் கூறப்படும் பொருளொன்றுண்டோ இல்லையோ என உம்மைக் கேட்டவர்க்கு இல்லாத பொருளொன்னில், உணராத பொருளுக்கு நாம் சொல்லிய குற்றமுடைய தாகுமெனப் பயந்து உள்ள பொருளென்று கூறுவீராகில், பிரமம் உள் பொருளாவதன்றி அநிர்வசனமாகச் சொல்லும் பொருள் இல்லை என்பதற்கு நீர் சொல்லும் வாசகமே சாக்ஷியாயிற்று.

**சாமியார்.**—அச்சிவம் இந்திரியப பிரத்தியக்ஷ மில்லா திருந்தாலும் மானதப் பிரத்தியக்ஷ மாகாதோ ?

**பிரசங்கியார்.**—அது மனோவாக்குக் காயங்களுக்குக் கெட்டாமல் நிற்கிற சிற்சொரூமா யிருக்கும். மனத்தால் ஊகித்தறியப்படுவதெல்லாம் அசித்தாதலால் அது அழிந்து போகா நிற்குமென்று அறிவீராக.

**சாமியார்.**—ஆன்மாவினுல் அறியப்பட்ட பொருள்களெல்லாம் அசததா யழிந்து போகையினுல் அவை நிலையாதவை. ஆன்மாவுக் கன்னியமா யிருபபதால் ஆன்மாவா லறியப்படாத பொருளே அநதச் சிவம்.

**பிரசங்கியார்.**—நீர் அவ்விதம் சொல்லுவீராகில் அறியுந் தன்மையுடைய ஆன்மாவால் அறியப்படாதாயின் அந்தப பொருளும் இல்லையென்று முடியும். அவ்விதமான பொருளால் பிரயோசனமு மில்லையாம்.

**சாமியார்.**—ஆனுல் அபபொருளை அறிவதுதா னெவ்விதம் ?

**பிரசங்கியார்.**—அறியததக்க பக்குவமுடைய ஆன்மா அவனருளா லவனை வேறறக் காண்பன். அபபோது அபபரம் பொருளானது அவ்வறிவேயாய், வேறுமாய், உடனுமாய், நிற்பதோ ரியல்பை யுடையது.

**சாமியார்.**—இறைவனைத் தனக்குள் பாவனைசெய்து வழிபட வேண்டியதுதானே.

**பிரசங்கியார்.**—நீர் கூறும் பாவனையாவது கருவிகளோடுங் கூடி

நின்று செய்வதென்றால், கருவிகளோடுகூடி அறிவனவெல்லாம் அசுத்தாகும்: அல்லாமலும் அது சகலாவத்தைபோல் முடியும்.

**சாமியார்.**—கருவிகளை நீங்கி நின்று பாவனுதீதனுக நினைத்தாலோ ?

**பிரசங்கியார்.**—அபாவம பிரயோஜனத்தைக் கொடுக்காது. அல்லாமலும் கருவிகள் நீங்கிய அவதரம் கேவலாவத்தையாயும் முடியும்.

**சாமியார்.**—இரண்டு மின்றிப பாவித்தாலோ ?

**பிரசங்கியார்.**—இரண்டு மின்றிப் பாவிப்பதென்னில், அஃது அநிர்வசனீய மெனபபட்டுப பாழாய முடியும்.

**சாமியார்.**—பாவிக்கும்படியான பொருள் நானென்று, அதாவது நான்தான் அந்தப பரம்பொருளென்று, தியானித்தாலோ ?

**பிரசங்கியார்.**—அவ்விதம் செய்வது பாவனை மாத்திரமே யொழியப பலனில்லை. எவ்விதமெனில், நமது கண்களை ஆதித்தனென்று பாவித்தால் அதனுலே அந்தகாரம் நீங்காது போலவும், நம்முடைய நாவை சர்க்கரையென்று பாவித்தால் அதனுலே மதுரமுண்டாகாது போலவுமே. ஆனதால் அபபாவனை யனைத்தும் நாடகமாத்திரையே யாகும். அப்பரம்பொருளுக் கந்நியமாய் நின்று அவனருளால் தியானிப்பதே பயன். அவனருள் இல்லாத தியானங்களாற் பலனில்லை. சிவம் ஒன்ருயும் வேருயும் உடனுயும் நிற்பதொன்ருதலால், அந்நிலையில் அறிவானும், அறியபபடு பொருளும், அறியுமறிவும், ஆகிய இவைகள் வெவ்வேறென்று பகுத்தறியக் கூடாமையால், அச்சிவம் நம்முடைய ஆன்மபோதத்தாலறியத்தகுந்த பொருளல்ல.

**சாமியார்.**—ஆன்மாவும் பிரமமும் வேறல்ல, இரண்டும் ஒருபொருளே யென்று சுருதிகள் சொல்லுகின்றனவே.

**பிரசங்கியார்.**—பிரமம் ஒன்றென்று சொல்லுகிற ஆன்மா வேருெரு பொருளா யிருபபதாலும் கேட்பாரில்லாமல்

வார்த்தையாடாத விதம்போலும், பிரமம் ஒன்றென்று சொல்லும் ஆன்மாக்களுக்கு வேறாக ஒருபொருள் உண்டென்று தீர்மானமாயிற்று.

**சாமியார்**.—அவ்விதமானால் கர்த்தா வேறு என்றே சொல்ல வேண்டும்.

**பிரசங்கியார்**.—கர்த்தா ஆன்மாவினிடத்தில் எள்ளுக்குள் எண்ணெய்போலக் கலந்து வியாபித்து நிற்கிறவனாதால் மல சம்பந்தமான ஆன்ம போதத்தால் சுட்டி யறியப்படாத பெருமை யுடையவன். அவ்விதமாயினும் கர்த்தா அறிவுக் கறிவாய் எக்காலமும் பிரிவின்றி நிற்பதால், இந்த ஆன்மாவைச் சிவமென்றும் சொல்லலாம்.

**சாமியார்**.—தாங்கள் முன் சொல்லி வந்ததை யெல்லாம் யோசித்துப் பார்த்தால் யாவையும் சத்தென்றே, அதாவது சிவமென்றே, சொல்ல வேண்டும்.

**பிரசங்கியார்**.—முன் ஸ்திரப்படுத்தி யுரைத்த சத்தசத்துக்களைப் பகுத்தறியும் பொருள் சத்தாகிய சிவமே என்று சொல்லின், சத்தாகிய சிவம் வியாபக அறிவையே உடையதாதலால், எவற்றினையும் ஒருங்கே அறிந்து நிற்பதல்லாமல் ஏகதேசமாய் ஒன்றைப் பகுத்தறியாது.

**சாமியார்**.—சிவம் வியாபக அறிவாயினும் உயிரின் பொருட்டு அசத்தென்று சொல்லப்படும் கருவி கரணங்களிடமாக நின்று அவ்விதம் பகுத்தறியக் கூடியதே!

**பிரசங்கியார்**.—சூரியன் முன் இருள் நில்லாதவாறுபோல் சத்தாகிய சிவத்தின் முன் அசத்தாகிய பிரபஞ்சம் நில்லாது.

**சாமியார்**.—விகாரமின்றி நிற்கும் சிவத்தின் சந்நிதியில் அசத்தாகிய மாயா கருவியே சத்தாகிய சிவத்தைச் சிவகரணமாய் நின்றறியும்.

**பிரசங்கியார்**.—நீ சொல்லுகிற மாயா கருவிகள் முன் சொன்னதுபோல் சிவனுடைய சந்நிதியில் நில்லாததாலும், மற்றொன்றை உணர்வதற்குத் தான் கருவியாய் நிற்பதன்றித்

தனக்கோர் அறிவில்லாத ஜடமாகையாலும் அசத்தாகிய மாயா கருவிகள் சத்தாகிய சிவத்தை யறியுமென்பது கூடாது. அந்தச் சிவத்தோடு கூடிச் சிவத்தையும் மாயா காரியமாகிய பிரபஞ்சத்தோடு கூடிப் பிரபஞ்சத்தையும் அறிவதுவே ஆன்மா. அவ்வான்மா சதசத்து, அதாவது சிவமுமன்று அசத்தாகிய பிரபஞ்சமு மன்று, அச்சிவத்தோடு கூடிச் சிவ மெனவும், பிரபஞ்சத்தோடு கூடிப் பிரபஞ்சமெனவும் நிற்பன். அப்படி நின்றாலும் சிவத்தோடு கூடியபொழுது இது சிவமெனவும், பிரபஞ்சத்தோடு கூடியபொழுது இது பிரபஞ்சமெனவும் முறையே தோன்றாமலும் தோன்றியும் நில்லாது. ஆனால் நின்ற முறைமை எவ்விதமெனில், பூவோடு கூடித் தோன்றுகிற மணம்போல் நித்தனாய், சத்தாகிய சிவத்தைச் சார்ந்த பொழுது சத்தாகவும் அசத்தாகிய பிரபஞ்சத்தைச் சார்ந்த பொழுது அசத்தாகவும் அதாவது சார்ந்ததன் வண்ணமாகவும் இருக்கும் இயல்புடையதாய்ச் சதசத்தென்று நிற்கும் ஆன்மா.

**சாமியார்.**—சத்தாகிய சிவனது சந்நிதியில் அசத்தாகிய பிரபஞ்சம் சீவியாதென்றும் ஆன்மாவின்கண் சீவிக்கு மென்றும் கூறுவ தெவ்விதம்?

**பிரசங்கியார்.**—அநாதியாகிய பதி, பசு, பாசம், என்ற முப்பொருளுள்களுள் பதியும், பசுவும், நித்தவியாபக சித்தாக விருபபது உண்மையே யாயினும், நின்மல உண்மை ஞானமே திருமேனியாயுள்ள சிவத்தினிடத்தில் அசத்தாகிய பாசம் ஜடமாகையால் சென்று பொருந்தாது. ஆணவம், கன்மம், மாயை என்ற மலங்களெல்லாம் ஆன்மாவிடத்திலேயே பொருந்தும்.

**சாமியார்.—ஆணவம், கன்மம், மாயை என்ற மூன்றும் ஆன்மாவை எப்பொழுது பொருந்தியது?**

**பிரசங்கியார்.**—பதி என்றுண்டோ அன்றே பசு உண்டு; பசு என்றுண்டோ அன்றே பசுவை மறைத்து நிற்கும் பாசம் உண்டு. எதுபோல் என்னில், கடல் நீர், உப்புப் போலாம். அதைவிளக்கிக் காட்டின், நீருக்கிடங்கொடுத் திருக்கும் ஆகாயம் போல் பதியும், அவ்விடத்தில் நிறைந்து நின்ற நீரைப்போல் ஆன்மாவும், ஆகாயத்திற் றேயாது அந் நீரைப்பற்றி யிருக்கும் உப்புபபோலவே பாசமும் என்றறிவீராக. திரிபதார்த்தங்களும் அநாதியாய் நிற்கு முறை இவ்வாறே.

**சாமியார்.**—ஆன்மாவின் தன்மைதா னென்ன?

**பிரசங்கியார்.**—சிவனறிவிக்க ஆன்மா அறிவதாலும், ஒரு காலத்திலும் அழிவின்றி நித்தியமாய் நிற்பதாலும், குறிக்கபபட்ட ஆணவ மலத்தாலே அநாதியே பந்திக்கபபட்டுத் தூல வறிவாயிருப்பதாலும் அசேதன மென்று ஆன்மாவைச் சொல்லுவார்கள். கர்த்தாவோ நித்தியனும் அநாதி முதத சுத்த சித்த ரூபனுமாய் நிற்பன். இவன் ஆன்மாககள் மேல் வைத்த காருண்ணியத்தால் அநாதியே ஆன்மாககளுக்குள்ள பாச பந்தங்களின் வல்லமையைக் கெடுதது பரமுத்தியைக் கொடுப்பான்.

**சாமியார்.**—ஐயாவே! எனக்குள்ள சந்தேகங்களை நிவர்த்திசெய்ததற்காகத் தங்களுக் கதிக வந்தனததைச் செலுத்துகிறேன்.

**பிரசங்கியார்.**—ஐயா! எனக் கிவ்வரிய விஷயங்களைப போதித்த சோளங்கிபுரம் சிவ அருணகிரிவள்ளலுக்கே தங்களுடைய வந்தனமும் என்னுடைய வந்தனமும் சேரவேண்டும்.

**தாசில்தார்.**—சாமியார் சாஸ்திரங்களை நன்கறிந்தவ ரானதால் நமக்குத் தோன்ருத கேள்விகளைக் கேட்டு நமககு நன்கு விளங்கவைத்தார். அவருக்கு நாமெல்லாம் வந்தனத்தைச் செலுத்த வேண்டும்.

அவ்விடத்தி லிருந்தவர்களெல்லாம் ஆம்! ஆம்! என்ருர்கள்.

# 20—ம் அத்தியாயம்

கார்த்திகை மாதம் பதினைந்தாம் திகதி மாலை நிதானம் நாலு மணிக்குச் சிதம்பரத்தில் அநேக விலையுயர்ந்த வஸ்திரங்கள் உள்ள ஒரு ஜவளிக்கடையில், மூன்று மகமதியர் பலகாரமும் காப்பியும் சாப்பிட்டு, தங்கள் கடைக்கு வருகிறவர்களை வேறு கடைக்குப் போகவிடாமல் அவர்களிடம் நயவசனம் பேசி வஸ்திரங்களை விற்றுக்கொண்டிருக்கும்பொழுது, ஒரு போலிஸ் சேவகன் வந்து, கொடியிலிருந்த ஜவளிதினுசுகளி லொன்றைக் காட்டி, அதன் விலை என்னவென்று கேட்டான்.

**சிப்பந்தி.**—ஐயா ! இதன் விலை அதிகம் ! உமக்கு வேண்டிய தெதுவோ அதைப் பார்த்துக் கேளும்.

**போலிஸ் சேவகன்.**—விலை யதிகமானு லென்ன ! எங்களுடைய இன்ஸ்பெக்டருக்கு வேண்டும் என்று என்னை யனுப்பியிருக்கிறார் (என்று சொல்லிக்கொண்டிருக்கும் பொழுது, வேறொரு போலிஸ் சேவகன் வந்து) சேலையின் விலை என்னவென்கிறார்கள் (என்று கேட்டான்).

**முதல் போலிஸ் சேவகன்.**—நாம் விலை கேட்பதில் பிரயோசனமில்லை. இன்ஸ்பெக்டரை அழைத்து வந்தால், அவர் வந்து தமக்கிஷ்டமானதைப் பார்த்து வாங்கிக்கொள்வது நலம் என்று நினைக்கிறேன். நீர் சென்று அவரை அழைத்து வரவேண்டும்.

இரண்டாவது போலீஸ் சேவகன் நல்லதென்று வெளியிற் சென்று, வேறொரு போலிஸ் சேவகன் அம்மார்க்கம் வருவதைக் கண்டு அவனை அழைத்து, இன்ஸ்பெக்டரை அழைத்துவரச்சொல்லி யனுப்பினான். சில நிமிஷத்தில் இரண்டு இன்ஸ்பெக்டர்கள் மூன்று சேவகர்களுடன் கடைக்குள் நுழைந்தார்கள்.

**முதல் சேவகன்.**—(இன்ஸ்பெக்டர்களைப் பார்த்து) ஐயா! கொடியில் தொங்கும் வஸ்திரங்களில் தங்களுக்கு வேண்டிய

தெதுவோ அதை அங்கிருக்கும் இக்கடை முதலாளிக்குக் காட்டி விலைகேட்க வேண்டும்.

**இன்ஸ்பெக்டர்.**—(கடைக்கெஜமானைப பார்த்து) ஐயா! தங்கள் பேர என்ன (என்று கேட்டார).

**கடைக் கெஜமான்.**—என்பேர் கரீம் சாயபு.

**இன்ஸ்பெக்டர்.**—தாங்கள்தானோ இக்கடைக்கு முதலாளி?

**கரீம் சாயபு.**—நான் மட்டுமெல்ல, என்னோடிருவர் இருக்கிறார்கள் (என்று மற்ற இரண்டு மகமதியரையுங் காட்டினான்).

**இன்ஸ்பெக்டர்.**—அவாகள் பேரென்ன?

**கரீம் சாயபு.**—அங்கிருப்பவர் நூரத்தின் சாயபு, இங்கிருப்பவர் இபராயிம் சாயபு. தாங்கள் என் கேட்கிறீர்கள்?

**இன்ஸ்பெக்டர்.**—தாங்கள் நெடுநாளாக இவ்வூரில் வியாபாரம் செய்துகொண்டிருப்பதால் தங்களுடைய பேர் தெரியாம லிருப்பது அழகல்லவென்று கேட்டேன். தங்களுடைய கடைக்கு முதல் எவ்வளவு இருக்கும்.

**கரீம் சாயபு.**—இந்தக் கடையை ஜவளிகளோடு எழுபதுதையா யிரத்துக்குக் காரைக்கால் கனம் ஹாஜி தம்பிசாயபு மரைக் காயரவாகள் எங்களுக்கு வாங்கிக் கொடுத்தார். பின் ஐம்பதி னாயிரத்துக்கு ஜவளிகள் வரவழைத்திருக்கிறோம்.

**இன்ஸ்பெக்டர்.**—கடனாகவும் ஜவளிகள் விற்கிற துண்டோ?

**கரீம் சாகிபு.**—அதிகம் இராது, எல்லாம் ரொக்க வியாபாரமே!

**இன்ஸ்பெக்டர்.**—காரைக்காலி லிருக்கும் கனம் ஹாஜி தம்பி சாயபு மரைககாயரவர்களை நீங்கள் அறிவீர்களா?

**கரீம் சாயபு.**—அப்புண்ணிய புருஷருடைய பேருதவியால் நாங் கள் இவ்வூரில் வந்து வியாபாரம் செய்யத் துணிந்தோம்.

**இன்ஸ்பெக்டர்.**—அந்தப புண்ணியவான் உபகாரத்தைப பெறுத வாகள் அரிதென்றே சொல்ல வேண்டும். அவர் சென்னைக்கு வந்திருந்த பொழுது அவரோடு நான் மீன் காலேஜுக்குப் போயிருந்தேன். காரைக்காலுக்குப போயிருந்தபொழு தும் அவரை நான் கண்டிருக்கிறேன். அவருடைய தய

வைக்கொண்ட உங்களுக்கு என்ன குறைவு வரப்போகிறது? நீரும் நூருத்தின் சாயபும் போலிஸ் ஸ்டேஷன் பரியந்தம் வரவேண்டும்.

**கரீம் சாயபு.**—எதற்காகப போலிஸ் ஸ்டேஷனுக்கு வரச் சொல்லுகிறீர்?

**இன்ஸ்பெக்டர்.**—போலிஸ் ஸ்டேஷனில் பெரிய இன்ஸ்பெக்டர் வந்திருக்கிறார். அவருக்கு ஜவளிகள் வேண்டும். அவர் உம்மிடத்தில் வேண்டியதைச் சொல்ல விரும்புகிறார்.

**கரீம் சாயபு.**—விலையுயர்ந்த சேலைகளில் சிலதை நான் கொண்டு வரட்டுமா?

**இன்ஸ்பெக்டர்.**—வேண்டாம்! அவர் விரும்புவதை நீரறிந்த பின் கொண்டுபோய்க் கொடுக்கலாம்.

**கரீம் சாயபு.**—எதற்கும் ஜவளி கையிலிருப்பது நல்லது.

அதன்மேல் விலையுயர்ந்த சேலைகள் மூன்றை ஓர் துண்டில் கட்டி எடுத்துக்கொண்டு இருவரும் இன்ஸ்பெக்டரோடு சென்றார்கள். இன்ஸ்பெக்டர் இருவரும் போலிஸ் சேவகரும் கரீம் சாயபும் நூரத்தின் சாயபும் போலிஸ் ஸ்டேஷனுக்குள் நுழைந்தவுடன், இன்ஸ்பெக்டரிருவரும் கரீம் சாயபையும் நூரத்தின் சாயபையும் தனியிடத்திற் கழைத்துச் சென்றனர். இன்ஸ்பெக்டரிலொருவர், "ஐயா! கரீம் சாயபு! நீரும் இவரும் இந்த மகமதிய வேஷம் போட்டுக்கொண்டு நெடுநாள் போலிஸார் கண்களுக்கு மறைந்திருந்தீர்கள். நீங்கள் இவ்வேஷத்தோடு இவ்வூரி லிருப்பதைக் குளித்தலை தாசில்தார் அறிந்து உங்களைக் கொண்டுவர அதிகாரப பத்திரம் கொடுத்திருக்கிறார். நீர் காரைக்கால் கனம் ஹாஜி தம்பிசாயபு மரைக்காயரவர்களை அறிந்து அவருடைய உதவியைப பெற்றிருப்பதால், அவருடைய முகத்துக்காக உங்களைக் கௌரவமாக நடத்தக் கடமைப்பட்டிருக்கிறோம். ஆனதால் உங்களை அவமானப படுத்தாமல் வேறு சாக்குச் சொல்லி அழைத்துவந்தேன். நீங்களிருவரும் இன்றிராத்திரி என்னோடு குளித்தலைக்கு வரவேண்டும்" என்று

சொல்லி, தம் அருகிலிருக்கும் இன்ஸ்பெக்டரைப் பார்த்து “இவர் சொந்தப்பேர் கருணாநிதி பிள்ளை. அதற்குக் கரீம் என்ற பேரை வைத்துக்கொண்டார். இவர் நீலமேகம் பிள்ளை என்பதற்குபதிலாக நூரத்தின் என்று வைத்துக்கொண்டார்” என்று நகைத்தார். கருணாநிதியும் நீலமேகமும் கண்களில் நீர் வடிய நின்றார்கள்.

**சிதம்பரம் இன்ஸ்பெக்டர்.**—நீங்கள் கவலைகொள்ள வேண்டாம். நீங்கள் பெரும் பணக்காரராக இருக்கிறீர்கள். சமர்த்துள்ள வக்கீல்களை வைத்து வாதிட்டால் நீங்கள் தப்பித்துக்கொள்ளக்கூடும். ஆனால் உங்களை ஒன்று கேட்கவேண்டும். நீங்கள் மகமதிய வேஷம் போட்டபின் சாப்பாட்டையும் மகமதிய மார்க்கத்துக்கேற்க வைத்துக்கொண்டீர்களா?

**கருணாநிதி.**—நாங்கள் இது பரியந்தம் பிராமணாள் கிளப்பில் சாப்பிட்டு வந்தோம்.

**தளித்தலை இன்ஸ்பெக்டர்.**—உங்களுடைய சிப்பந்திகளுக்கு நீங்கள் மகமதியா அல்லவென்பது தெரியுமா?

**கருணாநிதி.**—நாங்கள் உயா குலத்திலிருந்து மகம்மதியர்களானோம். ஆனதால் நாங்கள் மகமதியரோடு உட்கார்ந்து சாப்பிடுகிறதில்லை என்றும், இராத்திரி படுத்துக்கொள்ளப் போகும் பொழுது ஒரு வேளை தொழுகிறதென்றும், (நாங்கள் பிராமணாள் கைச்சாப்பாடு சாப்பிட்டு வருகிறோமென்றும் அவர்கள் அறிந்தவர்களாதலால்), நாங்கள் சொல்வதை நம்பியிருக்கிறார்கள்.

**சிதம்பரம் இன்ஸ்பெக்டர்.**—இவ்வூர்க் கடையை என்ன செய்ய யோசிக்கிறீர்கள்.

**கருணாநிதி.**—எங்கள் மேல் ஏற்பட்ட குற்றம் ஓர் முடிவுக்கு வருந்தனிலும் கடை மூடியிருக்க வேண்டியதே.

**சிதம்பரம் இன்ஸ்பெக்டர்.**—ஏன் அப்படி? உங்களுடைய பங்காளியைப் பார்த்துக்கொள்ளச் சொல்லலாமே.

கருணாநிதி.—அவன் எங்களைவிட் டிருக்கமாட்டான். அவனும் எங்களோடு வந்துவிடுவான்.

சிதம்பரம் இன்ஸ்பெக்டர்.—நீங்கள் கடையைப பூட்டி முத்திரை வைததுப போனால், அந்த முத்திரையோடு நீங்கள் திரும்பி வந்த பின் உங்களிடம் ஒபபிப்பேன்.

கருணாநிதி.—(நகைத்து) நாங்கள் திரும்பிவந்து கடையை ஒபபுக் கொள்ளுகிறதை நம்பிக்கையாகச் சொல்ல முடியாது. நாங்கள் வராமல் எங்கள் பங்காளி வந்தாலும் அவனிடத்தில் ஒப்புவித்துவிடுங்கள். இபபொழுது ஓர் ஆளை யனுபபி எங்கள் கூட்டாளியை அழைத்துவரும்படி செய்யவேண்டும்.

சிதம்பரம் இன்ஸ்பெக்டர்.—தங்கள் இஷ்டம்போல் செய்வேன் (என்று நீங்கினார்).

கருணாநிதி.—எல்லாம் வினைப்பிரகாரம் முடியுமென்றே நாம் இருக்கவேண்டும்.

நீலமேகம்.—நம்மை யார் கண்டுபிடித்துக குளித்தலை தாசில்தாருக்குச் சொல்லியிருபபார்கள் ?

கருணாநிதி.—சில நாள்களுக்கு முன் ஒரு சாமியார் தன் சீடனோடு வந்து போனாரே ! உனக்கு ஞாபகம் இருக்கிறதா ?

நீலமேகம்.—என் ஞாபகமில்லை ? அவர் போய்ச் சொல்லியிருப்பாரென்றோ நினைக்கிறீர் ? ஐயோ ! பாவம் ! அவர் ஏன் சொல்லப போகிறார்.

கருணாநிதி.—போலீஸாரே ! வேஷம் போட்டுக்கொண்டு வந்து நம்மைப பார்த்துப போயிருபபார்களென்று நினைக்கிறேன்.

நீலமேகம்.—சாமியாராக வந்தவன் போலீஸைச் சேர்ந்தவனாயின் அவன் நம்மைக கண்டவுடனே நம்மைப பிடித்துக் கொண்டு போயிருக்கவேண்டும்.

என்று சொல்லிக்கொண்டிருக்கும்பொழுது, அவர்கள் கூட்டாளி அங்கு வந்து போலீஸ் காவலோடு இருபபவர்களைப பார்த்துக் கண்கலங்கி நின்றான்.

கருணாநிதி.—அப்பா ! நீ வியசனபபடுவதில் ஒரு பிரயோசனமு

மில்லை. எங்களை இன்றிரவு குளித்தலைக்குக் கொண்டு போகிறார்கள். நீ இங்கிருந்து கடையைப் பார்த்துக்கொள்.

கூட்டாளி.—நீர் இவ்விதம் சொல்லுதல் அடுக்காது. நானும் உங்களோடு வருவேன். உங்களைப போலீஸார் அழைத்துவரும்பொழுது எனக்குச் சந்தேக மேலிட்டு இருபபுப் பெட்டியில் வைக்க வேண்டியவைகளை வைத்துப் பூட்டி, சில நாள் கடை திறக்க முடியாது என்று சிபபந்திகளுக்குச் சொல்லி அவாகளை அனுபபிவிட்டேன்.

கருணாநிதி.—நாம் இவ்வுடையோடு போகவேண்டிய அவசியமில்லை. ஆனதால் எங்களுககு வேஷ்டிகளும் அங்கவஸ்திரங்களும் கொண்டுவர வேண்டும்.

மறுநாள் காலை பத்து மணிக்குக் குளிததலையில் மாரியம்மன் கோவிலுக் கருகில் தாசில்தாா கச்சேரிக்குப பக்கத்திலுள்ள காவலறையில் கருணாநிதியையும் நீலமேகத்தையும் விட்டு அடைத்து வைத்தார்கள். பதினொரு மணிக்கு ஒரு போலிஸு சேவகன், சாப்பாட்டுக் கூடையோடு வநத ஓர் பெண்பிள்ளையை அழைத்து வந்து, காவலிலிருககும் போலிஸு சேவகனிடம் "இந்த அம்மாள் தாசில்தாா உத்தரவு பெற்றுத் தன் புருடனுக்குச் சாப்பாடு கொண்டுவந்திருக்கிறார்கள். இந்த அம்மாளைக் காவலறைக்குள் விட்டுக் குற்றவாளிகளுக்குச் சாப்பாடு போடும்படி செய்" என்று சொல்லிவிட்டு நீங்கினான். காவற்காரன் அனுமதியோடு அபபெண்பிள்ளை காவலறைக்குள் சென்று கருணாநிதியைக் கட்டிப் பிடிததுக்கொண்டு ஓவென்றலறினாள்.

கருணாநிதி.—சிவஞானம்! சிவஞானம்! சிற்றபபனைக் கொன்ற பழிகாரனாகிய என்னைப பார்க்க உனக்கு மனமிருந்ததா (என்று அவனும் தன் மனைவியைக் கட்டிப் பிடித்துக் கொண்டு) என கண்மணி! நான் என் சிற்றபபனைக் கொலை செய்தேன் என்று கேள்விபபட்டு உன் மனம் என்ன பாடுபட்டதோ! உன் தேகம் எவ்விதம் துடித்ததோ! என்னென்ன நினைததாயோ! என்னையும் நீலமேகத்தையும்

பலர் நிந்திக்கும்பொழுது உன் மனம் எவ்விதம் வருந்தி யதோ! நான் பாவி! ஒரு வார்த்தையாகிலும் உன்னோடு சொல்லாமல் போய்விட்டதைக் குறித்து என்ன நினைத்தா யோ! எங்களை எங்கெங்கு தேடித் திரிந்தாயோ! தன்னுயிர் பெரிதென்று தன் மனைவியைக் கவனிககாமல் போய் விட்டான் என்று நினைத்தாயோ! தான் இருக்கும் இடத் தைத் தெரிவிக்காம லிருபபது நேசமற்ற தோஷம் என்று நினைத்தாயோ! என்னை நினைத்து நினைத்து அழுதாயோ (என்று முகத்தோடு முகம் வைத்துக்கொண் டழுதான்).

**சிவஞானம்.**—என் உயிருக்கு உயிரான தங்களை நிந்திக்க என் மனம் துணியுமா! நான் தங்களைப பல விடத்தில் தேடிப் பார்த்துத் தங்களைக் கண்டுபிடித்தேன். இனிமேல் என்னைவிட்டுப் போகமாட்டீர்க ளல்லவா (என்றழுதாள்).

**கருணாநிதி.**—என் கண்மணி! என்னையும் நீலமேகத்தையும் கொலையாளிகளென்று கொண்டுவந்திருக்கிறார்கள். கோர்ட் டில் விசாரித்து எங்களைத் தூக்கில் போட்டுவிடுவார்களே! நான் உன்னைவிட்டுப பிரியாம லிருபபது எவ்விதம் (என் றழுதான்).

**சிவஞானம்.**—(தன் நாயகன் கண்ணீரைத் துடைதது) என் அன்பே! தங்களையும் அத்தானையும் துரைத்தனத்தார் ஒன் றும் செய்யாமலிருக்க நான் பார்த்துக்கொள்ளுகிறேன். நீங் கள் கவலையற்றிருங்கள். நாளை நியாய ஸ்தலத்தில் உங்களைக் கொண்டுபோய் நிறுத்தியவுடன், நானே வந்து லாயரைப போலிருந்து கேள்விகள் கேட்டு உங்களைக் காபபாற்றி விடு வேன். என் சமர்த்தை நாளை அறிவீர்கள் (என்று நகைத் தாள்).

கருணாநிதியும் நீலமேகமும் சிவஞானம் சொல்வதைக் கேட்டு, "ஐயையோ! நாம் என்ன செய்வோம்! சிவஞானத்துக் குப் புத்தி மாறாட்ட மாகிவிட்டதே!" என்று பெருமூச்செறிந்து கண்களில் நீரை வடியவிட்டார்கள்.

**சிவஞானம்.**—நீங்கள் சாப்பிடுங்கள். நாளை உங்களை லாயர்பேட்டைக்கு அழைத்துப் போவேன். இன்று நான் கோட்டைக்குப் போவேன் (என்று அவர்களுக்குச் சாதம் வட்டித்துச் சாப்பிட வேண்டினாள்).

கருணாநிதியும் நீலமேகமும் சிவஞானத்துக்குப் பைத்தியம் பிடித்திருக்கிறதே இதற்கென்ன செய்கிறது என்று துக்கத்தோடு சாப்பிட்டார்கள். அவர்கள் சாப்பிட்ட பின் சிவஞானம், "நான் நாளை லாயராக நியாய ஸ்தலத்துக்கு வருகிறேன். இப்பொழுது சென்னைக்குப் போகிறதா பம்பாயிக்குப் போகிறதா என்று யோசிக்கிறேன். என் யோசனை ஓர் முடிவிற்கு வரவில்லை. வீட்டுக்குப் போன பின் படுத்துக்கொண்டு யோசித்துப் பார்க்கவேண்டும் (என்று சொல்லி அவ்விடம் விட்டு நீங்கினாள்).

சிவஞானத்துக்கு முற்றிலும் பைத்தியமே என்று இருவரும் கவலையோடிருக்கும்பொழுது, அவர் கூட்டாளி, சேவகனுடைய அனுமதியால் அவ்விடம் வந்து, "கருணாநிதி! நாளை வியாச்சியம் தொடங்கும் என்றும் சாக்ஷிகளுக்குக் கட்டளை அனுப்பியிருக்கிறதென்றும் சொல்லுகிறார்கள்" என்றான்.

**கருணாநிதி.**—எங்களுக்குச் சாக்ஷி யேது? எல்லாம் எங்கள் வினையின் பிரகாரம் முடியும்.

**கூட்டாளி.**—சிதம்பரத்தில் நம்முடைய கடைக்கு வந்த சாமியார் இவ்வூரில் இருக்கிறார். அவருக்கும் பச்சையப்ப பிள்ளைக்கும் நெருங்கிய சினேகமென்று சொல்லுகிறார்கள்.

**கருணாநிதி.**—நீ சாமியாரைப் பார்த்தாயா?

**கூட்டாளி.**—நான் சாமியாரைப் பார்க்கவில்லை. அவர் சிஷனைப் பார்த்தேன்; சாமியார் நிஷ்டையிலிருப்பதால் அவரைப் பார்க்க முடியாதென்று சொல்லிவிட்டான்.

**கருணாநிதி.**—சாமியார் பச்சையப்ப பிள்ளைக்குச் சினேகமென்று உனக்கெப்படித் தெரியும்?

**கூட்டாளி.**—நான் சாமியார் சிஷனோடு பேசிக்கொண்டிருக்கும் பொழுது, ஓர் வண்டி வந்து நின்றது. வண்டியிலிருந்து

ஒருவன் இறங்கி, சாமியாருக்குப பாலும் பழமுங் கொண்டு வந்து கொடுத்து, சாமியாரைக் குறித்து அதிகம் விசாரித்து, "பச்சையபப பிள்ளை சாமியார் பூந்தோட்டத்தைக் கவனமாகப் பார்த்துவருவதோடு, புதிதாக அநேக புஷ்பச் செடிகளை வைத்தும் பயிராக்கி யிருக்கிறார். அவைகளெல்லாம் புஷ்பிக்கிறதென்று சாமியாருககுச் சொல்லுங்கள்" என்றுச் சொல்லி நீங்கினான். லாலாபேட்டையிலிருந்து சாமியாரைப் பார்க்கவநதவர்கள், பச்சையபப பிள்ளைமேல் சாமியாருக்கு அதிகம் பிரியம் என்று பேசிக்கொண்டார்கள்.

நீலமேகம்.—பச்சையபப பிள்ளையே சாமியாரை அனுபபி நம்மைக் கண்டுபிடிக்கச் சொன்னார் என்பது நன்றாய் விளங்கிறது.

கூட்டாளி.—இவ்விடத்தில் சமர்த்துள்ள வக்கீல்கள் அகபபடவில்லை. நான் திருச்சிக்குச் சென்று ஒரு வக்கீலை அழைத்து வரலாமென் றிருக்கிறேன். காரைக்காலில் கனம் ஹாஜீ தம்பி சாயபு மரைக்காயரவர்களுக்கு நமக்கு நேரிட்டிருப்பதைச் சொல்லவேண்டாமா?

கருணாநிதி.—இபபொழுது வககீல் வேண்டுவதில்லை. திருச்சிராப்பள்ளிக்கு வியாச்சியம் போகும்பொழுது பார்த்துக்கொள்ளலாம். காரைக்காலுக்கும் இபபொழுதொன்றும் தெரிவித்து அபபுண்ணியவானைக் கவலையில் அழுத்தவேண்டாம்.

கூட்டாளி.—இவ்விடத்தில் வக்கீல் வேண்டுவ தவசியமா என்று விசாரித்து வருகிறேன் (என்று நீங்கினான்).

## 21-ம் அத்தியாயம்

லாலாபேட்டைக் கொலைக்கேஸை விசாரிக்கப் போகிறார்களென்று லாலாபேட்டையி லிருந்தும் குளித்தலையி லிருந்தும் ஜனங்கள் வந்து தாசில்தார் கச்சேரியில் நிறைந்திருந்தார்கள். பதினொருமணிக்குத் தாசில்தார் நியாயஸ்தலத்தில் வந்து உட்கார்ந்தார். உடனே குற்றவாளிகளாகிய கருணாநிதியையும் நீலமேகத்தையும் போலிஸ் காவலோடு குற்றவாளிகள் நிற்கவேண்டிய இடத்தில் கொண்டுபோய் நிறுத்தினார்கள். லாலாபேட்டையி லிருந்தும் மூன்று வண்டிகள் அதிவேகமாக வந்து தாசில்தார் கச்சேரிக்கு முன் நின்றன. அவ்வண்டிகளி லிருந்து மணிவாசகம் பிள்ளை, பச்சையப்ப பிள்ளை, முனியாண்டி முதலானவர்களோடு வேறு சிலரும் இறங்கினார்கள்.

**தாசில்தார்.**—(குமஸ்தாவைப் பார்த்து) கொலைக்கேஸுக்குச் சம்பந்தமான சாக்ஷிகள் யாவரும் வந்திருக்கிறார்களா?

**குமஸ்தா.**—யாவரும் வந்திருக்கிறார்கள்.

அப்பொழுது சாமியார் ஒருவர் கச்சேரிக்குள் வருவதை யாவரும் பார்த்து, 'சாமியாருக்குக் கோர்ட்டில் என்ன வேலை' என்று மெதுவாகச் சொல்லிக்கொண்டார்கள். குற்றவாளிகள் இருவரும் சாமியாரைப் பார்த்து இந்தப் படுபாவியால் நம்மைப் பிடித்துக்கொண்டு வந்தார்களென்று முறுமுறுத்தார்கள். சர்க்கார் வக்கீல் சாமியாரைப் பார்த்து அவர் அருகில் சென்று அவரை அழைத்து வந்து தன்னருகில் நாற்காலியில் உட்காரச் செய்தார்.

**குமஸ்தா.**—பச்சையப்ப பிள்ளை (என்றார்).

சேவகன், "பச்சையப்ப பிள்ளை! பச்சையப்ப பிள்ளை! பச்சையப்ப பிள்ளை!" என்று மூன்றுதரம் கூப்பிட்டான். அவர், "வந்தேன்! வந்தேன்!" என்று சொல்லிக்கொண்டே சாக்ஷிகள் நிற்குமிடத்தில் வந்து நின்றார். சர்க்கார் வக்கீல், தமக்கருகி லிருக்கும் சாமியாரைப் பார்த்து, இவ்வியாச்சியத்தில் தாங்கள் கேட்கச் சொல்வதைக் கேட்கவேண்டுமென்று தாசில்தார் எனக்கு

உத்தரவு செய்திருக்கிறார். தாங்கள் இந்தச் சாக்ஷியை என்ன கேட்க வேண்டும் ?

**சாமியார்.**—சாக்ஷி சத்தியம் செய்தபின் நான் சொல்லுகிறேன்.

**தமஸ்தா.**—(பச்சையப்ப பிள்ளையைப் பார்த்து) பச்சையப்ப பிள்ளை நான் சொல்லும் விதம் சொல்லும் : "சர்வ சக்தி யுள்ள கடவுள் அறிய நான் இவ்வியாச்சியத்தில் சொல்லுவ தெல்லாம் உண்மை : முற்றிலும் உண்மை."

[தாசில்தார் கச்சேரியில் நடந்த இக்கொலைக் கேசில் சாமி யார் சொல்லிக் கேட்கச் சொன்னதைச் சர்க்கார் வக்கீல் கேட்டுக் கொண்டு வந்தமையால் சாமியாரே கேள்விகளைக் கேட்டதாகக் கீழே குறிக்கப்பட்டுள்ளது].

**சாமியார்.**—உமது பெயரென்ன ?

**சாக்ஷி.**—என் பெயர் பச்சையப்ப பிள்ளை.

**சாமியார்.**—நீர் எங்கிருப்பது ?

**பச்சையப்ப பிள்ளை.**—நான் லாலாபேட்டையி லிருக்கிறேன்.

**சாமியார்.**—அங்கு நிற்கிறவர்களைத் தெரியுமா ?

**பச்சையப்ப பிள்ளை.**—தெரியும் ! முதலில் நிற்கிறவர் என் சிறிய தந்தையின் குமாரன் கருணாநிதி. அவர் பக்கத்தில் நிற்கிறவன் என் சிறிய தாயாரின் மகன் நீலமேகம்.

**சாமியார்.**—இவ்வியாச்சிய சம்பந்தமாக அவர்களைக் குறித்து உமக்கு என்ன தெரியும் ?

**பச்சையப்ப பிள்ளை.**—வைகாசி மாதம் நாலாந்தேதி இரவு என் சிறிய தந்தையின் விவாகத்துக்காகப் பந்தல் போட்டுக் கொண்டிருந்தோம். பன்னிரண்டு மணிக்குமேல் பந்தலில் வேலை செய்தவர்களெல்லாம் போய்ப் படுத்துக்கொண் டோம். யாவரும் நல்ல நித்திரையி லிருக்கும்பொழுது, என் சிறிய தந்தை படுத்திருந்த வீட்டில் குதிக்கிறதுபோல் சந் தடி கேட்டது. சந்தடி கேட்டவுடன் நானும், முனியாண்டி யும், சின்னையாவும், மற்றும் சிலரும் வீட்டுக்குள் ளோடிப் போய்ப் பார்த்தபொழுது, என் சிறிய தந்தை அறையில்

விளக்கு எரிந்துகொண்டிருந்தது. அங்கு கருணாநிதி என் சிறிய தந்தையின் கைகளைப பிடித்துக்கொண்டிருக்கவும், நீலமேகம் என் சிறியதந்தையைக் கழுத்தை அறுத்துக்கொண்டிருக்கவும் கண்டு, "பாவிகளா! மோசம் செய்துவிட்டீர்களா?" என்று நான் போட்ட சத்தத்தைக் கேட்டுப் பின்னும் அனேகா வீட்டுக்குள் ஓடிவநதார்கள்.

**சாமியார்.**—நீலமேகம் பிள்ளை உன் சிறியதந்தையைக் கொல்ல வேண்டியதற்குக் காரணம் ஏதாகிலும் உண்டா?

**பச்சையப்ப பிள்ளை.**—உண்டென்று என் மாமன் மணிவாசகம் பிள்ளை சொல்லியிருக்கிறார்.

**சாமியார்.**—அது என்ன காரணம்?

**பச்சையப்ப பிள்ளை.**—என் மாமனைக் கேட்டால் அக்காரணத்தைச் சொல்லுவார்.

**சாமியார்.**—கருணாநிதி பிள்ளை தன் சிறிய தந்தையைக் கொல்லக காரணமுண்டா?

**பச்சையப்ப பிள்ளை.**—உண்டு.

**சாமியார்.**—என்ன காரணம்?

**பச்சையப்ப பிள்ளை.**—என் சிறியதநதை இறக்க இரண்டு மாதத்துக்கு முன் தனக்கு ஓர் கண்டமிருக்கிறதென சென்னைக்குப் போய் வககீல்களைக் கொண்டு தன்னுடைய சொத்தெல்லாம் கருணாநிதியைச் சேரவேண்டுமென்று எழுதிவைத்திருந்தார். பின்னவா ஜாதகத்தைச சென்னையி லிருக்கும சோதிடர்களிடம் காட்டியபொழுது அவருக்குக கண்டம் இருபபது உண்மையாயினும் அக்கண்டம் அவரை ஒன்றும் செய்யாதென்றும் அவருக்கு வயது தொண்ணூற்றைந்தென்றும் சொன்னதைக்கேட்டு, அவா விவாகம் செய்துகொள்ள ஏற்பாடு செய்தார். அவா விவாகம் செய்துகொண்டு அவருக்குப் புத்திரபபேறு உண்டானல் கருணாநிதிக்கு ஒன்றுமில்லாமற் போய்விடும் என்றதே காரணம்.

**சாமியார்.**—குற்றவாளிகள் கொலை செய்ததைக் கண்ட பின் நீர் என்ன செய்தீர் ?

**பச்சையப்ப பிள்ளை.**—நான் முனியாண்டியையும் சின்னையாவையும் போலீஸாரை அழைத்துவரும்படி அனுப்பினேன். அவர்கள் போலீஸாரை அழைத்துவந்தார்கள். போலீஸ் சேவகன் இவ்விருவர்களையும் கொண்டு போகும்பொழுது இவர்கள் ஓடிப்போனார்கள்.

**சாமியார்.**—இன்னும் குற்றவாளிகளைக் குறித்து ஏதாகிலும் சொல்லவேண்டியதுண்டா ?

**பச்சையப்ப பிள்ளை.**—ஒன்றுமில்லை.

குமஸ்தா முனியாண்டியைக் கூப்பிட்டான். அவன் வந்து குமஸ்தா சொல்லியவிதம் சத்தியம் செய்தான்.

**சாமியார்.**—உன் பேரென்ன ?

**முனியாண்டி.**—என் பேர் முனியாண்டி.

**சாமியார்.**—நீ எந்த ஊர் ?

**முனியாண்டி.**—நான் இருப்பது லாலாபேட்டை.

**சாமியார்.**—இங்கு நிற்கிறவர்கள் உனக்குத் தெரியுமா ?

**முனியாண்டி.**—தெரியும். இவர்கள் லாலாபேட்டையி லிருப்பவர்களே.

**சாமியார்.**—இவர்களைக் குறித்து உனக்கு என்ன தெரியும்.

**முனியாண்டி.**—நாங்கள் இரத்தின சபாபதி பிள்ளை வீட்டில் பந்தல் வேலை செய்துகொண்டிருந்தோம். விவாகமாக மூன்று நாளிருக்கும் பொழுது யாவரும் நெடுநேரம் இரவில் வேலை செய்திருந்து படுத்துக்கொண்டோம். வீட்டில் சந்தடி கேட்டு என்னருகில் படுத்திருந்த பச்சையப்ப பிள்ளை எழுந்து வீட்டுக்குள் ஓடினார். நானும் சின்னையாவும் பின் சென்றோம். பச்சையப்ப பிள்ளை இரத்தினசபாபதி பிள்ளை படுக்கை அறைக்குள் சத்தம் போட்டார். நானும் சின்னையாவும் அறைக்குள் ஓடினோம். அங்கு நீலமேகம் பிள்ளை கத்தியோடு நிற்கவும் கருணாநிதி பிள்ளை இரத்தினசபாபதி பிள்ளை

யின் கைகளைப் பிடித்துக்கொண்டிருக்கவும் கண்டேன். பின் அனேகர் ஓடிவந்தார்கள்.

**சாமியார்.**—பச்சையபப பிள்ளை பின் என்ன செய்தார ?

**முனியாண்டி.**—போலீஸாரை அழைத்து வரும்படி என்னையும் சின்னையாவையும் அனுப்பினர். நாங்கள் போலீஸாரை அழைத்துவந்தோம். போலீஸ் சேவகன் இவர்களை அழைத்துக்கொண்டு போகும்பொழுது இருவரும் ஓடிப்போய் விட்டார்கள்.

குமஸ்தா சின்னையாவை அழைத்துச் சத்தியம் செய்யச் சொன்னன்.

**சாமியார்.**—உன் பேரென்ன ?

**சின்னையா.**—என்பேர் சின்னையா.

**சாமியார்.**—நீ எந்த ஊர் ?

**சின்னையா.**—நான் லாலாபேட்டையி லிருககிறேன்.

**சாமியார்.**—இங்கு நிற்கும் குற்றவாளிகள் தெரியுமா ?

**சின்னையா.**—தெரியும்.

**சாமியார்.**—இவர்களைக குறிதது உனககென்ன தெரியும் ?

**சின்னையா.**—இரததினசபாபதி பிள்ளை வீட்டில் பந்தல் போட்டுக்கொண்டிருந்த நாளில் ஓர்நா ளிராத்திரி நாங்கள் நெடுநேரம் பந்தல் வேலை செய்துகொண்டிருந்து படுத்து நித்திரைபோனேம். வீட்டுக்குள் குதிக்கிறதுபோல் சத்தங் கேட்டு விழித்துக்கொண்டேன். என்னேடு படுத்திருநத முனியாண்டி எழுந்தோடுவதைக் கண்டு, நானும் அவரோடு சென்று, பச்சையபப பிள்ளை போட்ட சத்தத்தைக் கேட்டு இரத்தினசபாபதி பிள்ளை படுககை அறைக்குள் போன பொழுது, நீலமேகம் பிள்ளை கததியோடு நிற்கவும் கருணாநிதி பிள்ளை இரத்தினசபாபதி பிள்ளையின் கைகளைப் பிடித்துக்கொண்டிருக்கவுங் கண்டேன். பச்சையபப பிள்ளை என்னையும் முனியாண்டியையும் போய்ப போலீஸாரை அழைத்துவரச் சொன்னா. நாங்கள் போய் அழைத்து

வந்தோம். போலீஸா சேவகன் இவர்களை அழைத்துப் போகும் பொழுது, எவ்விதமாகவோ ஓடிப்போய் விட்டார்கள். எனக்கு வேறொன்றும் தெரியாது.

குமஸ்தா மணிவாசகம் பிள்ளையைக் கூப்பிட்டுச் சத்தியம் செய்யச் சொன்னான்.

**சாமியார்.**—உம்முடைய பெயரென்ன ?

**மணிவாசகம் பிள்ளை.**—மணிவாசகம் பிள்ளை.

**சாமியார்.**—நீர் எந்த ஊர் ?

**மணிவாசகம் பிள்ளை.**—நான் கோயம்புத்தூரி லிருக்கிறவன்.

**சாமியார்.**—முதல் குற்றவாளியை அறிவீரா ?

**மணிவாசகம் பிள்ளை.**—அவன் என் தங்கை மகன்.

**சாமியார்.**—இவர் இரத்தினசபாபதி பிள்ளையைக் கொலை செய்ய காரணம் ஏதாகிலும் உண்டா ?

**மணிவாசகம் பிள்ளை.**—உண்டு.

**சாமியார்.**—அக்காரணம் யாதென்று கோர்ட்டாருக்குச் சொல்ல வேண்டும்.

**மணிவாசகம் பிள்ளை.**—இவனுடைய சிறு வயதில் என் மகளை இவனுக்குக் கொடுக்கிறேன் என்று சொன்னதுண்டு. என் மகள் பருவம் அடைந்த பின் இவனுக்குக் கொடுக்கச் சம்மதப்படாமல் என் மைத்துனருக்குக் கொடுக்க இருந்த பொழுது, இவனும் இவன் தாயும் என்னிடம் வாதாடியபின் இவன் கோபித்து, "இவ்விவாகம் எவ்விதம் நடக்கப் போகிறது ? நான் பார்க்கிறேன்" என்று சபதம் செய்து நீங்கினான்.

**சாமியார்.**—அவ்வளவுதானோ இன்னும் ஏதாகிலும் உண்டா ?

**மணிவாசகம் பிள்ளை.**—இவன் லாலாபேட்டைக்குச் சென்று இரத்தின சபாபதி பிள்ளையைக் கண்டு, "நான் சிறு வயதில் ஞானவடிவோடு விளையாடியும் ஒன்றாய் வாசித்தும் வருகையில் நாங்கள் ஒருவரை யொருவர் இச்சித்திருந்தோமாதலால் தாங்கள் வேறு பெண்ணைப் பார்த்து விவாகம் செய்துகொள்

ளுங்கள்" என்று வேண்டினான். அவர் இவன் இஷ்டத்துக்கு உடன்படாமையைக் கண்டு கோபித்து, "நீர் எப்படி அப்பெண்ணை விவாகம் செய்துகொள்ளுகிறீரோ பார்க்கலாம்" என்று கறுவிக்கொண்டு நீங்கினான்.

**சாமியார்.**—உம்முடைய குமாரத்திக்கு என்ன வயது?

**மணிவாசகம் பிள்ளை.**—பதினெட்டாகிறது.

**சாமியார்.**—இங்கே குற்றவாளியாக நிற்கும் உமது மருமகனுக்கு என்ன வயது?

**மணிவாசகம் பிள்ளை.**—அவனுக்கு இருபத்திரண்டாகிறது.

**சாமியார்.**—நீர் பெண் கொடுக்கச் சம்மதப்பட்ட உமது மைத்துனர் இரத்தினசபாபதி பிள்ளைக்கு என்ன வயது?

**மணிவாசகம் பிள்ளை.**—அவருக்கு அறுபது (என்ற உடன் கோர்ட்டிலிருந்தவர்கள் நகைத்தார்கள்).

**சாமியார்.**—உம்முடைய புதல்வியின் நன்மையை மிகவுங் கருதினவராகக் காணப்படுகிறது. நீர் பொருளைக் கருதியோ உம்முடைய குமாரத்தியை அறுபது வயதுள்ளவருக்குக் கொடுக்கத் துணிந்தீர்?

**மணிவாசகம் பிள்ளை.**—நான் இந்தக் கேள்விக்குப் பதில் சொல்லவேண்டிய அவசியமில்லை.

**தசில்தார்.**—நகைப்புடன், மணிவாசகம் பிள்ளை விடையளிக்கப் பிரியப்படாததால் வேறு கேள்வி கேளும்.

**சாமியார்.**—துரைத்தனத்தார் இட்ட சட்டத்துக்கு விரோதமாக ஒருவன் நடந்தால் அவனைத் தண்டிப்பதின் காரணம் என்ன? ஒருவன் சட்டத்துக்கு விரோதம் நடந்ததால் அவன் தண்டிக்கப்பட்டான்: ஆனதால் நாம் சட்டத்துக்கு விரோதம் நடந்தால் நம்மையும் தண்டிப்பார்கள் என்று பயந்து யாவரும் நல்வழியில் நடப்பார்களென்பதல்லவா! இப்பெரிய வயதைக் கொண்டவர் இருபத்திரண்டு வயதுடைய தன் தங்கையின் மகனுக்குக் கொடுக்கிறேன் என்று சொல்லிக்கொண்டிருந்தவர், பொருளாசை கொண்டு

நாளைச் சாகபபோகிற கிழவனுக்குப பெண்ணைக் கொடுக்கச் சம்மதித்தார். இவருடைய தீச்செய்கையை உலக மறிந்தால் அது நன்மை பயக்குமென்று இக்கேள்வியைக் கேட்க நேரிட்டது. கொலை செயதவனும் கொலை செய்யத் தூண்டியவனும் தண்டனை அடைவதுபோல், கொலைககுக் காரணமாக இருந்தவனையும் தண்டிக்க வேண்டியதே முறைமை. இவா தன் குமாரததியை நீலமேகம் பிள்ளைக்குக் கொடுத்திருபபாராயின் இக்கொலை நடந்திராது. ஆனதால் இக் கொலை நடபபதற்குக் காரணமா யிருநதவர் இவரே! துரைத் தனத்தாருடைய சட்டம் இவரைத் தண்டிக்க இடங்கொடுக்க வில்லை ஆதலால் 'இவர் மீட்கபபட்டார். ஐயா! மணி வாசகம் பிள்ளை உமமுடைய குமாரத்தி எங்கே?

**மணிவாசகம் பிள்ளை.**—என் குமாரத்தி என்னை விட்டுப் போய் விட்டாள்.

**சாமியார்.**—அவளைத் தேடிப பாாத்துக் கண்டுபிடிக்க வில்லையா?

**மணிவாசகம் பிள்ளை.**—அவளைத் தேடிபபார்க்காத இடமில்லை. அவள் என் கண் பாாவையில் அகபபடவில்லை.

**சாமியார்.**—உமககுணடாகிய பொருளாசையால் உம்முடைய மைத்துனரையும் இழநதீா; மகளையும் இழந்தீா. உம்மைக் கேட்கவேண்டியது வேறொன்று மில்லை.

சாமியார் மணிவாசகம் பிள்ளையை அனுபபிவிட்டு (தாசீல் தாரைப பாாத்து) "ஐயாவே! இஙகு நிற்கும் முதற் குற்றவாளி தான் இசசித்திருந்த பெண் தனக்குக் கிடைககவில்லை யென்று கடுங்கோபங் கொண்டிருநததாக மணிவாசகம் பிள்ளை சாக்ஷியால் விளங்கியது. இரண்டாவது குற்றவாளி தனககுக் கிடைக்கப போகிற சொத்து கிடைக்காமற் போகிறதென்ற மனவருத்தத் தால் தன் சிறிய தந்தையின் கைகளைத் தான் பிடித்துக்கொண் டிருக்க, முதற் குற்றவாளி கழுத்தை அறுபபதைப பார்த்த தாக, யாவராலும நன்கு மதிக்கபபெற்ற பச்சையபப பிள்ளை சாக்ஷியால் அறியலாகும். முதல் குற்றவாளி கையில் கத்தி

யிருந்ததையும் இரண்டாவது குற்றவாளி கொலையுண்டவரின் கைகளைப பிடித்துக் கொண்டிருந்ததையும் முனியாண்டியும் சின்னையாவும் பார்த்ததாகச் சொல்லியிருக்கிறார்கள். இன்னும் சாக்ஷிகள் வேண்டுமென்று விசாரித்தாலும் இப்பொழுது சொல்லியிருக்கும் சாக்ஷிகளைவிட அவர்கள் அதிகம் சொல்லப்போகிறதில்லை. ஆனதால் இவ்விருவரும் கொலை செய்தவர்களென்று சொல்லத் தடையில்லை" என்றார்.

தாசில்தார்.—(குற்றவாளிகளைப பார்த்து) உங்களிருவர் மேல் கொலை செய்த குற்றம் ஏற்பட்டிருக்கிறது. உங்கள் மேல் குற்றம் இல்லையென்று மெய்ப்பிக்க இடமிருந்தால் நாளைக் குச் சாக்ஷிகளைக்கொண்டு வரவேண்டும் (என்று சொல்லி எழுந்துபோனார்).

போலிஸ் சேவகர் குற்றவாளிகளைக் கொண்டுபோய்க் காவலறையில் அடைத்தபின் யாவரும் நீங்கினார்கள்.

கருணாநிதி.—(நீலமேகத்தைக் கட்டிப் பிடித்துக்கொண்டு) தம்பி! நமக்குக் கொஞ்சம் இருந்த தைரியமும் போனது. நமக்கு அஷ்டமத்துச் சனியன்போல இந்தச் சாமியார் எங்கிருந்து முளைத்தான். நாம் இருந்த இடத்தைக் கண்டுபிடித்து நம்மைக் கொண்டுவரும்படி செய்து, இன்று வக்கீலுக்கருகில் உட்கார்ந்துகொண்டு, வக்கீலை அவரிஷ்டபபடி கேட்க விடாமல், தானே ஒவ்வொன்றும் சொல்லிக்கொடுத்துக் கேட்கச் சொன்னான். நாளை நமககுச் சாக்ஷி சொல்ல யாரிருக்கிறார்கள். யாா வருவாாகள் (என்று கதறினான்).

நீலமேகம்.—அண்ணா! நாம் என்ன செய்யலாம். பச்சையபப பிள்ளையே சாமியாரைச் சர்ககாா வக்கீல் அருகிலிருந்து கேள்விகள் கேட்கச் சொன்னதுபோல் காண்கிறது.

இவ்வார்த்தை சொல்லும்பொழுது, அவர்கள் கூட்டாளி அவ்விடம் வந்து, "நான் கேள்விபபட்டது உண்மையாயிற்றல்லவா. இந்தச் சாமியாரும் பச்சையப்ப பிள்ளையும் கூடிக் குடித்துக் கொண்டிருபபவர்களாகக் காண்கிறது. ஆனதால் அவன் இவ்

வளவு அக்கறை எடுத்துக்கொண்டிருக்கிறான். நாம் நாளை என்ன செய்யவேண்டும்? சாக்ஷிகள் வரவேண்டுமே?'' என்றான்.

**கருணாநிதி.**—எங்களுக்கு சாக்ஷி யில்லை. நாளை திருச்சிராபள்ளிக்கு அனுப்பிவிடுவார்கள். அங்கே போனபின் சிவன் செயல் எவ்விதம் முடிகிறதோ முடியட்டும் (என்று சொல்ல, யாவரும் கவலையோ டிருந்தார்கள்).

பச்சையப்ப பிள்ளை முனியாண்டி முதலானவர்கள் அடைந்த சந்தோஷத்திற் களவில்லை. அன்றிரவும் சாமியாரும் அவரோடும் தாசில்தாரிடம் சென்றிருந்தபொழுது, தாசில்தார் சாமியாரைப் பார்த்து நகைத்து "சாமி! தாங்கள் துரைத்தனத்தார் சார்பாகக் கேட்ட கேள்விகளெல்லாம் குற்றவாளிகளுக்குக் கெடுதலாக முடிந்தது. தாங்கள் வக்கீல்களைப்போல் கேள்விகள் கேட்க எங்கே கற்றுக்கொண்டீர்களோ தெரியவில்லை'' என்றார்.

**சாமியார்.**—(நகைத்து) நான் கேட்டவிதம் யாவராலும் கேட்க முடியுமென்றே நினைக்கிறேன் (என்று நெடுநேரம் வார்த்தையாடியிருந்து நீங்கினார்).

மறுநாள் காலை பதினொரு மணிக்குத் தாசில்தார் கச்சேரியில் ஜனங்கள் கூடினார்கள். அங்கு நின்றிருந்தவர்களில் ஒருவன் தன்னோடு நின்றிருப்பவனைப் பார்த்து "இன்று குற்றவாளிகளிருவரையும் செஷன் கோர்ட்டுக்கு அனுப்பிவிடுவார்கள். பச்சையப்ப பிள்ளைக்கு அவருடைய சிற்றப்பன் சொத்து சேர்ந்துவிட யாதொரு தடையு மில்லை'' என்றான்.

**சின்னையா.**—குற்றவாளி பக்கத்தில் வக்கீல் வைத்திருக்கிறார்களா? (என்று முனியாண்டியைப் பார்த்துக் கேட்டான்).

**முனியாண்டி.**—வக்கீல் வைத்து என்ன செய்கிறது? நேற்றுச் சொன்ன சாக்ஷிகளின் வாக்குமூலத்தை மாற்ற முடியுமா? முடியவே முடியாது.

அச்சமயத்தில் தாசில்தார் கச்சேரியில் வந்து உட்கார்ந்தார். குற்றவாளிகளைப் போலீஸ் காவலோடு கொண்டுவந்து நிறுத்தினார்கள். அப்பொழுது வக்கீல்கள் உட்கார்ந்திருக்கும் இடத்தி

விருந்து ஒருவர் எழுந்து நின்று, "நான் குற்றவாளிகள் பக்கம் பேச வந்திருக்கிறேன்" என்றார். அங்கு நின்றிருந்தவர்களி லொருவன் "முத்துகிருஷ்ண பிள்ளையையா வக்கீலாக வைத் திருக்கிறார்கள். அவரால் இந்த வியாச்சியத்தை வெல்ல முடி யுமா ?" என்றான். அப்பொழுது சாமியார் கச்சேரிக்குள் வரு வதைக் கண்ட வக்கீல் முத்துகிருஷ்ண பிள்ளை, சாமியாரை அழைத்துத் தன்னருகிலிருந்த நாற்காலியில் உட்காரச்சொல்லி, "தாங்கள் கேட்கச் சொல்லுவதைக் கேட்கச் சித்தமாயிருக்கி றேன்" என்றார்.

[அன்றைய தினமும் சாமியார் சொல்வதையே வக்கீல் முத்துகிருஷ்ண பிள்ளை கேட்டுக் கொண்டிருந்ததால் சாமியார் பெயரையே இங்கு காட்டப்பட்டிருக்கிறது.]

தாசில்தார் கேஸை நடத்தலாம் என்று உத்தரவு கொடுத்த வுடன், குமஸ்தா பச்சையப்ப பிள்ளையை அழைத்துச் சத்தியம் செய்யச் சொன்னார்.

**சாமியார்.**—உம்முடைய பெயர் பச்சையப்ப பிள்ளை யென்றும் நீர் லாலாபேட்டையி லிருக்கிறவரென்றும் சொன்னீரல் லவா ?

**பச்சையப்ப பிள்ளை.**—ஆம்.

**சாமியார்.**—உமக்கு என்ன தொழில் ?

**பச்சையப்ப பிள்ளை.**—எனக்குத் தொழில் ஒன்றுமில்லை. நான் மிராஸ்தார்.

**சாமியார்.**—உமக்கு எத்தனை காணி நிலம் இப்பொழுது இருக்கிறது ?

**பச்சையப்ப பிள்ளை.**—எனக்கு நிலமில்லை. இருந்த நிலத்தை விற்றுவிட்டேன்.

**சாமியார்.**—எப்பொழுது விற்றீர் ?

**பச்சையப்ப பிள்ளை.**—விற்று நெடுநாளாயிற்று.

**சாமியார்.**—நெடுநாளாயிற்றென்றால் விளங்கவில்லை எத்தனை நாளைக்கு முன் விற்றீர் என்று சொல்லவேண்டும்.

**பச்சையப்ப பிள்ளை.**—பத்துப் பதினைந்து வருடத்துக்கு முன் விற்றேன்.

**சாமியார்.**—உமக்கு விவாகம் முடிந்து எத்தனை வருட மாகிறது?

**பச்சையப்ப பிள்ளை.**—எனக்கு விவாகமாகி இருபது வருடத்துக்கு அதிகமாகிறது.

**சாமியார்.**—உமது தந்தை தனவந்த ரல்லவா ?

**பச்சையப்ப பிள்ளை.**—ஆம்! என் தந்தைக்கு இருபது காணி நிலம் இருந்தது.

**சாமியார்.**—உமக்கு விவாகம் செய்துவைத்தது யார்? உமது தந்தையா ?

**பச்சையப்ப பிள்ளை.**—என் தநதை இறந்து ஐந்து வருடத்திற்குப பின் என் சிறிய தந்தை எனக்கு விவாகம் முடித்து வைத்தார்.

**சாமியார்.**—நீர் தற்காலம் குடியிருக்கும் வீட்டை யாருக்கு விற்றீர்.

**பச்சையப்ப பிள்ளை.**—என் சிறிய தந்தைக்கே விற்றேன்.

**சாமியார்.**—என்ன காரணத்தால் உமது சிறிய தந்தைக்கு விற்றீர் ?

**பச்சையப்ப பிள்ளை.**—நான் பிறருககு விற்கபபோனதை என் சிறிய தந்தை வாங்கிக்கொண்டு அவ்வீட்டிலேயே என்னை இருக்கும்படி செய்தார்.

**சாமியார்.**—விவாகமாகு முன்னோ பின்னோ வீட்டை விற்றது ?

**பச்சையப்ப பிள்ளை.**—விவாகமாகுமுன் விற்றேன்.

**சாமியார்.**—வீட்டை விற்குமுன்னோ பின்னோ நிலத்தை விற்றது ?

**பச்சையப்ப பிள்ளை.**—வீட்டை விற்குமுன்னமே நிலத்தை விற்றுவிட்டேன்.

**சாமியார்.**—ஆனதால் நிலததை விற்றது பதினைந்து வருடத்துக்கு முன்னல்ல; இருபத்தைந்து வருடம் இருக்குமென்று சொல்லலாம் அல்லவா ?

பச்சையப்ப பிள்ளை.—ஆம்!

சாமியார்.—நீர் நிலத்தை விற்றுச் செலவு செய்துவிட்டதால் வீட்டின்மேல் கடனேறி, கடன்காரர் தொந்தரவால் வீட்டையும் விற்க நேரிட்டதல்லவா?

பச்சையப்ப பிள்ளை.—ஆம்!

சாமியார்.—உம்முடைய தந்தை வைத்துப்போன சொத்தை யெல்லாம் செலவழித்த பின், உமது சிறிய தந்தை உமது மேல் பரிதாபங்கொண்டு உமக்கு விவாகம் செய்துவைத்தா ரல்லவா?

பச்சையப்ப பிள்ளை.—ஆம்.

சாமியார்.—உமக்கு விவாகமானது முதல் நீர் யாருடைய சம் ரக்ஷணையி லிருக்கிறீர்?

பச்சையப்ப பிள்ளை.—என்னுடைய சிறிய தந்தையின் சம் ரக்ஷணையி லிருந்தேன்.

சாமியார்.—உமது சிறிய தந்தை எழுதிவைத்த வில்லைப் பார்த் தீரா?

பச்சையப்ப பிள்ளை.—பார்த்திருக்கிறேன். அதில் நானும் சாக்ஷி கையொப்பம் வைத்திருக்கிறேன்.

சாமியார்.—வில் எவ்விதம் எழுதியிருக்கிறது?

பச்சையப்ப பிள்ளை.—என் சிறிய தந்தைக்குப் பின் அவரு டைய சொத்தெல்லாம் கருணாநிதியைச் சேரவேண்டு மென்றும், கருணாநிதி என்னுடைய சாப்பாட்டுச் செலவிற்கு வேண்டியதைக் கொடுக்கவேண்டுமென்றும் எழுதியிருக் கிறது.

சாமியார்.—கருணாநிதி குற்றவாளியாகத் தண்டனை யடைந்தால் உன் சிறிய தந்தையின் சொத்தெல்லாம் யாரைச் சேர வேண்டும்?

பச்சையப்ப பிள்ளை.—கோர்ட்டார் பார்த்து யாரைச் சேர வேண்டுமென்று தீர்மானம் செய்கிறார்களோ அவரைச் சேரும்.

சாமியார்.—கருணாநிதி பிள்ளை கொலைசெய்து ஒழிப்போனு சென்று அறிந்தபின், அந்தச் சொத்தெல்லாம் உம்மைச் சேர வேண்டுமென்று நீர் விண்ணப்பம் செய்துகொள்ள வில்லையா?

பச்சையப்ப பிள்ளை.—ஆம்! செய்துகொண்டேன்.

சாமியார்.—(கச்சேரியி லிருக்கும் கத்தியை வாங்கிக் காட்டி) இந்தக் கத்தியைப் பார்த்திருக்கிறீரா?

பச்சையப்ப பிள்ளை.—ஆம்! பார்த்திருக்கிறேன்! என் சிறிய தந்தையைக் கொன்றது இக்கத்தியே! இந்த நீலமேகம் கையில் பார்த்தேன்.

சாமியார்.—உமது சிறிய தந்தையைக் கொல்லுமுன், இக்கத்தியை வேறு யாரிடத்திலாவது பார்த்திருக்கிறீரா?

பச்சையப்ப பிள்ளை.—நான் ஒருவரிடத்தும் பார்க்கவில்லை.

குமஸ்தா, முனியாண்டியை அழைத்துச் சத்தியம் செய்யச் சொன்னார்.

சாமியார்.—உன் பேர் முனியாண்டி, நீ லாலாபேட்டையில் இருப்பவனென்று நேற்றுச் சொன்னாயல்லவா?

முனியாண்டி.—ஆம்.

சாமியார்.—நீ லாலாபேட்டையில் என்ன வேலை செய்துகொண்டிருக்கிறாய்?

முனியாண்டி.—நான் தற்காலம் பச்சையப்ப பிள்ளைக்குக் காரியஸ்தனாக இருக்கிறேன்.

சாமியார்.—எது முதல் நீ பச்சையப்ப பிள்ளைக்குக காரியஸ்தனாக விருக்கிறாய்?

முனியாண்டி.—இரத்தினசபாபதி பிள்ளை இறந்தபின் எனக்கு அந்த வேலை கிடைத்தது.

சாமியார்.—நீ இப்பொழுது செய்துகொண்டிருக்கும் வேலை கிடைக்குமுன் என்ன வேலை செய்துகொண்டிருந்தாய்?

முனியாண்டி.—அற்ப சீவனம் செய்துகொண்டிருந்தேன்.

**சாமியார்.**—அற்ப ஜீவனம் என்றால் விளங்கவில்லை. என்னென்ன வேலை செய்துகொண்டிருந்தாய்?

**முனியாண்டி.**—வீட்டுக்குக் கீற்றுப்போடுதல், பந்தல் போடுதல், மண்வெட்டல் முதலிய வேலைகளைச் செய்துகொண்டிருந்தேன்.

**சாமியார்.**—அப்பொழுது உனக்கு நாள்தோறும் என்ன கூலி கிடைக்கும்?

**முனியாண்டி.**—நாள்தோறும் நாலணு கிடைக்கும்.

**சாமியார்.**—அக்காலத்தில் கிடைத்த நாலணுவில் ஏதாகிலும் பொருள் சேர்த்துக்கொண்டாயா?

**முனியாண்டி.**—எனக்குக் கிடைக்கும் நாலணு போதாமல், என் மனைவி நெல் குத்திக்கொண்டு வருவதையும் செலவு செய்து வந்தோம்.

**சாமியார்.**—நான் கேட்ட கேள்விக்குப்பதில் சொல்லவில்லை. நீ அக்காலத்தில் ஏதாகிலும் பொருள் சேர்த்துக்கொண்டாயா!

**முனியாண்டி.**—எங்களுடைய செலவுக்கே பொருள் போதாமலிருக்க, நாங்கள் பொருள் எவ்விதம் சேர்த்துக்கொள்ள முடியும்?

**சாமியார்.**—இப்போது உன் மனைவி என்னென்ன நகை போட்டுக்கொண் டிருக்கிறாள்.

**முனியாண்டி.**—காசுமாலை, காப்பு, கொலுஸு முதலிய நகைகளைப் போட்டுக்கொண் டிருக்கிறாள்.

**சாமியார்.**—உனக்கு வாசிக்கத் தெரியுமா?

**முனியாண்டி.**—தெரியாது.

**சாமியார்.**—இப்பொழுது உனக்கென்ன சம்பளம் கிடைக்கிறது?

**முனியாண்டி.**—மாதம் பதினைந்து கிடைக்கிறது.

**சாமியார்.**—உன்னுடைய வீட்டுச் செலவுக்கு இப்பொழுது என்ன பிடிக்கிறது?

முனியாண்டி.—ஏறக்குறையப் பன்னிரண்டு பிடிக்கிறது.

சாமியார்.—நீ சொல்லுகிறதைப் பார்த்தால் நீ மாதம் மூன்று ரூபா மீதம் பிடிக்கக்கூடும். இதிலா நீ உன் மனைவிக்கு விலை உயர்ந்த நகைகளைச் செய்து போட்டாய் ?

முனியாண்டி.—எஜமான் என்மேல் சந்தோஷபட்டு நகைகளை வாங்கிக் கொடுத்தார்.

சாமியார்.—கச்சேரியி லிருக்கும் கத்தியை வாங்கிக் காட்டி இந்தக் கத்தி யாரிடத்திலாவது இருந்ததைப் பார்த்தாயா ?

முனியாண்டி.—இதை நான் நீலமேகம் பிள்ளை கையில் இரத்தத் தோடு பார்த்தேன்.

சாமியார்.—நீலமேகம் பிள்ளை கையில் பார்க்கு முன், வேறு யாரி டத்திலாவது இருந்ததைப் பார்த்திருக்கிறாயா ?

முனியாண்டி.—நான் ஒருவரிடத்தும் பார்க்கவில்லை.

குமஸ்தா, வைத்தி என்றழைத்துச் சத்தியம் செய்யச் சொன்னார்.

சாமியார்.—உன் பெயரென்ன ?

வைத்தி.—என் பெயர் வைத்தி.

சாமியார்.—நீ எந்த ஊர் ?

வைத்தி.—நான் லாலாபேட்டையி லிருப்பவன்.

சாமியார்.—உனக்கென்ன வேலை ?

வைத்தி.—நான் அம்பட்டன்.

சாமியார்.—(கச்சேரியி லிருக்கும் கத்தியை வாங்கிக் கொடுத்து) இந்தக் கத்தியைப் பார்த்திருக்கிறாயா ?

வைத்தி.—இது என்னுடைய கத்தி.

சாமியார்.—இது உன்னுடையதென்று எவ்விதம் சொல்லத் துணிந்தாய் ?

வைத்தி.—என்னிடத்தி லிருக்கும் கத்திகளுக்கும் கத்தரிக்கோலுக் கும் நகம்வாங்கிகளுக்கும், ஒரே விதமான அடையாளம் செய்துவைத்திருக்கிறேன் பாருங்கள் (என்று மூன்று பல் காண ராவி இருப்பதைக் காட்டினான்).

**சாமியார்.**—உன்னுடைய கத்தியாயின், அக்கத்தி உன்னை விட்டுக் குளித்தலைக் கச்சேரிககு எப்படி வந்தது?

**வைத்தி.**—நான் இக்கததியை முனியாண்டி பிள்ளைகளுக் கொடுத்திருந்தேன்

**சாமியார்.**—எந்த முனியாண்டி பிள்ளைக்குக் கொடுத்திருந்தாய் ?

**வைத்தி.**—(கச்சேரியிலிருக்கும் முனியாண்டியைக் காட்டி) இவரிடம் கொடுத்திருந்தேன்.

**சாமியார்.**—நீ கொடுத்த கத்தியைக் கேட்கவில்லையா ?

**வைத்தி.**—நான் அனேக முறை கேட்டேன். முதலில் "கொண்டு வந்து கொடுக்கிறேன்" என்று சொல்லிக்கொணடிருந்து, பின் "அது காணுமற் போய்விட்டது ; அதன் விலையைக கொடுததுவிடுகிறேன்" என்று சொல்லியிருந்து நெடு நாளைக்குப பின் ஒரு ரூபா கொடுத்தார்.

குமாஸ்தா மாரியப்பனை அழைத்துச் சத்தியம் செய்யச் சொன்னர்.

**சாமியார்.**—உன் பேரென்ன ?

**மாரியப்பன்.**—என் பெயர் மாரியபபன்.

**சாமியார்.**—நீ எந்த ஊர் ?

**மாரியப்பன்.**—நானிருப்பது லாலாபேட்டை.

**சாமியார்.**—நீ என்ன வேலை செய்கிருய் ?

**மாரியப்பன்.**—நான் கூலிக்காரர்களுக்கு மேஸ்திரியாக இருக்தேன்.

**சாமியார்.**—(கச்சேரியிலிருக்கும் கத்தியை வாங்கிககாட்டி) இந்தக் கத்தியை யாரிடத்திலாவது இருந்ததைப் பார்த்திருக்கிருயா ?

**மாரியப்பன்.**—முனியாண்டியிடத்தில் இக்கத்தி இருந்ததைப் பார்த்திருக்கிறேன்.

**சாமியார்.**—முனியாண்டி யிடத்தில் இருந்ததை எவ்விதம் பார்த்தாய் ?

**மாரியப்பன்.**—நானும், முனியாண்டியும், சின்னையாவும், பெரியண்ணனும், வைரப்பெருமாளும், மற்றும் சிலரும் பந்தல்

வேலை செய்துகொண் டிருக்கும்பொழுது, கருணாநிதி பிள்ளை யாவருக்கும் வெற்றிலைப் பாக்குக் கொண்டுவந்து கொடுத்தார். நாங்கள் யாவரும் உட்கார்ந்து போட்டுக் கொண்டு புகையிலை வேண்டுமே என்றபொழுது முனி யாண்டி தன் மடியிலிருந்த ஓலைப்பெட்டியை எடுத்துக் கொடுத்தான். நான் அதைத் திறந்தபொழுது புகையிலை யோடு இக்கத்தி யிருந்தது. இதை எடுத்துப பார்த்து முனியாண்டியைக் கேலி செய்தோம். அபபக்கம் வந்த நீலமேகம் பிள்ளை இக்கத்தியை வாங்கிப பார்த்துக்கொண் டிருந்து கொடுத்துவிட்டுப்போனார். ஆனதால் இக்கத்தியை யாவரும் பார்த்திருக்கிறோம்.

**சாமியார்.**—வேறேதாகிலும் இக்கத்தி விஷயத்தில் தெரியுமா ?

**மாரியப்பன்.**—தெரியும்.

**சாமியார்.**—என்ன தெரியும் ?

**மாரியப்பன்.**—எனக்கோர் நாள் அம்பட்டன் வைத்தி சௌரம் செய்துகொண் டிருந்தபொழுது, முனியாண்டி அம்மார்க்கம் போனான். அவனை அம்பட்டன் கூப்பிட்டு “இன்னும் கத்தி அகபபடவில்லையா” என்று கேட்டான். முனி யாண்டி “கத்தி யகபபடவில்லை; அதன் விலையைப் பெற்றுக் கொள்” என்று ஒரு ரூபா கொடுத்துப போனான். முனியாண்டி போனபின் கத்தியின் சமாசாரம் என்ன வென்று வைத்தியைக் கேட்டேன். அவன், “முனி யாண்டி என்னிடத்தில் ஒரு கத்தியை வாங்கிபபோய்ப் போக்கடித்துவிட்டதால் அதன் விலையைக் கொடுத்துப் போனான்” என்றான்.

குமஸ்தா பக்கிரி என்றழைத்து அவனைச் சததியம் செய்யச் சொன்னார்.

**சாமியார்.**—உன் பெயரென்ன ?

**பக்கிரி.**—என் பெயர் பக்கிரி.

**சாமியார்.**—நீ எந்த ஊரிலிருக்கிறவன் ?

பக்கிரி.—நான் லாலாபேட்டையில் இருக்கிறவன்.

சாமியார்.—உனக்கு லாலாபேட்டையில் என்ன வேலை?

பக்கிரி.—நான் மீன் பிடிக்கிற செம்படவன்.

சாமியார்.—லாலாபேட்டையில் இரத்தினசபாபதி பிள்ளையைக் கொன்ற கொலைக் கேஸ் விஷயமாக உனக் கேதாகிலும் தெரியுமா?

பக்கிரி.—கொலை நடந்த இரவு நான் பெரிய வாய்க்காலில் சார் குத்தியிருந்தேன். அதைத் தண்ணீர் அடித்துக்கொண்டு போனதோ என்று ஜாமத்தில் எழுந்து பார்க்கப் போனேன். சாரைப் பார்த்துக்கொண் டிருக்கும்பொழுது, நான் நின் றிருந்த விடத்திற்கு மேற்கில் ஒருவன் குளித்துக் கொண்டிருப்பதைக் கண்டு அவன் அருகில் சென்றேன். அங்கு குளிப்பது முனியாண்டியென அறிந்து, "இந்நேரத் தில் ஏன் குளிக்கிறீர்" என்று கேட்டேன். அவர் "எனக் குப் புழுக்கமா யிருப்பதால் குளிக்கிறேன்; என் வேட்டியைத் தண்ணீர் அடித்துக்கொண்டு போய்விட்டதால் வேட்டியில் லாம லிருக்கிறேன். நீ மேல் போட்டிருக்கும் வேட்டியைக் கொடு" என்று கெஞ்சினர். என் வேட்டியைக் கொடுத் துப்போய், விடியுமுன் நான் சாரை எடுக்கும்பொழுது, மூன்று வேட்டியும் உள்ளங்கி யொன்றும் இரத்தத்தில் நனை ந்து கரையோரம் ஒதுங்கிச் சாரில் மாட்டிக்கொண்டிருந்தன. அவைகளைக் கொண்டுபோய்க் கசக்காமல் உலாத்தி வைத்தி ருந்து இப்பொழுது கொண்டுவந்தேன் (என்று துணி மூட்டையைக் கொடுத்தான்).

தாசில்தார் அத்துணி மூட்டையை அவிழ்க்கச்சொல்லி அதில் செம்படவன் சொல்லியதுபோல் வஸ்திரங்கள் இரத்தக் கறையோடு இருப்பதைக் கண்டார். உள்சட்டையை எடுத்துப் பார்க்கச் சொன்னதில் அதிலிருந்த சேபியில் ஒரு கடிதம் இரத்தக் கறையோடு இருப்பதைக் கண்டு, "இக்கடிதம் யாருடையது?

யாருக்கு எழுதியிருக்கிறது ? பாரும்'' என்று பச்சையபப பிள்ளை யிடம் கொடுத்தார்.

**பச்சையப்ப பிள்ளை.**—(கை நடுக்கத்தோடு அக்கடிதத்தை வாங்கி) இக்கடிதம் எனக்கு வந்த கடிதமே ! இதை யாரோ எடுத்துக்கொண்டுபோய் அந்த உள் சட்டையில் வைத்திருக்கிறார்கள்.

**தாசில்தார்.**—(சின்னையாவை அழைத்துச் சத்தியம் செய்யச் சொல்லி), அடே சின்னையா ! நீ உண்மையைச் சொல்லா விட்டால் உன்னையும் கொலையாளிகளோடு சேர்த்துச் செஷன் கோர்ட்டுக்கு அனுப்பிவிடுவேன் ஜாக்கிரதை ! நீயும் முனியாண்டியும் பச்சையபப பிள்ளையும் படுத்திருந்தவர்கள் வீட்டில் சந்தடி கேட்டு எழுந்து போனோம் என்று நேற்று நீ சொல்லியிருக்கிறாய். யார் எழுந்து போகும்பொழுது நீ எழுந்து போனாய் ?

**சின்னையா.**—ஐயா ! என்னை மன்னிககவேண்டும். பச்சையபப பிள்ளையும் முனியாண்டியும் எனக்குச் சொல்லிக்கொடுத்து, சொல்லிக்கொடுத்த விதம் சொன்னால் எனக்கு விவாகம் செய்து வைக்கிறதாகச சொன்னதால், அவர்கள் சொல்லிக் கொடுத்த விதம் சொன்னேன். வீட்டில் சந்தடி கேட்ட வுடன் கருணாநிதி பிள்ளையும் நீலமேகம் பிள்ளையும் எழுந்து ஓடினார்கள். நானும் அவர்கள் பின்சென்றேன். நான் எழுந்து போகும்பொழுது பச்சையப்ப பிள்ளையாவது முனி யாண்டியாவது அவர் படுத்திருந்த இடத்தி லில்லை. கத்தி முனியாண்டியிடத்தி லிருந்ததைப பார்த்திருந்தேன். போலீசாரை அழைத்துவரச் சொன்ன பொழுது, முனி யாண்டி என்னோடு வரவும் இல்லை. அவனை நான் பார்க்க வும் இல்லை (என்று அவனைக் கேள்வி கேட்காமல் தானா கவே யாவையும் சொன்னான்).

**தாசில்தார்.**—அடே ! முனியாண்டி ! இத்துணிகள் யாருடை யன பார்.

முனியாண்டி, அத்துணிகளை வாங்கியவுடன் ஆவேசம் வந்ததுபோல் தேகம் ஆட, "ஐயா ! இதில் இரண்டு என்னுடையது. உள் சட்டையும் மற்ற வேஷ்டியும் பச்சையப்ப பிள்ளையுடையது. நானும் பச்சையப்ப பிள்ளையுமே கொலை செய்தோம். பச்சையப்ப பிள்ளை இரத்தினசபாபதி பிள்ளையின் கைகளைப் பிடித்துக் கொண்டவுடன், தூக்கத்தி லிருந்தவர் கண்களை விழித்து, நான் கத்தியோடு நிற்பதைக் கண்டு தன்னைக் கொல்லவேண்டாமென்று கெஞ்சினர். இவர் என்னைக் கோபித்து 'விரைவில் வேலை தீர்த்துவிடடா' என்றார். நான் முன்பின் பார்க்காமல் அவர் கழுத்தை அறுத்துவிட்டேன்" (என்று தேம்பி தேம்பி அழுது கீழ் விழுந்து மூர்ச்சையானன்).

**பச்சையப்ப பிள்ளை.**—சாமியார் யாவையும் வெளியாக்கிய பின், நான் மறைப்பதில் பிரயோஜனமில்லை. நானும் முனியாண்டியுமே என் சிறிய தந்தை இரத்தினசபாபதி பிள்ளையைக் கொன்றோம். கருணாநிதியும் நீலமேகமும் கொலை செய்யவில்லை.

போலீஸார் அவ்விருவர்களையும் கவனமாகப பார்த்துக் கொண்டிருந்தார்கள். சர்க்கார் வக்கீல் "கருணாநிதியையும் நீல மேகத்தையும் விட்டுவிட வேண்டும். அவர்கள்மேல் குற்றமில்லை" என்றார்.

**தாசில்தார்.**—(கருணாநிதியையும் நீலமேகத்தையும் சாக்ஷிகள் நிற்குமிடத்தில் நிறுத்தி நீலமேகத்தைப் பார்த்து) உன் கையில் கத்தி யிருந்ததாகச் சொன்னார்களே ! அது உண்மையா ?

**நீலமேகம்.**—கத்தி பிரேதத்துக்கருகி லிருந்ததைக் கண்டு இக் கத்தி முனியாண்டி வசத்தி லிருந்ததுபோ லிருக்கிறதே என்று எடுத்துப பார்த்தேன்.

**தாசில்தார்.**—கருணாநிதியைப பார்த்து நீர் இரத்தினசபாபதி பிள்ளையின் கைகளைப பிடித்திருந்ததாகச் சொல்லுகிறார் களே ! அது உண்மையா ?

**கருணாநிதி.**—ஆம்! ஐயா! என் சிறிய தந்தை இறந்துவிட்டாரா! உயிரிருக்கிறதா என்று கையைப் பிடித்து நாடி பார்த்தேன்.

**தாசில்தார்.**—உங்கள் இருவர்மேல் குற்றமில்லாமை விருப்பதை யறிந்து நான் சந்தோஷப்படுகிறேன். இச்சாமியார் உங்களுக்காக அதிக தொந்தரவு எடுத்துக்கொண்டு உண்மையை வெளிப்படுத்தி உங்களைக் காப்பாற்றினார். நீங்கள் அவருடைய மனம் சந்தோஷம் அடையும் விதம் செய்யவேண்டும். உங்களை விடுதலையாக்கினேன். நீங்கள் போகலாம். இத்துன்மார்க்கர் இருவரையும் செஷன் கோர்ட்டுக்கு அனுப்பிவிடுகிறேன் (என்று குற்றவாளிகளைக் கொண்டு போய்க் காவலில் வைக்க உத்தரவுசெய்து, சாமியாரைப் பார்த்து) "சாமி! தாங்கள் இவைகளை எவ்விதம் கண்டுபிடித்தீர்" (என்று கேட்டார்.)

**சாமியார்.**—ஐயாவே! அடிமையின் குடிசைக்கெதிரில் ஓர் நாள் மாரியப்பனை, முனியாண்டியும், சின்னையாவும், முனியாண்டியுடைய நண்பர்களும் அடித்து மூர்ச்சையாக்கிப் போனார்கள். அடிமை மாரியப்பனை அழைத்துவந்து உபசரித்தேன். பின் மாரியப்பனால் யாவும் அறிந்தேன்.

**தாசில்தார்.**—சாமி! தாங்கள் இல்லாமற்போனால் உண்மை வெளிவராதென்று சொன்னது உண்மையே! தாங்கள் போகலாம் (என்று விடைகொடுத் தனுப்பினார்).

# 22—ம் அத்தியாயம்

கருணாநிதியும் நீலமேகமும் வெளியானவுடன் காவேரி ஆற்றுக்குச் சென்று நீராடிக் கடம்பநாதரைத் தெரிசித்து, பால் பழம் கற்கண்டு வாங்கிவந்து சாமியாருக்கருகில் கைகட்டி நின்று, "சாமி! தேவரீரைக் கேவலமாக நினைத்துக் கோபித்துக் கொண்ட குற்றத்தை மன்னிக்கவேண்டும்" என்று கீழ்விழுந்து நமஸ்கரித்தார்கள்.

**சாமியார்.**—நீங்கள் அடிமைக்கு நமஸ்காரம் செய்யவில்லை. அடிமைக் கெதிரிலிருந்த விநாயகருக்கே நமஸ்காரம் செய்தீர்கள் (என்று தமக்கெதிரிலிருந்த விநாயக விக்கிரகத்தைக் காட்டி நகைத்து விபூதி கொடுத்து) நீங்கள் அடிமையைக் கோபிக்கவேண்டிய காரண மில்லையே?

**கருணாநிதி.**—தாங்கள் சிதம்பரத்தில் எங்களைப் பார்த்துவந்து போலீஸாருக்குச் சொல்லி, நாங்கள் பிடிபடச் செய்தீரென்றும், நேற்றுத் தாங்கள் சர்க்கார்பக்கம் பேசி எங்கள் மேல் குற்றம் ஏற்றினீரென்றும், தங்களை வெறுத்துத் தூஷித்தோம். அக்குற்றத்தை மன்னிக்கவே கேட்டுக் கொள்கிறோம்.

**சாமியார்.**—சிஷனோடு சிதம்பரத்துக்கு வந்திருந்தபொழுது உங்களை அடிமை பார்க்கவில்லையே! அங்கு ஓர் ஜவளிக் கடையில் மூன்று மகமதியரல்லவோ இருந்தார்கள். ஜவளிக் கடைத் தலைவர் அடிமைக்கும் அடிமையின் சிஷனுக்கும் விலையுயர்ந்த சரிகைச்சேலை கொடுக்கிறேன் என்றும் சொன்னாரே!

**கருணாநிதி.**—அடியேனும் என் தம்பி நீலமேகமும் மற்றொருவரும் மகமதிய உடை தரித்திருந்தோம்.

**சாமியார்.**—நீங்கள் மகமதிய மார்க்கத்தைக் கைபற்றியவர்களாதலால், நீங்கள் ஜாதிபிரஷ்ட ரென்றே சொல்லவேண்டும்.

**கருணாநிதி.**—சாமி! நாங்கள் மகமதிய உடை தரித்திருந்ததே அன்றி, நாங்கள் எங்கள் ஜாதி முறைக்கு விரோதமாக ஒன்

றும் செய்யவில்லை. நாங்கள் பிராமணுள் கொடுத்த சாப் பாட்டையே சாப்பிட்டுவந்தோம்.

சாமியார்.—உங்களைப பார்த்தபொழுது நீங்கள் சரியான மக டதியரென்றே நினைத்தோம். எங்களுக்குக் கொடுக்கிரு மென்ற சேலையும் கிடைக்கும்போ லிருக்கிறது (என்று நகைத்து) நீங்கள் எப்பொழுது சிதம்பரம் போக உத் தேசம் ?

கருணாநிதி.—தேவரீர் விரும்பியதைக் கொடுக்கத் தடையில்லை. தேவரீரை லாலாபேட்டைக்கு அழைத்துப்போய்த் தேவ ரீருக் கொருவேளை பிச்சை செய்விப்போம். பின் எங்கள் டாளி ஒருவர் சிதம்பரத்துக்குப போகவேண்டும்.

சாமியார்.—அடிமை யல்லவோ உங்களை லாலாபேட்டைக்கு அழைத்துப போகவேண்டுமென்று சொல்லிக்கொண்டிருந் தேன். அடிமை உங்களை அழைத்துபபோனுலும், நீங்கள் அடிமையை அழைத்துபபோனுலும், இரண்டும் ஒன்றே ! நீங்கள் மூன்றுபேர் கூட்டாளிகளாயிற்றே ! மற்ெருருவர் எங்கே ?

கருணாநிதி.—அவா திருச்சிராபபள்ளிகளு வக்கீல் பேசப போயிருக் கிருர். மாலை ரெயிலில் வருவார்.

சாமியார்.—அடிமை அவரை லாலாபேட்டையில் பார்க்கவேண் டும். அவரை அழைத்துவர முடியுமா ?

கருணாநிதி.—தேவரீருடைய உத்திரவு பிரகாரம் அழைத்துவரு கிறேன். தேவரீரை இன்றிரவு லாலாபேட்டைக்கு அழைத் துப போகவேண்டுமென் றிருககிறேன். தேவரீர் உத்தரவு கொடுக்கவேண்டும்.

சாமியார்.—அடிமையை எபபொழுது கூபபிட்டாலும் வரத்தடை இல்லை.

கருணாநிதி.—வண்டி கொண்டுவருகிறேன் (என்று நீலமேகத் தோடு நீங்கினுர்).

மறுநாள் காலை சாமியார் லாலாபேட்டைக்கு வந்து விட்டாரென்று அறிந்த ஜனங்கள் பாலும் பழமுங் கொண்டு வந்து கொடுத்துக்கொண் டிருந்தார்கள். கோயம்புத்தூரி லிருந்து சில பிராமணர்கள் சாமியாருக் கருகில் வந்து நிற்ப தைக் கண்டு அவர்களை அழைத்துத் தம் அருகில் உட்காரச் சொல்லி, உட்கார்ந்திருப்பவர்களில் ஒருவரைப் பார்த்து, "ஐயா! சோதிடரே! பல மாதங்களுக்குமுன் நீர் இவ்வூருக்கு வந்திருந்தபொழுது தங்களை அழைத்து அடிமை சொல்லி யது போல் முடிந்ததல்லவா?" என்றார்.

**கோபாலையர்.**—ஆம். தாங்கள் சொல்லியது போலவே முடிந்தது (என்று கண் கலங்கினார்.)

**சாமியார்.**—ஐயோ! பாவம்! உமக்குப் பணத்தின்மேலிருந்த பேராசையால் மகனை இழந்தீர். மகனோடு இரண்டா யிரம் ரூபாவை இழந்தீர். ரூபாவோடு மருமகளையும் இழந்தீர் அல்லவா?

சாமியார் சொல்லியதைக் கேட்ட கோபாலையர், சூரிய நாராயண ஐயரையும் அவர் மனைவியையும், தன் மனைவியை யும் குஞ்சிதபாதம் பிள்ளையையும், மணிவாசகம் பிள்ளையை யும் அவர் மனைவியையும் பார்த்து, "சாமியார் சொல்வதைக் கேட்டீர்களா! சிவபெருமானே எழுந்தருளிச சொல்வதைப் போல் நடந்தவைகளை நேரில் நின்று கண்டதுபோல் சொல் லுகிறார். நான் பாவி சாமியார் சொன்னதைக் கவனிக்கா மல் மோசம்போனேன். யாவருக்கும் கெட்டபின் புத்தி வருவதுபோல் என் கதியானது. நான் இனி என்ன செய்ய இருக்கிறது?" என்று கண்களில் நீரை வடியவிட்டார்.

**சாமியார்.**—(கோபாலையர் மனைவியைப் பார்த்து), அம்மணி! உன் குமாரன் தன் மாமனாரிடத்தில் பணம் கேட்க வேண்டாம் என்று சொன்னதற்கு நீ கோபித்ததால் அல்லவா உன் மகனை இழந்தாய்?

**கோபாலையர் மனைவி.**—சாமி! நான் தெரியாமல் செய்தகுற்றத்திற்காகச சாகுமளவும் துக்கத்தோடிருக்க நேர்ந்தத்தே (என்றழுதாள்).

**சாமியார்.**— சூரியநாராயண ஐயரைப் பார்த்து) ஐயாவே உம்முடைய குமாரத்தியின் நிமித்தம் உம்மை ஈனதிசையில் வைத்துக்கொள்ளாத துணிந்த உம்முடைய மேலான குணத்தை யாவரும் புகழவேண்டியதே! உம்முடைய நற்செய்கை வீணபோகாது. நீர் மேன்மையான நிலைமையிலிருக்க அந்த நாராயணன் உதவி செய்வார். நீர் கவலையற்றிரும் (என்று விபூதித் தட்டை எடுதது நீட்டினார்).

**சூரியநாராயண ஐயர்**—சாமி! என் குமாரத்தி என்னைவிட்டு நீங்கினள். அவள் உயிரோடிருக்கிருளோ அல்லது இறந்தாளோ தெரியவில்லை. என் மருமகன் இராமகிருஷ்ணய்யருக்கு இன்னும் கருமாதிச சடங்கு ஆகவில்லை. என் குமாரத்தியால் அசசடங்கு நிறைவேற வேண்டியதால என் மகளின் கதியை அறியாமல் சடங்கை நடத்த மனமில்லாமலிருக்கிறோம்.

**சாமியார்.**—(நகைத்து) சடங்கை மங்களகரமாய் நடத்த வேண்டியதே!

**சூரியநாராயண ஐயர்.**—கருமாதி சடங்கையா மங்களகரமாக நடத்தவேண்டும்?

**சாமியார்.**—ஏன் மங்களகரமாய் நடத்தக்கூடாது? அங்கு வருகிறவர்கள் யாரென்று பாரும்.

அச்சமயத்தில் கருணாநிதியும் நீலமேகமும் அன்னியனொருவனும் வருவதைக் கண்டு, கோபாலையரும் அவர்மனைவியும் சூரியநாராயண ஐயரும் அவர் மனைவியும் எழுந்தோடி, அன்னியனைக கட்டிப் பிடித்துக்கொண்டு "அப்பா இராமகிருஷ்ணா! இராமகிருஷ்ணா! எங்கள் வயிற்றில் பாலை வார்த்தாயா! நீ காவேரியாற்றில் விழுந்து உயிர்பெற்று வந்தது எங்கள் தவப்பயனே!" என்று கதறினார்கள்.

**சூரியநாராயண ஐயர்.**—அப்பா ! நீ உயிரோடு வந்த காலத்தில் என் மகள் உயிரோடில்லாமல் போனதைக் குறித்துத் துக்கப்படுகிறேன்.

**இராமகிருஷ்ணன்.**—என்ன சொன்னீர் ! என் மனைவி இறந்தாளா ? ஆ ! ஆ ! நாராயணு ! நான் என்ன செய்யப் போகிறேன். ஓ ! அன்னபூரணி ! நான் காவேரியாற்றில் விழுந்திறந்தேன் என்று கேள்விப்பட்டபின் நீ உலகிலிருப்பது நன்றல்லவென்றோ உயிர் துறந்தாய். ஆ! என் கண்மணி ! நான் இறந்தேன் என்று கேள்விப்பட்டிருக்கும் உன்னை நீ எதிர்பார்க்காத சந்தோஷத்தில் அழுத்தவேண்டுமென்ற எண்ணம் குலைந்ததே !, நான் இனி என்ன செய்யப்போகிறேன், நான் இனி உயிரோடிருப்பதில் பலன் இல்லை. (என்று முகத்தில் அறைந்துகொண்டு ஓவென் றலறினான்).

பின் அருகிலிருந்த மரத்தில் தலையை மோதிக்கொண்டு என் தலை உடையவில்லையே என்று மீண்டும் மோதிக்கொள்ளப் போனவனைப் பக்கத்தி லிருந்தவர்கள் பிடித்துக் கொண்டுவந்து சாமியார் முன் விட்டு, “சாமி ! தாங்கள் இவருக்குத்தைரியம் சொல்லவேண்டும்” என்று கெஞ்சினார்கள்.

**சாமியார்.**—அப்பா ! நெடுநாளைக்கு முன் இறந்து போனவளைக் குறித்து நீ வியசனப் படுவதில் பிரயோசனமில்லை. நீ வேறு பெண் பார்த்து விவாகம் செய்துகொண்டு சுகமாயிருக்கலாம். நீ வேண்டுமானால் நானே ஓர்பெண் தேடி உனக்கு விவாகம் செய்துவைப்பேன்.

**இராமகிருஷ்ணன்.**—சாமி! என் உயிருக்குயிரான என் அன்னபூரணி போனபின் நான் வேறு பெண்ணைக்கொண்டு உயிர்வாழ்வேன் என்றோ நினைத்தீர். நான் இனி உயிரோடிருக்கத் துணியேன் (என்று கண்களில் நீர் தாரையாக வடியவிட்டான்)

அங்கிருந்தவர்கள் யாவரும் இராமகிருஷ்ணன் அழுவதைக் கண்டு தாங்களும் அழுதார்கள்.

**சாமியார்.**—இராமகிருஷ்ண ஐயரே! உலகில் ஒருவனுடைய மனைவி இறந்தால் தானும் அவளோடு இறந்துபோகிறேன் என்று சொல்லுவதும், சில நாள்களுக்குப் பின் வேறு விவாகம் செய்துகொண்டு முதல் மனைவியை மறந்து சந்தோஷமாக இருப்பதும் வழக்கந்தானே.

**இராமகிருஷ்ணன்.**—சாமி! தாங்கள் என்னை அவ்விதம் நினைக்கவேண்டாம். எப்பொழுது என் பிரிய மனைவி என்னை விட்டுப் போய்விட்டாளோ அவளுக்குப் பின் நான் உயிரோடிருக்கேன் இது சத்தியம்! சத்தியம்!

இராமகிருஷ்ணன் சொல்லியதைக் கேட்ட அவன் தாய் தந்தை, மாமனார் மாமியார், மற்றவர்களும் அதிக பயங் கொண்டு அழுதார்கள்.

**சாமியார்.**—இராமகிருஷ்ண ஐயரே! நீர் அவ்விதம் சொல்ல வேண்டாம். நீர் சற்புத்திரர். உம்முடைய குலத்தார் போல் பொருள்மேல் ஆசை கொள்ளாதவர். உம்மை நாராயணன் காப்பாற்றுவான். அம்மா! அன்னபூரணி! உன் நாயகன் படுந்துக்கத்தைக் கண்டு சந்தோஷத்திலோ பூரித்திருக்கிறாய். உன் நாயகன் துக்கத்தை விரைவில் வந்து போக்கு.

அப்பொழுது சாமியாருடைய குடிசைக்குள்ளிருந்து ஓர் பெண் ஓடிவந்து இராமகிருஷ்ண ஐயரைக் கட்டிப்பிடித்துக்கொண்டும் முகத்தோடு முகம் வைத்துக்கொண்டும் ஆனந்தக்கண்ணீர் சொரிந்தாள்.

**இராமகிருஷ்ணன்.**—ஆ! அன்னபூரணி! நீ உயிரோடிருக்க, என் மனதை ஏன் சோதித்தார்கள்?

சூரியநாராயண ஐயரும் அவர் மனைவியும் ஓடி, அன்னபூரணியைக் கட்டிப் பிடித்துக்கொண்டு, "ஆ! மகளே! மகளே! எங்கள் வயிற்றில் பாலை வார்த்தாய். இறந்துபோன உன்னைச சாமியாரோ உயிர் கொடுத்து எழுப்பிவிட்டார்" என்றனர்.

அன்னபூரணி தன் நாயகனை விட்டுச் சாமியாருக் கருகிலிருக்கும் விநாயகரை விழுந்து நமஸ்கரித்து, சாமியார்

நட்டோடு கொடுத்த விபூதியை எடுத்துப் பூசிக்கொண்டு, பின் தன் மாமனாருக்கும் மாமியாருக்கும் தன் தந்தை தாய்க்கும் நமஸ்கரித்து நின்றாள்.

**சாமியார்.**—அம்மா! அன்னபூரணி! நீ சிதம்பரத்தில் தூக்குப் போட்டுக்கொள்ளப் போனது தடைப்பட்டு எங்களைக் கண்டது உன்னுடைய நற்காலமென்று சொன்னது உண்மையாயிற்றல்லவா? உன் நாயகன் பெருந் தனவந்தராயிருக்கிறார். நீ உன் நாயகனோடு சுகமாய் வாழ வைகுந்தநாதன் கருபுணரிவார். (என்றுசொல்லியபின் கோபாலையரை அழைத்து) ஐயாவே! உம்முடைய குமாரன் தன் மாமனார் கொடுத்த இரண்டாயிரத்தைத் திருப்பிக் கொடுத்துவிட்டதால் நாராயணன் அவருக்கு ஒரு லக்ஷரூபா கொடுத்திருக்கிறார். இனிமேல் நீங்கள் யாதொரு கவலையுமின்றிச் சுகஜீவனம் செய்துகொண்டிருக்கலாம்.

**கோபாலையர்.**—சாமி! தங்களுடைய திருக்கடைக்கண் கடாக்ஷ வீக்ஷண்ணியம் எங்கள்மேல் பட்டதால் நாங்கள் கிருதார்த்தர்களானோம் (என்று விநாயகரை நமஸ்கரித்து விபூதி அள்ளிப் பூசிக்கொண்டனர்).

மற்றவர்களும் விநாயகரை நமஸ்கரித்து விபூதி யள்ளிப் பூசிக்கொண்டார்கள்.

**கருணாநிதி.**—சாமி! தாங்கள் பிச்சைக்கு அடியேன் வீட்டுக்கு எழுந்தருள வேண்டும் (என்று கெஞ்சினார்).

**சாமியார்.**—அப்பா! அடிமையை ஏன் உம்முடைய வீட்டுக் கழைக்கிறாய்? உம்முடைய மனைவியும் வீட்டில் இல்லை போல் காண்கிறதே. அடிமை பாலும் பழமும் சாப்பிடுகிறதே யன்றி வேறொன்றும் சாப்பிடுகிறதில்லை யென்பது தெரியுமல்லவா (என்று நகைத்தார்).

**கருணாநிதி.**—நாங்கள் குளித்தலையில் அடைப்பட் டிருந்த பொழுது என் மனைவி எங்களுக்குச் சாப்பாடு கொண்டு

வந்து கொடுத்துச் சில நேரம் நன்றாய்ப் பேசியிருந்தவள் பிறகு புத்தி மாறுட்டமாய்ப் பேசிப் போனாள்.

**சாமியார்.**—புத்தி மாறுட்டமென்று என்ன காரணத்தால் சொல்லுகிறீர்? என்ன சொல்லிப் போனாள்?

**கருணாநிதி.**—என்னைக் கொலையாளியென்று யாவரும் சொன்னதாலும் நாங்களும் ஓடிவிட்டதாலும் என்னுடைய மனைவிக்கு புத்தி மாறுட்டமாய்விட்டது. எங்களைக் கண்டபொழுது எங்களுக்காகக் கச்சேரியில் பேசி எங்களை லாலாபேட்டைக்கு அழைத்துப் போகிறேன் என்றும் தான் திருச்சிராப்பள்ளிக்குப் போய் வருகிறேன் என்றும் சொல்லிப்போனாள்.

**சாமியார்.**—உமது மனைவி உண்மையையே சொல்லிப் போனாள்போ லிருக்கிறது. அவளைத் தேடிப் பார்த்து அழைத்துவர ஒருவரையும் அனுப்பவில்லையா?

**கருணாநிதி.**—புத்தி மாறுட்டத்தால் சொல்லியதோ உண்மை இரண்டொரு நாள் பொறுத்து நானே போய்த் தேடிப் பார்த்துத் தங்களிடம் கொண்டுவரவேண்டும். தாங்கள் அவளுடைய பைத்தியத்தை நீக்கவேண்டும். தாங்கள் இப்பொழுது தயவுசெய்து திருமனமிரங்கி அடியேன் வீட்டுக்கு எழுந்தருளவேண்டும்.

சாமியார் தன் சீஷரோடு எழுந்தார். கோயம்புத்தூரிலிருந்து வந்தவர்களும் எழுந்தார்கள். மணிவாசகம் பிள்ளை தன் மகளைக் குறித்துச் சாமியாரைக் கேட்கவேண்டுமென்று எண்ணியிருந்தது முடியாமற்போயிற்று. சமையங் கிடைத்தபோது கேட்கலாமென்று சாமியாரோடு நடந்தார். கருணாநிதி சாமியாரையும் அவரோடு வந்தவர்களையும் வீட்டுக்கு அழைத்துவந்து உட்கூடத்தில் இரத்தின சமுக்காளம் விரித்து மத்தியில் நாற்காலி ஒன்று போட்டுச் சாமியாரை நாற்காலியிலும் மற்றவர்களை இரத்தின சமுக்காளத்திலும் உட்காரவேண்டினார். சாமியார் நாற்காலியில் உட்காராமல்

மற்றவர்களைப்போல் சமுக்காளத்தில் உட்கார்ந்தார். நீல மேகம் பழம் கற்கண்டு மிட்டாய் பாக்கு வெற்றிலை நிறைந்த தட்டுகளைக் கொண்டுவந்து கூடத்தில் நிறைத்தான்.

**சாமியார்** —(கருணாநிதியைப் பார்த்து) அப்பா! நீர் வீட்டை அலங்கரித்து எங்களையெல்லாம் அழைத்துவந்தீர். உம்முடைய மனைவி யிருந்தால் எங்களுக்கு அதிக மரியாதை நடந்திருக்கும். அவள் வீட்டிலில்லாமலிருப்பது குறைவாகவே காணப்படுகிறது.

**கருணாநிதி**.—சாமி! தாங்கள் எங்களைச் சிதம்பரத்தில் கண்டு தீவினையால் எங்களைப் பிடித்த பீடை விரைவில் நீங்கி விடும் என்று விபூதிகொடுத்து ரக்ஷித்தீர்கள். தங்களைக் கண்டபின் எங்களைப் பிடித்திருந்த சனியன் சூரியனைக் கண்ட பனிபோல் நீங்கினதால், என் மனைவி தங்களால் விரைவில் குணப்படுவாள் என்று நினைக்கிறேன் (என்று வெள்ளிப் பாத்திரங்களில் பாலும் பழமும் மிட்டாயும் சாமியாருக்கு முன் கொண்டுவந்து வைத்தார்).

**சாமியார்** —அடிமை யாவரையும் விட்டுச் சாப்பிடுகிறது அழகல்ல. பிராமணர்களுக்குப் பழமும் கற்கண்டும் வெற்றிலைப் பாக்கும் கொடுத்து மற்றவர்களுக்கு மிட்டாய் முதலானதையும் கொடுக்கச் செய்.

**நீலமேகம்** —சாமி! நானும் இராமகிருஷ்ணனும் கொடுக்கிறோம் (என்று தட்டுகளைத் தாங்கி யாவருக்கும் கொடுத்துக்கொண் டிருந்தார்கள்)

**கருணாநிதி**.—எல்லாரும் சாப்பிடுகிறார்கள்; தாங்கள் எதாகிலும் கொஞ்சம் சாப்பிடவேண்டும் (என்று வேண்டினார்).

**சாமியார்**.—அப்பா! அடிமையும் சீடனும் சிதம்பரம் வந்து உம்முடைய ஜவளிக் கடையைப் பார்த்துக்கொண் டிருந்தபொழுது, அங்கிருந்த சேலைகளில் அடிமைக்கும் அடிமையின் சீடனுக்கும் ஒவ்வொன்று கொடுக்கிறேன் என்றீரே! அதை மறந்துவிட்டாற்போல் காண்கிறது (என்று நகைத்தார்).

**கருணாநிதி.**—நகைத்து ! சாமி ! நான் மறக்கவில்லை (என்று வீட்டுக்குள்ளோடி ஒரு மூட்டையைக் கொண்டுவந்து அவிழ்த்து இரண்டு சேலைகளை எடுத்துச் சாமியார் பக்கத்திலொன்றும் சீடன் பக்கத்திலொன்றும் வைத்து) இப்பொழுதாகிலும் சாப்பிடுங்கள் (என்றார்).

**சாமியார்.**—நீர் அவிழ்த்த மூட்டையில் இன்னுமொரு சேலை இருக்கிறதுபோல் காண்கிறது.

**கருணாநிதி.**—ஆம் ! சாமி ! இன்னும் ஓர் சேலை இருக்கிறது.

**சாமியார்.**—அச்சேலையை அன்னபூரணி யம்மாளுக்குக் கொடுத்துவிடும்.

கருணாநிதி நகைத்துக்கொண்டே அன்னபூரணிக்கு மற்றச் சேலையைக் கொடுத்தார்.

**சாமியார்.**—அப்பா ! நீர் அன்னபூரணி யம்மாளுக்குக் கொடுத்த சேலையை அந்தம்மாள் கட்டிக்கொள்ளுவாள். நாங்கள் இச்சேலைகளை என்ன செய்கிறது ? எங்களுக்குப் பெண்சாதிமார்களிருந்தால் அவர்களுக்குக் கொடுக்கலாம். அடிமை வேடிக்கையாக உம்மைச் சேலை கேட்டேன். எங்களுக்குச் சேலைகள் வேண்டுவதில்லை. நீர் இதற்குப்பதிலாக ஏதாகிலும் ஓர் அடையாளம் கொடுத்தாற் போதுமானது.

**கருணாநிதி,**—தங்களுக்கு என்ன வேண்டும் ? சொன்னால் கொடுக்கத் தடையில்லை.

**சாமியார்.**—நீர் எங்களுக்குக் கொடுத்த சேலையின் விலை நூறு நூற்றைம்பது இருக்குமென்று நினைக்கிறேன். நீர் அதிகவிலை உள்ளதைக் கொடுக்கிறதற்குப் பதிலாக உம்முடைய விரலில் அணிந்திருக்கும் மோதிரத்தைக் கொடுத்தால் அதுவே போதுமானது.

**கருணாநிதி.**—சாமி ! நான் போட்டிருக்கும் மோதிரம் பத்துப்பதினைந்துக்குமேற் போகாது. அதைக் கொடுக்கப் பிரியமில்லை. நான் நானூறு ஐந்நூறு பெறத்தக்க வைர

மோதிரம் ஒன்று கொடுக்கிறேன். அதை என் அடையாளமாகப் போட்டுக்கொள்ளுங்கள்.

**சாமியார்.**—அப்பா! அடிமை நாடோடி. நாங்கள் இரவிலும் பகலிலும் தனிவழியாகப் போகிறவர்கள்! எங்கள் கையில் விலையுயர்ந்த மோதிரத்தைப் போட்டுக்கொண்டு போவது எங்கள் உயிருக்கே ஆபத்தாய் முடியும். ஆனதால் அடிமைக்கு வைரமோதிரம் வேண்டாம். நீர் போட்டிருப்பதைக் கொடுப்பதே போதுமானது.

**கருணாநிதி.**—சாமி! இந்த அற்ப வஸ்துவைக் கேட்கவேண்டாம். வேறெதைக் கேட்டாலும் கொடுக்கச் சித்தமாக இருக்கிறேன்.

**சாமியார்.**—அந்த மோதிரம் என்ன மகத்துவம் கொண்டிருக்கிறது? ஏதாகிலும் தேவதை வசியமோ? அராபிநைட்ஸ் அலாதீன் கதைபோல் பூதங்கள் வசியமோ (என்று நகைத்தார்).

**கருணாநிதி.**—சாமி! எனக்கு விவாக மானபொழுது நான் அணிந்திருந்த மோதிரத்தை என் மனைவிக்குக் கொடுத்தேன். என் மனைவி தான் போட்டிருந்த மோதிரத்தை எனக்குக் கொடுத்து நீர் இதை ஒருவருக்கும் கொடுக்கக் கூடாதென்று சொன்னாள். நான் ஒருவருக்கும் கொடுக்க மாட்டேன் என்று சத்தியம் செய்தேன். அவளும் நான் போட்ட மோதிரத்தை ஒருவருக்கும் கொடுக்கமாட்டேன் என்று சத்தியம் செய்தாள். ஆனதால் அதை விட்டு வேறு எதையாகிலும் கேட்க வேண்டுகிறேன்.

**சாமியார்.**—அடிமை உம்முடைய மனதைப் பார்க்க அற்பமான தொன்றைக் கேட்டேன். அதைக் கொடுக்கச் சம்மதப்படாத உமக்கு வேறெதைக் கொடுக்க மனந்துணியும். போதும்! போதும்! உம்முடைய உபசாரம்! (என்று தன் சீடனைப் பார்த்து) அப்பா! எழுந்திரு!

நமக்கிங்கு வேலையில்லை (என்று எழுந்தார். சீடனும் எழுந்தவள்வில் இருவரும் நடந்தார்கள்.)

மணிவாசகம் பிள்ளையும், நீலமேகமும், இராமகிருஷ்ண னும் கருணாநிதி யருகிற் சென்று, "நீரென்ன பைத்தியக்கார ராக இருக்கிறீர்? உயிரைக் காப்பாற்றியவருக்கு இதைக் கொடுக்கத் தடை செய்யலாமா" என்று கோபித்துக்கொண் டார்கள். கருணாநிதி போகிற சாமியாரைத் தடுத்து, "சாமி! தாங்கள் எங்கள் உயிரைக் காப்பாற்றினீர். இந்த அற்பமான மோதிரத்தையா தங்களுக்குக் கொடுப்பது என்ற எண்ணத் தோடு மறுத்தேன். தங்களுக்கு இந்த மோதிரமே வேண்டு மென்பதால் பெற்றுக்கொள்ளுங்கள்" என்று சாமியாரை அழைத்து வந்து உட்காரவைததுத் தான் போட்டிருந்த மோதிரத்தைக் கழற்றிக் கொடுத்தான்.

சாமியார் (நகைத்து) "அப்பா! முடிவாக மோதிரத் தைக் கொடுக்கத் துணிந்ததைக் குறித்துச சந்தோஷப்படு கிறேன்" -என்று மோதிரத்தை வாங்கி விரலில் போட்டுப் பார்த்து அது விரலுக்குக் கொஞ்சம் பெரிதாக விருந்ததால் தன் விரலிலுள்ள மோதிரத்தைக் கழற்றிக் கீழ்வைத்துக் கரு ணாநிதி கொடுத்த மோதிரத்தை முதலில் போட்டுப் பின் கழற்றி வைத்த மோதிரத்தைப் போட எடுத்தார். அப்பொ ழுது கருணாநிதி சாமியாருடைய மோதிரத்தைக் கையிலிருந்து பிடுங்கி "இது யாருடைய மோதிரம்?" என்றான்.

**சாமியார்.**—அப்பா! அதை என் கேட்கிறீர்! இம்மோதிரமும உம்மைப்போல் வேறொருவரால் கொடுக்கப்பட்டது.

**கருணாநிதி.**—சாமி! இம்மோதிரத்தை ஆண் பிள்ளை யிடத்தி லிருந்து பெற்றீரா? அல்லது பெண்பிள்ளை யிடத்தி லிருந்து பெற்றீரா?

**சாமியார்.**—நீரேன் அதைக கேட்கிறீர்?

**கருணாநிதி.**—தாங்கள் இதை யாரிடத்திலிருந்து பெற்றீ ரென்று நான் அறிய விரும்புகிறேன். தாங்கள் தயவுசெய்து சொல்லவேண்டும்,

**சாமியார்**—நீர் மிக்க ஆவலோடு கேட்பதால் நான் உண்மையைச் சொல்லவே வேண்டும்! அடிமை இதை ஓர் பெண் பிள்ளை யிடத்திலிருந்து பெற்றேன்.

**கருணாநிதி.**—அவளேன் இதைத் தங்களுக்குக் கொடுத்தாள்?

**சாமியார்.**—(நகைத்து) என் இரகசியத்தை வெளியாக்கச் சொல்லுகிறீர். நீர் மனமகிழ என் இரகசியத்தை உமக்குச சொல்வது அவசியமாக இருக்கிறது. ஓர் பெண் அடிமையின்மேல் ஆசைகொண்டு தன்னை மனைவியாக் இக்கொள்ள வேண்டினாள். நான் பன்முறை தடுத்தும் அடிமை நிஷ்டையி லிருக்கும்பொழுதெல்லாம் வந்து அடிமையின் நிஷ்டையைக் கெடுத்து அடிமையைத் தன் வச மாக்கிக்கொண்டாள். அவள் கொடுத்த மோதிரமே இது (என்று நகைத்தார.

**கருணாநிதி.**—உம்மை முற்றிலும் துறந்தவரென்று எண்ணி யிருக்க நீர் அந்தரங்கத்தில் வேறாகக் காணப்படுகிறீர்

**சாமியார்.**—பிரம்மரிஷி என்று பேர் கொண்ட விசுவாமித்திரரும் பெண்வலையில் சிக்கிக்கொள்ளவில்லையா (என்று நகைத்தார்.)

**கருணாநிதி.**—அப்படியாவி சிவஞானத்தை மேன்மையாக நினைத்திருந்தேன். அவள் எனக்கு அவமானத்தை விளைவித்ததோடு, தான் ஒருவருக்கும் கொடுக்கேன் என்று பிரமாணிக்கம் செய்து போட்டிருந்த மோதிரத்தை உமக்குக் கொடுத்து விட்டா ளல்லவா? அவள் என் பார்பார்வையில் அகப்பட்டால் அவளைக் கொல்லாமல் விடேன்.

**சாமியார்.**—(துடிதுடித்து) என்ன சொன்னீர்? சிவஞானம் உம்முடைய மனைவியா? அடிமை உம்முடைய மனைவி யென்று அறியாமல் ஓர் பெண்பழியை ஏற்றுக்கொண்டேன் (என்று கவலைகொண்டார்

அங்கிருந்த எல்லாருக்கும் சாமியார்மேல் அருவருப்புத் தட்டியது.

**கருணநிதி.**—ஐயா! நீர் என் உயிரைக் காப்பாற்றினவராதலால் உம்மைத் தண்டிக்காமல் விட்டுவிட நேரிட்டது. ஆயினும் கொலை செய்யாமலிருந்த என்னைக் கொலை செய்தேன் என்று சொன்னார்கள். இப்பொழுது அத்துன்மார்க்கியைக் கொலைசெய்து கொலைகாரன் என்ற பெயரை ஏற்றுக் கொள்ளுவேன் (என்று கடுங்கோபத்தோடு சொன்னான்).

**சாமியார்.**—அப்பா! நான் அறியாமல் செய்த குற்றத்தால் உனது மனைவியைக் கொன்றுவிடக் கங்கணம் கட்டிக் கொண்டிருக்கிறாய். அடிமை உன்னுடைய கோபத்தை மாற்றச் சக்தி யற்றிருக்கிறேன். ஆனதால் நீ செய்யப் போகுங் கொலை அடிமையைப் பற்றவேண்டியதே!

அடிமை அம்மாதை அழைத்துவருகிறேன். அடிமை காண் காண அவளைக்கொன்றுவிடு.

**கருணநிதி.**—அன்னபூரணியம்மாளை ஒளித்துவைத்திருந்தது போல் அத்துரோகியையும் ஒளித்துவைத்திருக்கிறீரோ! அவள் எங்கிருக்கிறாள் சொல்லு; நானே போய்க் கொண்டுவந்து உம்முடைய கண் காணக் கொல்லுகிறேன்

**சாமியார்.**—உன்னுடைய மனைவி உனக்காக அதிக சிரமம் எடுத்துக்கொண்டதோடு நீ குளித்தலையில் அடைபட்டிருந்தபொழுது உனக்குச சாப்பாடு கொண்டுவந்து கொடுத்துக் கச்சேரியில் ஓர் வக்கீலைப்போலிருந்து உன்க்காகப் பேசுவேன் என்றவளையா கொல்ல எண்ணங் கொண் டிருக்கிறீர்?

**கருணநிதி.**—ஆம்! அவள் குளித்தலையில் சொன்னதைக் கேட்டு அவளுக்குப் புத்தி மாறாட்டமென்று நினைத்தேன். இப்பொழுது அவள் துர்சசெய்கையை அறிந்த பின் அவளைக் கொல்வதே முறமை. அவள் எங்கிருக்கிறாள் சொல்லும்! சொல்லும்! (என்று துடிதுடித்துக் கேட்டான்).

**சாமியார்.**—அவளைக் கொல்ல அவசரப்படுகிறாய். அவளிறந்தால் அடிமையும் இறக்கவேண்டியதே! அவளை வரவழைக்கிறேன் பார் (என்று) "சிவஞானம்! உன் புரு

ஷன் உன்னைக் கொல்ல விரும்புகிறார். விரைவில் வா" (என்றுசொல்லித் தன் ஜடை முடியை எடுத்தெறிந்த தோடு தான் போட்டிருந்த அங்கியையும் கழற்றி எறிந் தார்).

கருணாநிதி —ஆ! சிவஞானம்! நீயா சாமியார் வேடத்தோ டிருந்தாய் (என்றோடிப்போய்க் கட்டிப் பிடித்துக் கொண்டு) ஆ! என் கண்மணி! உன்னை என்னவென்று சொல்லுவேன் மகமதிய வேஷத்தோடு சிதம்பரத்தி லிருந்த என்னைக் கண்டுபிடித்து என்னைக் கொண்டு வரச் செய்தும், நான் குளித்தலையில் காவலறையில் அடைபட்டிருந்தபொழுது எனக்குச் சாப்பாடுகொண்டு வந்து கொடுத்தும், நானே கச்சேரியில் ஓர் வக்கீலைப் போல் பேசப்போகிறேன் என்றும், லாலாபேட்டைக்கு உங்களை அழைத்துப் போகிறேன் என்றும் சொல்லி, அவ்விதமே முடித்துக் காட்டிய உன் வல்லமையை நான் எவ்விதம் புகழ்வேன்! உன்னைப் புகழ்ந்து கூற என் மனதில் நிறைந்துள்ளதை வெளியிற் கொண்டு வந்து சொல்ல முடியவில்லை (என்று கன்னத்தில் முத் தங் கொடுத்தார்).

சிவஞானம்.—(அங்கிருந்த பிராமணர்களுக்கும் பெரியோர் களுக்கும் கீழ்விழுந்து நமஸ்கரித்து) ஐயன்மீர்! சிறி யாள் புருஷனைக் காப்பாற்றும்பொருட்டு இவ்வேடந் தாங்க நேரிட்டது. இவ்வேடம் பூண்டு நான் உங்கள் விஷயத்தில் செய்த குற்றங்களை மன்னிக்க வேண்டும் (என்று வேண்டினாள்).

பிராமணர்கள் யாவரும் சிவஞானத்தை ஆசீர்வதித்துப் புகழ்ந்தார்கள். அங்கிருந்த கற்பகவல்லி அம்மாளும் பாக்கி யம் அம்மாளும் ஓடிப்போய்ச சிவஞானத்தைக் கட்டிப்பிடித் துக்கொண்டு, "மகளே! மகளே!" என்று முகமெல்லாம் முத் தங்கொடுத்தார்கள். அன்னபூரணி சிவஞானத்தைக் கட்டிப் பிடித்துக்கொண்டு, "சிவஞானம், என்னிடத்திலும் உன் இரகசியத்தைச் சொல்லாமலிருந்தா யல்லவா?" என்றாள். நீல

மேகமும் இராமகிருஷ்ணனும் சிவஞானத்தைப் புகழ்ந்து, "தங்களுக்குச சிஷ்ஷனுயிருக்கும் இந்தப் புண்ணியவான் யார்? இவர் எப்படித் தஙகளுக்குச சிஷ்ஷனுனர்?" என்று கேட்டார்கள்.

சிவஞானம் நீலமேகத்தைப் பார்த்து, "அத்தான்! அவர் யாரென்று உங்களுக்குத தெரியவில்லையா?" என்று சிஷ்ஷனைப் பார்த்து, "அப்பா! நீ யார் என்று அவர்களுக்குச் சொல்" என்றுள். சிஷ்ஷன் தான் போட்டிருந்த மேல் உடையை அவிழ்த்தெறிந்தான். மணிவாசகம் பிள்ளையும் பாக்கியமும் கற்பகவல்லியும் ஓடிப்போய்க் கட்டிப்பிடித்துக் கொண்டு, "ஆ! ஞானவடிவு! நீயா சாமியாருக்குச் சிஷ்ஷனுக இருந்தாய்!" என்று ஆனந்தக்கண்ணீர் சொரிந்தார்கள். நீலமேகம் ஞானவடிவைக் கண்டு, அவள் கைகளைப் பிடித்துக்கொண்டு, "என் ஆருயிரே! நான் அடைந்த துக்கமெல்லாம் சந்தோஷமாக மாறின" என்றுன்.

**சூரியநாராயண ஐயர்.**—அம்மா! சிவஞானம்! நீ சாமியார் வேடம் பூண்டு அசாத்தியமான காரிரிங்களைச செய்து முடித்தாயாயினும், உன்னிடத்தில் வந்த பிணியாளிகளை யெல்லாம் குணப்படுத்தினதாகவும் கேள்விப்பட்டேன். நீ அதை எவ்விதம் செய்தாய்?

**மணிவாசகம் பிள்ளை.**—சிவஞானத்தின் தந்தை மிகுசமர்த்தரான வைத்தியரென்று உமக்குத் தெரியாதா? தன் தகப்பனிடத்தில் வைத்தியம் கற்றுக்கொண்டு அனேகரைக் குணப்படுத்திஞற்போ லிருக்கிறது.

**சிவஞானம்.**—ஆம்! ஐயா! நான் என் தந்தையிடத்தில் வைத்தியம்கற்றிருந்ததாலும்,வெளிக்குக் காட்டிக்கொள்ளாமலிருந்து, சாமியார்வேடங் கொண்டபின் அதை வெளிக்குக்காட்டினேன்.

அத்தருணத்தில் மாரியப்பன் ஓடிவந்து சிவஞானத்தைப் பார்த்து, "அம்மணி! உம்முடைய சாமார்த்தியத்தை என்னவென்று சொல்லுவேன். நான் நெடுநாள் தங்களோடு,

திரிந்தும் தங்களையும் தங்களுடைய சேஷ்னையும் கண்டு கொள்ள முடியாமற் போயிற்றே!'' என்று சந்தோஷத்தில் பூரித்தான்.

**சிவஞானம்.**—மாரியப்பா! நீ எடுத்துக்கொண்ட தொந்தரவுக்கு நானும் என் நாயகனும் பிரதிசெய்வது முடியாது. ஆயினும் உன்னை நல்ல நிலைமையில் வைத்துப் பார்ப்போம் (என்று சொல்லித் தன் நாயகனைப் பார்த்து, தாங்கள் தங்களுடைய மனைவி சாமியாரோடு உறவாளென்றும் அவளைக் கண்டால் கொன்று விடுவேனென்றும் அசசாமியாரிடமே சொன்னீரே அது உண்மையா? (என்று நகைத்தாள்).

**கருணாநிதி.**—அவவிதம் சொல்லவில்லை. சாமியார் மிகுசமர்த்தர் அவர் முதல் நாள் கசசேரியில் சர்க்கார் வக்கீலோடிருந்து கேட்ட கேள்விகளால் நாங்களே கொலை செய்தோம் என்று மெய்ப்பித்ததைக்கேட்டு நாங்கள் தப்புதலான மார்க்கமில்லையென்று அன்றிரவெல்லாம் நானும் நீலமேகமும் இப்பாவி எங்கிருந்து வந்தான் என்று சபித்துக்கொண்டிருந்தோம். மறுநாள் சாமியார் எங்கள் பக்கம் பேச வைக்கப்பட்ட வக்கீல் அருகிலிருந்து முதல் நாள் கேட்ட சாக்ஷிகளையே எங்கள் பக்கம் அனுகூலமாகும் விதம் சமர்த்தாய்க் கேள்விகள் கேட்டுக் குற்றவாளிகளைக் கண்டுபிடித்தார். அசசமர்த்தரைப் பெரிய வக்கீலாக நியமிக்கவும் உன்னை அவருக்குமனைவியாக்கிவிடவும் யோசித்துக் கொண்டிருக்கிறேன். அவருக்கு மனைவியாக உனக்கிஷ்டமிருந்தால் அவரைக் கண்டுபிடித்துக் கொண்டுவா (என்று நகைத்தார் யாவரும் களிரென்று நகைத்தார்கள்).

**சிவஞானம்.**—நாயகன் சொல்லை நாயகி கேட்கவேண்டுமென்ற விதியிருப்பதால், தாங்கள் சொல்லும் விதம் அசசாமியாருக்கே மனைவியாவேன். நான் தஙகளுக்குப் போட்ட மோதிரத்தை ஒருவருக்கும் கொடுக்கேன் என்று வாக்குக்கொடுத்துத் தாங்கள் அதை வேறொருவருக்குக் கொடுத்துவிட்டீர். அது நியாயமோ?

**கருணாநிதி.**—நான் உனக்குப் போட்ட மோதிரத்தைக் கொடுக்கமாட்டேன் என்று சத்தியம் செய்து கொடுத்துப் பின் ஓர் ஆசை நாயகனுக்குக் கொடுத்தது நியாயமோ (என்று நகைத்தார். யாவரும் கெக்கலி கொட்டி நகைத்தார்கள்).

சிவஞானத்தை அறிந்த பெண்பிள்ளைகள் அநேகர் வந்து சிவஞானத்தைக் கட்டிப் பிடித்துக்கொண்டு "சிவஞானம்! நீயா சாமியார் வேஷத்தோடிருந்தாய்! அம்மா உன் வல்லமையை என்னென்று சொல்லுவோம். நாங்கள் உன் உண்மையை அறிந்துகொள்ளாமலிருக்க எங்களோடு அநேக முறை சாமியாருக்குப் பாலும் பழமுங் கொண்டுவந்து, "நான் பாவி! சாமியாரைப் பார்க்க வரும் பொழுதெல்லாம் அவர் நிஷ்டையி லிருக்கிறார் ஆனதால் அவரைப் பார்க்க முடியவில்லை, யென்று சொல்லிக்கொண் டிருந்தாயே! அம்மா! நீ சாமியார் வேஷத்தோடு நோயாளிகள் அநேகருக்கு ஔஷதங் கொடுத்து அவர்களைக் குணப்படுத்தினாய். அவ் வைத்தியத்தைக் கைவிடாமல் நாங்கள் நோயுற்ற காலத்தில் எங்களுக்கு மருந்து கொடுத்துக்கொண் டிருக்கவேண்டும்" என்று சிவஞானத்தைப் பலரும் புகழ்ந்தார்கள். கருணாநிதியும் நீலமேகமும் இராமகிருஷ்ணனும் வந்தவர்களுக்கெல்லாம் பழம் கற்கண்டு மிட்டாய் பாக்கு வெற்றிலை முதலியதும் கொடுத்தனுப்பினார்கள். கருணாநிதி கோயம்புத்தூரிலிருந்து வந்த பிராமணர்களுக்கு பிராமணர்களைக் கொண்டு சாப்பாடு செய்வித்து, மற்றவர்களுக்குத் தங்கள் வீட்டில் சாப்பாடு செய்வித்தார்.

அன்று மாலை மாரியப்பன் வந்து சிவஞானத்தையும் சிவஞானத்தோடிருந்து வார்த்தையாடிக்கொண் டிருந்தவர்களையும் பார்த்து, "சமாசாரத்தைக் கேட்டீர்களா" என்றான்.

**கருணாநிதி.**—மாரியப்பா! என்ன சமாசாரம்?

**மாரியப்பன்.**—ஐயா! முனியாண்டி வீட்டில் ராத்திரி திருடர் நுழைந்து அவன் வீட்டிலிருந்தவைகளை யெல்லாம் கொண்டுபோய்விட்டார்கள். முனியாண்டி மனைவியும்

கோயம்புத்தூரிலிருந்து வந்த இராஜம்பாளும் அழுது கொண்டிருக்கிறார்கள்.

மணிவாசகம் பிள்ளை.—வந்தவிதமே போய்விட்டதுபோல் காண்கிறது. ஆ! ஆ! பச்சையப்பன் முனியாண்டி கேட்பதை யெல்லாங் கொடுத்து அவனை ஓர் தனவந்தனைப்போலல்லவோ வைத்திருந்தான். அவன் அவனை அவ்விதம் வைத்திருந்ததின் காரணம் இப்பொழுதல்லவோ தெரிந்தது. ஆ! ஆ! படுபாவி! உன்னைத் தன் பிள்ளைபோலெண்ணி உனக்கு வேண்டிய தெல்லாவற்றையும் செய்துகொண்டு வந்ததால் அவரைக் கொலைசெய்யத் துணிந்தாய். அவர் தன்னைக் கொல்லவேண்டாமென்று கெஞ்சியதற்கு மனமிரங்காமல் அவரைக் கொன்று அக்கொலையை வேறிருவர்மேல் ஏற்றத்துணிந்த இவன் வேறு என்ன செய்யத் துணியமாட்டான். அப்பா! கருணாநிதி! பச்சையப்பன் செய்தது இது மட்டுமல்ல; இவன் தன் சிறியதந்தையின் சொத்தெல்லாம் தன்னைச் சேரப்போகிறதென்று பலரிடம் சொல்லிப் பெருங்கடன் வாங்கித் தன்னிஷ்டம்போல் செலவு செய்தான். கடன் கொடுத்தவர்களெல்லாம் அவனுக்கு நேரிட்டதைக் கேள்வியுற்றுப் பெருங் கவலை அடைந்திருக்கிறார்கள். அவர்களில் மணவாள நாயுடு என்ற ஒருவர் பதினையாயிரம் பச்சையப்பனுக்குக் கொடுத்து முப்பதினாயிரத்துக்கு எழுதி வாங்கிக்கொண்டிருந்தவருக்கு இன்று பைத்தியம் பிடித்துப் போய்விட்டதெனக் காலையில் நான் கேள்விப்பட்டேன்.

மாரியப்பன்.—இரண்டாயிரம் மூவாயிரம் வைத்திருந்தவர்களெல்லாம் ஒற்றைக் கிரட்டையாகிவிடலாமென்று அனேகர் பச்சையப்ப பிள்ளைக்குக் கடன்கொடுத்து முதல் இழந்தார்களென்று கடைத்தெருவில் பேசிக்கொண்டார்கள்.

## 23—ம் அத்தியாயம்

சிவஞானம் வெளிப்பட்ட மறுநாள் காலையில் யாவரும் காபபி சாப்பிட்டு உட்கார்ந்திருக்கும்பொழுது, மணிவாசகம் பிள்ளை கருணாநிதியைப் பார்த்து "தம்பி! என் மைத்துனர் இரத்தின சபாபதி பிள்ளையைக் கொன்ற தினத்தில் உன்மேலும் நீலமேகத் தின்மேலும் குற்றம் இல்லாதிருகக நீங்கள் ஏன் ஓடிபபோனீர்கள்? நீங்கள் சிதம்பரத்தில் ஜவளிக்கடைக்கு எப்படி முதலாளிக ளானீர்கள்?" என்று கேட்டார.

கருணாநிதி.—மாமா! சிற்றப்பா கொலையுண்டவுடன் வீட்டில் உண் டான சத்தத்தைக் கேட்டு, நானும் நீலமேகமும் வீட்டுக்குள் போனோம். உடனே பச்சையபப அண்ணன் எங்களுக்குப் பின்னால் வந்து, "அடா பாவிகளா! கொன்றுவிட்டீர்களா?" என்று எங்களைப பார்த்துச் சொன்னதைக் கேட்டுப் பயந் தோம்! அவர் போட்ட சத்தத்தைக் கேட்டு அனேகர் ஓடி வந்து எங்களைச் சூழ்ந்துகொண்டாாகள். நான் சிற்றப்பாவின் கையைப் பிடித்திருந்ததும் நீலமேகம் கையில் கத்தியை வைத் துக்கொண்டிருந்ததும் யாவருககும் சநதேகத்தைக் கொடுக் குமே என்றும், நாம் இருந்தால் நம்மேல் கொலைக்குற்றத்தை ஸ்தாபித்துவிடுவாாகள் என்றும் எண்ணியே, எங்களோடு வந்த போலிஸ சேவகன் ஒருவனே யாகையால் அவனை யேமாற்றி ஓடிப்போனோம். நாங்கள் காலை எட்டுமணிக்கு எலுமனூரிலிருந்து டிக்கட்டு வாங்கி ரெயில் ஏறிப போகும் பொழுது, நல்ல ஆடையோடு இருந்த ஒருவா, தான் எக்கில் செருகியிருந்த ஐந்து ரூபா நோட்டு எங்கோ விழுந்துவிட்ட தென்றும், தான் நாகபபட்டணம் போய்க் காரைக்காலுக்குப் போகவேண்டுமென்றும், தன் கையில் பணமில்லை யென்றும் கவலையோடிருந்தார். அவருக்கு நாங்கள் டிக்கட்டுக்குப் பணம் கொடுத்து நாங்களும் அவரோடு காரைக்காலுக்குப போனோம். நாங்கள் கோரனைமால் சேர்ந்தவுடன், எங்க ளோடு வந்தவர் ஜட்காவண்டியை நிறுத்தச்சொல்லி, எங்

களைப் பார்த்து, "நீங்கள் எங்கே போகவேண்டும்?" என்று கேட்டார். "நாங்கள் எப்பொழுதும் இவ்வூருக்கு வந்தவர்களல்ல; சாப்பாட்டுக் கிளப்பு இருக்குமிடத்தைக் காட்டினால் அங்கே போகிறோம்" என்றதைக் கேட்டு, "நீங்கள் எங்கும் போகவேண்டாம். என்னோடு வந்தால் உங்களுக்கு வேண்டிய சௌகரியம் செய்வேன்" என்று அவ்வூரில் வக்கீலாகவிருக்கும் ஸ்ரீமான் முத்துவேலுபிள்ளை என்ற ஓர் கனவான் வீட்டுக்கு அழைத்துச் சென்றார். எங்களுடைய நல்வேளை அப்புண்ணியவான் ஸ்ரீமான் வீரப்பிள்ளை என்ற ஓர் தனவந்தரோடு வார்த்தையாடிக்கொண்டிருந்தவர், எங்களைப் புன்னகையோடு, "எந்த ஊர்" என்று கேட்டார். எங்களை அழைத்துச் சென்றவர், "இவர்கள் அதிக தூரத்திலிருந்து வந்தவர்கள். எனக்குப் பொருளற்ற காலத்தில் பொருளுதவி செய்து அழைத்துவந்தார்கள். இவ்வூருக்கு அன்னியராதலால் இவர்கள் சாப்பாட்டுக் கிளப்புக்குப் போகிறோம் என்று சொன்னதைக் கேட்டு இங்கு அழைத்து வந்தேன்" என்று சொன்னார். ஸ்ரீமான் முத்துவேலு பிள்ளையவர்கள் அவரைப் பார்த்து, "அப்பா! தங்கவேலு! இவர்களைச் சாப்பாட்டுக் கிளப்புக்கு அழைத்துப் போகவேண்டாம்! நம் வீட்டில் இருக்கலாம். முதலில் இவர்களை அழைத்துப்போய்க் குளிக்கச் செய்" என்றார். உடனே எங்களை அழைத்துப்போய்ப் பின்கட்டிலிருக்கும் கிணற்றருகில் விட்டார். குளித்தவுடன் நாங்கள் கட்டிக்கொள்ள வேறு வேஷ்டிகள் கொடுத்து, வெளித்திண்ணைக்கு அழைத்துவந்தார். உடனே எங்களுக்குக் காப்பி கொண்டுவந்து கொடுத்தார்கள். நானும் காப்பி சாப்பிட்டிருக்கிறேன். அங்கே சாப்பிட்ட காப்பியைப்போல் எப்பொழுதும் சாப்பிட்டதில்லை. காப்பி கிளப்பு வைத்திருப்பவர்களெல்லாம் அவர்கள் வீட்டில்போய்க் கற்றுக்கொள்ளவேண்டும். நாங்கள் காப்பி சாப்பிட்டு வெகுநேரம் பல விஷயங்களைக் குறித்தும் காரைக்காலம்மை ஸ்தல

மகிமையைக் குறித்தும் காரைக்காலுக்குச் சமீபமாக விருக்கும் திருநள்ளாறு தருமபுரம் முதலிய ஸ்தலங்களைப் பற்றியும் பேசியிருந்து சாப்பிட்டுப் படுத்துக்கொண்டோம். அடுத்த நாள், நாங்கள் பயந்து வந்திருக்கும் காரணத்தைச் சொல்லி, "காரைக்கால் பிரென்சு நாடாகையால் எங்களை இவ்வூரில் வந்து பிடிக்கமாட்டார்களல்லவா" என்று கேட்டோம். அவர் "பிரிட்டிஷ் நாட்டில் கடன் வாங்கிக் கொடுக்கச் சத்தியற்று இவ்வூருக்கு வந்தால் அவர்களைப் பிடித்துக் கொடுக்கமாட்டார்கள். ஆனால் கொலைக் கேசில் சம்பந்தப பட்டவர்களைப பிடித்துக் கொடுத்துவிடுவார்கள்" என்றார். நாங்கள் நிரபராதிகள் என்று நடந்தவற்றைச் சொன்னபொழுது, எங்களுக்கவர் தைரியம் சொல்லி, எங்களுக்கு வேண்டிய சௌகரியம் செய்துகொண்டிருந்தார். என் சிறிய தந்தையின் கலியாணத்துக்குச் சாமான்கள் வாங்கக் கொடுத்திருந்ததில் மீதியாக இருந்த ரூபா இருநூற்றைம்பதை அவரிடம் கொடுத்துவைத்து, எங்களுக்கு வேண்டியதை வாங்கிச் செலவு செய்துகொண்டிருந்தோம். ஒரு வாரத்துக்குப்பின் ஸ்ரீமான் முத்துவேலுப் பிள்ளையவாகளும் ஸ்ரீமான் வீரபப பிள்ளையவர்களும் எங்களை அவ்வூரிலிருக்கும் பெருந் தனவந்தரான கனம் ஹாஜி தம்பிசாயபு மரைக்காயரவர்கள் வீட்டுக் கழைத்துப்போய், நாங்கள் அவ்வூருக்கு வந்திருக்கும் காரணத்தைச் சொன்னவுடன், அவர்கள் எங்களைச் சற்றுநேரம் கவனித்துப பார்த்து, "இவர்கள்மேல் குற்றங் காணப்படவில்லை. பொறாமையால் இவர்கள்மேல் குற்றம் சுமத்தியதாகக் காணபபடுகிறது" என்று எங்களுக்குத் தைரியம் சொல்லி, எங்களைச் செல்லூரில் தம்முடைய வீட்டி லிருக்க உத்தரவு கொடுத்தார். நாங்கள் அப் புண்ணியவான் சொல்லிய விதம் காரைக்காலுக்கு ஆறு மயில் தூரத்திலுள்ள செல்லூரில் போயிருந்தோம். ஆயி

னும் அடிக்கடி காரைக்காலுக்கு வந்து மேற்சொன்னவர் களைப் பார்த்துக்கொண்டு போனேம். காரைக்காலில் மாம் பழத் திருநாளும் வந்தது. ஆ! ஆ! அத்திருவிழாவை நான் என்னென்று சொல்லுவேன்! பிஞங்குக்கு அருகி லுள்ள பட்டு காஜா என்ற ஊரில் குடியேறியிருக்கும் ஸ்ரீமான் மலைபபெருமாள் பிள்ளை யவர்கள் தாம் காரைக காலுக்கு வந்து தம் சொந்த செலவில் வருடந்தோறும் அத்திருவிழாவை உண்மையில் நடத்தும் விதம் நடத்திப போகிறூா. அத்திருவிழாவைப பார்க்க நமக்கிருக்கும் இரு கண்ணும் போதாவென்றால், வேறென்ன சொல்ல விருக்கிறது. நாங்கள் யாதொரு கவலையுமில்லாமல் இரண்டு மாதங் கழித்தபின் ஒருதடவை திருநள்ளாற்றுக்குச் சுவாமி தரிசனைக்குப் போயிருந்தபொழுது இராமகிருஷ்ணனை அவ்வூரில் கண்டு அதிசயபபட்டு, அவனுக்கு நேரிட்டதை யறிந்து துக்கபபட்டு, அவனை எங்களோடு அழைத்துச் சென்றேம். இராமகிருஷ்ணனை அழைத்துப போனது முதல், அவன் விரும்பிய வண்ணம் அவனையே சமை யல் செய்யச் சொல்லி, மூவரும் சாப்பிட்டுக்கொண் டிருந்தோம். நாங்கள் மூவ ரானபின் காரைக்காலுக்குப் போய் கனம் ஹாஜீ தம்பிசாயபு மரைக்காய ரவர்களைக் கண்ட பொழுது, அவர் லாட்டரி விஷயமாக வார்த்தையாடிக் கொண்டிருந்தவர், எங்களைப பார்த்து, இராமகிருஷ்ணன் யாரென்று விசாரித்தறிந்து, எங்களை லாட்டரிக்குப் பத்து ரூபா போடும்படி சொன்னூர். நான் அவர் சொல்லைத் தட்டச் சக்தியற்று எங்கள் மூவர் பெயரிலும் பத்து ரூபா போட்டு வந்தேன். நெடுநாளைக்குப் பின் கனம் ஹாஜீ தம்பிசாயபு மரைக்காய ரவர்கள் தம்முடைய வில்வண் டியை யனுபபி, எங்களை அழைத்துவரச் செய்தார். நாங்கள் சென்றவுடன் எங்களை வண்டியிலிருந்து இறங்கக் கைலாகு கொடுத்து இறக்கி, "நீங்கள் பெரும் பணக்கார ரானீர்கள்.

உங்களுக்கு மூன்று லக்ஷம் லாட்டரி சீட்டில் வந்திருக்கிறது" என்று தம்முடைய பேருக்கு வந்திருக்கும் கடிதத்தைக் காட்டி, பின் சில வாரத்தில் மூன்று லக்ஷத்தையும் வரவழைத்துக் கொடுத்தார். நாங்கள் அவரிடத்தில் அப்பணத்தை வைத்திருக்கச் செய்து சந்தோஷமடைந்தாலும், எங்கள்மேல் சுமத்தியிருக்கும் அபவாதத்திற்கு என்ன செய்வோம் என்று கவலையடைந்திருந்தோம். அவா எங்களுக்குத் தைரியம் சொல்லி, கடவுள் எங்கள்மேல் காருண்யம் வைத்துப் பணம் கொடுத்திருப்பதால், எங்களை இந்த ஆபத்திலிருந்தும் காப்பாற்றுவார் என்றும், சிதம்பரத்தில் தம்முடைய சிநேகரொருவர் ஜவளி வியாபாரம் செய்திருந்தவா காலம் சென்றுரென்றும் சொல்லி, அக்கடையை ஜவளியோடு நல்ல லாபம் கிடைக்கும் விதம் எழுபதனையாயிரத்துக்கு வாங்கிக் கொடுத்து, எங்களைச் சிதம்பரம் போக வேண்டினர். நாங்கள் அங்கே போனால் எங்களைச் சுலபத்தில் கண்டுபிடித்து விடுவார்கள் என்று சொல்லியபொழுது, அவர் யோசித்து எங்கள் மூவரையும் மகம்மதிய உடை தரிக்கச் சொல்லி, எங்களுக்கு, கரீம் மரைக்காயர், நூரத்தின் மரைக்காயா, இப்ராயிம் மரைக்காயர் என்ற பெயரையும் ரூபாவையும் கொடுத்தனுப்பினர். நாங்கள் அப்புண்ணியவானுல் அனுபவப்பட்டோம் என்று சிதம்பரத்தில் கேள்விபட்டவர்களெல்லாம் எங்களைக் கௌரவமாக நடத்திவந்தார்கள். நாஙகள் சிதம்பரத்தில் ஜவளி வியாபாரம் செய்துகொண்டிருந்த காலத்தில், சிவஞானமும் ஞானவடிவும் எங்களைக் கண்டு பிடித்துக் கொண்டபின் நடந்தது யாவும் நீங்கள் அறிந்ததே.

**மணிவாசகம் பிள்ளை.**—அப்பா! இராமகிருஷ்ணு! நீ எவ்விதம் கருணாநிதியையும் நீலமேகத்தையும் காரைககாலில் கண்டுபிடித்தாய்?

**இராமகிருஷ்ணன்.**—ஐயாவே! நான் என தந்தையைக் கோபித்து உயிர் துறப்பதே உத்தமம் என்று இரவில் எட்டு மணிக்குக்

காவேரியாற்றுப பெருவெள்ளத்தில் குதித்தேன். நான் குதித்ததும் உயிர் போய்விடுமென்றே எண்ணினேன். ஆனால் என்னுயிர் போகிறதற்குப பதிலாக என் தலை தண்ணீரி லிருந்து வெளிக் கிளம்பிய உடன் என் தலையில் மரக்கிளை யொன்று தட்டுப்பட்டது. நான் அதைப பிடித்தேன். அது பெரிய மரமாக விருந்தது. நமக்கு நாராயணன் இம்மரத்தைக் கொடுத்ததின் காரணம் என்னவோ என்று அம்மரத்தைப பிடித்துக் கல்லணைக்குச் சமீபமாகக கரை ஏறினேன். என் னிடம் பொருள் ஒன்றுமில்லாமற் போனதால் அன்றிர வெல்லாம் நடந்து காலையில் தஞ்சாவூரை யடைந்து யாசகம் செய்துகொண்டு சென்று, என்னோடும் கருணாநிதியோடும் வாசித்த ஒருவன் பேரளத்திலிருந்ததால் அவனிடம் போக லாமென்று மாயவரம் மார்க்கம் சென்றேன். நான் பேரளத் திலிறங்கி அவனைக்குறித்து விசாரித்துககொண்டிருக்கும் பொழுது, அவன் அகஸ்மாத்தாய்ப பேரளம் ஸ்டேஷனுககு வந்தவன் என்னைக் கண்டு என்னை அழைத்துபபோய் எனககு வேண்டிய சௌகரியம் செய்து தான் மாம்பழத் திருவிழாவுக்குக் காரைக்காலுக்குப போயிருந்தபொழுது கரு ணாநிதியைப் பார்த்ததாகவும் ஜனசந்தடியில் அவனோடு வார்த்தையாட முடியாமல் போயிற்றென்றும் சொல்லித் துக்கப்பட்டான். சிலநாள் சென்றபின் நானும் அவனும் திருநள்ளாற்றுககுச் சுவாமி தெரிசனைக்குப போனபொழுது கருணாநிதியையும் நீலமேகத்தையும் கண்டோம். என் சிநே கன் கருணாநிதியைக கண்டு கட்டிப்பிடித்துக்கொண்டு பேர ளத்துககு வரவேண்டுமென்று கட்டாயப படுத்தினான். கருணாநிதி தான் ஊரைவிட்டு வந்திருக்கும் காரணத்தைச் சொன்னபின், கருணாநிதியைக் கட்டாயபபடுத்தாமல் கருணா நிதி வேண்டுகோளுக் கிணங்கி என்னையும்விட்டு நீங்கினான். பின் நடந்தது யாவும் நீங்கள் அறிந்ததே.

**சூரியநாராயண ஐயர்.**—அம்மா! ஞானவடிவு! கோயம்புத்

தூரை நீ விட்டு நீங்கியபின சாமியாருக்கு எவ்விதம் சீடனு னுய் (என்று கேட்டார்).

ஞானவடிவு.—ஐயாவே! கோயம்புத்தூரை விட்டு நீங்கும் பொழுது, நான் இரகசியமாகத் தைத்து வைத்திருந்த தலைக் குல்லாவோடும் முக மூடியோடு முள்ள நிறை அங்கியைப் போட்டுக்கொண்டு, ரெயிலேறித திருச்சிராபபள்ளியில் கீழ் புல்வார் தெரு தஞ்சாவூர் குளத்துக்கருகில் சிவஞானம் அக்காள் உறவின் முறையார் இருக்கும் வீட்டுக்குள் சென்று, பிச்சை கேட்பதுபோல் அங்கிருப்பவர்களைப பார்த்து, அக்காள் அவ்வூரில் இல்லாமையைக் கண்டு, சிலநாள அவ்வூரி லேயே தங்கிப பழம் பால் தின்பண்டங்கள் வாங்கிச் சாப் பிட்டு அங்குமிங்கும் திரிந்து பகற்பொழுதைப போக்கி இராக்காலங்களில் வெளித்திண்ணையில் படுத்துறங்கிக் காலங்கழித்துக்கொண் டிருந்தேன். அப்பொழுது, சிவஞான அக்காள் அவ்வூருக்கு வந்ததைக்கண்டு அவர்களிடம் சென்று பிச்சை கேட்பதுபோல் கையை நீட்டினேன். வீட்டிலிருந்த பெண்பிள்ளை என்னைக் கண்டு கோபிதது வீட்டைவிட்டுப் போகும்படி துரத்தினுள். அக்காள் என்மேல் பரிதாபப் பட்டு "ஏன் துரத்துகிருய்? அவள் ஏழை ஏதாகிலும் கேட் கிருள்" என்ருர்கள். வீட்டிலிருந்த பெண்பிள்ளை "இவள் நாள்தோறும் நம்முடைய வீட்டுக்கு வருகிருள். இரவில் தெருத்திண்ணையில் வந்து படுத்துக்கொள்ளுகிருள். இங்கு வரவேண்டாமென்று பலதடவை சொல்லியும் கேட்கிருள் இல்லை. துலுக்கச்சி படுத்திருந்த விடத்தை நான் நாள் தோறும் மெழுக வேண்டியதா யிருக்கிறது" என்று சொல்லி வீட்டுக்குள் சென்ருள். நான் ஞானவடிவு என்று அக்காளிடம் சொன்னவுடன் என்னைக் கட்டிப் பிடித்து முத்தமிட்டு வீட்டுக்குள்ளிருக்கும் பெண்பிள்ளையை அழைத்து, "இவள் துலுக்கச்சி யல்ல, நமமுடைய ஜாதியே! இவள் என் நாயகனைக் குறித்துச் சில விஷயம் சொல்ல

வேண்டி என்னைத் தேடிக்கொண்டிருந்தாள். இவளைக் குறித்து ஒருவரும் ஒன்றும் சொல்லவேண்டாம்" என்று சொல்லி, என்னை வீட்டுக்குள் அழைத்துப்போய் என்னோடு வார்த்தையாடிக்கொண் டிருந்தார்கள். அது முதல் அக்காள் சாமியாராகவும் நான் சேடனாகவுமிருந்து காலத்தைக் கழித்து வந்தோம்.

மணிவாசகம் பிள்ளை.—அம்மா! அன்னபூரணி! உன் நாயக னிறந்தான் என்று கேள்விபட்டு உன் மாமனுருடைய வீட்டுக்கு வந்திருந்தவள், என்ன காரணத்தால் நீ வெளி யேறினாய். நீ எவ்விதம் சாமியாருக்கும் அவர் சேடனுக்கும் உறவானாய் என்பதை எங்களுக்குச் சொல்லவேண்டும்.

அன்னபூரணி.—நான் என் நாயகர் இறந்தாரென்று கேள்விப் பட்டு என் மாமனார் வீட்டுக்கு வந்து இரண்டு நாள் அதிக துக்கத்தோடிருந்து மூன்றாம் நாள் என் துக்கம் என்னை விட்டு நீங்கிச் சந்தோஷத்தோ டிருந்தேன்.

மணிவாசகம் பிள்ளை.—இரண்டு நாளில் உன்னுடைய துக்கம் நீங்கிவிட்டதா?

அன்னபூரணி.—ஆம்! இரண்டாம் நா ளிரவு என் நாயகன் என்னை அழைத்துக்கொண்டு போவதாகக் கனவு கண்டு விழித்தெழுந்து, நாம் விரைவில் இறந்தால் நம்முடைய கணவனோடு போயிருக்கலாமென்ற எண்ணத்தோடு நான் தோறும் மாலை ஆறு ஆறரை மணிக்கெல்லாம் தனித்த அறை யில் போய்ப படுத்துக்கொண்டுவந்தேன். என் தாயாரும் என் மாமியும் நான் வியசனத்தால் விரைவில் போய்ப படுத் துக்கொள்ளுகிறேன் என்று எண்ணியிருநதாாகள். நான் ஒருவாரத்துக்குப பின் சமயம் பார்த்து ஒருவரும் அறியா மல் என் தாயார் பையிலிருந்து ரூபாவில் இருபதும் என் சேலைகளில் ஒன்றும் எடுத்துக்கொண்டு, இரவில் ரெயில் ஏறிச் சிதம்பரத்துக்குப் போனேன்.

**மணிவாசகம் பிள்ளை.**—நீ தனித்துப்போவதைக் கண்டவாகள் உன்னை ஒன்றும் கேட்கவில்லையா ?

**அன்னபூரணி.**— நான் பெண்பிள்ளைகள் ஏறிப்போகும் வண்டியிற் போகும்பொழுது, என் நாயகன் வேறு வண்டியில் உட்கார்ந்திருக்கிருரென்று சொல்லிச் சிதம்பரத்தில் இறங்கிய பின், நான் என் நாயகனைத் தேடுவதுபோல் திரிந்து தனித்துப போகிறதைக் கண்டவர்கள், "உன் நாயகன் எந்த ஸ்டேஷனிலாவது இறங்கி மீண்டும் ரெயில் ஏறத் தவறி விட்டார்போல் காண்கிறது. அடுத்த ரெயிலில் வந்து விடுவார்" என்று சிதம்பரம் சாமி தெரிசனைக்குச் சென்ற சில பிராமணப பெண்கள் எனக்குத் தைரியம் சொல்லி என்னைத தங்களோடிருககும்படி வேண்டிஞர்கள்.

**மணிவாசகம் பிள்ளை.**—நீ இறககத் துணிந்தவள் சிதம்பரத்துக்குப போகவேண்டிய காரணமென்ன ?

**அன்னபூரணி.**—நெடுநாளாகச் சிதம்பரத்துககுச் சென்று தில்லை நடராஜாவையும் தில்லை கோவிந்தராஜப பெருமாளையும் தரிசிக்கவேண்டு மென்ற அவா என்னிடத்தில் குடிகொண்டிருநததால், அந்த ஆசையைத் தீாத்துக்கொண்டு இறக்க வேண்டும் என்ற எண்ணத்தோடு அவ்விடம் சென்று, எனக்குக் கிடைத்த துணையோடு நாள்தோறும் காலை மாலை சாமி தெரிசனை செய்துகொண்டு ஒருவாரம் இருந்தேன். பின் எனக்குத் துணையாக விருந்தவர்கள், தங்களுடைய ஊருக்குத் திரும்புங்கால் என்னைப பார்த்து, "நீயும் எங்களோடு வருகிருயா?" என்று கேட்டார்கள். "நான் இன்னும் சிலநாள் என்னுடைய நாயகனுக்காகக் காத்திருந்து வருகிறேன்" என்றதைக் கேட்டு அவர்கள் நீங்கிஞர்கள். நாம் இனி யிருபபதில் பிரயோசனமில்லை யென்று ஒரு கயிறு வாங்கிக்கொண்டு இரவில் ஊருக்கு வெளியில் ஒரு மரக்கிளையில் கயிற்றை விட்டெறிந்துகொண் டிருந்தேன். அதை ஓர் அன்னியன் கண்டு என்னைத் தொந்தரை செய்ய

ஆரம்பித்தான்; அப்போது தற்செயலாய் அங்குவந்த மாரியப்பன் என்னை விடுவித்தான். பின் சாமியாரையும், அவர் சீடனையுங் கண்டபொழுது, சீடன என்னை அழைத்து "நீ அன்னபூரணி அல்லவா" என்றான். நான் திடுக்கிட்ட பொழுது, "நீ கவலை கொள்ள வேண்டாம். உன் புருஷன் இராமகிருஷ்ண ஐயா இறக்கவில்லை, உயிரோடிருக்கிறா. சில நாளில் உன்னை அவரிடத்தில் சேர்ப்போம்" என்று என்னைத் திருச்சிராபபள்ளிக்கு அழைத்துவந்து அங்கு மாரியபபனைக்கொண்டு எனக்கு ஒரு பிராமணா வீட்டில் இடந்தேடிக் கொடுத்தார்கள். சில வாரங்களுககுப பின் சாமியாா லாலாபேட்டைககு மாரியபபனோடு வரும்படி கட்டளையிட்டாா. நான் அவருடைய உத்தரவு பிரகாரம் அவா குடிசையில் வந்திருந்தேன். பின் சாமியார் சிவஞானமானதும், அவர் சீடன் ஞானவடிவானதும், இவ்விருவரை நான் நெடுநாளாக அறிந்திருந்தும் அவாகளைக கண்டு கொள்ள முடியாமற் போனதும அதிசயமாக இருக்கிறது.

**சூரியநாராயண ஐயர்.**—அம்மா! சிவஞானம்! நீ என்ன காரணத்தால் சாமியார்வேடம் கொண்டாய்? அதைச் சொல்ல வேண்டும்.

**சிவஞானம்.**—ஐயாவே! என்னுடைய நாயகரும் என அத்தானும் என் மாமனுரைக் கொலைசெய்து ஓடிவிட்டார்களென்று கேள்விபபட்டவுடன் நான்கொண்ட ஆச்சரியததுக் களவில்லை. நம்முடைய நாயகனுடைய குணத்தை நன்று யறிந்திருக்கிறோமே! அவரா இக்கொடுந் தொழிலைச் செய்வார்; அவர் தன் சிறிய தந்தையைத் தன்னைப பெற்ற தந்தையை விட மேலாக நடத்திவந்ததை அறிவோமே! அவா தன் சிறிய தந்தைக்கு விவாகம் செய்து வைக்கவேண்டுமென்று பெரும் பிரயாசை எடுத்துக்கொண்டிருந்தாரே! நான் ஒரு நாள் "உம்முடைய சிறியதந்தை தம்முடைய சொத்தையெல்லாம் உமக்கு வைப்பாரென்ற

எண்ணத்தால் உம்முடைய சிறிய தந்தையை மேன்மையாக நடத்தி வந்தீரே ; அவர் இபபொழுது விவாகம்செய்து கொள்ளப போகிறதால் அவருடைய சொத்து உம்மைச் சேர நியாயமில்லையே" என்று வேடிக்கையாகக் கேட்டபொழுது, அவர் " அடி பைத்தியக்காரி, நான் அவருடைய பொருளை இச்சித்தவனே அல்ல. என்னுடைய தந்தை தமக்கிருநத பொருளை வாதம் சுடுவதில் தொலைத்தது போக மீதியாக வைத்துப போனது நம்முடைய சௌகரியத்துக்குப போதுமானதாக இருககிறது. பொருள் அதிகமிருந்தால் இப்பொழுது நாம் சாப்பிடுகிறதைவிட அதிகம் சாப்பிட முடியுமோ" என்று நகைத்தாரே ! ஆனதால் சூத்ாக அவர்மேல் பழியேற்றியிருக்கிறார்கள். இதை எவ்விதம் கண்டுபிடிக்கிறது. நாம் முதலில் நம்முடைய நாயகன் இருபபிடத்தைக கண்டுபிடிபபது அவசியம். அவர் சிலவேளை தம்முடைய பிராமண சினேகர் இராமகிருஷ்ண ஐயருக்கு எழுதியிருக்கக்கூடுமென்று நான் கோயம்புத்தூருக்குச் சென்று அவரைக் கண்டு விசாரித்த பொழுது, அவர் பெருந் துக்கத்தோடு தனக்கு ஒன்றும் எழுதவில்லை என்று சொல்லிய பின், தன்னுடைய ஆயுளும் முடிவுக்கு வருகிறதென்று தன்னுடைய தந்தையின் கொடுமையைச் சொல்லி, தனக்குப பின் தன் மனைவியைப் பார்த்துக்கொள்ளும்படி வேண்டிக்கொண்டு, நான் சொல்வதை ஒன்றுங் கவனிக்காமல் கண்களில் நீர்வடிய என்னை விட்டு நீங்கினர். நான் அன்னபூரணியைக் கண்டு பேசிய பின் மாரியபபனுடைய தங்கை அபூர்வம் அம்மாளைப் பார்த்துவிட்டுத் திரும்பினேன் ; அப்போது, முனியாண்டியின் தூண்டுகோலால் ஒருவன் பின்தொடர்ந்து, என் நாயகன் சேலத்தி லிருக்கிறு ரென்று சொல்லி என்னை அங்குப் போகும்படி செய்து, என் நிலையைக் கெடுக்க எண்ணினன் ; ஆனல் (குஞ்சிதபாதம் பிள்ளையைக் காட்டி)

இப்புண்ணியவான் என்னைக் காப்பாற்றினர் (என்று நாழிக் கல்லில் நடந்தவைகளைக் கிரமமாகச் சொன்னுள்).

அங்கிருந்த யாவரும் குஞ்சிதபாதம் பிள்ளையைப் பார்த்து "ஐயா! தாங்கள் யாவருக்கும் உதவி செய்யவே பிறந்திருக்கிறீர்கள்" என்று கொண்டாடினர்கள்.

**சிவஞானம்.**—நான் தாதா குஞ்சிதபாதம் பிள்ளையின் துணையோடு ஈரோடு வந்து வேறு வண்டி யேறி லாலாபேட்டைக்கு வந்தேன். அங்கிருப்பதில் பிரயோசனமில்லையென்று திருச்சிராப்பள்ளிக்குச் சென்று தங்கை ஞானவடிவைக் கண்டதனால் நான் கொண்ட சந்தோஷத்திற் களவில்லை. வீட்டிலிருந்த என் சிறிய தாயாரிடம் ஞானவடிவு போட்டிருந்த அங்கியைக் கழற்றிக் காட்டியவுடன் அவர்கள் திகைத்து நின்றார்கள். ஞானவடிவு அங்கு வந்திருப்பதை ஒருவரோடும் சொல்லாமல், சிலநாளுக்குப் பின் நானும் என் சிறிய தாயாரும் பெரிய மார்க்கட்டுக்குப்போய்த் திரும்பும்பொழுது, வயது சென்ற ஒரு பெண்பிள்ளை கண்டு, தனக்கேதாகிலும் கொடுத்துப் போகவேண்டும் என்று கெஞ்சினுள். என் சிறிய தாயார் "என்னிடத்தில் எட்டணவாக இருக்கிறது; வீட்டுக்குப்போய் என் மகளிடம் இரண்டணு கொடுத்தனுப்புகிறேன்" என்று அந்தப் பெண்பிள்ளையின் வீட்டை எனக்குக் காட்டி, வீட்டுக்கு வந்தவுடன் என்னிடம் அரைக்கால் ரூபா கொடுத்தனுப்பினர்கள். நான் அவர்கள் காட்டிய வீட்டுக்குப் போய் இரண்டணவைக் கொடுத்தவுடன் அப்பெண்பிள்ளை என்னை உட்கார வேண்டி, தான் நல்ல நிலைமையி லிருந்தவளென்றும், தன்னுடைய மகன் கூத்தாடிகளோடு சேர்ந்து சொத்தை யெல்லாம் தொலைத்துவிட்டுக் கூத்தாடிகளோடு போய்விட்டானென்றும், அவன் மயிரும் துணியும் வைத்திருக்கிறானென்றும் சொல்லி, ஒரு பெரிய பெட்டியைக் காட்டினுள். அப்பெண்பிள்ளை சொன்னது விளங்காமல் பெட்டியில் என்ன இருக்கிறதென்று

கேட்டேன். அவள், "பெட்டி திறந்திருக்கிறது, நீயே போய்ப் பார்" என்றாள். பெட்டியைத் திறந்து, அதில் வேஷக்காரர்களுக்கு வேண்டிய தாடி மீசை ஜடைகள் ருத்திராக்ஷம் முதலியதும் இருக்கக் கண்டு, நான் அதில் சாமியாருக்கும் சீடனுக்கும் வேண்டியவைகளை எடுத்து வேறாக வைத்து, "இவைகளை எனக்கு விற்றுவிடுகிறாயா?" என்று கேட்டேன். அவள், "விற்கவேண்டியதென்ன ? நீ பெட்டியோடு எடுத்துக்கொண்டு போனாலும் சம்மதமே! அப்பெட்டி இடத்தை அடைத்துக்கொண்டிருக்கிறது. அந்தப் பெரிய மாடத்திலிருக்கும் பிள்ளையாரைப் பார்த்தாயா ? அது சாம்பிராணி வாசனை கண்டு நெடுநாளாயிற்று. அதை எடுத்துக் கொண்டுபோக இஷ்டமிருந்தாலும் கொண்டு போகலாம்" என்றாள். நான் விளக்கேற்றிய பின் வருகிறேன் என்று வந்து, இருட்டினபின் அவள் வீட்டுக்குச் சென்று எனக்கு வேண்டியவைகளையெல்லாம் விநாயக விக்கிரத்தோடு எடுத்துக்கொண்டு அப்பெண் பிள்ளையிடம் பத்து ரூபா கொடுத்தேன். அவள் சந்தோஷத்தில் பூரித்து "அம்மா ! நீ பெட்டியோடு யாவையும் கொண்டுபோ" என்று வேண்டினாள். நான், "எனக்கு வேண்டியதை எடுத்துக்கொண்டேன் ; மற்றதை நீயே வைத்துக்கொள். அதில் விலையுயர்ந்த உடுப்புகளும் இருக்கின்றன" என்று சொல்லி நீங்கினேன். நான் கொண்டு போனவைகளை ஓர் அறையில் பதனமாக வைத்து எனது சிறிய தாயார் நித்திரை போனபின், ஞானவடிவுக்கு அவைகளைக் காட்டி, "இவைகள் சாமியார் சீடனுடைய வேஷத்துக்குப் போதுமானவைகள். நாம் இவ்வேஷத்தோடு வெளிகிளம்பினால் ஒருவரும் கண்டுபிடிக்கமாட்டார்கள். நாம் கொலை நடந்த இடத்திலிருந்தே உண்மையைக் கண்டு பிடிக்கவேண்டும்" என்று சொன்னேன்; அதற்கு ஞானவடிவும் உடன்பட்டான். நான் இரண்டுநாள் அவ்விடத்திலிருந்து

வேஷத்துக்கு வேண்டியவைகளைச் சேகரித்துக்கொண்டு என் சிறியதாயாரிடத்தில் விடைபெற்று, காலை நாலுமணிக்கு பிரயாணப்பட்டு வெளியில் சென்று, சாமியார் சீடன் வேஷத்தோடு லாலாபேட்டை யடைந்து ஒரு மரத்தடியிலிருந்து பின் ஒரு குடிசையும் தோட்டமும் உண்டுபண்ணிக் கொண்டேன். விநாயகப பெருமான் விக்கிரகத்தை முன் வைத்து, எங்களைப் பார்க்க வருகிறவர்களை எங்களுக்கு நமஸ்காரம் செய்யவிடாமல் விநாயகருக்கு நமஸ்காரம் செய்யச்சொல்லி, நான் சிறு வயதில் என் தந்தையிடம் கற்றுக்கொண்ட வைத்தியத்தைப பலரிடத்தும் உபயோகப் படுத்திவந்தேன். லாலாபேட்டையிலும் மற்ற விடங்களிலுமிருந்து வந்த ஜனங்கள் எங்களை மேன்மையாக நடத்தி வந்தார்கள். பின் அத்தான் பச்சையப்ப பிள்ளையும் அவருடைய காரியஸ்தன் முனியாண்டியும் எங்களை வந்து பார்த்துப் பாலும் பழமும் கொண்டுவந்து கொடுத்துக் கொண்டிருந்தாகள். ஒருநாள் அத்தான் பத்து ரூபாவைக் கொடுத்து இதை உபயோகபபடுத்திக்கொள்ள வேண்டுமென்றுர். நான் அவரையும் அவரோடிருந்தவர்களையும் என் குடிசைக்குள் அழைத்து, என் தகபபனுர் வைத்திருந்த மூன்று பாளங்களை அவாகளுக்குக் காட்டி, "எனக்கு வாதம் சுடத் தெரியும்; ஆனதால் எனக்குப பணம் வேண்டியதில்லை" யென்று சொன்னபின், அத்தான் பச்சையபப பிள்ளைகளும் முனியாண்டிகளும் என் மேல் அதிக நம்பிக்கை உண்டாகியது. என்னைக் குறித்துப பலர் பேசுவதைக் கேட்ட கோபாலையர் அவர்களும் என்னைப பார்க்க வந்தார். நான் இராமகிருஷ்ண ஐயர் எண்ணத்தை யறிந்தவனாதலால், அவருககுப் பின் நடக்கப் போகிறதைச் சொல்லி அவர் எண்ணத்தை மாற்றிஞல் சுகப்படுவார் என்று அவரிடம் குறிப்பாகச் சொன்னேன். சில நாள்களுக்குப் பின் குளித்தலைத்

தாசில்தார் என்னுடைய குடிசைக்குச் சமீபமாகக் குதி ரையா விழுக்கப்பட்டு வந்தார். நான் அவருக்கு உதவி செய் தனுப்பினேன். நான் லாலாபேட்டையி லிருக்கும் பொழுது, ஒவ்வொரு நாள் சாமியார் வேஷத்தை நீக்கி, மற்றப் பெண்பிள்ளைகளோடு பாலும் பழமும் சாமியாருக் குக் கொண்டுபோய்க் கொடுத்துவந்தேன். அப்போது வரு பவர்களுக்கெல்லாம் சாமியார் நிஷ்டையிலிக்கிறார் என்று சீடன் சொல்லிக்கொண்டிருப்பான். நான் நெடுநாள் லாலாபேட்டையி லிருந்தும், கொலை விஷயம் ஒன் றும் கண்டுபிடிக்க முடியாமல் கவலைகொண்டிருக்கும் பொழுது, ஒரு நாள் முனியாண்டியும் மற்றும் சிலரும் மாரியப்பனை என் குடிசைக் கருகில் அடித்து மூர்ச்சை யில் விட்டுப் போயினர். நான் மாரியப்பனுக்கு உதவி செய்து அவனை மூர்ச்சை தெளியவைத்தபின், மாரியப்பன் கோபத்தோடு முனியாண்டி கொடும்பாதக னென்றும் அவனே இரத்தினசபாபதி பிள்ளையைக் கொலை செய் தா னென்றும் அவனைச் சும்மா விடுவதில்லையென்றுங் கூறினான். நான் மாரியப்பனுக்கு வேண்டியதைச் செய்வ தாக வாக்களித்த பின், அவன், "முனியாண்டி யிடத்தில் கத்தியிருந்ததைப் பலர் அறிவார்கள். இரத்தக்கறை பட்ட அவன் துணிகளும் இருக்கின்றன" வென்று சொன் னான். பின் நானும் அவன் சொல்லிய விஷயத்தைக் கவனித்து யோசித்துப் பார்த்து, அதுதான் பச்சையப்ப பிள்ளை வேண்டுகோளால் அவன் கொலை செய்திராமற் போனால் மூடனாகிய முனியாண்டிக்குப் பெருந் தொகை கொடுத்து அவனைக் காரியஸ்தனாக வைத்துக்கொள்ளக் காரணமில்லை யென்று எனக்குள் தீர்மானித்து, மாரியப் பனை வசப்படுத்திக்கொண்டு இனி நம்முடைய நாயக னைக் கண்டுபிடிக்கவேண்டு மென்று மாரியப்பனோடு பல விடங்களுக்குப் போனேன். போயும் பயன்படாமல்

டைசியாகச் சிதம்பரத்தில் தெய்வச் செயலாய் என் நாயகரையும் அத்தானையும் இராமகிருஷ்ண ஐயரையும் மகமதிய வேஷத்தோடு கண்டுபிடித்து, அன்னபூரணியின் ஆபத்தைப் போக்கி, திருச்சிராப்பள்ளியைச் சேர்ந்து தனித்த இடத்தில் அன்னபூரணியை வைத்து, மாரியப்பனைப் பெருந்தொகையோடு சாக்ஷிகளை வசப்படுத்த லாலாபேட்டைக்கனுப்பிவிட்டு, நானும் ஞானவடிவும் வேறிடத்திலிருந்தோம். நான் கோர்ட்டு விவகாரங்களைக் கற்றுக்கொள்ளும் பொருட்டு ஆண்பிள்ளைபோல் உடை தரித்துக் கோர்ட்டுகளுக்குச் சென்றுவந்தேன். கோர்ட்டு விவகாரங்களை நன்றுயறிந்தபின் சாமியார் வேஷத்தோடு மாரியப்பனைக் கண்டேன். அவன் சாக்ஷிகள் சித்தமாக இருக்கிறார்களென்று சொல்லியபின், குளித்தலை தாசில்தாருக்கு என் நாயகரும் அத்தானும் இருக்கும் இடத்தைச் சொல்லி அவர்களைக் கொண்டுவரச் செய்துவிட்டு, நான் நெடுநாளாக வீட்டி லில்லாததால் வீட்டைப் பார்த்துவரலாமென்று லாலாபேட்டைக்குப் போய் வீட்டி லிருந்தேன். அப்பொழுது, அத்தான் பச்சையப்பபிள்ளை வீட்டுக்கு வந்து கெட்ட எண்ணத்தோடு வார்த்தையாடினார்கள். நான் வீட்டிலிருந்த குத்துவாளைக் காட்டி அவரைத் துரத்திவிட்டேன். அன்றிராத்திரி நான் நல்ல நித்திரையி லிருக்கும்பொழுது அவரும் முனியாண்டியும் வீட்டுக்குள் வந்து என்னை மானபங்கம் செய்ய எத்தனிக்கையில் இப்புண்ணியவான் மாரியப்பன் அவர்களை அடித்துத் துரத்தி என்னைக் காப்பாற்றினான். நான் திரும்பிக் குளித்தலைக்கு வந்து என் நாயகருக்கும் அத்தானுக்கும் காவலறையில் சாப்பாடு கொண்டுபோய்க் கொடுத்து, நான் கச்சேரியில் வக்கீல்போலப் பேசப்போகிறேன் என்று சொல்லி நீங்கினேன். பின் நடந்தது நீங்கள் யாவரும் அறிந்ததே.

அங்கிருந்த யாவரும் பச்சையப்ப பிள்ளையைத் தூஷித்தார்கள்.

குஞ்சிதபாதம் பிள்ளை.—அப்பா ! நீலமேகம் ! நீ உன் மாமனையும் உன் சிறிய தந்தையையும் கோபித்து, இவ்விவாகம் எப்படி முடியப்போகிறது பார்க்கலாமென்றாயே, நீ அவ் விவாகம் முடியாமலிருக்க என்ன செய்யலாமென்று யோசித்திருந்தாய் ?

நீலமேகம்.—தாதா ! சிறு வயது முதல் ஞானவடிவு என்னை விவாகம் செய்துகொள்ளுகிறேன் என்று சொல்லியிருந்தாளாதலால், என்னை விவாகம் செய்து கொள்ளாமல் வேறொருவரை விவாகம் செய்துகொள்ளுகிறதா யிருந்தால், என் உயிரை விட்டுவிடுவேன் என்று ஞானவடிவுக கெழுதினால், அவள் நாணி மக்கத் சம்மதப்படாமல் என்னோடு வந்துவிடுவாள்; அதனால் அவ்விவாகம் நடைபெறாதென்று எண்ணியிருந்தேன். நான் என் தமையன் கருணாநிதியோடு என் கருத்தைச் சொன்னபொழுது அவர் எனக்கு நற்புத்தி போதித்து என் எண்ணத்தை மாற்றினா.

கருணாநிதி.—அப்பா ! மாரியப்பா ! தாதா குஞ்சிதபாதம் பிள்ளை எனக்குப் பேருதவி செய்ததுபோல் நீயும் பேருதவி செய்தாய் ! நீங்கள் செய்த பேருதவியை நான் மறக்கேன். நீ எவ்விதம் பக்கிரி இடத்திலிருந்த இரத்தக் கறையுள்ள துணிகளைக் கண்டுபிடித்தாய் ?

மாரியப்பன்.—ஐயரே ! நான் பக்கிரி செம்படவன் வீட்டுக்கு மச்சத்துக்காகப் போயிருந்தபொழுது அவனுடைய இரண்டு வயது குழந்தையொன்று பெட்டியிலிருந்த துணிகளை வெளியிலிழுத்துப் போட்டுக்கொண்டிருந்தது. துணிகளைக் கண்ட பக்கிரியின் மனைவி அக்குழந்தையை அடித்து அத்துணிகளைத் தொட அசங்கியப்பட்டு ஓர் கோலினால் அவைகளைப் பெட்டியில் திணித்துக்கொண்டிருந்தாள். ஏன் அவ்விதம் செய்கிறாள் என்று பக்கிரியைக் கேட்டபொழுது,

அவன் கச்சேரியில் சொல்லியவிதம் சொன்னான். நான் அத்துணிகளைப் பதனமாக வைத்திருக்கச் சொல்லியிருந்தேன். பின் சாமியாரிடத்திலிருந்து நான் பெற்றுக்கொண்ட ரூபாவில் பக்கிரிக்கு ஐந்து கொடுத்து, நான் வேண்டும்பொழுது சாக்ஷி வந்து சொன்னால் அவனுக்கு ஐம்பது ரூபா கொடுப்பேன் என்று சொல்லி, அப்படியே அம்பட்டன் வைத்திக்கும் சொல்லியிருந்தேன்.

மணிவாசகம் பிள்ளை "அந்தப் படுபாவி பச்சையப்பன் இவ்விதமான கொடுமையைச் செய்ய எவ்விதம் துணிந்தான்" என்று சொன்னதைக் கேட்ட யாவரும் அவனை நிந்தித்துக் கொண்டிருந்தார்கள்.

---

## 24—ம் அத்தியாயம்

சிவஞானம் சாமியார் வேஷத்தை நீக்கி வெளிப்பட்ட மறுதினம், தான் தன் நாயகன் கருணாநிதியோடும் நீலமேகத்தோடும் குளித்தலை தாசில்தார் வீட்டை யடைந்து, தன் நாயகனையும் நீலமேகத்தையும் வெளியில் நிறுத்தி, தான்மட்டும் தனித்து, பழவர்க்கம் நிறைந்த தட்டோடு வீட்டுக்குள் சென்று தாசில்தாரையும் அவர் மனைவியையும் நமஸ்கரித்து, "சிறியாள் உங்கள்விஷயத்தில் பெருங்குற்றம் செய்திருக்கிறேன்; அக்குற்றத்தை மன்னிக்க வேண்டும்" என்று வேண்டினாள்.

**தாசில்தார்.**—அம்மா! உன்னை நாங்கள் பார்த்தறியோம். நீ எங்கள் விஷயத்தில் என்ன குற்றம் செய்திருக்கிறாய்?

**சிவஞானம்.**—ஐயாவே! தாங்களும் அம்மாளும் என்னை அனேக முறை பார்த்து என்னோடு வார்த்தையாடி யிருந்தும் என்னைப் பார்க்கவில்லை என்கிறீர்களே: இது நியாயமோ? (என்று நகைத்தாள்).

**தாசில்தார் மனைவி.**—நாங்கள் உன்னை எங்கே பார்த்து வார்த்தையாடினோம்? உன்னைப் பார்த்ததாக எங்களுக்கு ஞாபகமில்லை. நீ யார்? நீ எங்கிருப்பது?

**சிவஞானம்.**—தாயே! என் நாயகனும் என் அத்தானும் கொடுங் கொலை செய்தார்களென்று அவர்கள்மேல் குற்றம் ஏற்பட்டு அவர்கள் ஓடிப்போனதால், நான் அதிக கஷ்டப்பட்டு உண்மையான கொலையாளிகளைக் கண்டுபிடித்து அவர்கள் மீதுள்ள குற்றத்தை ஐயா அவர்கள் பேருதவியால் கச்சேரியில் மெய்ப்பித்தேன். அது விஷயத்தில் நான் பெருங் குற்றஞ் செய்திருக்கிறேன்.

**தாசில்தார்.**—அம்மா! நீ எப்பொழுது கச்சேரிக்கு வந்தாய்? ஒரு சாமியாரல்லவா வக்கீலைப்போல் மிகு சமர்த்தாய் வாதிட்டார். அவர் சாஸ்திரத்திலும் வல்லவராயிற்றே! வைத்தியத்திலும் கைதேர்ந்தவர்.

**சிவஞானம்.**—ஐயாவே! என் நாயகனை மீட்கும்பொருட்டுச் சாமியார் வேடத்தோடு வந்தவள் நானே. நான் என் இரகசியத்தை இத்தனை நாள் மறைத்துவைத்திருந்த குற்றத்தை மன்னிக்கவேண்டும் (என்று மீண்டும் நமஸ்கரித்தாள்).

தாசில்தாரும் அவர் மனைவியும் ஆச்சரியத்தில் மூழ்கி அசைவற்று நின்றார்கள்.

**சிவஞானம்.**—அடியாள் செய்த குற்றம் பெரிதே! அதை மன்னிக்கவேண்டும் (என்று கெஞ்சினாள்).

தாசில்தார் மனைவி சிவஞானத்தைக் கட்டிப்பிடித்து முகமெல்லாம் முத்தங் கொடுத்து, "என் கண்மணி! நீ செய்தது குற்றமென்றோ எங்களை மன்னிப்புக் கேட்க வந்தாய்? உன்னை மன்னிக்கிறதற்குப பதிலாக இதுமுதல் உன்னை என் தலைப் பெண்ணாகப் பார்ப்பேன்" என்றாள்.

**தாசில்தார்.**—அம்மணி! நான் உன் வல்லமையைப புகழ்ந்து சொல்லச் சக்தியற்றிருக்கிறேன். நீ ஆண்பிள்ளையாகப் பிறந்திருந்தால் உன்னதபதவியி லிருக்கக்கூடுமென்று சொல்ல வல்லவனேயன்றி வேறொன்றும் சொல்லவறியேன். என் மனைவி சொன்னதுபோல் இதுமுதலாக உன்னை என் மகளாக நினைத்து நடபபேன்.

தாசில்தார் மனைவி, சிவஞானத்தால் கருணாநிதி நீலமேகம் வந்திருப்பதை அறிந்து, அவர்களை வரவழைத்து, அவர்களைத் தங்கள் மருமகப்பிள்ளைபோ லெண்ணியிருப்பதாகச் சொல்லி அவர்களுக்கு வேண்டிய உபசரணை செய்தாள்.

சிவஞானம் தன் தந்தைதாயிடத்தில் உத்தரவு பெற்றுக் கொள்வதுபோல் தாசில்தாரிடத்தும் அவர் மனைவியிடத்தும் உத்தரவுபெற்றுத் தன் நாயகனோடும் நீலமேகத்தோடும் லாலாபேட்டைக்குத் திரும்பினாள்.

மணிவாசகம் பிள்ளையும் மற்றவர்களும் குளித்தலையில் நடந்த விஷயங்களைக் கேள்வியுற்றுச் சந்தோஷமடைந்தார்கள்.

**மணிவாசகம் பிள்ளை.**—(கருணாநிதியைப் பார்த்து) அப்பா! கருணாநிதி! உன் சிநேகன் இராமகிருஷ்ணன் தன் மாமனா கொடுத்த ஸ்ரீதனம் இரண்டாயிரம் ரூபாவைத் திருப்பி அவருக்கு அனுப்பிவிட்டதை அவர் என்ன செய்தார் என்று கேள்விபபட்டாயா?

**கருணாநிதி.**—நான் ஒன்றும் கேள்விப்பட வில்லை.

**மணிவாசகம் பிள்ளை.**—என் சிநேகர் அப்பணத்தை எடுத்துக் கொள்ளாமல் இராமகிருஷ்ணன் தந்தையிடம் கொடுக்கப் போனார். அவரும் அதைப் பெற்றுக்கொள்ளாமல் என்னிடத்தில் போட்டுவிட்டுப் போனார் (என்று நடந்த விஷயங்களை விவரமாகச் சொன்னார்).

கருணாநிதி சூரிய நாராயண ஐயர் மேன்மையான குணத்தைப் புகழ்ந்தான். இராமகிருஷ்ணன் தன் தந்தைக்குப பொருளின்மேல் விருப்பற்றுப போனதைக் குறித்துச் சந்தோஷப்பட்டான்.

**சூரியநாராயண ஐயர்.**—அப்பா! கருணாநிதி! உன்னுடைய சிநேகருக்கு நிஷேத முகூர்த்தம் செய்துவிட வேண்டும். அதற்கென்ன யோசனை?

**கருணாநிதி.**—ஐயாவே! நாங்கள் சிதம்பரத்துக்குப் போய் வந்த பின் அதைக் குறித்து யோசிக்கவேண்டும்.

கோபாலையர்.—நீங்கள் சிதம்பரம் போனபின் நாங்கள் இங்கிருப்பதில் பிரயோசன மில்லை (என்று சொல்லி அவரும், அவர் மனைவியும் சூரியநாராயண ஐயரும் அவர் மனைவியும் அன்னபூரணியை அழைத்துக்கொண்டு கோயம்புத்தூருக்குச் சென்றார்கள்.

கருணாநிதி, தாங்கள் வரும் பரியந்தம் குஞ்சிதபாதம் பிள்ளையை லாலாபேட்டையில் இருக்கும்படி வேண்டிக்கொண்டு, மணிவாசகம் பிள்ளையையும் நீலமேகத்தையும் இராமகிருஷ்ணனையும் அழைத்துக்கொண்டு காரைக்காலுக்குச் சென்று, அங்கு தங்களை யறிந்தவர்களிடம் தங்களுக்குநேரிட்ட விபத்து நீங்கியதைச் சொன்னவுடன் சனம் ஹாஜி தம்பிசாயபு மரைக்காயரவர்கள் அடைந்த சந்தோஷத்திற் களவில்லை. அவருடைய ஆசி பெற்று, ஸ்ரீமான் முத்துவேலு பிள்ளையைக் கண்டு நேரிட்டதைச் சொன்னபொழுது, அவர் ஆனந்தங் கொண்டு ஸ்ரீமான் வீரப்பிள்ளைக்குத் தெரிவித்து, தானும் தன் குமாரன் தங்கவேலு பிள்ளையும் அன்றிரவு மரியோக பிள்ளை, எவரேஸ் பிள்ளை, குழந்தைசாமி முதலியார், சந்தணசாமி சவரி அமலோர்பவநாதன் முதலியவர்களை வரவழைத்து, கருணாநிதி, நீலமேகம், இராமகிருஷ்ணன், மணிவாசகம் பிள்ளை முதலியோருக்கு மாலை போட்டுப் புகழ்ந்தார்கள். கருணாநிதி அவர்களுக்கு வந்தனங் கூறி மறுநாள் அவர்களிடத்து விடைபெற்றுச் சிதம்பரம் அடைந்தார்.

கருணாநிதி சிதம்பரம் போலீஸ் இன்ஸ்பெக்டரைக் கண்டவுடன் அவர் சந்தோஷப்பட்டு, 'ஐயாவே! நான் யாவும் குளித்தலை இன்ஸ்பெக்டரால் அறிந்தேன். நீர் உம்முடைய கடையை ஒப்புக்கொண்டு வியாபாரத்தை விமரிசையாய் நடத்தலாம்' என்று போலீஸ் சேவகர்களை அழைத்துக் கடையை ஒப்பிக்க உத்தரவு கொடுத்தார்.

கருணாநிதி ஒப்புக்கொண்டு தம் சிப்பந்திகளை வரவழைத்து, தாங்கள் மகமதிய வேடத்தோடு அவ்வூருக்கு வந்த காரணத்தையும் பின் நடந்தவைகளையும் சொல்லி, வியாபாரம் செய்துகொண்

டிருந்து சில நாள்களுக்குப் பின் தங்களிடத்தில் சம்பளத்திலி ருக்கிறவர்களிடம் கடையை ஒப்புவித்து, லாலாபேட்டைக்கு வந்து சேர்ந்தார்கள்.

பச்சையப்ப பிள்ளையையும் முனியாண்டியையும் திருச்சி ராப்பள்ளி நியாயஸ்தலத்துக்குக் கொண்டுபோகுமுன், தாசில்தார் கச்சேரியில் சாக்ஷி சொன்னவர்களுக்கெல்லாம் கட்டளை வந்து யாவரும் வியாச்சியம் தொடங்கிய தினம் நியாயஸ்தலத்திற்குப் போயிருந்தார்கள். ஆனால் சாக்ஷிகளை விசாரிக்க இடங்கொடுக்கா மல், பச்சையப்ப பிள்ளையும் முனியாண்டியும் தாங்களே இரத் தினசபாபதி பிள்ளையைக் கொன்றதாக ஒப்புக்கொண்டார்கள்.

**நியாயாதிபதி.**—பச்சையப்ப பிள்ளையைப் பார்த்து, உன்னுடைய சிறுவயதில் உன் தாய் தந்தை காலம் சென்றபின் உன் தந்தை வைத்துப்போன சொத்தையெல்லாம் நீ துர்விஷ யத்தில் செலவுசெய்து உனக்கு ஒன்றுமில்லாமற் போன பொழுது, உன் சிறிய தந்தை உன்மேல் பரிதாபப்பட்டு உனக்கு வேண்டியதைச் செய்துவந்த காரணத்தால் அவ ரைக் கொலை செய்யத் துணிந்தாய். நீ செய்த கொடுஞ் செய்கைக் கேற்ற தண்டனை விதிக்க வேண்டுமென்ற விருப்பம் எனக்கிருந்தாலும், துரைத்தனத்தாரிட்ட சட்டத் துக்கு விரோதம் செய்ய முடியாமல் உன்னையும் உன் கூட்டாளியையும் தூக்கிவிட உத்தரவு செய்தேன்.

உடனே குற்றவாளிகளைக் கொண்டுபோனார்கள். லாலா பேட்டையிலிருந்து போனவர்களெல்லாம் கவலையோடு வீடு வந்து சேர்ந்தார்கள்.

சில நாள்களுக்குப் பின் திருச்சிராப்பள்ளியிலிருந்து வந்த கடிதத்தால், பச்சையப்ப பிள்ளையும் முனியாண்டியும் தற்கொலை செய்துகொண்டார்களென அறிந்து கருணாநிதி அச்செய்தியை யாவருக்கும் தெரிவித்தான்.

ஒரு மாதத்துக்குப் பின் இரத்தினசபாபதி பிள்ளை எழுதி

வைத்திருந்த வில் பிரகாரம் அவருடைய சொத்தெல்லாம் கருணாநிதியைச் சேர்ந்தன.

ஒரு நாள் யாவரும் சந்தோஷமாக உட்கார்ந்து வார்த்தையாடிக்கொண்டிருக்கும்பொழுது, சிவஞானம் மணிவாசகம் பிள்ளையைப் பார்த்து, "சிறிய தந்தையே! தாங்கள் முன் வாக்களித்திருந்த வண்ணம் என் தங்கை ஞானவடிவை என் அத்தான் நீலமேகம் பிள்ளைக்குக் கொடுத்து விவாகம் செய்துவைக்க உத்தரவு கொடுக்கவேண்டும்" என்றாள்.

**மணிவாசகம் பிள்ளை.**—அம்மா! சிவஞானம்! ஞானவடிவு உன்னுடைய சீட்டுயிற்றே. உன்னுடைய சீட்டுக்கு வேண்டியதை நீயே செய்துவிடலாம்: என்னைக் கேட்பது அநாவசியம் (என்று நகைத்தார்).

**கருணாநிதி.**—ஆம்! தை மாதத்தில் நீலமேகத்துக்கு விவாகம் செய்துவிடவேண்டும். இராமகிருஷ்ணனுக்கும் நிஷேத முகூர்த்தம் நடத்திவிடவேண்டுமென்று அதற்கு வேண்டியதைச் செய்துகொண்டிருக்கிறேன்.

**சிவஞானம்.**—தாங்கள் மற்றொருவரை மறந்துவிட்டீர்களே.

**கருணாநிதி.**—மற்றொருவரார்? எனக்குத் தெரியவில்லையே!

**சிவஞானம்.**—தாங்கள் மாரியப்பனுக்கும் விவாகம் செய்து அவன் சௌகரியமாக இருக்கும் விதம் அவனுக்கு வேண்டியதைச் செய்யவேண்டும்.

**கருணாநிதி.**—நான் மாரியப்பனை மறக்கவில்லை (என்று மாரியப்பனை அழைத்து) அப்பா! மாரியப்பா! நீ எங்களுக்குச் செய்ததற்குப் பதில் செய்ய எங்களால் முடியாது. ஆயினும் எங்கள் நன்றியறிதலைக் காட்டவேண்டுமென்றே பத்து காணி நிலத்தை உன்பேரி லாக்கினேன். நான் கொடுப்பதைக் கொண்டு உன் விவாகத்தை முடித்துக்கொள் (என்று நிலப்பத்திரத்தோடு இரண்டாயிரம் ரூபாயைக் கொடுத்தார்).

**மாரியப்பன்.**—ஐயா! நான் ஏழையாக என் காலத்தைக் கழித்து

வந்தேன். தாங்கள் என்னைப் பெருந் தனவந்தனாக்கி விட்டீர்கள் (என்று கருணாநிதிக்கு நமஸ்காரம் செய்து கருணாநிதி கொடுத்ததை இருகையாலும் வாங்கிக் கண்களி லொற்றிக்கொண்டான்).

அபூர்வம் சிவஞானத்தைக் கட்டிப் பிடித்துக்கொண்டு "அம்மா! என் தாயார் பிழைக்கமாட்டார்களென்று எண்ணியிருந்தவர்களை மருந்து கொடுத்துக் காப்பாற்றினாய். இப்பொழுது என் தமையனைப் பெரும் பணக்காரனாக்கிவிட்டாய். நாங்கள் இதற்குப் பதில் என்ன செய்யப்போகிறோம்" என்று ஆனந்தக்கண்ணீர் சொரிந்தாள்.

**சிவஞானம்.**—அம்மா! அபூர்வம்! நீயும் உன் தமையனும் எங்கள் விஷயத்தில் செய்ததற்குப் பதில் செய்ய முடியாதென்று என் நாயகன் சொன்னதுபோல் நானும் சொல்லுகிறேன். நீ உன் தமையனுக்கு வருபவளை உன் சொந்தப் பெண்ணைப் போல் பார்த்து நடந்தால் நீ உன் காலத்தைச் சந்தோஷமாகக் கழித்துவிடலாம். உன் நாயகனுக்கு இரண்டாந் தாரமாக வந்த ராஜம்பாளுக்கும் அவள் குழந்தைகளுக்கும் உதவி ஒருவருமில்லாததால், அவர்களையும் பாதுகாத்துக்கொள்ளுங்கள்.

**மாரியப்பன்.**—அம்மணி! என் தங்கை அபூர்வத்தைப்போல் ராஜம்பாளையும் என் தங்கையாக எண்ணி அவளுக்கு வேண்டியதைச் செய்துவருவேன்.

கருணாநிதி மாரியப்பனிடம் ஆயிரம் ரூபாயைக் கொடுத்து "இதைக் கொண்டுபோய் அம்பட்ட வைத்திக்கும் பக்கிரி செம்படவனுக்கும் ஆளுக்கு ஐந்நூறு கொடுத்துவிடு" என்று மாரியப்பனை அனுப்பிவிட்டு, நீலமேகத்தையும் இராமகிருஷ்ணனையும் தனித்த விடத்துக் கழைத்துப் போய், "நான் சொல்வதுபோல் நீங்கள் செய்ய வேண்டும். நான் ஜவளி வியாபாரத்துக்காக வைத்திருக்கும் முதல் போக மற்றத் தொகையில் உங்களுக்குச் சேரவேண்டியதை நீங்கள் பெற்றுக்கொண்டு, பணத்தை ரொக்கமாக வைத்திரா

மல் நல்ல நிலங்களை வாங்குங்கள்: உங்களுடைய மனைவிகளுக்கு வேண்டிய நகைகளையும் வாங்கிக் கொடுங்கள்" என்று இருவருக்கும் சேர வேண்டிய தொகையை அவர்கள் முன் வைத்து எடுத்துக் கொள்ள வேண்டினான்.

நீலமேகமும் இராமகிருஷ்ணனும் கருணாநிதியைக் கட்டிப் பிடித்துக்கொண்டு, "அண்ணா! கருணாநிதி! எங்கள் மேல் இரக்கப்பட்டு எங்களுக்கேதாகிலுங்கொடுக்க இஷ்டப்பட்டாலும், இப் பெரிய தொகையை எங்களுக்குக் கொடுப்பது நியாயமல்ல. நீர் தயாள குணத்தோடு கொடுத்தாலும் நாங்கள் அதைப் பெற்றுக் கொள்வது நீதியன்று. எங்களுக்கு அற்பமாக ஏதாகிலும் கொடுத்தால் நாங்கள் சந்தோஷத்தோடு பெற்றுக்கொள்ளுவோம்" என்று கெஞ்சிக் கேட்டுக்கொண்டார்கள்.

கருணாநிதி.—நீங்கள் ஒன்றையும் கவனிக்காமல் பேசுகிறீர்கள். உங்களைப்போல் எனக்கும் ஒரு லக்ஷம் இருக்கிறதோடு என் சிறிய தந்தையின் சொத்தும் சேர்ந்திருக்கிறது. நான் அதை என்ன செய்கிறதென்று விளங்கவில்லை. நீங்கள் இது பரியந்தம் என் சொல்லைத் தட்டாமல் நடந்ததுபோல், இப்பொழுதும் என் வார்த்தையைத் தட்டாமல் நான் கொடுத்ததைப்பெற்றுக்கொண்டு, நான் சொல்லியதுபோல் செய்ய வேண்டும்.

நீலமேகமும் இராமகிருஷ்ணனும் கருணாநிதியின் கருத்துக்கு விரோதம் சொல்ல முடியாமல் அவன் கொடுத்ததை ஏற்றுக் கொண்டார்கள்.

கருணாநிதி மணிவாசகம்பிள்ளையைப் பார்த்து, "மாமா! தாங்கள் யாவரோடும் நாளை கோயம்புத்தூருக்குப் பிரயாணப்பட்டுப் போய்க் கோபாலையரைக்கொண்டு இராமகிருஷ்ணனுக்கு நிஷேத்த முகூர்த்தத்துக்கும் நீலமேகத்துக்கு விவாகத்துக்கும் நாள்பார்த்து எனக்குத் தெரிவிக்க வேண்டுகிறேன்" என்றான்.

மணிவாசகம் பிள்ளை கருணாநிதி சொல்லிய வண்ணம் ஞானவடிவை லாலாபேட்டையில் விட்டு மற்றவர்களோடு கோயம் புத்தூருக்குச் சென்றார்.

கருணாநிதி நீலமேகத்துக்கு லாலாபேட்டையில் விவாகத்தை நடத்துவதற்கு வேண்டிய சாமக்கிரியைகளை மாரியப்பனுடைய உதவியால் சித்தப்படுத்திக்கொண்டு வரும்பொழுது, ஒருநாள் மாரியப்பன் கருணாநிதியைப் பார்த்து "ஐயாவே! நான் வெளியிற் சென்று மணவாள நாயுடு வீட்டருகில் போகும்பொழுது அவர் வீட்டில் அழுகுரல் கேட்டு, யாராகிலும் இறந்து விட்டார்களோ வென்று பார்த்தேன். வீட்டிலிருந்தவர்க ளெல்லாம் ஒரு கோர்ட்டு சேவகனைக் கண்டு பரிதபித் தழுதுகொண் டிருந்தார்கள். காரணம் யாதென்று கேட்டபொழுது மணவாள நாயுடு தன் கைப்பொருளையும் நிலத்தையும் வீட்டையும் ஈடுவைத்து அத்தொகையை யெல்லாம் பச்சையப்ப பிள்ளைக்கு ஒற்றைக்கிரட்டையாகப் பத்திரம் எழுதி வாங்கிக்கொண்டும், இப்பொழுது கடன் மேலிட்டு வீட்டை ஏலம்போடக் கோர்ட்டு உத்தரவு வந்திருக்கிறதாகவும் அதனால் யாவரும் துன்பப்பட்டு அழுகிறதாகவும் அறிந்தேன். முனியாண்டியின் வீட்டுக்கருகில் போகும்பொழுது அங்கும் சிலர் முனியாண்டி வார்த்தையைக் கேட்டுப் பச்சையப்ப பிள்ளைக்குக் கடன்கொடுத்து மோசம்போனோம் என்று பெருந்துயரடைந்து வருந்துகிறதைப் பார்த்துவந்தேன்" என்றான். கருணாநிதி மாரியப்பன் சொல்லியதைக் கேட்டு, மணவாள நாயுடையும் பச்சையப்ப பிள்ளைக்குக் கடன்கொடுத்திருந்த மற்றவர்களையும் வரவழைத்து அவர்களைப் பார்த்து, "நீங்களெல்லாம் பேராசை கொண்ட பேய்கள். உங்கள் விஷயத்தில் மனமிரங்க நியாயமில்லை. ஆயினும் உங்கள் குடும்பத்தார் என திசையால் வருந்துவார்களென்றே பரிதாபப்பட வேண்டியதாயிற்று" என்றுசொல்லி, அவர்கள் பச்சையப்ப பிள்ளைக்குக் கொடுத்த தொகையைக் கொடுத்து, "நீங்கள் இனிமேல் பேராசையை விட்டுக் காலங் கழியுங்கள்" என்று அனுப்பினான். அவர்கள் கருணாநிதியைக் கும்பிட்டு

" எங்களைக் காப்பாற்றிய புண்ணியவான் நீரே ! உம்மைக் கடவுள் ஆசீர்வதிக்க வேண்டும்" என்று சந்தோஷத்தோடு நீங்கினார்கள்.

சில நாள்களுக்குப் பின் மணிவாசகம் பிள்ளை தெரிவித்த வண்ணம் கருணாநிதி கோயம்புத்தூருக்குச் சென்று இராமகிருஷ்ணனுக்கு நிஷேத முகூர்த்தத்தை நடத்தி வைத்து, பின் யாவரும் லாலாபேட்டை யடைந்து பெரிய கொட்டகைப் பந்தல் போட்டுப பல விடங்களி லிருந்து வாத்தியங்களை வரவழைத்து, சுபதினத்தில் நீலமேகத்துக்கும் ஞானவடிவுக்கும் விவாகம் நடத்தினார். விவாக மஹோற்சவத்திற்கு வந்திருந்த கோபாலையர், சூரிய நாராயண ஐயர், குளித்தலை தாசில்தார், குஞ்சிதபாதம் பிள்ளை சென்னையி லிருந்து வந்த மெய்யறியார், லாலாபேட்டையிலுள்ள பெரியோர்கள் யாவரும் சேஷையிட்டு ஆசிகூறினார்கள். விவாகத்துக்கு வந்திருந்தவர்க ளெல்லாம் விவாகத்தை மிக்க சிறபபாகக் கருணாநிதி நடபபித்தா ரென்று புகழ்ந்தேகினார்கள்.

விவாகமான மூன்றாம் நாள் யாவரும் உட்கார்நது சந்தோஷமாக வார்த்தையாடிக்கொண் டிருக்கும் பொழுது, குஞ்சிதபாதம் பிள்ளை மெய்யறியாரைப பாாத்து, " ஐயாவே ! நீர் இரத்தினசபாபதி பிள்ளைக்குச் சென்னையி லிருககும் சோதிடாகளைக் கொண்டு தொண்ணூற்றைறந்து வயது கொடுககும்படி செய்தீராயினும் பச்சையபப பிள்ளை அதை அவருக்குக் கொடுக்காமல் தடுத்து விட்டார் அல்லவா ?" என்று நகைத்தார். யாவரும் நகைத்தார்கள்.

**மெய்யறியார்.**—என்ன செய்யலாம் ! நான் சென்னையிலிருக்கும் சோதிடர்கள் சொன்னதை முற்றிலும் உண்மை யென்றே மதித்திருந்தேன். பச்சையபப பிள்ளை என்னைக் கண்டு வார்த்தையாடிய பொழுது அவருடைய எண்ணம் வேறு விதம் இருக்கிறதாகவே காணப்பட்டது. அல்லாமலும் ஞானவடிவு அம்மாள் நீலமேகம் பிள்ளைக் குரியவளாய் விதித்திருக்க அதைத் தடுக்க யாரால் முடியும்.

**மணிவாசகம் பிள்ளை.**—ஐயா ! மெய்யறியாரே ! தாங்கள் சில நாள் கோயம்புத்தூரி லிருந்தபொழுது தங்களுடைய வல்ல

மையை நன்கறிந்தேன். தாங்கள் உள்ளதை இல்லை யென்றும் இல்லதை உள்ளதென்றும் பேச வல்லமை கொண்டவர். உம்முடைய வல்லமையை அறிந்தே உமக்கு "மெய்யறியார்" என்ற நாமம் சூட்டினார்கள் (என்று நகைத் தார். யாவரும் நகைத்தார்கள்).

பின் மணிவாசகம் பிள்ளை, மாப்பிள்ளைக்கும் பெண்ணுக்கும் மருவு நடத்தினர். குளித்தலை தாசில்தாரும் அவர் மனைவியும் கற்பகவல்லியம்மாளை அழைத்து, "பெண்ணுக்கும் பிள்ளைக்கும் மருவு நடத்தவேண்டும்; தாங்கள் உத்தரவு கொடுக்கவேண்டும்", என்று வேண்டினார்கள். கற்பகவல்லியம்மாள் புன்னகையோடு உங்களிஷ்டம்போல் செய்யலாம் என்று விடை கொடுத்தார்கள். தாசில்தார் விவாகத்துக்கு வந்திருந்த யாவர்களையும் குளித்தலைக்கு அழைத்துப்போய்ப் பெரிய விருந்து செய்து பெண்ணுக்கும் பிள்ளைக்கும், கருணாநிதிக்கும், சிவஞானத்துக்கும் விலையுயர்ந்த வஸ்திரங்கள் வாங்கிக் கொடுத்து அனுப்பினார். கருணாநிதி மெய் யறியாருக்குத் தக்க மரியாதை செய்து விலையுயர்ந்த சால்வை யொன்றைக் கொடுத்து அனுப்பியதோடு, கோயம்புத்தூரிலிருந்து வந்த பிராமணாகளுக்கும் வஸ்திரங்கள் கொடுத்து அவர்கள் மனமகிழச் செய்தனுப்பினார். மாப்பிள்ளையும் பெண்ணும் கோயம்புத்தூருக்குப் போவதும் வருவதுமாக இருந்தார்கள். பச்சையப்ப பிள்ளையின் மனைவி சௌவுக்கியமாக இருக்கும் விதம் கருணாநிதி பொருள் கொடுத்து அவளைத் தாய்வீட்டுக் கனுப்பினார். சிதம்பரத்தில் ஜவளி வியாபாரம் நடந்தேறிவந்தது. சிவஞானம் அனேகருக்கு இலவசமாக மருந்து கொடுத்துக்கொண்டிருந்தாள்.

சில வருடத்தில் யாவருக்கும் குழந்தைகள் உண்டாயின. குளித்தலையில் பிரசங்கம் செய்த பிரசங்கியாரை அடிக்கடி லாலா பேட்டைக்கு வரவழைத்து ஞானசாஸ்திரங்களை வாசிக்கச்செய்து யாவரும் கேட்டுக் காலங்கழித்துவந்தார்கள். சுபம்.

முற்றிற்று.